216648

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
## செயலக வெளியீடு

மார்ச் 25, 1997 தொகுதி - 25
எண் - 1.

D
V211, 31'N97
N97.25.1
216648

வெளியீடு 6-4-98 Issued 6-4-98

1157/98

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

செவ்வாய்க்கிழமை, மார்ச் 25, 1997 – தொகுதி 25 – எண் 1

Tuesday the 25th March, 1997 – Volume 25 – No. 1

...ன்றப் பேரவைச் செயலகம், சென்னை - 600 009

...Assembly Secretariat, Fort St. George,
Chennai-600 009

D
V211, 31'N97
N97.25.1
216648

[Price Rs. 3.00

C
1157/98

**25–03–1997**

## உள்ளடக்கம்


| | பக்கங்கள் |
|---|---|
| தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும் | iii-vi |
| Personnel of the Government of Tamil Nadu | vii-x |
| தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள் | xi-xiv |
| தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களின் பட்டியல் (அகர வரிசைப்படி) | xv-xxiv |
| *1.* **வினாக்கள்-விடைகள்--** | |
| உடுக்குறியிட்ட வினாக்கள் | 1-47 |
| *2.* **சிறப்புக் கவன ஈர்ப்பு--** | |
| திருவண்ணாமலை, கலசப்பாக்கம், போளூர் தொகுதிகளில் குறைந்த மின் அழுத்தம் உள்ளமையும் பயிர்கள் பாதிக்கப்படுதலும் | 48-50 |
| *3.* **கவன ஈர்ப்பு--** | |
| வட ஆற்காடு அம்பேத்கர் மாவட்டம், சத்துவாச்சாரியில் அரசு பொது மருத்துவமனை ஏற்படுத்த வேண்டுதல் | 50-53 |
| *4.* **அறிவிப்புகள்--** | |
| (அ) முன்பண மானியக் கோரிக்கைகள், *1997–98,* மொழிதல் (ஆ.செ.) | 53 |
| (ஆ) நிதி ஒதுக்க (முன்னளி மானிய வாக்களிப்பு) சட்டமுன்வடிவு, *1997* (ஆ.செ.) | 58 |

| | பக்கங்கள் |
|---|---|
| (இ) கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 1996-97, மொழிதல் (ஆ.செ.) | 127 |
| (ஈ) நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவு, 1997 (ஆ.இ.) | 148 |
| (உ) பேரவை அலுவல்கள் குறித்து | 149 |
| 5. **முன்பண மானியக் கோரிக்கைகள், 1997-98, வாக்கெடுப்பு--** | |
| மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி | 53-57 |
| 6. **அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)--** | |
| (அ) நிதி ஒதுக்க (முன்னளி மானிய வாக்களிப்பு) சட்டமுன்வடிவு, 1997 | 58 |
| (ஆ) நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவு, 1997 | 141-142 |
| 7. **இறுதி துணை நிதி நிலை அறிக்கை, 1996-97, விவாதமும் வாக்கெடுப்பும்--** | |
| திரு. சி. ஞானசேகரன் | 59-70 |
| *திரு. மு.பெ. சாமிநாதன் | 70-76 |
| திரு. சி. வேலாயுதன் | 76-81 |
| *திருமதி கோமதி சீனிவாசன் | 81-84 |
| திரு. அ.வ. அப்துல்நாசர் | 84-86 |
| திரு. எஸ். திருநாவுக்கரசு | 86-96 |
| திரு. ஏ. ராசேந்திரன் | 96-100 |
| திரு. ஜி. பழனிசாமி | 100-109 |
| டாக்டர் அ. செல்லக்குமார் | 109-114 |
| *மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி | 114-116, 117-126, 127 |
| 8. **பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்--** | 150 |


216648



## தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும்

## ஆளுநர்—செல்வி எம். ஃபாத்திமா பீவி

### அமைச்சரவையின் உறுப்பினர்கள்

| | | |
|---|---|---|
| 1. முதலமைச்சர் | : | **மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி :** பொது, பொது நிர்வாகம், இந்திய ஆட்சிப் பணி, மாவட்ட வருவாய் அதிகாரிகள், உள்துறை, நிதி, திட்டம், தொழில்கள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை, சிறுபான்மையினர் நலன் மற்றும் கடவுச் சீட்டு. |
| 2. கல்வி அமைச்சர் | : | **மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் :** தொழில் கல்வி உள்ளிட்ட கல்வி, சட்டமன்றம், தேர்தல்கள், மின்னணுவியல், அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல், விளையாட்டு மற்றும் இளைஞர் பணிப்படை, முன்னாள் இராணுவத்தினர். |
| 3. மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் | : | **மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மக்கள் நல்வாழ்வு, மருத்துவக் கல்வி மற்றும் குடும்ப நலம், மின்சாரம். |
| 4. வருவாய்த் துறை அமைச்சர் | : | **மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் :** வருவாய், வருவாய் வாரியம், மாவட்ட வருவாய் நிர்வாகம், மாவட்டத் துணை ஆட்சியாளர்கள். |
| 5. ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் | : | **மாண்புமிகு திரு. கோ. சி. மணி :** நகராட்சி நிர்வாகம், சமுதாய வளர்ச்சி, ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் ஊரகக் கடன்கள், நகர்ப்பகுதி மற்றும் ஊரகக் குடிநீர் வழங்கல். |

53-40—1a

6. வேளாண்மைத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. சோ. ஆறுமுகம்:
வேளாண்மை, வேளாண்மைப் பொறியியல், வேளாண் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள், தோட்டக் கலை, கரும்புத் தீர்வை மற்றும் கரும்பு பயிர் மேம்பாடு.

7. பொதுப்பணித் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. துரைமுருகன்:
பொதுப்பணிகள், சிறு பாசனம் உள்ளிட்ட பாசனத்திட்டம் செயற் திட்டப் பணிகள்.

8. போக்குவரத்துத் துறை அமைச்சர்: மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி :
போக்குவரத்து, நாட்டுடைமை யாக்கப்பட்ட போக்குவரத்து, இயக்கூர்திகள் சட்டம், துறைமுகம் மற்றும் நெடுஞ்சாலைகள், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்.

9. தமிழ் ஆட்சிமொழி மற்றும் தமிழ்ப் பண்பாட்டுத் துறை அமைச்சர் : மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:
தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு.

10. உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. கே. என். நேரு:
உணவு, விலைக் கட்டுப்பாடு மற்றும் குடிமைப் பொருட்கள் வழங்கல், பொது விநியோக முறை, கூட்டுறவு மற்றும் புள்ளிவிவரங்கள்.

11. பால்வளத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. க. சுந்தரம்:
பால், பாற் பண்ணை வளர்ச்சி, குடிசை மாற்று வாரியம், இடவசதிக் கட்டுப்பாடு.

12. தொழிலாளர் நலத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:
தொழிலாளர் நலன், மக்கள் தொகை, வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி, இரும்பு மற்றும் எஃகு கட்டுப்பாடு, பத்திரிகை அச்சுக் காகிதக் கட்டுப்பாடு, இசுலாமிய அறக்கட்டளை (வக்ஃப்).



13. சட்டத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. ஆலடி அருணா:
சட்டம், நீதிமன்றங்கள், சிறைச் சாலைகள், எடைகள் மற்றும் அளவைகள் குறித்த சட்டம், கம்பெனிகள் பதிவு, கடன் நிவாரணம் (கடன் வழங்கல், சீட்டு நிதி இவை பற்றிய சட்டம் இயற்றுதல் உட்பட).

14. வணிக வரிகள் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. வே. தங்கபாண்டியன்:
வணிக வரிகள்.

15. கைத்தறித் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. என். கே. கே. பெரியசாமி:
கைத்தறி, துணித் தொழில், சுற்றுச் சூழல் மாசுக் கட்டுப்பாடு.

16. பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. எம். ஆர். கே. பன்னீர்செல்வம்:
பிற்படுத்தப்பட்டோர் நலன், மிகப் பிற்படுத்தப்பட்டோர் நலன் மற்றும் சீர் மரபினர் நலன், வெளிநாடு வாழ் இந்தியர்கள், அகதிகள் மற்றும் வெளியேற்றப்பட்டோர்.

17. வனம் மற்றும் கால்நடைத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிச்சாமி:
வனம், சின்கோனா, கால்நடை பராமரிப்பு.

18. வீட்டு வசதித் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி:
வீட்டு வசதி, ஊரக வீட்டு வசதி, நகர அமைப்பு திட்டமிடல் மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சி.

19. ஊரகத் தொழில் துறை மற்றும் பதிவுத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:
கிராமக் குடிசைத் தொழில்கள் உள்ளிட்ட ஊரகத் தொழில்கள், பதிவுத் துறை, முத்திரைத் தாள் சட்டம், சத்துணவு.

20. செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன்:
*செய்தி மற்றும் விளம்பரம், திரைப்படத் தொழில் நுட்பவியல், திரைப்படச் சட்டம்.*

21. இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் : மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன்:
*இந்து சமய அறநிலையத் துறை.*

22. சமூக நலத் துறை அமைச்சர் : மாண்புமிகு திருமதி எஸ். பி. சற்குண பாண்டியன் :
*சமூக நலன், அனாதை இல்லங்கள், குற்றவாளிகள் சீர்திருத்த நிர்வாகம், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டம்.*

23. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு:
*ஆதிதிராவிடர் நலன், மலைவாழ் பழங்குடியினர், கொத்தடிமைத் தொழிலாளர்.*

24. சுற்றுலாத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன்:
*சுற்றுலா, சுற்றுலா வளர்ச்சிக் கழகம்.*

25. கதர் மற்றும் அச்சுத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. அந்தியூர் ப. செல்வராசு:
*கதர் வாரியம், பூமிதானம் மற்றும் கிராமதானம், எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை, அரசு அச்சகம்.*

26. மீன்வளத் துறை அமைச்சர் : மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன்:
*மீன் வளம் மற்றும் மீன் வளக் கழகம், மகளிர் மற்றும் குழந்தைகள் நலன், இரவலர் காப்பு இல்லம்.*



## PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU

## GOVERNOR—SELVI M. FATHIMA BEEVI

## MEMBERS OF THE COUNCIL OF MINISTERS

1. **Chief Minister** .. **The Hon. Kalaignar M. Karunanidhi :**
Public, General Administration, Indian Administrative Service, District Revenue Officers, Home, Finance, Planning, Industries, Prohibition and Excise, Minorities Welfare and Passport.

2. **Minister for Education..** **The Hon. Prof. K. Anbazhagan:**
Education including Technical Education, Legislature, Elections, Electronics, Science and Technology, Sports and Youth Service Corps and Ex-Servicemen.

3. **Minister for Health and Electricity** .. **The Hon. Thiru Arcot N. Veerasamy:**
Health, Medical Education and Family Welfare and Electricity.

4. **Minister for Revenue** .. **The Hon. Thiru Nanjil K. Manoharan:**
Revenue, Board of Revenue, District Revenue Establishment and Deputy Collectors.

5. **Minister for Rural Development and Local Administration** .. **The Hon. Thiru Ko. Si. Mani:**
Municipal Administration, Community Development, Panchayats, Panchayat Unions and Rural Indebtedness and Urban and Rural Water Supply.

6. **Minister for Agriculture** .. **The Hon. Thiru S. Arumugham:**
Agriculture, Agricultural Engineering, Agro Service Co-operatives, Horticulture, Sugarcane Cess and Sugarcane Development.

7. **Minister for Public Works** .. **The Hon. Thiru Duraimurugan:** Public Works, Irrigation including Minor Irrigation and Programme Works.

8. **Minister for Transport**.. **The Hon. Dr. K. Ponmudi :** Transport, Nationalised Transport, Motor Vehicles Act, Ports and Highways and Madras Metropolitan Development Authority.

9. **Minister for Tamil Official Language and Tamil Culture** .. **The Hon. Dr. M. Thamizhkudimagan:** Tamil Official Language and Tamil Culture.

10. **Minister for Food, Public Distribution System and Co-operation** .. **The Hon. Thiru K.N. Nehru:** Food, Price Control and Civil Supplies, Public Distribution System, Co-operation and Statistics.

11. **Minister for Milk** .. **The Hon. Thiru K. Sundaram:** Milk and Dairy Development, Slum Clearance and Accommodation Control.

12. **Minister for Labour** .. **The Hon. Thiru A. Rehman Khan:** Labour, Census, Employment and Training, Iron and Steel Control, Newsprint Control and Wakf.

13. **Minister for Law** .. **The Hon. Thiru Aladi Aruna:** Law, Courts, Prisons, Legislation on Weights and Measures, Registration of Companies, Debt Relief including Legislation on Money lending and Legislation on Chits.

14. **Minister for Commercial Taxes** .. **The Hon. Thiru V. Thangapandian:** Commercial Taxes.



15. **Minister for Handlooms** .. **The Hon. Thiru N.K.K. Periasamy:** Handlooms, Textiles and Environmental Pollution Control.

16. **Minister for Backward Classes** .. **The Hon. Thiru M.R.K. Panneer-selvam:** Backward Classes, Most Backward Classes and Denotified Communities, Indians Overseas, Refugees and Evacuees.

17. **Minister for Forest and Animal Husbandry** .. **The Hon. Thiru Pongalur N. Palanisamy:** Forest, Cinchona and Animal Husbandry.

18. **Minister for Housing** .. **The Hon. Thiru K. Pitchandi:** Housing, Rural Housing Development, Town Planning and Urban Development.

19. **Minister for Rural Industries and Registration** .. **The Hon. Thiru I. Periasamy:** Rural Industries including village and Cottage Industries, Registration and Stamp Act and Nutritious Meals.

20. **Minister for Information and Publicity** .. **The Hon. Thiru V. Mullaivendan:** Information and Publicity, Film Technology and Cinematography Act.

21. **Minister for Hindu Religious and Charitable Endowments** .. **The Hon. Pulavar B.M. Senguttuvan:** Hindu Religious and Charitable Endowments.

22. **Minister for Social Welfare** .. **The Hon. Tmt. S.P. Sarkuna Pandian:** Social Welfare, Orphanages and Correctional Administration and Integrated Child Development Service Schemes.

| | | |
|---|---|---|
| 23. **Minister for Adi-Dravidar and Tribal Welfare** | .. | **The Hon. Thiru Samayanallur S. Selvarasu:** Adi-Dravidar Welfare, Hill Tribes and Bonded Labour. |
| 24. **Minister for Tourism** | .. | **The Hon. Thiru N. Suresh Rajan:** Tourism and Tourism Development Corporation. |
| 25. **Minister for Khadi and Printing** | .. | **The Hon. Thiru Andhiyur P. Selvarasu:** Khadi Board, Bhoodan and Gramdan, Stationery and Printing and Government Press. |
| 26. **Minister for Fisheries** | .. | **The Hon. Tmt S. Jenefer Chandran:** Fisheries and Fisheries Development Corporation, Women's and Children's Welfare and Beggars Home. |



# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

**பேரவைத் தலைவர்**

*மாண்புமிகு* திரு. பி.டி.ஆர். பழனிவேல் ராஜன்

**பேரவைத் துணைத் தலைவர்**

*மாண்புமிகு* திரு. பரிதி இளம்வழுதி

**மாற்றுத் தலைவர்கள் பட்டியல்**

1. திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்
2. திரு. இரா. ஆவுடையப்பன்
3. திரு. வை. இராமசாமி
4. திரு. செ. இராமலிங்கம்
5. திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்
6. திரு. கே. சுப்பராயன்

**செயலாளர்**

திரு. செ. சு. ஜானகிராமன்

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள் பட்டியல்

| | | | |
|---|---|---|---|
| 1. | திரு. டி. சாலமன் ஜெயபால், பி.எஸ்சி., பி.எல். | .. | கூடுதல் செயலாளர் |
| 2. | திரு. வெ. இராசாராமன், பி.எஸ்சி., பி.எல். | .. | இணைச் செயலாளர் |
| 3. | திரு. செ.ஏ. துரைபாண்டியன், பி.ஏ., பி.எல். | .. | இணைச் செயலாளர் (பதிப்பாளர்). |
| 4. | திரு. டி. சுந்தரராஜலு, எம். ஏ. | .. | இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| 5. | திரு. கா.ப. இராஜன், டி.ஆர்.எஸ்., பி.ஜி.எல். | .. | துணைச் செயலாளர் |
| 6. | திருமதி பானுமதி ஆனந்தராஜன், பி.எஸ்சி., பி.ஜி.எல். | .. | துணைச் செயலாளர் |
| 7. | திரு. கி. சாயிநாதன், பி.ஏ., பி.ஜி.எல். | .. | துணைச் செயலாளர் |
| 8. | திருமதி பவானி சுப்பையா, பி.ஏ., பி.ஜி.எல். | .. | துணைச் செயலாளர் |
| 9. | திரு. சா. கணேசன், பி.ஏ., பி.ஜி.எல். | .. | துணைச் செயலாளர் |
| 10. | திரு. தி. திருமாவளவன், பி.எஸ்சி., பி.எல். | .. | துணைச் செயலாளர் |
| 11. | திரு. வெ. இராமகிருஷ்ணன், எம்.ஏ., பி.எல். | .. | பேரவைத் தலைவரின் சிறப்புச் செயலாளர் |
| 12. | திரு. க. சம்பத்ராஜன், பி.ஏ., பி.ஜி.எல். | .. | துணைச் செயலாளர் |
| 13. | திரு. எம். ஆறுமுகப்பெருமாள், எம்.ஏ., பி.லிட். | .. | துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| 14. | திருமதி வீ. நா. உமா, பி.ஏ. | .. | குழு அலுவலர் |
| 15. | திரு. க. ராஜகுரு, | .. | குழு அலுவலர் |
| 16. | திரு. எம். ஜோபாய், பி.காம். | .. | சார்புச் செயலாளர் |

| | | | |
|---|---|---|---|
| 17. | திரு. இரா. முருகானந்தம், பி.எஸ்சி., பி.ஜி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| 18. | திரு. கோ. ஞானப்பிரகாசம், எம்.ஏ., பி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| 19. | திரு. ஜி. அனீஸ் அகமத், பி.ஏ., பி.ஜி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| 20. | திரு. மா. செல்வராஜ், பி.எஸ்சி., பி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| 21. | திரு. வெ.சி. சுப்பிரமணியன், எம்.ஏ. | .. | சார்புச் செயலாளர் |
| 22. | திரு. சு. பாலச்சந்தர், பி.ஏ., பி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| 23. | திருமதி என். துளசிபாய், பி.ஏ. | .. | சார்புச் செயலாளர் |
| 24. | திரு. கே. ரவீந்திரன், எம்.ஏ. | .. | சார்புச் செயலாளர் |
| 25. | திரு. ஊ.கு. சுப்பிரமணியன், எம்.ஏ. | .. | சார்புச் செயலாளர் |
| 26. | திரு. டி. கோவிந்தராஜு, எம்.ஏ., பி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| 27. | திரு. ஏ.எம்.பி. ஜமாலுதீன், எம்.எஸ்சி., பி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| 28. | திரு. ச. பாலகிருஷ்ணன், பி.எஸ்சி., பி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| 29. | திருமதி இரா. அமிர்தவல்லி, எம்.ஏ., பி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| 30. | திரு. இல. மாரியப்பன், பி.ஏ. | .. | தலைமை நிருபர் |
| 31. | திரு. ம. பிலிப், எம்.ஏ. | .. | தலைமை நிருபர் |
| 32. | திருமதி சீ. கனகவல்லி, டி.சி.பி. | .. | தலைமை நிருபர் |
| 33. | திரு. வெ. வெங்கடேசன், எம்.ஏ. | .. | தலைமை நிருபர் |
| 34. | திரு. கோ. ஸ்ரீராமன், பி.காம். | .. | உதவி விவாதப் பதிப்பாளர் |
| 35. | திரு. ம. ஸ்ரீனிவாசலு, பி.காம்., பி.எல். | | உதவி விவாதப் பதிப்பாளர் |
| 36. | திரு. எஸ். அய்யாத்துரை | .. | பேரவைத் தலைவரின் சிறப்பு நேர்முக உதவியாளர். |



## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
## உறுப்பினர்கள் பட்டியல் (அகர வரிசைப்படி)
## பெயர்களும் தொகுதிகளும்

| | | | |
|---|---|---|---|
| 1. | அசோகன், திரு. அ. | .. | திருவாரூர் (செ.வ.) |
| 2. | அந்தியூர் செல்வராசு, திரு. ப. | .. | அந்தியூர் (செ.வ.) |
| 3. | அபுல்ஹசன், திரு. எம். எம். எஸ். | .. | மயிலாடுதுறை |
| 4. | அப்துல் நாசர், திரு. அ.வ. | .. | புவனகிரி |
| 5. | அப்துல் லத்தீப், திரு. ம. | .. | வாணியம்பாடி |
| 6. | அப்பாவு, திரு. மு. | .. | ராதாபுரம் |
| 7. | அமரமூர்த்தி, திரு. டி. | .. | அரியலூர் |
| 8. | அய்யலுசாமி, திரு. வி. | .. | கோவில்பட்டி |
| 9. | அருண்குமார், திரு. பா. | .. | மேட்டுப்பாளையம் |
| 10. | அழகர்ராஜா, திரு. என்.ஆர். | .. | தேனி |
| 11. | அழகிரி, திரு. ச. | .. | சிதம்பரம் |
| 12. | அழகுவேலு, திரு. ச. | .. | கண்டமங்கலம் (செ.வ.) |
| 13. | அன்பழகன், பேராசிரியர் க. | .. | துறைமுகம் |
| 14. | அன்பழகன், திரு. வ. | .. | செய்யார் |
| 15. | அன்பில் பொய்யாமொழி, திரு. | .. | திருச்சிராப்பள்ளி-2 |
| 16. | ஆசையன், திரு. பெ. | .. | ஆண்டிப்பட்டி |
| 17. | ஆண்டமுத்து, திரு. வெ. அ. | .. | பவானிசாகர் |
| 18. | ஆண்டி அம்பலம், திரு. எம். | .. | நத்தம் |
| 19. | ஆரூண் ரஷீத், திரு. ஜே.எம். | .. | வில்லிவாக்கம் |
| 20. | ஆலடி அருணா, திரு. | .. | ஆலங்குளம் |

21. ஆல்பன், டாக்டர் வே. .. திருவட்டாறு
22. ஆவுடையப்பன், திரு. இரா. .. அம்பாசமுத்திரம்
23. ஆறுமுகம், திரு. சோ. .. வீரபாண்டி
24. ஆறுமுகம், திரு. டி.பி. .. திருச்செங்கோடு
25. ஆற்காடு நா. வீராசாமி, திரு. .. அண்ணாநகர்
26. ஆனந்தன், திரு. பால. .. வந்தவாசி (செ.வ.)
27. இரகுமான்கான், திரு. அ. .. இராமநாதபுரம்
28. இராசமாணிக்கம், திரு. க.வெ.வீ. .. மேலூர்
29. இராசமாணிக்கம், திரு. பி. .. ஒரத்தநாடு
30. இராசன், திரு. வி. பி. .. ராஜபாளையம் (செ.வ.)
31. இராசேந்திரன் என்கிற தீரன், திரு. ஆ. .. ஆண்டிமடம்
32. இராமசாமி, திரு. கே. ஆர். .. திருவாடனை
33. இராமசாமி, திரு. வை. .. பண்ருட்டி
34. இராமச்சந்திரன், திரு. ஓ. ஆர். .. கம்பம்
35. இராமச்சந்திரன், திரு. சி. இரா. .. தொண்டாமுத்தூர்
36. இராமச்சந்திரன், திரு. மா. .. திருவோணம்
37. இராமலிங்கம், திரு. ஏ. .. காட்டுமன்னார்கோவில் (செ.வ.)
38. இராமலிங்கம், திரு. செ. .. திருவிடைமருதூர்
39. இராமன், டாக்டர் இ. எஸ். எஸ். .. பள்ளிப்பட்டு
40. இராமஜெயம், திரு. ந. பூ. .. மைலாப்பூர்
41. இராஜரெட்டி, திரு. ச. .. தளி
42. இராஜேந்தர், திரு. டி. .. பூங்காநகர்



43. இளங்கோ, திரு. கோ. .. அவினாசி (செ.வ.)
44. ஈஸ்வரன், திரு. ரா. .. வாசுதேவநல்லூர் (செ.வ.)
45. உதயசூரியன், திரு. தா. .. சங்கராபுரம்
46. உபயதுல்லா, திரு. எஸ்.என்.எம். .. தஞ்சாவூர்
47. கணேசன், திரு. இ. .. எடப்பாடி
48. கணேசன், திரு. கே. சி. .. ஜெயங்கொண்டம்
49. கருணாநிதி, கலைஞர் மு. .. சேப்பாக்கம்
50. கருப்பண்ண உடையார், திரு. ந. .. பாபநாசம்
51. கருப்பசாமி, திரு. சொ. .. சங்கரநயினார்கோவில் (செ.வ.)
52. கருப்புசாமி, திரு. டி. .. உப்பிலியாபுரம் (ஆ.வா.)
53. கல்யாணம், திரு. குத்தாலம் பி. .. குத்தாலம்
54. கன்னையன், திரு. க. .. தொட்டியம்
55. காஞ்சனா கமலநாதன், டாக்டர் .. கிருஷ்ணகிரி
56. காந்தி, திரு. ஆர். .. இராணிப்பேட்டை
57. கிட்டு, திரு. சைதை கா. .. சைதாப்பேட்டை
58. கிருட்டிணன், திரு. பசும்பொன், தா... சிவகங்கை
59. கிருஷ்ணசாமி, டாக்டர் க. .. ஒட்டப்பிடாரம் (செ.வ.)
60. கிருஷ்ணன், திரு. எஸ். வி. .. நாங்குநேரி
61. கிருஷ்ணன், திரு. சீ. வெ. .. வேடசந்தூர்
62. குண்டன், திரு. டி. .. உதகமண்டலம்
63. குமாரதாஸ், டாக்டர் தே. .. கிள்ளியூர்
64. கோதண்டம், திரு. ஏ. .. ஸ்ரீபெரும்புதூர் (செ.வ.)
65. கோபால், திரு. பா. .. மேட்டூர்

66. கோபு, திரு. சி. .. அணைக்கட்டு
67. கோமதி சீனிவாசன், திருமதி .. வலங்கைமான் (செ.வ.)
68. கோவிந்தன், திரு. ப. .. தாரமங்கலம்
69. கோவிந்தன், திரு. வி. .. பேரணாம்பட்டு (செ.வ.)
70. சக்ரபாணி, திரு. ஆர். .. ஒட்டன்சத்திரம்
71. சண்முகம், திரு. கோ. .. திருப்பத்தூர்
72. சண்முகம், திரு. சி. .. ஆலந்தூர்
73. சண்முகம், திரு. ம. .. கிணத்துக்கடவு
74. சந்தானம், திரு. எல். .. சோழவந்தான்
75. சந்திரசேகரன், திரு. சி. .. சேந்தமங்கலம் (ஆ.வா.)
76. சந்திரசேகரன், திரு. துரை. .. திருவையாறு
77. சமயநல்லூர் செல்வராசு, திரு. எஸ்... சமயநல்லூர் (செ.வ.)
78. சம்பத், திரு. ஏ.ஜி. .. முகையூர்
79. சரஸ்வதி, திருமதி ஆர். .. தாராபுரம் (செ.வ.)
80. சற்குண பாண்டியன், திருமதி எஸ்.பி. .. டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர்
81. சாமிநாதன், திரு. மு.பெ. .. வெள்ளக்கோவில்
82. சிங்காரவேலு, திரு. வி.பி. .. வால்பாறை (செ.வ.)
83. சிவபுண்ணியம், திரு. வை. .. மன்னார்குடி
84. சிவராமன், திரு. ஆர். .. திருப்பத்தூர்
85. சிவராஜ், திரு. சு. .. ரிஷிவந்தியம்
86. சிவலிங்கம், திரு. எஸ்.ஆர். .. பனமரத்துப்பட்டி
87. சிவானந்தம், திரு. ஆர். .. ஆரணி



88. சிவாஜி, திரு. இ.ஏ.பி. .. திருத்தணி
89. சின்னய்யா, திரு. வெ. .. திருமயம்
90. சீனிவாசன், திரு. ஏ. ஆர். ஆர். .. விருதுநகர்
91. சுகவனம், திரு. இ. ஜி. .. பர்கூர்
92. சுடலைமுத்து, திரு. அ. .. போடிநாயக்கனூர்
93. சுதர்சனம், திரு. டி. .. பூந்தமல்லி
94. சுந்தரம், திரு. க. .. பொன்னேரி (செ.வ.)
95. சுந்தரம், திரு. ந. .. காரைக்குடி
96. சுந்தரம், திரு. பி.ஆர். .. ராசிபுரம்
97. சுந்தர், திரு. கே. .. உத்திரமேரூர்
98. சுப்பராயன், திரு. கே. .. திருப்பூர்
99. சுப்பிரமணி என்கிற சி. சு. மணி, திரு. சி. .. திருவள்ளூர்
100. சுப்பிரமணி, திரு. பி.என். .. ஆற்காடு
101. சுப்பிரமணியன், திரு. ஆ.செ. .. திருநெல்வேலி
102. சுப்புலட்சுமி ஜெகதீசன், திருமதி .. மொடக்குறிச்சி
103. சுரேஷ் ராஜன், திரு. என். .. கன்னியாகுமரி
104. செங்குட்டுவன், புலவர் பூ. ம. .. மருங்காபுரி
105. செங்கை சிவம், திரு. .. பெரம்பூர் (செ.வ.)
106. செல்லக்குமார், டாக்டர் அ. .. தியாகராய நகர்
107. செல்வம், திரு. ரெ. .. குளித்தலை
108. செல்வராஜ், திரு. டி. .. உடுமலைப்பேட்டை
109. செல்வராஜ் என்கிற கவிதைப்பித்தன், திரு. .. கொளத்தூர் (செ.வ.)

110. சேகரன், திரு. ஆர். ஆர். .. ஓமலூர்
111. சேதுநாதன், திரு. ரா. .. திண்டிவனம்
112. சொக்கர், திரு. ஆர். .. சிவகாசி
113. சொக்கலிங்கம், திரு. ஜி. .. திருப்போரூர் (செ.வ.)
114. ஞானசேகரன், டாக்டர் ஆ. .. மேல்மலையனூர்
115. ஞானசேகரன், திரு. சி. .. வேலூர்
116. டேவிட் செல்வின், திரு. எஸ். .. ஸ்ரீவைகுண்டம்
117. தங்கபாண்டியன், திரு. வே. .. அருப்புக்கோட்டை
118. தங்கமணி, திரு. கே. .. மானாமதுரை (செ.வ.)
119. தங்கவேலன், திரு. சுப. .. கடலாடி
120. தங்கவேல், திரு. அ. ல. .. சேலம்-2
121. தங்கவேல், திரு. என். .. குன்னூர் (செ.வ.)
122. தண்டபாணி, திரு. சி. டி. .. கோயம்புத்தூர் (மேற்கு)
123. தமிழரசன், திரு. குழந்தை. .. விருத்தாசலம்
124. தமிழ்க்குடிமகன், முனைவர் மு. .. இளையான்குடி
125. தமிழ்ச்செல்வன், திரு. ஆர். .. அரக்கோணம் (செ.வ.)
126. தமிழ்மணி, திரு. வீ. .. செங்கல்பட்டு
127. தளபதி, திரு. கோ. .. சேடப்பட்டி
128. தனபாலன், திரு. கே.ஆர்.ஜி. .. சேலம்-1
129. தனபால், திரு. வி. ஜி. .. குடியாத்தம்
130. தாமரைக்கனி, திரு. இரா. .. ஸ்ரீவில்லிபுத்தூர்
131. திசைவீரன், திரு. உ. .. பரமக்குடி (செ.வ.)
132. திருஞானசம்பந்தம், திரு. வி. .. பேராவூரணி
133. திருநாவுக்கரசு, திரு. எஸ். .. அறந்தாங்கி



134. திருவேங்கடம், திரு. பெ. சு. .. கலசப்பாக்கம்
135. துரை, திரு. க. .. திருவெறும்பூர்
136. துரைசாமி, திரு. பா. .. வரகூர் (செ.வ.)
137. துரைமுருகன், திரு. .. காட்பாடி
138. தெய்வநாயகம், திரு. எ. .. மதுரை மத்தி
139. தேவராஜன், டாக்டர். மு. .. பெரம்பலூர் (செ.வ.)
140. நடராசன், திரு. ஆ. .. பேரூர்
141. நடராஜன், திரு. டி. .. செஞ்சி
142. நயினா முகமது, திரு. கோ. .. கடையநல்லூர்
143. நன்னன், திரு. கொ. வி. .. செங்கம் (செ.வ.)
144. நாகரத்தினம், திரு. ச. .. கிருஷ்ணராயபுரம் (செ.வ.)
145. நாஞ்சில் கி. மனோகரன், திரு. .. திருவல்லிக்கேணி
146. நிஜாமுதீன், திரு. ஜி. .. நாகப்பட்டினம்
147. நேரு, திரு. கே. என். .. லால்குடி
148. பத்மா, டாக்டர் .. நன்னிலம் (செ.வ.)
149. பரணிகுமார், திரு. பா. .. திருச்சிராப்பள்ளி-1
150. பரிதி இளம்வழுதி, திரு. .. எழும்பூர் (செ.வ.)
151. பழனிசாமி, திரு. ஜி. .. திருத்துறைப்பூண்டி (செ.வ.)
152. பழனிவேல் ராஜன், திரு. பி.டி.ஆர். .. மதுரை மேற்கு
153. பன்னீர்செல்வம், திரு. எம். ஆர். கே. .. குறிஞ்சிப்பாடி
154. பன்னீர்செல்வம், திரு. மு. .. சீர்காழி (செ.வ.)
155. பாண்டுரங்கன், திரு. என். .. பெரணமல்லூர்
156. பாலகிருஷ்ணன், திரு. சோ. .. முதுகுளத்தூர்

157. பாலசுப்பிரமணியன், திரு. எஸ்.என்... பவானி
158. பாலசுப்பிரமணியன், திரு. ப. .. பட்டுக்கோட்டை
159. பிச்சாண்டி, திரு. கு. .. திருவண்ணாமலை
160. புகழேந்தி, திரு. இ. .. கடலூர்
161. புரட்சிமணி, திரு. எஸ். .. மங்களூர் (செ.வ.)
162. பூவேந்தன், திரு. த. .. பழனி (செ.வ.)
163. பெரியசாமி, திரு. இ. .. ஆத்தூர்
164. பெரியசாமி, திரு. என். .. தூத்துக்குடி
165. பெரியசாமி, திரு. என். கே. கே. .. ஈரோடு
166. பெரியசாமி, திரு. நா. .. பெருந்துறை
167. பெருமாள், திரு. வி. .. ஏற்காடு (ஆ.வா)
168. பெர்னார்டு, திரு. இரா. .. குளச்சல்
169. பொங்கலூர் நா. பழனிசாமி, திரு. .. சிங்காநல்லூர்
170. பொன்முடி, திரு. எஸ். எஸ். .. பல்லடம்
171. பொன்முடி, டாக்டர் க. .. விழுப்புரம்
172. பொன்னம்மாள், திருமதி ஏ. எஸ். .. நிலக்கோட்டை (செ.வ.)
173. மகேந்திரன், திரு. ஆர். .. நாட்ராம்பள்ளி
174. மணி, டாக்டர் அ. .. உளுந்தூர்பேட்டை (செ.வ.)
175. மணி, திரு. நெல்லிக்குப்பம், அ. .. நெல்லிக்குப்பம்
176. மணி, திரு. கோ. சி. .. கும்பகோணம்
177. மணி, திரு. டி. .. விளவங்கோடு
178. மணி, திரு. ஜி.கே. .. பென்னாகரம்



179. மணிக்கண்ணன், திரு. ஆ. ஜெ. .. திருநாவலூர்
180. மணி நாடார், திரு. எஸ். எஸ். .. சாத்தான்குளம்
181. மணிமாறன், திரு. இரா. .. திண்டுக்கல்
182. மணிவர்மா, திரு. கே. .. தண்டராம்பட்டு
183. மதிவாணன், திரு. இரா. .. இராயபுரம்
184. மதிவாணன், திரு. செ. .. அச்சரப்பாக்கம் (செ.வ.)
185. மனோகரன், திரு. கு. .. தர்மபுரி
186. மாயவன், திரு. தி.ப. .. ஸ்ரீரங்கம்
187. மாரி அய்யா, திரு. .. புதுக்கோட்டை
188. மாரிமுத்து, திரு. அ. .. வானூர் (செ.வ.)
189. முகம்மது இஸ்மாயில், திரு. எஸ். எஸ். .. அரவக்குறிச்சி
190. முகம்மது கோதர் மைதீன், திரு. .. பாளையங்கோட்டை
191. முத்து, திரு. வி. .. சங்ககிரி (செ.வ.)
192. முத்துராமலிங்கம், திரு. எம். .. திருமங்கலம்
193. முபாரக், திரு. பா. மு. .. கூடலூர்
194. முருகேசன், திரு. பொ. .. காஞ்சிபுரம்
195. முல்லைவேந்தன், திரு. வ. .. மொரப்பூர்
196. முனிரத்தினம், திரு. ஆ. மு. .. சோளிங்கர்
197. மூக்கப்பன், திரு. இரா. .. சின்னசேலம்
198. மூக்கையா, திரு. எல். .. பெரியகுளம்
199. மோகனதாசன், திரு. கோ. .. பூம்புகார்
200. மோகன் கந்தசாமி, திரு. ப. .. பொங்கலூர்

| | | |
|---|---|---|
| 201. மோசஸ், டாக்டர் எம். | .. | நாகர்கோவில் |
| 202. ரங்கநாதன், திரு. ப. | .. | புரசைவாக்கம் |
| 203. ரவி அருணன், திரு. கு. | .. | தென்காசி |
| 204. ரவிசங்கர், திரு. கு. | .. | விளாத்திகுளம் |
| 205. ராசேந்திரன், திரு. ஏ. | .. | போளூர் |
| 206. ராணி, செல்வி, க. | .. | தலைவாசல் (செ.வ.) |
| 207. ராமசாமி, திரு. ஏ.எம். | .. | ஆத்தூர் |
| 208. ராமச்சந்திரன், திரு. செ. | .. | திருப்பரங்குன்றம் |
| 209. ராஜு, திரு. எஸ். | .. | பொள்ளாச்சி |
| 210. ராஜேந்திரன், திரு. எஸ். கே. | .. | சத்தியமங்கலம் |
| 211. ராஜ்குமார் மன்றாடியார், திரு. என். எஸ். | .. | காங்கேயம் |
| 212. லட்சுமணன், திரு. வி. கே. | .. | கோயம்புத்தூர் (கிழக்கு) |
| 213. வல்லரசு, திரு. பி.என். | .. | உசிலம்பட்டி |
| 214. வாசுகி முருகேசன், திருமதி | .. | கரூர் |
| 215. விஜயகுமார், திரு. கே. எம். | .. | சாத்தூர் |
| 216. விஜயன், திரு. டி. சி. | .. | திருவொற்றியூர் |
| 217. வீரப்பன், திரு. கோ. க. | .. | கபிலர்மலை |
| 218. வெங்கடசாமி, திரு. பி. | .. | ஓசூர் |
| 219. வெங்கடாசலம், திரு. அ. | .. | ஆலங்குடி |
| 220. வெங்கடாசலம், திரு. ஜி. எல். | .. | பாலக்கோடு |
| 221. வெங்கடேசன், திரு. ச. க. | .. | மதுராந்தகம் |
| 222. வெங்கடேசன், திரு. பே. வே. ஸ்ரீ. | .. | காவேரிப்பட்டினம் |



| | | |
|---|---|---|
| 223. வெங்கிடு, திரு. ஜி. பி. | .. | கோபிச்செட்டிப் பாளையம் |
| 224. வேடம்மாள், திருமதி ஏ. ஆர். | .. | அரூர் (செ.வ.) |
| 225. வேணு, திரு. கே. | .. | கும்மிடிப்பூண்டி |
| 226. வேதரத்தினம், திரு. எஸ். கே. | .. | வேதாரண்யம் |
| 227. வேலாயுதன், திரு. சி. | .. | பத்மநாபபுரம் |
| 228. வேலுசாமி, திரு. வ. | .. | மதுரை கிழக்கு |
| 229. வேல்சாமி, திரு. க. | .. | நாமக்கல் (செ.வ.) |
| 230. வேல்துரை, திரு. பா. | .. | சேரன்மகாதேவி |
| 231. வைத்தியலிங்கம், திரு. மீ. அ. | .. | தாம்பரம் |
| 232. ஜெனிபர் சந்திரன், திருமதி எஸ். | .. | திருச்செந்தூர் |
| 233. ஜோதிகண்ணன், திரு. மு. ந. | .. | முசிறி |
| 234. ஸ்டாலின், திரு. மு. க. | .. | ஆயிரம் விளக்கு |
| 235. ஆன் டி'மான்டி, திருமதி | .. | நியமனம் |

**பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்**

| | | |
|---|---|---|
| வெங்கடபதி, திரு. கே.வி. | .. | தலைமை வழக்கறிஞர் |

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## பங்குனி 12, தாது - திருவள்ளுவர் ஆண்டு 2028

## 1997 மார்ச் 25 செவ்வாய்க்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. பிடி.ஆர். பழனிவேல் ராஜன்** அவர்கள் தலைமையில் காலை 9-30 மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

"சூழாமல் தானே முடிவெய்தும் தம்குடியைத் தாழாது
உஞற்று பவர்க்கு"

தம்மைச் சார்ந்த குடிகளை உயர்த்தும் செயல்களில் காலம் தாழ்த்தாமல் ஈடுபட்டு முயலுகின்றவர்களுக்குத் தாமாகவே வெற்றிகள் வந்து குவிந்திடும்.

## 1. வினாக்கள் — விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள். வினா எண் 321, திரு. வ. அன்பழகன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

**321—**

### செய்யாறு அரசு மருத்துவமனைக்குக் கூடுதல் வசதி

***469—திரு. வ. அன்பழகன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[1997 மார்ச் 25

(அ) திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டம், செய்யாறு அரசு மருத்துவமனையில் காசநோய்ப் பிரிவு, பல் மருத்துவப் பிரிவு ஏற்படுத்தவும் மற்றும் கூடுதலாக படுக்கைகள் அமைக்கவும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டம், செய்யாறு அரசு மருத்துவமனையில், பல் மருத்துவப் பிரிவு, ஏற்கெனவே இயங்கி வருகிறது. காசநோய்ப் பிரிவு மற்றும் கூடுதலாக படுக்கைகள் அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசு பரிசீலனையில் இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

**திரு. வ. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செய்யாறு மருத்துவமனையில் தினந்தோறும் நோயாளிகளுடைய எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. ஒவ்வொரு நாளும் நூற்றுக்கணக்கான நோயாளிகள் தரையிலே படுத்து சிகிச்சை பெற வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. நமது மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு செய்யாறு மருத்துவமனையைப் பற்றி நன்றாகத் தெரியும். காரணம் சிறுவயது முதல் அவருக்குப் பழக்கமான ஊர் செய்யாறு ஆகும். எனவே அவர் தன்னுடைய பதிலை மறுபரிசீலனை செய்து, வருகிற நிதியாண்டில் செய்யாறு அரசு மருத்துவமனைக்குக் கூடுதலாகப் படுக்கை வசதிகளை ஏற்படுத்தித் தரவும், அதுபோல காசநோய்ப் பிரிவு ஒன்றை உருவாக்கித் தரவும் ஆவன செய்வாரா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செய்யாறு அரசு மருத்துவமனையில் இப்போதே 90 படுக்கைகள் உள்ளன. சராசரியாக 1,000 புறநோயாளிகள் அங்கே சிகிச்சை பெறுகிறார்கள். செய்யாறிலிருந்து 30 கி.மீ. தூரத்தில் உள்ள காஞ்சிபுரத்தில் ஒரு பெரிய மாவட்ட மருத்துவமனை இருக்கிறது. 20 கி.மீ தூரத்தில் உள்ள ஆரணியில் ஒரு அரசு மருத்துவமனை இருக்கிறது. செய்யாறைப் பொறுத்தவரையில் 90 படுக்கைகள் போதுமானது என்று அரசு கருதுகிறது. அதனுடைய எண்ணிக்கையைக் கூட்டவேண்டிய அவசியம் ஏற்பட்டால் அதுபற்றி அரசு பரிசீலிக்கும்.



1997 மார்ச் 25]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அ. மாரிமுத்து.

**திரு. அ. மாரிமுத்து:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வானூர் தொகுதி, வானூர் தலைமையிடத்தில் அரசு பொது மருத்துவமனைக் கட்டிடம் கட்டி முடிக்கப்படும் நிலையில் உள்ளது. அதைத் திறக்க அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கட்டிடம் கட்டி முடிக்கப்பட்டவுடன் நிச்சயமாக அரசு அந்த மருத்துவமனையைத் திறக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ். என். பாலசுப்பிரமணியன்.

**திரு. எஸ். என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது பவானி தொகுதியிலுள்ள கவுந்தபாடியில் 3 ஆண்டுகளுக்கு முன்பாக ஆரம்ப சுகாதார நிலையத்தை மருத்துவமனையாக உயர்த்தினார்கள். ஆனால் மருத்துவமனைக்குத் தேவையான கட்டிட வசதிகளோ, மருத்துவர்களோ, செவிலியர்களோ இதுவரையில் போடப்படவில்லை. இந்த நிதியாண்டிலாவது அங்கு கட்டிட வசதிகள், படுக்கை வசதிகள் செய்து கொடுக்கவும், மருத்துவர்களையும் செவிலியர்களையும் நியமிக்கவும் இந்த அரசு உடனடியாக முயற்சி மேற்கொள்ளுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை பற்றிய மானியக் கோரிக்கையின்போது இங்கே கொடுத்த புள்ளிவிவரங்களிலிருந்து மாண்புமிகு உறுப்பினர் நன்றாக அறிந்திருப்பார்கள். எந்தெந்த ஆரம்ப சுகாதார நிலையங்கள் உள்ள இடங்கள் வட்டத் தலைநகரங்களாக மாற்றப்பட்டதோ அந்த இடங்களில் எல்லாம் இந்த அரசு புதிய கட்டிடங்களைக் கட்டி அவற்றை மருத்துவமனைகளாக மேம்படுத்துவது என்று திட்டம் தீட்டியிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வ. வேலுசாமி.

**திரு. வ. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரையில் இருக்கக்கூடிய அரசு இராஜாஜி மருத்துவமனையில் அன்றாடம் சுமார் 10,000-க்கு மேல் வெளி நோயாளிகள் வருகின்றனர். ஆகவே அந்த நெரிசலைக் குறைப்பதற்காக பாலகங்காபுரத்தில் ஒரு அரசு மருத்துவமனை ஆரம்பிக்கப்பட்டது. அது குறைந்த வசதிகளோடும்,

[1997 மார்ச் 25

குறைந்த படுக்கை வசதிகளோடும் இயங்கிவருகிறது. ஏற்கெனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்த மருத்துவமனைக்குக் கூடுதலாகப் படுக்கை வசதிகள் செய்து தரப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். அதை விரைவாக அரசு ஏற்படுத்தித் தருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரைக்குச் சென்றிருந்த நேரத்திலே மாண்புமிகு உறுப்பினர் திரு. வேலுசாமி அவர்கள் இந்தப் பிரச்சினையை எடுத்துச் சொன்னார்கள். அங்கே மருத்துவக் கல்லூரியினுடைய முதல்வரோடும் மற்ற அதிகாரிகளோடும் கலந்து பேசி இந்த ஆண்டு, 1997-98-ஆம் ஆண்டில் அவர் குறிப்பிடுகின்ற மருத்துவமனையில் படுக்கைகளின் எண்ணிக்கையை உயர்த்துவதற்கு அரசாங்கம் முயற்சிக்கும்.

முற்பகல் 9-35

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆர். மகேந்திரன்.

**திரு. ஆர். மகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வட ஆற்காடு அம்பேத்கர் மாவட்டம், நாட்ராம்பள்ளி தொகுதி, கந்திலி பகுதியிலே இருக்கிற மக்கள் எல்லாம் அரசு மருத்துவமனை வேண்டுமென்று நீண்ட நாட்களாகக் கோரி வந்தார்கள். கடந்த மானியக் கோரிக்கையில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள், ஒரு கோடி ரூபாய் செலவில் அங்கே அரசு மருத்துவமனை ஆரம்பிக்கப்படும் என்று தெரிவித்தார்கள். ஆனால் இன்றுவரை வேலை ஆரம்பிக்கப்படவில்லை. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆண்டு நான் அறிவித்த ஒரு கோடி ரூபாய்த் திட்டம் மருத்துவமனை கட்டுவதற்காக அல்ல. மகப்பேறு நடக்கின்ற நேரத்தில், குழந்தைகள் பிறக்கின்ற நேரத்திலே தாய்மார்கள் இறந்துவிடுகிறார்கள், சில இடங்களிலே குழந்தைகள் இறந்துவிடுகின்றன. குறிப்பாக அவருடைய பகுதியிலே அதிகமாக அந்த எண்ணிக்கை இருக்கின்ற காரணத்தினால், அதுகுறித்து ஆய்வு செய்து அந்த எண்ணிக்கையைக் குறைப்பதற்காக ஒரு கோடி ரூபாய்த் திட்டம் உலக வங்கியின் மூலமாக ஒதுக்கப்பட்டிருக்கிறது என்று குறிப்பிட்டேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எல். சந்தானம்.



1997 மார்ச் 25]

**திரு. எல். சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நகரப் பஞ்சாயத்துக்களிலே இருக்கின்ற அனைத்து துணை மருத்துவ நிலையங்களும் சரியான பராமரிப்பில்லாமல், படுக்கை வசதியில்லாமல் இருக்கின்றன. குறிப்பாக என்னுடைய சோழவந்தான் தொகுதியிலே, சோழவந்தானிலே இருக்கின்ற மருத்துவமனை பற்றி, சென்ற ஆண்டே நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலே சொல்லியிருக்கிறேன். அதிலே படுக்கை வசதிகள் போதிய அளவிலே இல்லை. அதைச் சீரமைத்துத் தர அரசு முன் வருமா என்று தங்கள் மூலம் தெரிந்து கொள்ள விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உள்ளாட்சி மன்றங்களிலே நடத்தப்படுகின்ற மருத்துவமனைகளை பொறுத்தவரையில் அந்தந்த நிர்வாகமே மேற்கொண்டு நடத்தி வருகிறது. உதாரணத்திற்குச் சென்னை மாநகராட்சியிலே இப்போது புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்ற மேயர் அவர்கள் அந்த மருத்துவமனைகளை மேம்படுத்துவதற்காக நல்ல திட்டங்களைத் தீட்டியிருக்கிறார்கள். அதேபோல, மக்களுடைய பிரதிநிதிகளாகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள், அந்தந்த உள்ளாட்சி மன்றங்களுக்குள்ளே இருக்கக்கூடிய அந்த நிர்வாகத்தை உரிய முறையிலே பார்ப்பார்களேயானால் அந்த மருத்துவமனைகள் உள்ளபடியே நல்ல முறையிலே இயங்கும். ஆனால், அரசாங்கத்தைப் பொறுத்தவரையிலே உள்ளாட்சி மன்றங்களிலே இயங்கக்கூடிய மருத்துவமனைகளை எடுக்கக்கூடிய செயற்குறிப்பு எதுவும் இப்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. குழந்தை. தமிழரசன்.

**திரு. குழந்தை. தமிழரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதிக்குட்பட்ட மங்கலம்பேட்டை மருத்துவமனை 24 மணி நேர மருத்துவனையாக உயர்த்தப்பட்டுள்ளது. தற்போது ஒரேயொரு மருத்துவர் மட்டுமே அங்கே பணியாற்றி வருகிறார். எனவே புதிய மருத்துவர்களை நியமிப்பதற்கு முன்பாக டெப்யூட்டேஷன் என்ற முறையிலாவது வேறு டாக்டர்களை அங்கு நியமிக்க அமைச்சர் அவர்கள் முன் வருவாரா என அறிய விரும்புகிறேன்.

[1997 மார்ச் 25

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர் குறிப்பிடுகின்ற அந்த மேம்படுத்தப்பட்ட, 24 மணிநேர மருத்துவமனையாக ஆக்கப்பட்ட அந்த மருத்துவமனையைச் சுற்றி இருக்கக்கூடிய இரண்டு ஆரம்ப சுகாதார நிலையங்களிலிருந்து ஒவ்வொரு மருத்துவரும் இந்த மருத்துவமனையிலே வந்து 8 மணிநேரம் பணியாற்ற வேண்டுமென்று ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. பொதுவாக 500 டாக்டர்கள் இந்த ஆண்டு நியமிக்க வேண்டியிருக்கின்ற காரணத்தால் டாக்டர்கள் பற்றாக்குறை இருக்கிறது. இன்னும் ஒரு மாத காலத்திலே அந்தக் குறை நீக்கப்படும். அதற்குப் பிறகு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சுப. தங்கவேலன்;

**திரு. சுப. தங்கவேலன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வறுமைக் கோட்டிற்குக் கீழே அதிகமாக மக்கள் வாழுகின்ற இராமநாதபுரம் மாவட்டத்தில், மாவட்டத் தலைமை மருத்துவமனை இராமநாதபுரத்தில் உள்ளது. சி.டி.ஸ்கேன் வரப்போகிறது என்று பரவலாக அங்கே பேசப்பட்டது. நடப்பு நிதியாண்டில் அறிவிக்கப்பட்ட திட்டத்தில் அது சேர்க்கப்படாவிட்டாலும், திட்டமிடப்படாத செலவினங்களிலேயாவது அதை வாங்கித் தருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முயற்சி எடுத்துக் கொள்வார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சி.டி. ஸ்கேன் வாங்கிக் கொடுப்பது அரசாங்கத்தினுடைய பணத்திலே அல்ல. மருத்துவ சேவைக் கழகம் ஈட்டுகின்ற குறைந்தபட்ச இலாபத்தில் ஆண்டுக்கு 4 மருத்துவமனைகளுக்கு சி.டி. ஸ்கேன் வாங்கிக் கொடுப்பது என்று முடிவெடுத்திருக்கின்றோம். இந்த ஆண்டு ஏற்கெனவே எந்தெந்த நான்கு இடங்களிலே, சி.டி. ஸ்கேன் வைப்பது என்று முடிவு எடுத்தாகிவிட்டது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் பகுதியில் வறுமைக்கோட்டிற்குக் கீழே இருக்கக்கூடிய மக்கள் அதிகமாக இருக்கக்கூடிய காரணத்தால், 1998-99-ஆம் ஆண்டில் நிச்சயமாக சி.டி. ஸ்கேன், தலைமை மருத்துவமனைக்கு வாங்கித் தரப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எம்.எம்.எஸ். அபுல்ஹசன்,

**திரு. எம்.எம்.எஸ். அபுல்ஹசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியான மயிலாடுதுறையில் பெரிய



1997 மார்ச் 25]

மருத்துவமனை ஒன்று இருக்கிறது. அங்கு அதிகமான நோயாளிகள் வந்து செல்கின்றார்கள். அவர்களுக்குப் படுக்கை வசதி கிடையாது, கட்டிட வசதியும் குறைவாக இருக்கிறது. இருக்கும் மருத்துவர்களும் நீண்ட விடுப்பில் சென்று விடுகிறார்கள். அவர்கள் நீண்ட விடுப்பில் செல்வதற்குப் பதிலாக புதிய மருத்துவர்கள் அங்கு நியமனம் செய்யப்படுவார்களா? படுக்கை வசதி செய்து கொடுப்பார்களா? கட்டிட வசதி செய்து கொடுப்பார்களா? என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 9-40

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய முதலமைச்சர் அவர்கள் மிக தாராள மனதோடு மக்கள் நல்வாழ்வுத் துறைக்காகப் பணத்தை ஒதுக்கித் தருகிறார்கள். ஒரே ஆண்டிலே தமிழ்நாட்டிலேயுள்ள அத்தனை குறைபாடுகளையும் போக்கிவிட முடியும் என்று நான் நினைக்கவில்லை. இருந்தாலும்கூட, மயிலாடுதுறையிலே டாக்டர்கள் விடுமுறையிலே போவது பற்றிக் குறிப்பிட்டார்கள். எந்த டாக்டர் எப்போது விடுமுறை எடுக்கிறார் என்று முன்கூட்டியே அரசாங்கத்துக்குத் தெரியாது இருந்தாலும்கூட இதையெல்லாம் அரசு பரிசீலனை செய்து, சிறந்த மருத்துவர்கள் மயிலாடுதுறையிலே நியமிக்கப்பட்டு, நல்லக் கட்டிட வசதிகள் செய்து கொடுப்பதற்கு அரசு முயற்சிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பால. ஆனந்தன்.

**திரு. பால. ஆனந்தன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாலுக்கா மருத்துவமனைகளையெல்லாம் மேம்பாடு செய்கின்ற இந்த நேரத்திலே முப்பது ஆண்டுகளுக்கு முன்னர் துவங்கப்பட்ட வந்தவாசி தாலுக்கா மருத்துவமனையில் உள்நோயாளிகளின் படுக்கை எண்ணிக்கை உயர்த்தப்படாமல் இருக்கிறது. இந்த மருத்துவமனை பெரணமல்லூர் மற்றும் வந்தவாசி இரண்டு தொகுதிகளுக்குமே உரியதாக இருக்கிறது. இங்குள்ளவர்கள் மருத்துவ சிகிச்சை செய்து கொள்ள வேண்டுமென்றால் நீண்டதூரம், செங்கற்பட்டு அல்லது திருவண்ணாமலை செல்ல வேண்டும். எனவே, இந்த மருத்துவமனையில் உள்நோயாளிகளின் படுக்கை எண்ணிக்கையை அதிகரிக்க அரசு ஆவன செய்ய வேண்டும், செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூன்று மாதங்களுக்கு முன்னால்தான் தமிழ்நாட்டிலே

உள்ள எல்லா தாலுக்கா மருத்துவமனைகளுக்கும், அல்ட்ரா சவுண்ட் ஸ்கேனர் கருவி எட்டு இலட்சம் ரூபாயிலேயும், பேபி வார்மர் போன்ற கருவிகளையும் வாங்கி "குளு குளு" அறையையும் கட்டித் தந்து இருக்கிறோம். இன்னும் வசதிகள் தேவைப்பட்டால் அடுத்த நிதியாண்டிலே வந்தவாசி மருத்துவமனை பற்றி அரசு பரிசீலிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பெ. ஆசையன்.

**திரு. பெ. ஆசையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆண்டிப்பட்டி தொகுதி ஆண்டிப்பட்டியில் தாலுக்கா அளவிலான அரசு மருத்துவமனையில் தினமும் 550-க்கும் குறையாத வெளிநோயாளிகள் சிகிச்சை பெற்றுக் கொண்டிருந்தாலும் கூட 32 படுக்கைகள் கொண்டிருக்கிற ஒரு மருத்துவமனையாகவும் அதிலும் ஒரேயொரு மருத்துவரைக் கொண்டு இயங்கிக் கொண்டிருக்கிறது. இதுபோன்ற தாலுக்கா அளவிலான மருத்துவமனையில் கூடுதல் மருத்துவர்களை நியமித்து, கூடுதல் படுக்கையறை வழங்கும் உத்தேசம் இந்த அரசுக்கு உண்டா என்று அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டதைப் போல வெளிநோயாளிகள் 500 பேருக்கு மேலே வருவதாகச் சொன்னார்கள். 500 பேர் புறநோயாளிகள் இருக்கிற இடத்திலே 32 படுக்கைகளும், 1,000-க்கு மேலே புறநோயாளிகள் இருக்கின்ற இடத்திலே படுக்கைகளின் எண்ணிக்கையை 60-லிருந்து 90-வரையில் உயர்த்துவது என்று ஏற்கெனவே அரசாங்கம் திட்டமிட்டிருக்கிறது. அங்கே இருக்கக்கூடிய டாக்டர்களுடைய எண்ணிக்கை இப்போது போதவில்லையென்று சொன்னார்கள். குறைந்தபட்சம் ஒவ்வொரு தாலுக்கா மருத்துவமனையிலே நான்கு டாக்டர்கள் இருக்க வேண்டுமென்பது அரசினுடைய ஆணை. இப்போது 500 டாக்டர்கள் தேவைப்படுகின்ற காரணத்தினாலே நியமிக்கப்பட முடியவில்லை. அதைத்தான் நான் ஏற்கெனவே சொன்னேன். எங்கே டாக்டர்கள் இல்லையோ அவர்களையெல்லாம் தேர்வாணையம் தேர்வு செய்து அரசுக்குப் பட்டியலை ஒப்படைத்தவுடன் அந்த இடங்கள் நிரப்பப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு வ. அன்பழகன்.

**திரு. வ. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய தானைத் தலைவர் அவர்கள் முதல்வராகப் பொறுப்பேற்று,





மக்கள் நல்வாழ்வுத் துறைக்கு நம்முடைய அமைச்சர் அவர்கள் பொறுப்பேற்றதற்குப் பிறகு மருத்துவத் துறையிலே ஒரு மறுமலர்ச்சி ஏற்பட்டது என்று சொல்லலாம். 600 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்குக் கட்டடங்கள் வழங்கியும், மருத்துவமனைகளுக்கு ஸ்கேன், எக்ஸ்ரே கருவிகள் வழங்கியும் கூடுதலாக மருத்துவமனைகளுக்கு மருத்துவர்களை நியமித்தும் இன்றைக்கு சிறப்பான முறையிலே நம்முடைய அமைச்சர் அவர்கள் செயலாற்றிக் கொண்டு வருகிறார்கள். அந்த வகையிலே செய்யாறு அரசு மருத்துவமனைக்கு பல் மருத்துவர், கண் மருத்துவர் உட்பட கூடுதலாக மருத்துவர்களை நியமிக்க நம்முடைய அமைச்சர் அவர்கள் முன்வருவாரா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செய்யாறிலே ஏற்கெனவே பல் மருத்துவப் பிரிவு ஒன்று இயங்கி வருகிறது. கண் மருத்துவப் பிரிவை பொறுத்தமட்டிலே உலக வங்கியின் மூலம் ஒவ்வொரு மாவட்டத்தினுடைய தலைநகரங்களிலேயும் மருத்துவமனைகள் கட்டித் தர வேண்டுமென்று இந்த அரசு முடிவு எடுத்திருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் எந்தப் பகுதியிலே கண் நோயாளிகள் அதிகமாக இருக்கிறார்கள் என்பதற்கான விவரங்களை தருவார்களேயானால் குறைந்தபட்சம் 16 படுக்கைகள் கொண்ட கண் மருத்துவமனையை அங்கு ஆரம்பிக்க இயலுமா என்பதை அரசு பரிசீலிக்கும்.

முற்பகல் 9-45

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இறுதியாக திரு. எஸ். எஸ். மணி நாடார்.

**திரு. எஸ். எஸ். மணி நாடார்:** மரியாதைக்குரிய மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய சாத்தான்குளம் தொகுதியில் உள்ள 32 படுக்கைகள் கொண்ட அரசு மருத்துவமனையில் ஒரே ஒரு டாக்டர்தான் இருக்கிறார்கள். தினமும் 200, 300 நோயாளிகள் வந்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே, அந்த மருத்துவமனையில் போதிய அளவிற்கு டாக்டர்கள் இல்லாத காரணத்தால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் டாக்டர்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்தித் தருவார்களா என்பதை தங்கள் மூலமாக வேண்டி கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்களுடைய கோரிக்கை மே மாதத்திலே நிறைவேற்றப்படும்.

[1997 மார்ச் 25

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 322, திரு. அ. அசோகன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

**322—**

**சிட்கோ தொழிற்பேட்டைக்கு மின்மாற்றி அமைத்தல்**

***4087-திரு. அ. அசோகன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாகப்பட்டினம் சிட்கோ தொழிற்பேட்டைக்கு தனி மின்மாற்றி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

**திரு. அ. அசோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாகப்பட்டினம், நாகூர்சாலை, வடக்கு பால்பண்ணைச்சேரியில் ஒரு மின மாற்றி உள்ளது. அதன் மூலம் சுமார் 2,000 வீடுகளுக்கு மின் இணைப்பு கொடுக்கப்பட்டுள்ளது. மேலும், நாகப்பட்டினம் சிட்கோ தொழிற்பேட்டையில் உள்ள தொழிற்சாலைகளுக்கும், இந்த மின் மாற்றியிலிருந்துதான் மின் இணைப்பு வழங்கப்படுள்ளது. இப்படி, வீடுகளுக்கும், தொழிற்சாலைகளுக்கும் ஒரே மின்மாற்றி மட்டுமே பயன்படுத்தப்படுவதால், இப்பகுதியில் அடிக்கடி மின்தடை ஏற்படுகிறது. இதனால், தொழிற்பேட்டையிலுள்ள தொழிற்சாலைகளினுடைய உற்பத்தித் திறன் பாதிக்கப்படுகிறது. எனவே, நாகப்பட்டினம் சிட்கோ தொழிற்பேட்டைக்கு என்று தனி மின்மாற்றி அமைக்க அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், நாகப்பட்டினம் சிட்கோ தொழிற்பேட்டைக்குச் சென்று, அங்கேயுள்ள மின் நிலையத்தினுடைய நிலை எப்படி இருக்கிறது என்பதைப் பார்ப்பது நல்லது என்று கருதுகிறேன். ஏன் என்றால், அங்கே ஏற்கனவே 11 கே.வி. மின் அழுத்தத்தில், 250 கே.வி.ஏ. மின்மாற்றி ஒன்று இப்போது உள்ளது. அதிலே 275 குதிரை திறன் உள்ள பளுவை இணைக்கலாம். ஆனால்,



1997 மார்ச் 25]

தற்போது 130 குதிரைத் திறன் பளு உள்ள மின் இணைப்புகள் மட்டும்தான் அங்கே இருக்கின்றன. இன்னமும் 145 குதிரைத் திறன் மின் இணைப்பு கொடுப்பதற்கு வசதிகள் இருக்கின்றன. அதையே பயன்படுத்தாத ஒரு சூழ்நிலை இருக்கும்போது, இன்னொரு துணை மின் நிலையம் தேவைப்படவில்லை. எனவே, அரசு அதைப் பற்றி பரிசீலிக்கவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 323, திரு. ச. இராஜரெட்டி, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

**323—**

**நிலமற்ற விவசாயிகளுக்கு பட்டா வழங்குதல்**

***4914—திரு. ச. இராஜரெட்டி:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தேன்கனிக்கோட்டை வட்டம், தளி தொகுதியில் பல ஆண்டுகளாக புறம்போக்கு நிலங்களில் விவசாயம் செய்து வரும் நிலமற்ற விவசாயிகளுக்கு பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தேன்கனிக்கோட்டை வட்டம், தளித் தொகுதியில் உள்ள நிலங்கள் மலைகளால் சூழப்பட்ட மலைப் பிரதேசமாகும். மலைப்பகுதி நிலங்களுக்கு ஒப்படை வழங்குவதற்கும் வரன்முறைப்படுத்துவதற்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது. எனவே மலைப்பகுதியில் உள்ள நிலங்களுக்கு ஒப்படை வழங்க தற்போது இயலாத நிலை உள்ளது.

**Thiru S. Raja Reddy:** Hon.Speaker Sir, Thali Constituency is the most backward constituency in Tamil Nadu and the people have been cultivating the lands for generations and this is the only source of their livelihood; the ban was imposed by previous D.M.K. regime, people are hoping that this ban will be lifted by this Government. So I request the Hon. Minister to reconsider his decision and issue pattas not to the people in the hill areas but at least to the people in the plain areas.

[1997 மார்ச் 25

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு ஆணை நிலை எண் 1168, வருவாய்த் துறை நாள் 25-7-1989-ல் மாநிலத்தில் உள்ள அனைத்து மலைப் பகுதிகளிலும் மண் அரிப்பு மற்றும் நிலச்சரிவு போன்ற இயற்கை இடர்ப்பாடுகள் ஏற்படாமல் தடுத்து, சுற்றுப்புறச் சூழ்நிலையைப் பாதுகாப்பதும், காடுகளைப் பாதுகாப்பதும் தற்போது மிக அவசியம் என்று அரசு கருதி, அனைத்து மலைப் பகுதிகளிலும் விவசாயத்திற்கு ஒப்படை வழங்குவதற்கும், ஆக்கிரமிப்புகளை வரன் முறைப்படுத்துவதற்கும் தடை விதிக்கப்படுள்ளது. தர்மபுரி மாவட்டம், தேன்கனிக்கோட்டை வட்டம் தளி தொகுதியில் உள்ள நிலங்கள், மலைகளால் சூழப்பட்ட மலைப் பிரதேசமாகும். எனவே, மேற்படி அரசு ஆணையின்படி, தேன்கனிக்கோட்டை வட்டம் தளி தொகுதியில் நில ஒப்படை தற்போது வழங்க இயலாத நிலையில் உள்ளது. I hope you are satisfied.

முற்பகல் 9-50

**Hon. Speaker :** Thiru S. Venkatasamy.

**Thiru B. Venkatasamy :** Hon'ble Speaker Sir, Hosur and Tenkanikotta taluks are at 3,000 ft. above sea level. Bangalore is also above sea level. Hosur and Tenkanikotta taluks are not hill areas. Hills are there. But all are plain lands. So, the classification of these taluks as hill areas is definitely not correct. Lot of poor people are cultivating lands in these areas for so many years. Bangalore is also 3,000 ft. above sea level, but it is not classified as hill area. Both Hosur and Bangalore are at the same level. So, I request you to reclassify it. I think the officials have classified it wrongly. May I know from the Hon'ble Minister for Revenue, whether the Government would reconsider it and see that the poor people who are cultivating the lands there are given pattas?

**Hon. Thiru Nanjil K. Manoharan :** Hon'ble Speaker Sir, Government will consider the suggestion given by the Hon. Member Thiru Venkatasamy. It is now in the consideration stage. Nothing else to say.

**Hon. Speaker :** Thiru S. Raja Reddy.



1997 மார்ச் 25]

**Thiru S. Raja Reddy:** Hon'ble Speaker Sir, the report given to the Hon'ble Chief Minister is far from truth. All the lands are not surrounded by hills. There are plain areas also and the report of the revenue officials is far from truth. As thousands of families are dependent on these lands for their livelihood, may I know from the Hon. Minister whether the Government would reconsider its stand?

**Hon'ble Thiru Nanjil K. Manoharan:** Hon'ble Speaker Sir, if it is a plain area, we will consider it.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 324, திரு. கே.ஆர். இராமசாமி, மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**324—**

**கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் சேர்த்தல்**

***1325அ—திரு. கே. ஆர். இராமசாமி:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம், திருவாடனை, ஆர்.எஸ். மங்கலம் ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் செயல்படாதது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அரசு எடுத்த நடவடிக்கை யாது?

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): இராமநாதபுரம் மாவட்டம், திருவாடனை மற்றும் ஆர்.எஸ். மங்கலம் ஊராட்சி ஒன்றியங்களிலுள்ள சில கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் முழுமையாக செயல்படாமல் உள்ளதை சீர் செய்ய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. முதல் கட்டமாக, திருவாடனை மற்றும் ஆர்.எஸ். மங்கலம் ஆகிய ஊராட்சி ஒன்றியங்களைச் சேர்ந்த 21 கூட்டுக் குடிநீர்த் திட்டங்களில் 9 கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் தேர்வு செய்யப்பட்டு புனரமைப்புத் திட்டத்தின்கீழ் புனரமைப்புப் பணிகள் போர்க்கால அடிப்படையில் மேற்கொள்ளப்

[1997 மார்ச் 25

பட்டன. புனரமைப்புத் திட்டத்தில் மேற்கொண்டு இருந்தாலும், இத்திட்டம் விரிவான குடிநீர் அபிவிருத்தித் திட்டமாகக் கருதப்பட்டது. இத்திட்டத்திலுள்ள ஆழ்துளைக் கிணறுகள் 15 ஆண்டுகளுக்கு மேற்பட்டவை. எனவே புதிதாக 1500 அடிக்கு மேற்பட்ட ஆழமுள்ள ஆழ்துளைக் கிணறுகள் 10 புதிதாக அமைக்கப்பட வேண்டியிருந்தது. ஒவ்வொரு கிணறும் அமைப்பதற்குக் குறைந்தது இரண்டு மாதங்களாகும். இதுவரை ஆழ்துளைக் கிணறுகள் அமைத்து முடிக்கப்பட்டுள்ளன. இதர பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. 1997-98ஆம் ஆண்டில் இப்பணிகள் அனைத்தும் முடிக்கப்பட்டு, திட்டங்கள் முழுமையாக பயனுக்குக் கொண்டு வரப்படும்.

**திரு. கே. ஆர். இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சரவர்கள் எங்கள் மாவட்டத்திற்கு வருகை தந்து நல்ல உள்ளத்துடன், அவர்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு உத்தரவுகள் இட்டார்கள். உத்தரவுகளையிட்டு பல மாதங்கள் ஆகிவிட்டன. ஆனால் அந்தப் பகுதி கடற்கரையைச் சார்ந்த பகுதி, குடிதண்ணீருக்கு அந்தப் பகுதி மக்கள் மிக மிகச் சிரமப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். இன்னும் நாட்கள் கடந்தால் அந்தப் பகுதியிலே கடுமையான குடிதண்ணீர்ப் பிரச்சினை ஏற்பட வாய்ப்பு இருக்கிறது. குறிப்பாக அங்கே ஓரசூர் என்ற ஒரு ஸ்கீம் இருக்கிறது. விலாங்காட்டூர் திருவாடானை, தொண்டி ஸ்கீம், எண்மனக்குடி ஆகிய கூட்டுக் குடிநீர்த் திட்டங்களை உடனடியாக செயல்படுத்த ஆவன செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற 24-6-1996 அன்று நான் அவர் பகுதிக்கு வந்ததாக ஞாபகம். இதெல்லாம் அவர்கள் எடுத்துச் சொன்னதன் அடிப்படையில் அதற்காக மாவட்டத்தில் கூட்டுக் குடிநீர் திட்டங்களை முறையாகப் பராமரிப்பதற்காகவே 1-7-1996 அன்று இராமநாதபுரத்தை தலைமையிடமாகக் கொண்டு ஒரு பராமரிப்புக் கோட்டம் செயல்படத் துவங்கியிருக்கிறோம். ஆகவே இந்தப் பணிகளை விரைவாகத் தொடங்கி அதையும் சேர்த்து நடத்தும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சருடைய மானியக் கோரிக்கை நாளை மறுநாள். ஆகையால் அதில் கேட்டுக் கொள்ளலாம்.

வினா எண் 325, திருமதி ஆர். சரஸ்வதி, மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.



1997 மார்ச் 25]

**325—**

## குடிதண்ணீர் வழங்கும் திட்டம்

***1756-திருமதி ஆர். சரஸ்வதி:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வறட்சி தொகுதியான தாராபுரம் தொகுதிக்கு குடிதண்ணீர் வழங்கும் திட்டம் ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): தாராபுரம் சட்டமன்ற தொகுதியின் மொத்த குடியிருப்புகள் 121 ஆகும். இவற்றில் 21 குடியிருப்புகளுக்கு முழுமையான குடிநீர் வசதி அளிக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள 100 குடியிருப்புகளும் பாதி அளவிற்கு குடிநீர் வசதி பெற்றுள்ளன. குடிநீர் வசதி இல்லாத குடியிருப்புகள் ஏதுமேயில்லை.

முற்பகல் 9-55

**திருமதி ஆர். சரஸ்வதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாராபுரம் தொகுதிக்குக் குடிநீருக்காகவும், விவசாயத்திற்காகவும் அமராவதி அணையிலிருந்து தண்ணீர் வருகின்றது. அமராவதி அணையின் கொள்ளளவு குறைவாக இருப்பதால் தாராபுரம் தொகுதி 6 மாதம் செழிப்பாகவும், குடிநீரே கிடைக்காமல் 6 மாதம் வறட்சியாகவும், இருக்கின்றது. ஆகவே, வருடம் முழுவதும் நிரந்தரமாகக் குடிநீர் கிடைக்க அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நடப்பு நிதியாண்டில், தாராபுரம் ஒன்றியம் கள்ளிவரத்து கிராமத்திற்கும் அதைச் சுற்றியுள்ள சில பகுதிகளுக்கும் ரூ. 12.60 லட்சம் மதிப்பீட்டில் இந்தத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இன்னும் சில நாட்களில் முடிவுற்றுவிடும். அது இன்னும் சில நாட்களில் அமலுக்கு வந்துவிடும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 326. திரு. ஜி. பழனிசாமி. மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

**326—**

**விவசாயிகளுக்கு மானிய உதவி வழங்குதல்**

***2047-திரு.ஜி. பழனிசாமி:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஏ.டி. பன்னீர்செல்வம் மாவட்டம், வேளாண்மைத் துறை வழங்கும் மானிய உதவி சிறு, குறு விவசாயிகளுக்கு முறையாகக் கிடைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) இவற்றை கண்காணிக்க விவசாயிகளைக் கொண்ட கண்காணிப்புக்குழு அமைக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. சோ. ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): ஏ.டி. பன்னீர் செல்வம் மாவட்டத்தில் வேளாண்மைத துறை வழங்கும் மானிய உதவிகள், அந்தந்த ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த உதவி வேளாண்மை அலுவலர்கள் பரிந்துரையின் பேரில், வேளாண்மை வளர்ச்சி அலுவலர் அலுவலகத்தில் உள்ள வேளாண்மை விரிவாக்க மையங்கள் மூலம் சிறு, மிகச் சிறு விவசாயிகளுக்கு தற்போது முறையாக அளிக்கப்பட்டு வருகிறது.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏ.டி. பன்னீர்செல்வம் மாவட்டத்தில், வேளாண்மை இடுபொருட்கள் வழங்குகின்ற அந்த நிறுவனத்தின் மூலமாக மானியத்தோடு வழங்கப்படக்கூடிய அந்த இடுபொருட்கள் எல்லாம் சிறு, குறு விவசாயிகளுக்கு முற்றிலும் தெரிவதில்லை. அப்படித் தெரிந்தாலும், அந்த விவசாயிகள் போய்க் கேட்கின்றபோது, அந்தச் சங்கத்தினர் கொடுத்து முடிந்துவிட்டது என்கின்றனர். அதுபோன்ற இடுபொருட்களை இரண்டொரு விவசாயிகளே சேர்த்து எடுத்து மொத்தமாகச் சிலரிடத்தில் விற்பனை செய்து விடுகிறார்கள். அதுபோன்ற பல இடுபொருட்கள், அதாவது விவசாயிகளுக்கு மானிய விலையில் கிடைக்கக்கூடிய இடுபொருட்களான பூச்சி மருந்து, விதை, உளுந்து போன்றவை எல்லாம்





சரியாக அந்த விவசாயிகளைச் சென்று அடைவதில்லை. ஆகவே, அதிலே நடைபெறுகின்ற முறைகேடுகளைத் தடுக்கின்ற வகையில், சிறு, குறு விவசாயிகளைக் கொண்ட கமிட்டி ஒன்றை அமைத்து, அது கவனிக்கப்பட நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சோ. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேளாண்மைத் துறை மூலம், சிறு மற்றும் மிகச் சிறு விவசாயிகளுக்கு மற்றும் இடுபொருட்கள் வழங்குவது முறையாகப் போய் சேர வேண்டும் என்பதிலே யாருக்கும் ஆட்சேபணை இல்லை. ஆனால், அந்த விவசாயிகளுக்கு, எந்தெந்த வகையான பயிர்களுக்கு மத்திய, மாநில அரசின் உதவியுடன் இடுபொருட்கள் கிடைக்கின்றன என்பது போதுமான அளவுக்குத் தெரியவில்லை என்பதும் ஒரு குறைபாடு. இதனைப் போக்க வேண்டும் என்பதற்காக, நம்முடைய இந்த அரசு பொறுப்பேற்றுக் கொண்டவுடன், இப்போது ஒவ்வொரு ஊராட்சி ஒன்றிய அளவிலும் குறைந்தபட்சம் 200, 300 விவசாயிகளையாவது கூட்டி வைத்து, வேளாண்மைத் துறையோடு ஒத்துள்ள அனைத்துத் துறைகளையும் சேர்ந்த அலுவலர்கள் எல்லாம் இணைந்து அந்த விவசாயிகளின் மத்தியில், அந்தந்தத் துறையின் மூலம் விவசாயிகளுக்கு என்னென்ன உதவிகள் வழங்கப்படுகின்றன, அதை எப்படி அவர்கள் பயன்படுத்திக் கொள்ளலாம் என்று பயிற்சி அளிக்கின்றனர். இன்னும் சொல்லப்போனால், அவர்கள் சொல்கின்ற ஆலோசனைகளின் பேரிலே தொழில் நுட்பங்களை விவசாயிகள் செய்வதன் மூலம் நல்ல விளைச்சலை அவர்கள் ஈட்டிக்கொள்ளலாம் என்ற வகைகளில் அந்தப் பயிற்சியும் நடத்த வேண்டும் என்று சொல்லப்பட்டுள்ளது. ஏறத்தாழ 1,30,000-க்கு மேற்பட்ட விவசாயிகள் இது போன்ற பயிற்சிகளிலே கலந்து கொண்டு பயிற்சி பெற்றிருக்கிறார்கள். அதுமட்டுமல்ல, இப்போது நாங்கள் ஒரு குழு அமைக்கச் சொல்லியிருக்கின்றோம். அந்தக் குழுவில் மாவட்ட ஆட்சித் தலைவர் தலைவராகவும், மாவட்ட ஆட்சித்தலைவரின் நேர்முக உதவியாளராக இருக்கிற வேளாண்மை அலுவலர் செயலர்-உறுப்பினராகவும், பாராளுமன்ற, சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் அதில் உறுப்பினர்களாகவும், மாவட்டக் கூட்டுறவு இணைப் பதிவாளர், மாவட்ட உதவி இயக்குநர், புள்ளியல் துறை, துணை ஆட்சியர், மக்கள் குறை தீர்ப்பு ஆகியோர் உறுப்பினர்களாகவும், மற்றும் மாவட்டத்தில் உள்ள தீவிர விவசாயி ஒருவர் உறுப்பினர் என்ற முறையில் அந்தக் குழுவை அமைத்துச் செயல்பட வேண்டும் என்று 30-1-1997-லே அரசாங்கம் ஆணையிட்டிருக்கிறது.

[1997 மார்ச் 25

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமீபத்திலே ஏற்பட்ட பெரு வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு வழங்கப்படுகிற நிவாரணத் தொகைகள் இதுவரையிலும் பல இடங்களிலே வழங்கப்படாமல் இருப்பதை அரசு அறியுமா? அப்படி வழங்கப்படாமல் இருக்கிற தொகைகளை விரைவான முறையிலே நடவடிக்கை எடுத்து அந்த விவசாயிகளுக்கு சென்றடைவதற்கான முயற்சிகளை அமைச்சர் அவர்கள் மேற்கொள்வார்களா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-00

**மாண்புமிகு திரு. சோ. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புயல், பெரும் வெள்ளத்தினாலே பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு இந்த அரசால் பயிர்நஷ்ட ஈடாகப் பெரும் தொகை ஒதுக்கி வழங்கப்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அறிவார்கள். அதிலே இதுவரை அண்ணா மாவட்டம், எம்.ஜி.ஆர் மாவட்டம் இவைகளில் 100% கொடுக்கப்பட்டதாக அரசு அலுவலர்கள் எனக்குக் கணக்குத் தந்திருக்கிறார்கள். தென்னாற்காடு வள்ளலார் மாவட்டத்திலே 90%, விழுப்புரம் ராமசாமி படையாச்சியார் மாவட்டத்திலே 90%, அதைப்போல வட ஆற்காடு-அம்பேத்கர் மாவட்டத்திலே 100%, திருவண்ணாமலையிலே 100%, திருச்சி, பெரம்பலூர், புதுக்கோட்டை, தஞ்சாவூர், ஏ.டி. பன்னீர்செல்வம், சேலம் இதுபோன்ற மாவட்டங்களில் எல்லாம் 97% கொடுத்துவிட்டதாகக் கணக்கு. ஆனால், இதிலே மொத்த விவசாயிகள் எவ்வளவு பேர் பயன்பெற்றிருக்கிறார்கள் என்றால் 9,42,394 பேர்-இவர்களுக்கு பணம் கொடுத்துவிட்டதாக இங்கே கணக்கு இருக்கிறது. இதிலே எங்கே குறைபாடு இருக்கிறது என்று சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறதோ அங்கே உடனடியாக யாராக இருந்தாலும், எப்படிப்பட்ட அலுவலராக இருந்தாலும் தயவு தாட்சண்யம் இல்லாமல் நாங்கள் நடவடிக்கை எடுத்து பல அதிகாரிகளை, தற்காலிகமாகப் பணிநீக்கம் செய்து விசாரணையும் நடத்திக் கொண்டிருக்கிறோம். மாண்புமிகு சட்டப் பேரவை உறுப்பினர்கள் போன்றவர்கள் அரசுக்கு இன்னும் கொஞ்சம் ஒத்துழைப்பு கொடுக்க வேண்டும். அப்படி எங்கேயாவது தவறாக உண்மையாக பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு கொடுக்காமல் அலுவலர்கள் நடந்துகொண்டிருப்பார்களேயானால், அதைச்



1997 மார்ச் 25]

சுட்டிக்காட்டினால் இந்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும். தோட்டக்கலைத் துறையைப் பொறுத்தவரைக்கும் அதற்கு 7½ கோடி ரூபாயை நம்முடைய முதலமைச்சர் அவர்கள் கொடுத்தார்கள். அதிலேதான் கொஞ்சம் கொடுப்பதிலே சுணக்கம் ஏற்பட்டது. காரணம் உரிய அலுவலர்கள் அந்தத் துறையிலே இல்லை. அது தெரிந்த பிறகு மற்ற மாவட்டத்திலேயிருந்து அந்தப் பணியைச் செய்ய வேண்டும் என்று கூறி ஏ.டி. பன்னீர்செல்வம் மாவட்டம், நாகை மாவட்டம், தஞ்சாவூர் மாவட்டம், திருச்சி மாவட்டம், ஆகியவற்றிலிருந்து பெரம்பலூர் மாவட்டத்திற்கு அந்த அலுவலர்கள் அனுப்பப்பட்டு இப்பொழுது வழங்கிக் கொண்டிருக்கிறார்கள். விரைவில் அங்கும் கொடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ரா. ஈஸ்வரன்.

**திரு. ரா. ஈஸ்வரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் 384 பஞ்சாயத்து யூனியன்கள் இருக்கின்றன. ஆங்காங்கு ஒரு வேளாண்மைத் துறை அலுவலகம் இருக்கிறது. மத்திய மாநில அரசுகள் சப்சிடியில் கொடுக்கக்கூடிய எண்ணெய் வித்துப் பொருள்கள், பூச்சிக்கொல்லி மருந்துகள், இந்த மாதிரி பொருள்கள் எல்லாம் அங்கிருக்கக்கூடிய பஞ்சாயத்து யூனியனின் வேளாண்மைத் துறை அலுவலகத்தில் விவசாயிகள் போய்க் கேட்கும்போது, அந்தப் பொருள்கள் இல்லை என்று சொல்லப்படுகின்றன. ஆனால் தனியார் மருந்துக் கடைகளில் அந்தப் பொருள்கள் இருக்கின்றன. பினாமிகள் பேரில் அவை கடத்தப்பட்டு வியாபாரிகள் மூலமாக அதிகப்படியான விலைகளுக்கு விற்கப்படுகின்றன. இது அரசுக்குத் தெரியுமா? திருடிக்கொண்டு போகிற அந்த வியாபாரிகள்மீது இதுவரைக்கும் தமிழகத்தில் ஏதாவது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-05

**மாண்புமிகு திரு. சோ. ஆறுமுகம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முன்பு கேட்ட கேள்விக்கு நான் விளக்கமாகப் பதில் தந்து இருக்கிறேன். பல்வேறு திட்டங்கள் விவசாயிகளுக்கு மத்திய அரசின் மூலமும், மாநில அரசின் மூலமும், வேளாண்மைத் துறை, எண்ணெய் வித்துத் துறை, தோட்டக்கலைத் துறை ஆகிய பல்வேறு துறைகள் மூலம் பல்வேறு சிறு, மிகச் சிறு விவசாயிகளுக்கு நாம் மானியமாக உதவித் தொகைகளை வழங்கிக் கொண்டிருக்கிறோம். அது முழுமையாக

[1997 மார்ச் 25

அவர்களுக்குப் போய்ச் சேரவேண்டும் என்பதுதான் இந்த அரசின் கொள்கை. ஆனால புகார்கள் வருமானால், இந்த அரசைப் பொறுத்தவரையில்—கடந்த காலத்தில் எப்படி வேண்டுமானாலும் இருந்திருக்கலாம் — இந்த அரசு பொறுப்பு ஏற்றுக்கொண்ட பிறகு வெள்ள நிவாரண நிதி உதவி செய்ததில்கூட சில தவறுகள் நடைபெற்றது என்று புகார்கள் வந்தவுடனே வேளாண்மைத் துறையில் இருக்கக்கூடிய, மாநில அளவில் இருக்கக்கூடிய மேல் அதிகாரிகளை நீங்களே நேரடியாகச் சென்று விசாரித்து அந்த இடத்திலேயே கடுமையான நடவடிக்கை எடுத்து வேலை நீக்கம் செய்து விட்டு, பிறகு அவர்கள் மேல் குற்றச்சாட்டு சுமத்தி இறுதி முடிவுக்கு வரலாம் என்று ஆணையிட்டதின்பேரில், நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே கேட்ட அந்தக் கேள்வியின் அடிப்படையில் இதுபோன்ற புகார்கள் வரவில்லை. இப்போதும்கூட இந்த அவையிலே மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலம் நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். அப்படி எங்காவது தவறுகள் நடைபெறுமானால் அவர் சுட்டிக்காட்டினால் நடவடிக்கை எடுக்க இந்த அரசு தயாராக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : திரு. ஜி. கே. மணி.

**திரு. ஜி. கே. மணி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த சில மாதங்களுக்கு முன்பு பெருத்த மழையால் சேதம் ஏற்பட்ட எல்லா பகுதிகளுக்கும் வெள்ள நிவாரண உதவித் தொகை வழங்கப்பட்டது. ஆனால் தர்மபுரி மாவட்டத்தைப் பொறுத்தவரையில் அங்கே வீடுகள் இழப்பு, கால்நடைகள் சேதம், பயிர்ச் சேதம் எல்லாம் ஏற்பட்டது. அங்கே தர்மபுரி மாவட்டம் முழுவதும் வெள்ள நிவாரண உதவித் தொகை வழங்கப்படவில்லை. காரணம் கேட்டதற்கு இங்கே 50 சதவீதத்திற்குக் குறைவாக சேதம் ஏற்பட்ட காரணத்தால் வழங்கப்படவில்லை என்று ஒரு காரணம் கூறப்பட்டது. ஆகவே, 50 சதவீதத்திற்குக் குறைவாக இருந்தாலும் கூட விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளார்கள் என்ற காரணத்தால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறு பரிசீலனைச் செய்து தர்மபுரி மாவட்டம் முழுவதும் பாதிக்கப்பட்டவர்களுக்கு வெள்ள நிவாரண உதவித் தொகை வழங்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சோ. ஆறுமுகம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வெள்ளச் சேதம் ஏற்பட்ட உடனே அந்த அந்த மாவட்டங்களில் இருக்கக்கூடிய மாவட்ட நிர்வாகத்தோடு அரசு



1997 மார்ச் 25]

தொடர்புகொண்டு பயிர்கள் வகையில் எந்த எந்தப் பயிர்கள் எவ்வளவு சேதம் ஏற்பட்டுள்ளது, நிலங்கள் எவ்வளவு பாதிப்புக்கு உள்ளாகி இருக்கின்றன என்ற அறிக்கை பெறப்பட்டது. அப்படி பெறப்பட்டபோது எந்த எந்த மாவட்டங்களில் இருந்து இதுவெல்லாம் பாதிக்கப்பட்டிருக்கிறது என்று அறிக்கை வந்ததோ, அந்த அறிக்கையின் அடிப்படையில்தான் கணக்கிட்டு பயிர்களுக்கும், தோட்டக்கலைப் பயிர்களுக்கும் மாநில அரசால் சுமார் 54 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டு அது வினியோகிக்கப்பட்டிருக்கிறது மற்றும் ஒன்று தர்மபுரி மாவட்டத்திலே பயிர்கள் பாதிக்கப்படாவிட்டாலும் கூட பாதைகள் எல்லாம் சீரழிக்கப்பட்டு இருக்கிறது என்பது அரசுக்குத் தெரியும். அந்த அடிப்படையில்தான் அதற்காக இந்த வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட பாதைகளைச் செப்பனிடுவதற்காக நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நிதியை வழங்கியிருக்கிறார்கள். ஆனால் பயிர்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக அரசுக்குத் தகவல் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினா எண் 327, திரு. செங்கை சிவம், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

**327—**

## தமிழ்நாட்டில் செம்பனை உற்பத்தி

***5074—திரு. செங்கை சிவம் :**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் செம்பனை உற்பத்தி எந்த நிலையில் உள்ளது?

(ஆ) அம்மரங்களிலிருந்து பாமாயில் உற்பத்தி துவங்கப்பட்டு விட்டதா?

**மாண்புமிகு திரு. சோ. ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தமிழ்நாட்டில் செம்பனை உற்பத்தித் திட்டம் திருச்சி, தஞ்சை மற்றும் நாகை-காயிதே மில்லத் மாவட்டங்களில் 1993-94-ல் துவக்கப்பட்டு ஏறத்தாழ 8,000 எக்டேர் பரப்பளவில் செம்பனை நடவு செய்யும் திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

(ஆ) செம்பனை நடவு செய்து 4½ ஆண்டுகளுக்குப் பின்னரே பலன் தரும். எனவே, 1993-94-ஆம் ஆண்டு நடவு செய்யப்பட்டுள்ள

[1997 மார்ச் 25

செம்பனை மரங்கள் 1997-98 ஆம் ஆண்டு பலன் கொடுக்கத் துவங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**திரு. செங்கை சிவம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செம்பனை இந்த ஆண்டில் பலனைத் தருவதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். இவற்றில் இருந்து எண்ணெய் உற்பத்தி செய்யும் ஆலைகள் துவங்கப்படுமா ? எங்கே எப்போது துவங்கப்படும்? மேலும் All India High Level Committee தமிழகத்திலே செம்பனை பயிரிட ஆய்வு செய்து வேறு எந்தெந்த இடங்களில் சிபாரிசு செய்துள்ளது ? அதனுடைய பரப்பளவு எவ்வளவு ? தமிழகம் தன்னிறைவு பெற எவ்வளவு எக்டேர் நிலத்தில் செம்பனை பயிரிட வேண்டுமென்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-10

**மாண்புமிகு திரு. சோ. ஆறுமுகம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே அந்த மத்தியக் குழு பரிந்துரையின்பேரில் ஒன்றுபட்ட திருச்சி, தஞ்சை மாவட்டங்களை, அதேபோல நாகை—இந்த மாவட்டத்தில் எட்டாயிரம் எக்டேரில் செம்பனை பயிர் செய்யலாம் என்று பரிந்துரை செய்தது. 1997-98 ஆம் ஆண்டு முதல் மதுரை, திருநெல்வேலி மற்றும் சிதம்பரனார் மாவட்டங்களிலும் இது பயிரிடலாம் என்று அந்தக் குழு பரிந்துரை செய்து, மதுரை மாவட்டத்திலே 1,000 எக்டேரிலும், திருநெல்வேலி மாவட்டத்திலே 2,000 எக்டேரிலும், சிதம்பரனார் மாவட்டத்திலே 2,000 எக்டேரிலும், 5,000 எக்டேர் கூடுதலாகப் பயிர் செய்யக்கூடிய வாய்ப்பு இருக்கின்றது. ஏற்கனவே, இந்தச் செம்பனை 1993-94-லே பயிரிடுகின்ற காலத்தில், இது 4½ ஆண்டுகளுக்குப் பின்னாலே பலன் தரும். அப்பொழுது பாமாயில் தயாரிப்பதற்கு ஆலை நிறுவ வேண்டுமென்று ஒரு கோரிக்கை வந்தபொழுது, அந்த கோரிக்கையை ஏற்று, திருச்சி மாவட்டத்தைச் சேர்ந்த காவேரி சுகர்ஸ் அண்ட் கெமிக்கல்ஸ் லிமிடெட், பெட்டவாய்த்தலை என்ற இடத்தில் ஒரு தொழிற்சாலையும், காயிதே மில்லத் மாவட்டத்திலே எஸ். அன்ட் எஸ். இன்டஸ்ட்ரீஸ், இடம் - ஒரத்தநாடு பகுதியிலும் இந்த 2 இடங்களிலும் இந்தத் தொழிற்சாலைக்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. இதிலேகூட ஒரு பிரச்சினை எழுந்தது. இன்னும் அவர்கள் சரியாக அந்த ஆலையைப் போடவில்லை. பழம், தயாராகி விட்டது, ஆகவே நாங்கள் எங்கே விற்பனை செய்வோம் என்ற ஒரு கேள்வி அந்தப் பனை உற்பத்தி செய்த விவசாயிகள் மத்தியிலே எழுந்தபோது, நான் அவர்களை அழைத்துப் பேசியபோது, அப்படிப் பழம் உற்பத்தியானாலும்கூட நாங்கள் அதைப் பர்ச்சேஸ் செய்து, ஸ்டாக் வைத்துக்கொள்கிறோம், நாங்கள் விட்டுவிட மாட்டோம் என்றும் சொல்லியிருக்கின்றார்கள். ஆகவே, அந்த ஆலை பெட்டவாய்த்தலையிலும், ஒரத்தநாடு பகுதியிலும் விரைவிலே தொடங்கும் என்ற நம்பிக்கை இருக்கிறது.



1997 மார்ச் 25]

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினா எண் 328, திரு. எல். மூக்கையா, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

**328—**

## பண்ணைக்காடு பேரூராட்சிக்கு பேருந்து வசதி

***1356—திரு. எல். மூக்கையா :**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) கொடைக்கானல் ஒன்றியம், பண்ணைக்காடு பேரூராட்சியில் போதுமான அளவு பேருந்து வசதி இல்லாமல் இருப்பதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : தற்போது தேவையான பேருந்துகள் இயக்கப்படுகின்றன.

**திரு. எல். மூக்கையா :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொடைக்கானல் கீழ்மலைப் பகுதியில் உள்ள பண்ணைக்காடு பேரூராட்சி மக்கள் அனைவரும் விவசாயிகள். அவர்கள் விளைவிக்கக்கூடிய காப்பி, வாழை, ஆரஞ்சு, சௌசௌ போன்ற பொருட்களைக் கீழேயுள்ள திண்டுக்கல், மதுரை, திருச்சி, சென்னைக்குக் கொண்டு சென்றுதான் விற்பனை செய்கிறார்கள். மருத்துவ வசதி பெற வேண்டுமென்றாலும் கீழேதான் வரவேண்டிய நிலை உள்ளது. போதுமான வசதியில்லாமல் மிகவும் அவதிப்படுகிறார்கள். எனவே, பண்ணைக்காட்டிலிருந்து நேரடியாகத் திண்டுக்கல், மதுரை, திருச்சிக்குக் கூடுதல் பேருந்துவிட அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

[1997 மார்ச் 25

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, 20-5-1996-இல் மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சரவர்களும், பெரியகுளம் சட்டமன்ற உறுப்பினரும் வைத்த வேண்டுகோளின் அடிப்படையில் 10-7-1996 முதல் பண்ணைக்காட்டிலிருந்து வத்தலகுண்டுக்கு ஒரு பேருந்து விடப்படுகிறது. அதுமட்டுமின்றி, அங்கே பண்ணைக்காட்டிற்கும் இராணி மங்கம்மாள் போக்குவரத்துக் கழகத்தில் 8 பேருந்துகள் மூலம் 26 நடைகள் இயக்கப்படுகின்றன. 7 தனியார் பேருந்துகள் மூலம் 24 நடைகள் இயக்கப்படுகின்றன. ஆகவே, போதிய பேருந்து வசதிகள் அங்கே இருப்பதாகவே அரசு கருதுகிறது. மேலும், பேருந்துகள் வேண்டும் என்று சொன்னால், மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அறிவிக்கப் பட்டு இருக்கிற 2 வழித்தடங்களிலே ஒன்றை அவர் வேண்டுமானால் அங்கே விடுவதற்கான ஏற்பாடுகளைச் செய்து கொள்ளலாம்.

**திரு. எல். மூக்கையா :** தலைவர் அவர்களே......

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நான் உங்களைக் கூப்பிட்டால்தான் நீங்கள் பேசலாம், இப்போது பேசுங்கள்.

**திரு. எல். மூக்கையா :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பண்ணைக்காட்டிற்குத் தனியார் பேருந்துகள் எதுவும் செல்வது இல்லை. இப்பொழுது, தொகுதி சட்டமன்ற உறுப்பினர்களுக்கு, தொகுதிக்குள் சிபாரிசு செய்யும் 2 வழித்தடங்களில் அரசுப் பேருந்துகள் விடப்படும் என அறிவித்திருந்தாலும் அந்த 2 பேருந்துகளைக் கொடைக்கானல் மேல்மலைப் பகுதி கிராமங்களுக்கு விட வேண்டியிருப்பதால், பண்ணைக்காட்டிற்குக் கூடுதல் பேருந்துகள்—திண்டுக்கல், மதுரை, திருச்சியிலிருந்து பண்ணைக்காட்டிற்கு நேரடியாகப் பேருந்து விட அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-15

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 7 தனியார் பேருந்துகள் ஓடுவதாக என்னிடம் குறிப்புகள் கொடுத்திருக்கிறார்கள். இப்போது ஏதும் கூடுதலாகப் பேருந்துகள் விடுவதற்கு வாய்ப்புகள் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினா எண் 329, திரு. குத்தாலம் பி. கல்யாணம், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.



1997 மார்ச் 25]

**329—**

### காவிரி ஆற்றுப்பாலம் கட்டுதல்

***4212—திரு. குத்தாலம் பி. கல்யாணம் :**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குத்தாலம் காவிரி ஆற்றுப்பாலம் பழுதடைந்துள்ளது அரசுக்கு தெரியுமா?

(ஆ) இயற்கை எரிவாயு குழுமம் மூலம் எரிவாயு கண்டுபிடிக்கப்பட்டுள்ள இடம் மிக அருகில் இருப்பதால், உடனடியாக பாலம் கட்டப்படுமா?

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : இல்லை.

**திரு. குத்தாலம் பி. கல்யாணம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்ற இயற்கை எரிவாயு அமைந்துள்ள இடம் குத்தாலம் காவிரி ஆற்றுக்கும் விக்கிரமன் ஆற்றிற்குமிடையே இருக்கின்ற பகுதி. இரண்டு ஆறுகளுக்கிடையே இரண்டு பாலங்கள் இருக்கின்றன. அதிலும் குறிப்பாக, விக்கிரமன் ஆற்றுப்பாலம் தடுப்புச் சுவர் இடிந்து விழுந்திருக்கிறது. இந்த வழியாக பந்தநல்லூர் அணைக்கரை செல்ல 12 கிலோ மீட்டர்தான் தூரம். இந்தச் சாலைகளையெல்லாம் அகலப்படுத்தி, பாலம் கட்டப்பட்டால் தான், சிறப்பாகச் செயல்பட முடியுமென்ற எண்ணத்தில் அரசு இதற்கு முன்னுரிமை அளித்து ஆவன செய்யுமா என்று கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கே ஒரு உயர்மட்டப் பாலம் கட்ட வேண்டிய அவசியத்தை அரசு உணர்ந்திருக்கிறது. இப்பாலத்தை திரும்பக் கட்ட வேண்டியது அவசியம் என்று அரசு கருதுகிறது. அரசினுடைய நிதிநிலை அறிக்கையின்படி கிட்டத்தட்ட 2 கோடி ரூபாய் அதற்குத் தேவைபபடுகிறது. ஆகவே, இந்த ஆண்டு எடுத்துக்கொள்ள முடியாவிட்டாலும், வருகின்ற ஆண்டுகளில் அரசு அது பற்றி பரிசீலிக்கும்.

[1997 மார்ச் 25

**திரு. குத்தாலம் பி. கல்யாணம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாலைகளாவது அகலப்படுத்தித் தரப்படுமா என அமைச்சர் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாலம் குறுகலாக இருக்கிறபோது, சாலையை அகலப்படுத்துவது சம்பந்தம் இல்லாத கேள்வி என்றாலும், வருகின்ற காலங்களில் - இந்த ஆண்டே அரசு திட்டமிட்டு பல்வேறு சாலைகளை அகலப்படுத்துவதற்காக நபார்ட் திட்டத்தின் மூலமாக பல்வேறு பணிகளை மேற்கொண்டு வருகின்றது—அதற்குரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினா எண் 330, திரு. ஜி.கே. மணி, மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி மற்றும் தமிழ்ப் பண்பாட்டுத் துறை அமைச்சர்.

**330—**

**தமிழ் மொழிப் போர் தியாகிகளுக்கு மருத்துவப்படி**

***2473—திரு. ஜி. கே. மணி :**

மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி மற்றும் தமிழ்ப் பண்பாட்டுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ் மொழிப் போர் தியாகிகளுக்கு மருத்துவப்படி வழங்கப்படுமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது வழங்கப்படும் ?

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி மற்றும் தமிழ்ப் பண்பாட்டுத் துறை அமைச்சர் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) 10-11-96-ஆம் நாளன்று வெளியிடப்பட்ட தமிழ் வளர்ச்சி பண்பாட்டுத் துறை அரசாணை (நிலை) எண் 241-ன்படி மொழிப் போர் தியாகிகளுக்கு திங்களொன்றுக்கு ரூ. 15/- மருத்துவப்படியாக வழங்க அரசு ஆணையிட்டுள்ளது.

**திரு. ஜி. கே. மணி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலகத்தின் தொன்மை வாய்ந்த மொழியான நம்முடைய தாய் மொழி



1997 மார்ச் 25]

தமிழ் பாதுகாக்கப்பட வேண்டும், போற்றப்பட வேண்டுமென்று மொழி காக்க நம்முடைய வீரர்கள் பலபேர் இன்னுயிர் நீத்தார்கள். இன்னுயிர் நீத்த அந்தத் தியாகிகள் வழியிலேதான், இந்தத் தியாகிகள் இன்று போராட்டங்களிலே குதித்து உயிரோடு இருந்து வருகிறார்கள். அவர்களுக்கு இந்த அரசு உதவித்தொகை வழங்கி வருகிறது. அதேபோல, அவர்களுக்கு மருத்துவப்படி வழங்குவதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். மிக்க நன்றி. அந்த 15 ரூபாய் என்பது இன்னும் கூடுதலாக கூட்டி வழங்கப்படுமா ? அதோடு தமிழாய்ந்த தலைமகன் நம்முடைய தமிழகத்தின் முதல்வராக இருக்கக்கூடிய இந்த நேரத்திலே, தமிழ் வளர்ச்சிக்கு என்று ஒரு அமைச்சகம் ஏற்படுத்தியிருக்கக்கூடிய இந்த நேரத்திலே, தமிழக அரசினுடைய வேலைவாய்ப்புத் துறையிலே முன்னாள் இராணுவத்தினருக்கு முன்னுரிமை வழங்குவது போல, மொழிப் போர் தியாகிகளுடைய குழந்தைகளுக்கும் முன்னுரிமை வழங்கப்படுமா ? இந்த மருத்துவப்படி உதவித்தொகை கூடுதலாக வழங்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 250 ரூபாயாக இருந்ததை 350-ஆக உயர்த்தியவரும் மாண்புமிகு முதலமைச்சர் முத்தமிழ் அறிஞர்தான். 350-ஐ 400-ஆக உயர்த்தியவரும் அவர்தான். 400-ஐ, 500-ஆக உயர்த்தியவரும் அவர்தான். நீங்கள் யாரும் கேட்காமலேயே, வலியுறுத்தாமலேயே, அவையில் கோரிக்கை வைக்காமலேயே 500-ஐ 1,500-ஆக உயர்த்தியவரும் அவர்தான். (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, இவ்வளவு பெரிய தொகை வழங்கியதை நன்றியோடு பாராட்டி நிறைவு பெறுவீர்கள் என்று நம்புகிறேன். மொழிப்போர்க் காவலர்களுக்கு உரிய மதிப்பைத் தருவதில், இந்த அரசினும் விஞ்சிய அரசு வேறொன்றும் இராது. தக்க கவனத்தை, தலைவர் அவர்கள் தக்க நேரத்தில் எடுத்து உரிய வாய்ப்புகளை உரிய காலத்தில் வழங்குவார். அதே நேரத்தில், எல்லாச் சட்டங்களுக்கும், நடைமுறைச் சிக்கல்களுக்குமேற்ப எண்ணிப்பார்த்துத்தான் அவற்றை முடிவு செய்ய வேண்டும் என்பதும் அவர்கள் அறிந்த ஒன்று.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. பி. இராசமாணிக்கம்.

**திரு. பி. இராசமாணிக்கம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1986-ஆம் ஆண்டு நடைபெற்ற மொழிப் போராட்டத்தில் 45 நாட்கள் சிறையிலிருந்த தியாகிகளுக்கு இந்த உதவித் தொகையை வழங்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

[1997 மார்ச் 25

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபற்றிய குறிப்புகள் ஆய்வில் உள்ளன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. ச. அழகுவேலு.

**திரு. ச. அழகுவேலு :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மொழிப் போர் தியாகிகள் மானியம் பெறுவதற்காக 17 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மனுக்கள் அரசுக்கு வந்திருப்பதாகத் தகவல் குறிப்பு ஒன்று தெரிவிக்கிறது. இது எப்போது ஆய்வு செய்யப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-20

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆய்வு நடந்துகொண்டிருக்கிறது, முழு முகவரிகளும் தொகுக்கப்பட்ட பிறகுதான் முடிவுகள் வெளியிடப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. உ. திசைவீரன்.

**திரு. உ. திசைவீரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் பல்வேறு காலகட்டங்களில் தமிழர்கள், தமிழ் மொழிக்காக, தமிழர்களுக்காகப் போராடி சிறை சென்றுள்ளனர். நானும்கூட கடந்தகால அக்கிரம ஆட்சி அகல வேண்டும், தமிழகத்திற்கு நல்லாட்சி வர வேண்டும் என்று சிறை சென்றுள்ளேன். எனவே மொழிப்போர் தியாகிகள் உதவிப்பணம் பெற குறைந்தபட்சம் தகுதி என்ன இருக்க வேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்குவார்களா எனத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன் :** குறைந்தபட்சம் தியாகம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. வி.ஜி. தனபால்.

**திரு. வி.ஜி. தனபால் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருத்தணி எல்லைப் போராட்ட வீரர்கள் சிறைச்சான்று பெறுவதில் பல சிக்கல்கள் இருக்கின்றன. அதில் கலந்துகொண்ட ம.பொ.சி. அவர்கள் சான்று கொடுத்திருந்தார். அதற்கு முன்னுரிமை கொடுத்து உதவித்தொகை வழங்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன் :** தலைவர் அவர்களே, தக்க ஆய்வு செய்த பிறகு முடிவு செய்யப்படும்.



1997 மார்ச் 25]

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. கே. சுந்தர்.

**திரு.கே. சுந்தர் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோன்று சிறை இருந்த மொழிப் போர் தியாகிகள் இப்போது மனு செய்யும்போது சிறைச்சான்று இல்லாமல் அவதிப்படுகின்றார்கள். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இது பற்றி தகுந்த பதில் சொல்லுவாரா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுவும் ஆய்வு செய்யப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. வி.பி. இராசன்.

**திரு. வி. பி. இராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டை வேட்டி அணிந்து நடக்கும், சங்கத்தமிழாக மலர்ந்துகொண்டிருக்கிற தானைத் தலைவர் கலைஞர் அவர்கள் மொழிப்போர் தியாகிகளுக்கு 1500 ரூபாய் என்று வழங்கி அவர்கள் வாழ்க்கையில் வளம் சேர்த்திருக்கிறார்கள். அந்த நிலுவைத்தொகை இன்னும் வழங்கப்படாமல் இருப்பதாக அறிகிறேன். அது எப்போது வழங்கப்படும் என்று நான் மாண்புமிகு பேரவைத் தலைவர் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதற்கு முறையாக ஆணைகள் பிறப்பிக்கப்பட்டிருக்கின்றன. அந்த ஆணைகளின் அடிப்படையில் கருவூலக்க ணக்குத் துறைதான் அந்தத் தொகையை வழங்க வேண்டும். பல்வேறு கருவூலங்களில் அவை வழங்கப்பட்டுவிட்டன. எங்கேனும் சிக்கல் இருக்குமானால், தெரிவித்தால் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. இ. கணேசன்.

**திரு. இ. கணேசன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முத்தமிழ் காவலராக, தமிழ்நாட்டின் முதல்வராக நான்காவது முறையாக ஆட்சிப் பொறுப்பு ஏற்றிருக்கக்கூடிய நம்முடைய கலைஞர் அவர்களுடைய ஆட்சியிலே 32 ஆண்டுகாலமாக, மொழிப் போர் தியாகிகளுக்கு இன்னும் உதவித்தொகை கிடைக்காமல் இருக்கிறது. குறிப்பாக, 30-10-1964-ஆம் நாளன்று சிறை சென்ற தியாகிகளுக்கு இன்னும் இந்த நிதி கிடைக்காமல் இருக்கிறது என்பது பற்றி அரசுக்கு ஏதாவது செயற்குறிப்பு வந்திருக்கிறதா? இளமைப் பருவத்திலே சிறை சென்று இன்று முதுமையை

[1997 மார்ச் 25

நாடிக்கொண்டிருக்கக்கூடிய அந்தத் தியாகிகளுக்கு உடனடியாக உதவித்தொகை கிடைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்படிப் பொதுவாகச் சொல்லுவதனால் எந்தக் குறிப்பையும் கண்டுபிடிக்க முடியாது. குறிப்பிட்ட ஒருவருடைய பெயரைச் சொல்லி, முறைப்படி விண்ணப்பித்தால் அதன்மீது என்ன விடை என்று தெரிவிக்க முடியுமே தவிர, பல காலங்களில் பல விண்ணப்பங்கள் வந்திருக்கின்றன. வந்த விண்ணப்பங்களில், ஒவ்வொரு முறையும் ஒவ்வொரு அரசும், குழுக்களில் வைத்து அந்த முடிவுகளை அறிவித்திருக்கின்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவையிலே பொதுவாகக் கேள்வி கேட்டுவிட்டு, அதற்குப் பிறகு தனியே அந்த விவரத்தை அமைச்சரிடம் கொடுக்கலாம்.. திரு. மு. பன்னீர்செல்வம்.

**திரு. மு. பன்னீர்செல்வம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தியாகிகள் பென்ஷன் பெறுவதற்கு 1986-ஆம் ஆண்டு மொழிப் போராட்டத்திலே கலந்துகொண்டவர்கள் மனு செய்திருக்கிறார்கள். அது எப்போது வழங்கப்படும் என்று தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே ஒரு உறுப்பினர் அந்த வினாவைக் கேட்டார் விடை சொல்லியிருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அப்போது ** என்று கருதுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அமைச்சர் அவர்கள் ** என்று சொன்னதை அவைக் குறிப்பிலேயிருந்து எடுக்கிறேன். அவரே அதைத் திரும்பப் பெற வேண்டும்.

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போதுதான் வினா கேட்கப்பட்டு அதற்கு விடை சொல்லப்பட்டது. எனவே, அதை அவைக் குறிப்பிலேயிருந்து எடுத்துவிடலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. ஜி.பி. வெங்கிடு.

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



1997 மார்ச் 25]

**திரு. ஜி.பி. வெங்கிடு :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1964 ஆம் ஆண்டு மொழிப் போராட்டத்திலே ஈடுபட்டு, என்னோடு சிறையிலேயிருந்த நண்பர் திரு. டி.எஸ். முத்துசாமி என்பவர் பல முறை விண்ணப்பித்தும், தொடக்கத்திலே 75 ரூபாய் அவர் பெற்றிருந்து அது நிறுத்தப்பட்டதற்குப் பின்னால், அவருக்குக் கிடைக்க வேண்டிய தொகை இதுவரையில் கிடைக்கவில்லை. அதற்காக நானும் பலமுறை தமிழ் வளர்ச்சிப் பண்பாட்டுத் துறையிடம் கேட்டிருந்தேன். மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம்கூடக் கேட்டிருந்தேன். இதுவரையில் அவருடைய மனு பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பெறவில்லை. இப்போதும் அவர் விண்ணப்பித்து இருக்கிறார். அது பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு, உதவித் தொகை கிடைக்காத அந்தத் தியாகிக்கும் கிடைப்பதற்கு ஆவன செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-25

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை கவனித்து ஆவன செய்யப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் முன்பே வேண்டிக் கொண்டேன். மொழிப்போர் தியாகிகளுக்கு நம்முடைய கலைஞர் அவர்கள் பல்வேறு சலுகைகளை வழங்குகின்ற அதே நேரத்தில், தமிழுக்காகவும், தமிழ் இனத்துக்காகவும் தம்மை அர்ப்பணித்துக் கொண்டு, இந்தத் தமிழ் மண்ணைக் காத்து வரக்கூடிய நம்முடைய தமிழினக் காவலர், முன்னாள் இராணுவத்தினருக்கும், மற்றவர்களுக்கும் வழங்குவதைப்போல, மொழிப்போர் தியாகிகளுக்கும் தமிழக அரசினுடைய வேலைவாய்ப்பிலே முன்னுரிமை வழங்க வேண்டுமென்பது என்னுடைய தாழ்மையான வேண்டுகோள். இதனை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏற்று, பல்வேறு நிலைகளிலே தமிழுக்காகவும், தமிழினத்துக்காகவும் நல்ல காரியங்களைச் செய்த நம்முடைய தமிழினத் தலைவர் அவர்கள், மூலம் அவர்களுக்கு வேலைவாய்ப்பிலே முன்னுரிமை வழங்குவார்களா என்று தாழ்மையோடு அறிய விரும்புகிறேன்.

[1997 மார்ச் 25

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது கொள்கை முடிவாக எடுக்கப்படவேண்டிய ஒன்று. எனவே, தனியே ஆராய்ந்து கவனிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினா எண் 331, திரு. இரா. மதிவாணன், மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

**331—**

**'மெட்டல் பாக்ஸ்' நிறுவனத்தை திறத்தல்**

*** 3082—திரு. இரா. மதிவாணன் :**

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தண்டையார்பேட்டையில் மூடிக்கிடக்கும் "மெட்டல் பாக்ஸ்" நிறுவனத்தை மீண்டும் திறக்க அரசு ஆவன செய்யுமா ?

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத் துறை அமைச்சர் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தொழில் மற்றும் நிதி புனரமைப்புக் குழு (பிஐ.எப்.ஆர்.) ஜூன் 96-ல் நடைபெற்ற கூட்டத்தில், ரூ. 139.82 கோடிக்கான புனரமைப்புத் திட்டத்திற்கு ஒப்புதல் அளித்து, அதன்படி சென்னை, தண்டையார்பேட்டையிலுள்ள மெட்டல் பாக்ஸ் இந்தியா லிமிடெட் தொழிற்சாலை உள்ளிட்ட இந்நிறுவனத்தைச் சார்ந்த 4 தொழிற்சாலைகளை 8 மாதத்திற்குள் திறக்க உத்தரவிட்டது. இதன்படி மெட்டல் பாக்ஸ் இந்தியா லிமிடெட் தொழிற்சாலை ஜூன் 1997-ல் திறப்பதாய் இருந்தது. அதற்காக நிர்வாகம் நிதி திரட்ட கொச்சின், ஓர்லி மற்றும் கல்கத்தாவில் உள்ள இரு தொழிற்சாலைகள் ஆகியவற்றை விற்று நிதி திரட்ட திட்டமிட்டது. மஹாராஷ்டிரா மாநில அரசின் சில விதிமுறைகள் நிர்வாகத்தின் விற்பனை முயற்சியை தாமதப்படுத்துவதாக உள்ளதால், ஏற்கனவே உத்தேசித்தப்படி தொழிற்சாலைகள் மீண்டும் திறக்கப்படுவது இயலாமல் போகலாம் எனக் காரணங்காட்டி நிர்வாகம் ஏ.ஏ.ஐ.எப்.ஆர்.-ல் மேல்முறையீடு செய்து பிரச்சினை இப்போது நிலுவையிலுள்ளது.

**திரு. இரா. மதிவாணன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1987-ல் முந்தைய ஆட்சியில் இந்த ஆலை மூடப்பட்டது. பிறகு நம்முடைய தலைவர் மாண்புமிகு கலைஞர் அவர்கள் ஆட்சியில்தான்



1997 மார்ச் 25]

1990 மே 1-ல் திறக்கப்பட்டது. அதற்கடுத்து, 1992-ல் முந்தைய ஆட்சியில் மீண்டும் மூடப்பட்டது. 4 ஆண்டுக் காலமாக முந்தைய ஆட்சியில் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. எனவே, தமிழக முதல்வர் அவர்களுடைய கனிவான பார்வை 'மெட்டல் பாக்ஸ்' கம்பெனியின்மீது விழுமானால், அந்தக் கம்பெனி விரைவில் திறக்கப்படும் என்று தொழிலாளர்கள் நம்பியிருக்கிறார்கள். அதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழிலாளர் வர்க்கத்தின் மீது அக்கறையும், ஈடுபாடும் கொண்ட நமது தலைவர் கலைஞர் அவர்கள் முதல்வராகப் பொறுப்பேற்றதற்குப் பிறகு, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் மூடப்பட்ட ஆலைகளைத் திறப்பதற்காக எல்லா முயற்சிகளும் சிறப்பாக நடைபெற்று வருகிறது. குறிப்பாக, தண்டையார்பேட்டையிலுள்ள மூடப்பட்டிருக்கக் கூடிய 'மெட்டல் பாக்ஸ்' ஆலையில் 800 தொழிலாளர்கள் பணியாற்றி வருகிறார்கள். 1992-ல் 'லாக்-அவுட்' என்று அறிவிக்கப்பட்டது. அப்படி 'லாக்-அவுட்' என்று அறிவிக்கப்பட்டதற்குப் பிறகு, தொழிலாளர் நல ஆணையரின் முன்பு பேச்சு வார்த்தை நடைபெற்று, நீதிமன்றங்களுக்கெல்லாம் இந்தப் பிரச்சினை எடுத்துச் செல்லப்பட்டு கடைசியாக இப்போது பிஐ.எப்.ஆர்.-ல் இருக்கிறது. இந்த பிஐ.எப்.ஆர்-ல் மிக முக்கியமான பிரச்சினை என்னவென்று கேட்டால், அவர்களுக்கு இன்னும் மூன்று தொழிற்சாலைகள் இருக்கின்றன. அவர்கள் அவற்றை விற்று நிதி திரட்டவேண்டும். மும்பையில் இருக்கக் கூடிய தொழிற்சாலையை விற்பதற்கு அங்குள்ள தொழிற்சங்கங்கள் தடை விதித்திருக்கின்றன. மகாராஷ்டிர அரசாங்கமும் சில விதிகளின் காரணமாக தடை விதித்திருக்கிறது. கொச்சியில் இருக்கும் நிறுவனத்தையும் விற்க முடியவில்லை, கல்கத்தாவில் இருக்கும் நிறுவனத்தையும் விற்க முடியவில்லை என்று சொல்கிறார்கள்.

முற்பகல் 10-30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன் அனுமதியோடு வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

வினா எண்.332, திரு. கே.ஆர்.ஜி. தனபாலன், மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர்.

[1997 மார்ச் 25

332—

## ஜரிகை நிறுவனத்தில் உற்பத்தி திறனை அதிகரித்தல்

***2920—திரு. கே.ஆர்.ஜி. தனபாலன்:**

மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

காஞ்சிபுரத்தில் உள்ள தமிழ்நாடு ஜரிகை நிறுவனத்தின் உற்பத்தித் திறனை அதிகரிக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி, கைத்தறித்துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஆம். தமிழ்நாடு ஜரிகை ஆலையின் உற்பத்தித் திறனை அதிகரிக்க விரிவாக்கப் பணிகள் இவ்வரசால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**திரு. கே.ஆர்.ஜி. தனபாலன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ் நாட்டிலேயுள்ள கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தேவையான ஜரிகையை சூரத்திலிருந்து தருவித்து, தனியார் வியாபாரிகள் மூலம் அதிக லாபத்தை வைத்து, கூட்டுறவுச் சங்கங்களுக்கு விற்று, சென்ற ஆட்சியாளர்கள் பல கோடி ரூபாயைக் கொள்ளையடித்துள்ளார்கள். அதனால் அரசுக்குப் பல கோடி ரூபாய் நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. ஆகவே அதைக் கவனித்து, ஜரிகை உற்பத்தியை அதிகரிக்க ஆவன செய்ய அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சூரத்திலிருந்து அரசேதான் தற்சமயம் ஜரிகையைக் கொள்முதல் செய்து வருகிறது என்பதை நான் மாண்புமிகு உறுப்பினர்களுக்கும் இந்த அவைக்கும் தெரிவித்துக்கொள்கிறேன். தமிழ்நாட்டிலே செய்யப்படுகின்ற ஜரிகை உற்பத்தி 3,575 மார்க்குகள் என்பது தற்போது 5,975 மார்க்குகளாக உயர்த்தப்பட்டிருக்கிறது. இதிலே ஒரு உண்மையை நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டும். ஜரிகை உற்பத்தியை முழுமையாக இங்கே செய்ய இயலாது என்பதும், அதற்கு வேண்டிய வெள்ளிக் கம்பியையோ அல்லது வெள்ளி நூலிழையையோ சூரத்திலிருந்து பெற்றுத்தான், தங்கத்திலே தோய்க்கின்ற பணியை இங்கே இருக்கின்ற ஜரிகை உற்பத்தி ஆலைகள் செய்கின்றன என்பதும் தெரிந்துகொள்ள வேண்டியது. ஏனென்றால் அந்த வெள்ளிக் கம்பியை முறையாக, முறைப்படுத்தி வெளியே இழுக்கின்ற அந்த டெக்னாலெஜியை சில குடும்பங்கள் ரகசியமாகப் பாதுகாத்து வருவதால், நாம் டன் கணக்கிலே



1997 மார்ச் 25]

வெள்ளி வாங்குவதை விட்டுவிட்டு, வெள்ளிக் கம்பியையும், வெள்ளி நூலிழையையும் வாங்கி தங்கத்திலே தோய்த்து எடுக்கின்ற பணியைத்தான் நாம் செய்து வருகிறோம். தற்சமயம் அரசே ஜரிகைக் கொள்முதல் செய்கின்ற காரணத்தால் பம்பாய் புல்லியன் மார்க்கெட், வெள்ளி மார்க்கெட் போன்றவற்றின் நிலையை வைத்து, ஒரு புதிய 'பார்முலா'-வை உருவாக்கி, விலை, சேதாரம், லாபம், இவைகளையெல்லாம் நாமே கணக்கிட்டு, இதற்கென உள்ள குழு சொல்கின்ற அந்த விலைக்குத்தான் அளிக்க வேண்டுமென்ற நடைமுறை அடிப்படையிலே தற்போது உள்ளதால் எந்தத் தவறும் ஏற்படாமல் ஜரிகைக் கொள்முதல் நடைபெற்று வருகிறது என்பதை இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பொ. முருகேசன்.

**திரு. பொ. முருகேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காஞ்சிபுரத்தில் தமிழ்நாடு ஜரிகை நிறுவனத்தின் உற்பத்தித் திறன் அதிகரிக்கப்படும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏற்கெனவே, சென்றக் கூட்டத் தொடரிலேயே கூறியிருந்தார்கள். அப்படிச் ஜரிகை உற்பத்தித் திறன் அதிகரிக்கப்பட்டிருந்தால், மாதத்திற்குக் கூடுதலாக எவ்வளவு ஜரிகை உற்பத்தித் திறன் அதிகரிக்கப்பட்டிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன். அதோடு தற்போது எவ்வளவு ஜரிகை மார்க்குகள் அங்கே உற்பத்தி செய்யப்படுகிறது என்பதையும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது அங்கே 3,575 மார்க்குகள்தான் உற்பத்தி செய்யப்படுகின்றது. அதனுடைய உற்பத்தித் திறனை 5,975 மார்க்குகளாக, ஏறத்தாழ 2,500 மார்க்குகள் அதிகமாகச் செய்கின்ற அளவுக்கு, 12 லட்ச ரூபாய் செலவிலே பணிகள் நடைபெற்று வருகின்றன என்பதை இந்த அவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.ஆர்.ஜி. தனபாலன்.

**திரு. கே.ஆர்.ஜி. தனபாலன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1990-91-ஆம் ஆண்டிலே திருபுவனம் தொழிற்பேட்டையிலே ஒரு ஜரிகை உற்பத்தித் தொழிற்சாலை ஆரம்பிக்கப்படும் என்று ஒரு அரசு ஆணை இருந்தது. அதைத் துவக்குகின்றப் பணியை இப்போது இந்த அரசு மேற்கொள்ளுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

[1997 மார்ச் 25

முற்பகல் 10-35

**மாண்புமிகு திரு. என். கே. கே. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஜரிகை உற்பத்தியை முழுமையாகச் செய்கின்ற பணிதான் இங்கே நடைபெற்று வருகின்றது என்பதை நான் ஏற்கனவே இந்த அவைக்குத் தெரிவித்திருக்கிறேன். இரண்டு, மூன்று இடங்களிலே இந்தப் பணியைச் செய்கின்றபோது, அதனுடைய உற்பத்திச் செலவும், அதற்கான infrastructure facilities-க்கு ஆகின்ற செலவும் அதிகமாகும் என்பதால், அது நமக்குக் கட்டுப்படியில்லாததாக ஆகக்கூடும். எனவே, இருக்கின்ற இடத்தில், அதனை விரிவாக்கம் செய்வது தான் பொருளாதார ரீதியாக, சிறந்த இலாபகரமாக அமையும் என்ற நோக்கத்தில்தான், காஞ்சிபுரத்தில் மட்டும் அதனைச் செய்வது என்ற முடிவிலே இப்பொழுது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது என்பதை இந்த அவைக்குக் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 333, திரு. கொ.வி. நன்னன், மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர்.

**333—**

**கூட்டுறவு நூற்பாலை அமைத்தல்.**

***4734—திரு. கொ.வி. நன்னன்:**

மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கம் தொகுதியில் கூட்டுறவு நூற்பாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி, கைத்தறித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): செங்கம் தொகுதியில் கூட்டுறவு நூற்பாலை அமைக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**திரு. கொ.வி. நன்னன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செங்கம் தொகுதியில் வேலைவாய்ப்பு அளிக்கும் தொழிற்சாலைகளோ, வேறுவகையான வேலைவாய்ப்புகளோ இல்லாத காரணத்தினாலும்,



1997 மார்ச் 25]

அங்கே வேலையற்றோரது எண்ணிக்கை அதிகமாக இருப்பதாலும், எங்கள் தொகுதி மக்களின் வாழ்க்கைத் தரம் உயர வழியின்றி, துயரம் சூழ்ந்து வாட்டுகிறது. அந்த வாட்டத்தை போக்கிட, வறுமையை நீக்கிட செங்கம் தொகுதி மக்களுக்காக ஒரு கூட்டுறவு நூற்பாலையை அமைத்துத் தர அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இருக்கின்ற நூற்பாலைகளையே முழுமையாகச் செயல்படுத்த முடியாத நிலை ஒரு பக்கம் இருக்கின்றது. இன்று, தனியார் நெசவாளர்களுக்குக்கூட, 'நேஷனல் ஹேண்டுலூம் டெவலெப்மெண்ட் கார்ப்பரேஷன்' மூலமாக நூல்களை வாங்குவதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன. இருக்கின்ற ஆலைகளையே முறைப்படுத்த முடியாத நிலையில், புதிதாக ஒன்றை ஆரம்பிப்பது, உருவாக்குவது கஷ்டம். ஏற்கெனவே, திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டத்தில் மூடப்பட்டுள்ள ஆலையொன்றினையும், வட ஆற்காடு மாவட்டத்தில் மூடப்பட்டிருக்கின்ற அரியூர் ஆலையினையும் திறப்பதற்கு இன்னும் பேச்சுவார்த்தையிலே, எப்பொழுது திறக்கலாம் என்று முடிவில்லாமலேயே இருக்கின்றது - ஆவன செய்து, அந்த ஆலைகளையெல்லாம் துவக்கிவிட்ட பின்பு, இதனைப் பரிசீலிக்கலாம் என்பதை இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 334, திரு. பி.என். வல்லரசு, மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்.

**334—**

**ஆரம்பப் பள்ளிகளை நடுநிலைப் பள்ளிகளாக உயர்த்துதல்**

*** 4785—திரு. பி.என். வல்லரசு:**

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பரா—

(அ) உசிலம்பட்டி தொகுதியில் கொடிக்குளம், அய்யனார்குளம் கள்ளர் ஆரம்பப்பள்ளிகளை நடுநிலைப் பள்ளிகளாக உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

[1997 மார்ச் 25

(அ) மற்றும் (ஆ): கொடிக்குளம், அய்யனார்குளம் ஆரம்பப் பள்ளிகள் விவசாய வயல்கள் நடுவில் அமைந்துள்ளதாலும், பள்ளியை விரிவுபடுத்தி புதிய கட்டிடங்கள் கட்டுவதற்குரிய 2 ஏக்கர் நிலம், போதுமான காலி இடங்கள் இல்லாததாலும், இப்பள்ளிகளை நடுநிலைப்பள்ளிகளாக உயர்த்த இயலாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. பி.என். வல்லரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய உசிலம்பட்டி தொகுதி கல்வி ரீதியாக மிகவும் பிற்பட்ட தொகுதியாகும். அதில் கொடிக்குளம், அய்யனார்குளம் ஆகிய கிராமங்கள், 4,000, 5,000 பேர் மக்கள் தொகை கொண்ட பெரிய கிராமங்களாகும். கள்ளர் சீரமைப்புத் துறை எப்பொழுது ஏற்பட்டதோ அன்று முதல் இன்று வரை, இங்குள்ள கள்ளர் ஆரம்பப் பள்ளிகள், ஆரம்பப் பள்ளிகளாகவே இருந்து வருகின்றன. எனவே, அரசு மீண்டும் பரிசீலனைச் செய்து, இங்குள்ள ஆரம்பப் பள்ளிகளை நடுநிலைப் பள்ளிகளாக உயர்த்த முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்பள்ளிகளில் 6-வது, 7-வது, 8-வது வகுப்புகளைத் தொடங்கி, உயர்த்த வேண்டுமானால், கூடுதலாக இரண்டு ஏக்கர் நிலம் தேவைப்படும். அந்தக் கிராமங்களில் தலா 2 ஏக்கர் நிலம், மொத்தம் 4 ஏக்கர் நிலம் கொடுப்பதற்கும், தேவையான கட்டிட வசதி செய்து தருவதற்கும் அக்கிராம மக்களால் ஏற்பாடு செய்யப்பட்டு, தரப்படுமானால் அரசால் மறுபரிசீலனைச் செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 335, திரு. பி. இராசமாணிக்கம், வனம் மற்றும் கால்நடைத் துறை அமைச்சர்.

**335—**

## கால்நடை மருத்துவமனைக்குக் கட்டிடம்

***3828—திரு. பி. இராசமாணிக்கம்:**

மாண்புமிகு வனம் மற்றும் கால்நடைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



1997 மார்ச் 25]

(அ) ஏ.டி. பன்னீர்செல்வம் மாவட்டம், ஒரத்தநாடு தொகுதி, கருவிக்குறிச்சி கால்நடை மருத்துவமனைக்கு நிரந்தரக் கட்டிடம் கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது கட்டப்படும்?

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிச்சாமி, வனம் மற்றும் கால்நடைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஏ.டி. பன்னீர்செல்வம் மாவட்டம், ஒரத்தநாடு தொகுதி கருவிக்குறிச்சி கால்நடை மருத்துவமனைக்கு நிரந்தரக் கட்டிடம் கட்ட செயற்குறிப்பு அரசிடம் ஏதுமில்லை.

(ஆ) இக்கேள்வி எழாது.

**திரு. பி. இராசமாணிக்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரத்தநாடு தொகுதி, கருவிக்குறிச்சி கிராமத்தில் இயங்கி வருகின்ற கால்நடை மருத்துவமனை, வாடகைக் கட்டிடத்தில் போதுமான இடத்தில் இயங்கி வருகின்றது. சொந்தக் கட்டிடம் கட்டுவதற்குரிய இடமும் அக்கிராம மக்களால் வாங்கிக் கொடுக்கப்பட்டிருக்கிறது. பல்வேறு கிராமங்களின் மத்தியில் இயங்குகின்ற அந்த மருத்துவமனைக்கு நிரந்தரக் கட்டிடம் கட்டப்படவேண்டுமென்ற, அக்கிராம மக்களுடைய நீண்டநாளைய கோரிக்கையினை நிறைவேற்றும் வகையில், அதற்கு அரசு மறுபரிசீலனைச் செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-40

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிச்சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கருவிக்குறிச்சி கால்நடை மருந்தகமானது, தற்போது வாடகையில்லா இலவசக் கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. பொதுவாக, கால்நடை மருந்தகத்திற்கு நிரந்தரக் கட்டடம் கட்ட, ஒரு ஊராட்சி ஒன்றியத்தின் முதல் கால்நடை மருந்தகம் எனில், அரசு 75 விழுக்காடும், சம்பந்தப்பட்ட ஊராட்சி ஒன்றியம் 25 விழுக்காடும் பங்குத் தொகையாக வழங்க வேண்டும். அதுபோல், ஒரு ஊராட்சி ஒன்றியத்தின் இரண்டாவது கால்நடை மருந்தகமெனில், அரசு 50 சதவிகிதமும், அந்த ஊராட்சி ஒன்றியம் 50 சதவிகிதமும், மூன்றாவது கால்நடை மருந்தகமெனில், அரசு 25 சதவிகிதமும், ஊராட்சி ஒன்றியம் 75 சதவிகிதமும் மானியமாக வழங்க வேண்டும். ஆனால், ஒரு ஊராட்சி

[1997 மார்ச் 25

ஒன்றியத்தில் அமையும் கால்நடை மருந்தகம். நான்காவது மற்றும் அதற்கு மேலும் எனில், அந்த ஊராட்சி ஒன்றியமே பங்குத் தொகை வழங்க வேண்டும். கருவிகுறிச்சி கால்நடை மருந்தகம், நீடாமங்கலம் ஊராட்சி ஒன்றியத்தின் நான்காம் வகையைச் சார்ந்ததாகும். ஆகவே, அக்கால்நடை மருந்தகத்திற்கு நிரந்தரக் கட்டடம் கட்ட மதிப்பீடு முழுவதையும், அந்த ஊராட்சி ஒன்றியமே வழங்கி, கட்டித் தரவேண்டும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 336, திரு. பா. அருண்குமார், மாண்புமிகு வனம் மற்றும் கால்நடைத் துறை அமைச்சர்.

**336—**

## காடுகள் அழிவதைத் தடுத்தல்

*** 3834—திரு. பா. அருண்குமார்:**

மாண்புமிகு வனம் மற்றும் கால்நடைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சவுத் இந்தியா விஸ்கோஸ் தொழிற்சாலை யூகலிப்டஸ் மரங்களை நீலகிரி மற்றும் கொடைக்கானல் மலைப் பகுதியிலிருந்து பெருமளவில் வெட்டி வருவதால் காடுகள் அழிந்து போனது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், இதைத் தடுக்க அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிச்சாமி, வனம் மற்றும் கால்நடைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): காகிதம், மரக்கூழ், ரயான் இழை மற்றும் டானின் போன்ற பொருட்களை உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகள் மூலப் பொருட்களுக்குப் பெருமளவு, அரசு வனத்தையே சார்ந்துள்ளன. யூகலிப்டஸ் இனத்தைச் சார்ந்த கூழ் மரங்கள், சீகை மரங்கள், ஃபைன் மரங்கள், மூங்கில் மற்றும் சீகைப்பட்டைகள் போன்ற வன மூலப்பொருட்கள், தொழிற்சாலைகளுக்கு ஆண்டுதோறும் அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்டு வருகிறது. அந்தவகையில், கடந்த 3 ஆண்டுகளில், சவுத் இந்தியா விஸ்கோஸ் நிறுவனத்திற்கு, கூழ் மரங்கள் பின்வரும் அளவுகளில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 1993-94-ல, 1,14,800 டன்களும்,



1997 மார்ச் 25]

1994-95-ல், 1,15,240 டன்களும், 1995-96-ல் 1,14,825 டன்களும், 1996-97-ல் 55,000 டன்கள் மட்டும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. ஆகவே, காடுகள் அழிகின்றன என்கிற நிலை இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. பா. அருண்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படி ஒதுக்கீடு செய்கின்ற யூகலிப்டஸ் மரங்களுக்கு, கடந்த கழக ஆட்சியில், 1989-இல், சவுத் இந்தியா விஸ்கோஸுக்குப் போகக்கூடிய அந்த மரங்களுக்கு 100 சதவிகித விலை உயர்வைச் செய்தோம். அதன்பிறகு, தற்போது அதன் விலை உயர்த்தப்பட்டிருக்கிறதா என்பதையும் உயர்த்தியிருந்தால், என்ன விலை உயர்த்தப்பட்டிருக்கிறது என்பதையும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிச்சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசால் ஒதுக்கீடு செய்யப்படும் மரக்கூழ் மற்றும் வன ஒதுக்கீட்டு மரங்களுக்கு முந்தைய அரசு நிர்ணயித்த விலை மிகவும் குறைவாக இருந்ததால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவுரைப்படி, இந்த அரசு யூகலிப்டஸ் மற்றும் சில்வர் ஓக் மரங்களுக்கு, முன்பிருந்த விலையைவிட 75 விழுக்காடு அதிகப்படுத்தியும், சீகை மரம் மற்றும் பட்டை, மூங்கில் மரங்களுக்கு 45 விழுக்காடு அதிகப்படுத்தியும் உத்தரவிட்டு, அரசு வருவாயை, இந்த அரசு பெருக்கியுள்ளது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 337, திரு. துரை. சந்திரசேகரன் மற்றும் திரு. வீ. தமிழ்மணி, மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்.

**337—**

## சத்துணவு மையங்களுக்குப் புதிய பாத்திரங்கள்

***583—திரு. துரை. சந்திரசேகரன்:**
**திரு. வீ. தமிழ்மணி:**

மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் சத்துணவு மையங்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ள சமையல் பாத்திரங்கள் பழுதடைந்துள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், புதிய பாத்திரங்கள் வழங்க அரசு முன்வருமா?

[1997 மார்ச் 25

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) அரசு அறியும்.

(ஆ) 1996-97-ஆம் ஆண்டிற்கு சத்துணவு மையங்களுக்குப் புதிய பாத்திரங்கள் வழங்குவதற்காக ரூ. 1 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்த நிதி ஒதுக்கீட்டில், தேவையுள்ள சத்துணவு மையங்களுக்கு, நடப்பாண்டில், புதிய அலுமினிய பாத்திரங்கள் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**திரு. துரை. சந்திரசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வழங்கப்படுகிற அலுமினியப் பாத்திரங்களுக்குப் பதிலாக, ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் - எவர்சில்வர் - பாத்திரங்களை வழங்க, அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த காலத்திலிருந்தே, இந்த சத்துணவு மையங்கள் தொடங்கப்பட்ட காலத்திலிருந்தே, அவற்றிற்கு அலுமினியப் பாத்திரங்கள்தான் வழங்கப்பட்டு வருகின்றன. அந்தந்த ஆண்டில், வழங்கப்பட்ட அலுமினியப் பாத்திரங்கள் பழுதுப்பட்டவுடனேயே, மீண்டும் அதே வகை அலுமினியப் பாத்திரங்களையே வாங்கிப் பயன்படுத்துவதற்காகத்தான் அரசு ஆணையே உள்ளதே தவிர, ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் வாங்க வேண்டுமென்றால், கூடுதல் செலவு அரசுக்கு ஏற்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கவனத்திற்கு கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வீ. தமிழ்மணி, இருக்கையில் இல்லை.

அடுத்து வினா எண் 338, திரு. கே. மணிவர்மா, மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர்.



1997 மார்ச் 25]

**338—**

**பாதுகாப்பு இல்லங்கள் அமைத்தல்**

*** 4745—திரு. கே. மணிவர்மா:**

மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தண்டராம்பட்டு தொகுதியில் முதியோர், ஊனமுற்றோர் பாதுகாப்பு இல்லங்கள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திருமதி எஸ்.பி. சற்குணபாண்டியன், சமூக நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டத்தில் தண்டாரம்பட்டு தொகுதியில் முதியோர் இல்லம் நடத்த பதிவு செய்யப்பட்ட தொண்டு நிறுவனம் ஏதும் முன்வந்தால் மத்திய அரசிடமிருந்தும் மாநில அரசிடமிருந்தும் மான்யம் பெறலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10.45

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. மணிவர்மா.

**திரு. கே. மணிவர்மா:** மாண்புமிகு ஹேபரவைத் தலைவர் அவர்களே, கிராமங்களில் ஆதரவற்ற முதியோர்களும், எந்தப் பணியும் செய்யமுடியாத உடல் ஊனமுற்றவர்களும் தங்க இடமும், உண்ண உணவின்றி அவதிப்படுகிறார்கள். அவர்களைக் காபாற்றப் பாதுகாப்பு இல்லங்கள் அமைத்துத் தருவது பற்றி அரசு மீண்டும் பரிசீலனைச் செய்யுமா என்று அறிய விரும்புவதோடு, பொதுத் தொண்டு நிறுவனங்கள் பாதுகாப்பு இல்லங்கள் அமைக்க முன்வந்தால் மத்திய, மாநில அரசுகள் எவ்வளவு மானியம் வழங்கும் என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி எஸ்.பி. சற்குணபாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டத்தில் தண்டராம்பட்டு தொகுதியிலோ அல்லது வேறு ஒரு பகுதியிலோ முதியோர் இல்லங்கள் அமைக்கவோ அல்லது நடத்தவோ மத்திய அரசினுடைய நிதியுதவி கேட்டு பதிவு செய்யப்பட்ட தொண்டு நிறுவனங்கள் ஏதேனும் முன்வந்தால் உரிய விண்ணப்பங்களைப் பெற்று பரிந்துரை செய்து மத்திய அரசுக்கு அனுப்பிவைக்கப்படுகிறது. மாநில அரசு கிட்டத்தட்ட 1 இலட்சம் ரூபாய் அதற்கு மானியம் வழங்குகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். தற்போது திருவண்ணாமலையில் மாநில அரசு நிதியுதவி பெற்று Hospitality for the Needy Society என்ற நிறுவனம் இயங்கி வருகிறது. கடந்த 3 ஆண்டுகளாக அதற்கு மாநில

[1997 மார்ச் 25

அரசு மானியம் வழங்கி வருகிறது. மத்திய அரசு நிதியுதவி பெற்று தமிழகத்தில் 25 முதியோர் இல்லங்கள் இயங்கி வருகின்றன. மாநில அரசு நிதியுதவி பெற்று 8 இல்லங்கள் தமிழகத்தில் இயங்கி வருகின்றன. சொந்த முதலீட்டில் தங்குவோரிடமிருந்து நிதிபெற்று நடத்தப்படுகிற நிறுவனங்கள் 53 தமிழகத்தில் நடைபெற்று வருகின்றன. இதில் மாநில அரசின் சார்பாக நிதியுதவி பெற்று நடத்தப்படுகிற இல்லங்களில் 40 பேர் வரை தங்குவதற்கு இடவசதி உள்ளது. அதைப்போல மத்திய அரசு நிதியுதவி பெற்று நடத்தப்படுகிற இல்லங்களிலே 25 பேர் வரை தங்குவதற்கு இடவசதியுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. கே. மணிவர்மா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுத் தொண்டு நிறுவனங்கள் முதியோர் இல்லங்களை அமைக்க முன்வந்தால், 40 பேர் கொண்ட ஒரு பாதுகாப்பு இல்லத்திற்கு ஒரு ஆண்டிற்கு எவ்வளவு மானியம் அரசால் தரப்படும் என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் தெரிவித்தார்களே, நீங்கள் கேட்கவில்லையா?

**மாண்புமிகு திருமதி எஸ்.பி. சற்குணபாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்ட கேள்விக்கு பதில் ஏற்கெனவே அளித்திருக்கிறேன். மாநில அரசின் சார்பாக ஓர் ஆண்டுக்கு 1 இலட்சம் ரூபாய் வரை மானியம் வழங்கப்படுகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 339, டாக்டர் மு. தேவராஜன், மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர்.

**339—**

## புளியஞ்சோலையைச் சுற்றுலாத் தலமாக்குதல்

***3512—டாக்டர் மு. தேவராஜன்:**

மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உப்பிலியாபுரம் தொகுதி, புளியஞ்சோலைக்கு சுற்றுலாப் பயணிகள் அதிகமாக வருவதால் அந்த இடத்தைச் சுற்றுலாத் தலமாக மேம்படுத்த அரசு முன்வருமா?



1997 மார்ச் 25]

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலாத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): புளியஞ்சோலையில் மாவட்ட பரவலாக்கத் திட்டத்தின்கீழ் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை மூலம் ரூ.1.50 இலட்சம் நிதி ஒதுக்கீடு பெறப்பட்டுள்ளது. ஓய்வில்லம் கட்ட இடம் தேர்வு செய்யப்பட்டுள்ளது. பணிகளை நிறைவேற்றும் பொறுப்பு மாவட்ட கட்டிட மையத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. முதல் கட்டமாக கழிப்பிட வசதியுடன் கூடிய ஓய்வில்லம் கட்டப்பட்டு வருகிறது.

**டாக்டர் மு. தேவராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் கூறிய பதிலுக்கு நன்றி. அங்கே சுற்றுலா மாளிகை கட்ட வேண்டுமென்று நான் கேட்கவில்லை. புளியஞ்சோலைப் பகுதியிலே காட்டாற்றின் வெள்ளத்தின் கடுமையுண்டு, கனிதரும் மரங்களின் வளங்கள் உண்டு, விண்ணைத் தொட்டு விளையாடும் மரங்கள் உண்டு. வாழ்விலே எத்தனையோ வரலாறுகளைப் படைத்த எங்களுடைய இனிய தலைவர் கல்லக்குடியை வென்றவர், கரிகாலனாக மாறியவர், சிங்கத் தமிழ்......

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** பாயிண்ட் ஆஃப் ஆர்டர் சார். ஆளும் கட்சி உறுப்பினராக இருந்தாலும், என்மீது அதிக அபிமானம் கொண்ட தோழமைக் கட்சி உறுப்பினர்களாக இருந்தாலும் கேள்வி நேரத்தில் சொல்லப்படுகின்ற முதலமைச்சரைப் பற்றிய வர்ணனைகளை இனிமேலாவது தாங்கள் அனுமதிக்காமல் இருக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**டாக்டர் மு. தேவராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய பகுதியில் சுற்றுலாப் பயணியர்கள் தினந்தோறும் வந்தவண்ணம் இருக்கிறார்கள். எனவே புளியஞ்சோலைப் பகுதியைச் சுற்றுலாத் தலமாக மாற்றி அங்கே ஒரு நீர்த்தேக்கத்தை ஏற்படுத்தி பாசன வசதிகளைப் பெருக்கிக் கொடுக்க அமைச்சர் அவர்கள் முன்வருவாரா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புளியஞ்சோலை ஏற்கெனவே சுற்றுலாத் தலமாக

[1997 மார்ச் 25

அறிவிக்கப்பட்டு முதற்கட்டப் பணி இப்போது நடைபெற்று வருகிறது. அதைப்போன்று உறுப்பினர் நீர்ப்பாசன வசதிகளைச் செய்து தருவாரா என்று ஒரு கேள்வி கேட்டார். உறுப்பினர் கேட்ட கேள்விக்கு நான் சொல்ல விரும்புவது சுற்றுலாத் துறைக்குட்பட்டு அந்தப் பணி வராது என்பதுதான்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 340, திரு. கோ. மோகனதாசன், மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர்.

**340—**

**பூம்புகாரில் மீன் அருங்காட்சியகம்**

***4488—திரு. கோ. மோகனதாசன்:**

மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பூம்புகாரில் மீன் அருங்காட்சியகம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

முற்பகல் 10-50

**மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன், மீன்வளத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : பூம்புகாரில் ரூ. 6.00 கோடி செலவில் சிறிய மீன் அருங்காட்சியகம் அமைக்கலாமென்று பூம்புகார் உள்ளூர் திட்டக் குழுமம் முடிவு செய்தது. ஆனால் பூம்புகாரில் அருங்காட்சியகம் அமைக்க பொருத்தமான இடம் இல்லாததால் சுற்றுலாத் துறையின் பரிந்துரையின்படி மேற்படி செயற்குறிப்பு கைவிடப்பட்டது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் படிக்கும்போது 6 கோடி என்று சொல்லியிருக்கிறீர்கள். 6 லட்சமா அல்லது 6 கோடியா?



1997 மார்ச் 25]

**மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 6 லட்சம் தான். 6 லட்சம் என்று திருத்திக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. கோ. மோகனதாசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பூம்புகார் சுற்றுலா தலமாக இருப்பதால் அங்கே பயணிகள் அதிகமாக வந்து போகிறார்கள். மேலும் பயணிகள் அதிகமாக அங்கு வருவதற்கு வாய்ப்பாக — நம்முடைய கலைஞர் அவர்களால் உருவாக்கப்பட்ட பூம்புகார் இடையிலே வந்த ஆட்சியினரால் வீணடிக்கப்பட்டது — மீண்டும் இப்போதுதான் அது புத்துயிர் பெற்று வருகிறது. மாண்புமிகு முதல்வர் அவர்கள் அதற்காக ஏறத்தாழ 62 லட்சம் ரூபாய்க்கு மேல் வழங்கி, இப்போது வேலைகள் நடைபெற்று வருகின்றன. உள்ளூர் திட்டக்குழுமம் மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் நடைபெற்றபோது அங்கே அருங்காட்சியகம் அமைத்தால் பலன் இருக்குமென்று அதற்கான தீர்மானம் நிறைவேற்றி அனுப்பப்பட்டுள்ளது. எனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மீண்டும் மறுபரிசீலனை செய்து அருங்காட்சியகம் அமைத்துத் தருவார்களா என்று நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, பூம்புகார் இடைக்காலத்திலே பாழ்பட்டதால், அதை மீண்டும் புதுப்பிக்கின்ற வகையிலே 60 லட்சம் ரூபாய் — இப்போதுதான் அதற்கான தொகை — சேங்ஷன் செய்யப்பட்டிருக்கிறது, அனுமதிக்கப்பட்டிருக்கிறது. மேலும் தேவைப்படும். முதல் கட்டமாக 60 லட்சத்தில் பணிகளைத் தொடங்கச் சொல்லி ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. பழுதுகள் முடிந்த பிறகு, புதுப்பிக்கப்பட்ட பிறகு, மேலும் அருங்காட்சியகம் போன்றவற்றை அமைத்து சுற்றுலாப் பயணிகளைக் கவரக்கூடிய நிலைமைகளை ஏற்படுத்தலாம். முதலில் பழுது முடியட்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் நேரம் முடிவுற்றது.

**[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]**

[1997 மார்ச் 25

## 2. சிறப்புக் கவன ஈர்ப்பு

### திருவண்ணாமலை, கலசப்பாக்கம், போளூர் தொகுதிகளில் குறைந்த மின் அழுத்தம் உள்ளமையும், பயிர்கள் பாதிக்கப்படுதலும்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, சிறப்புக் கவன ஈர்ப்பு. திருவண்ணாமலை, கலசப்பாக்கம், போளூர் தொகுதிகளில் அரசு அறிவித்தபடி மின் அழுத்தம் சரியாக வராததால் விவசாயப் பயிர்கள் பாதிக்கப்படுவது குறித்து மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டுவர வேண்டுமென்று என்னுடைய அனுமதியை திரு. பெ.சு. திருவேங்கடம் மற்றும் திரு. ஏ. ராசேந்திரன் ஆகியோர் கோரியுள்ளனர். அவர்களுக்கு அனுமதி அளிக்கப்படுகிறது. அவர்கள் சுருக்கமாகப் பேசி அரசின் கவனத்திற்குக் கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. பெ.சு. திருவேங்கடம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு மின்துறை அமைச்சர் அவர்கள் விவசாயிகளுக்கு பகலில் 4 மணி நேரமும், இரவில் 6 மணி நேரமும் மின்சாரம் தரப்படும் என்று அறிவித்தார்கள். அரசினுடைய அந்த நிலையை நாங்கள் வரவேற்கிறோம். ஆனால் எங்களுடைய திருவண்ணாமலை, கலசப்பாக்கம், போளூர் போன்ற பகுதிகளில் உள்ள திருவண்ணாமலை, காஞ்சி, நாயுடுமங்கலம், ஆதமங்கலம், போளூர் போன்ற பகுதிகளில் துணை மின் நிலையங்கள் இருக்கின்றன. பகலிலே 4 மணி நேரம் என்றபடி சரியான முறையிலே மின்சாரம் வருவதில்லை. அப்படி மின்சாரம் வருகின்ற காலங்களில் மின் அழுத்தம் குறைவாக இருக்கின்ற காரணத்தாலே விவசாயிகளுடைய மின் மோட்டார்கள் காயில் தீய்ந்து விவசாயிகள் பெரிதும் அவதிக்கு உள்ளாகின்றனர். மேலும் நெற்பயிர்கள் மற்றும் கரும்புப் பயிர்கள் சாவி ஆகக்கூடிய ஒரு பயங்கரமான சூழ்நிலை அங்கே இருக்கிறது. நம்முடைய மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் இன்னும் கொஞ்சம் நேரத்தைக் குறைத்துக் கொண்டாகிலும், மின் அழுத்தத்தை சீரான முறையிலே உடனடியாக வழங்கினால்தான் அந்தப் பகுதியில் இருக்கின்ற பயிர்களைக் காப்பாற்ற முடியும். எனவே அதற்குரிய நடவடிக்கையை எடுக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே மின்சாரத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**திரு. ஏ. ராசேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டத்தில், குறிப்பாக போளூர்



1997 மார்ச் 25] [திரு. ஏ. ராசேந்திரன்]

மற்றும் போளூரைச் சுற்றியுள்ள பகுதிகளிலே எல்லாம் மின்தடை அடிக்கடி ஏற்படுகிறது. மின்சாரத்தைப் பொறுத்தவரையில், அரசு அறிவித்தபடி பகலில் 4 மணி நேரமும், இரவில் 6 மணி நேரமும் கொடுக்கப்படவில்லை என்று விவசாயிகள் சொல்லுகிறார்கள். விவசாயிகள் இரவிலே தூங்க முடியவில்லை. எப்போது மின்சாரம் வரும், எப்போது அதை நிறுத்துவார்கள் என்பதை அறிய முடியவில்லை என்று சொல்லி அவர்கள் மிகவும் வருத்தப்படுகிறார்கள். நான் சென்னையிலே உள்ள `Low Distribution Section' சென்று இது குறித்த விவரங்களைக் கேட்டேன். நான் கேட்கும்போது அந்தப் பகுதிகளிலே கடந்த 10, 15 நாட்களாக இந்தத் தொல்லை இருக்கிறது என்று தெரிவித்தார்கள். எனவே இதையெல்லாம் கருத்தில்கொண்டு, விவசாயப் பெருங்குடி மக்களுக்கு நன்மை செய்கின்ற அரசாக இருக்கக்கூடிய இந்த அரசு இதை சீர் செய்ய முன்வருமா, மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-55

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. பெ.சு. திருவேங்கடம் அவர்களும், திரு. ஏ. ராசேந்திரன் அவர்களும் இங்கே சுட்டிக்காட்டியதைப் போல, திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டம், கலசப்பாக்கம், போளூர் பகுதிகளில் 'லோ-வோல்டேஜ்' இருக்கிறது என்று மாண்புமிகு அமைச்சர் திரு. பிச்சாண்டி அவர்கள்கூட நான்கு தினங்களுக்கு முன்னாலே என்னிடத்திலே தெரிவித்தார்கள். மின்வாரியம் மெம்பர் டிஸ்டிரிப்யூஷன் அவர்களோடு தொடர்பு கொண்டு இந்தக் குறைபாடுகளைப் போக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொண்டேன். 20-ந் தேதி, இந்த அவையிலே அறிவித்ததற்கு ஏற்ப, மின்சாரம் இப்போது, இரவிலே 6 மணி நேரமும், பகலிலே 4 மணி நேரமும் என்ற அளவில், தமிழகம் எங்கும் பகலிலே மூன்று பிரிவுகளாகவும், இரவிலே இரண்டு பிரிவுகளாகவும் பிரிக்கப்பட்டு வழங்க வேண்டும் என்று ஆணை பிறப்பிக்கப்பட்டது. ஆனால், எந்த எந்தப் பகுதிகளுக்கு எந்த நேரத்திலே மின்சாரம் வரும் என்ற முறையான அறிவிப்பு இல்லாததன் காரணத்தால், ஓரிரு தினங்கள் இப்படிப்பட்ட குழப்பங்கள் ஏற்பட்டிருக்கின்றன என்ற செய்தி மின் வாரியத்திற்கு வந்திருக்கிறது. அதனாலே, விளம்பரங்கள் மூலமாக எந்த எந்த மாவட்டத்திலே, இரவு நேரத்திலே, எத்தனை மணி நேரம் மின்சாரம் எப்போது கிடைக்கும் என்ற விவரங்களையும், அது போலவே, பகலிலே எந்த எந்த மாவட்டத்திற்கு மின்சாரம் கிடைக்கும்

என்ற அந்த விவரங்களையும் வெளியிட்டு விவசாயிகளுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும்படி கேட்டுக் கொண்டிருக்கின்றேன். அதற்குப் பிறகும் இந்தக் குறைபாடுகள் இருக்குமேயானால், நிச்சயமாக மின்வாரியம் விவசாயிகளினுடைய நன்மையைக் கருதி உரிய நடவடிக்கையினை மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## 3. கவன ஈர்ப்பு

### வட ஆற்காடு-அம்பேத்கர் மாவட்டம், சத்துவாச்சாரியில் அரசு பொது மருத்துவமனை ஏற்படுத்த வேண்டுதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை விதி 55-ன்கீழ் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்த கவன ஈர்ப்பு. திரு. சி. ஞானசேகரன், அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருவார். திரு. சி. ஞானசேகரன், கவன ஈர்ப்பை மட்டும் படியுங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வட ஆற்காடு-அம்பேத்கர் மாவட்டம், சத்துவாச்சாரியில் அரசு பொது மருத்துவமனை ஏற்படுத்துவது குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

## அறிக்கை

வடாற்காடு-அம்பேத்கர் மாவட்டம் வேலூரில் அரசு தலைமை மருத்துவமனை இயங்கி வருகிறது. இந்த மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட படுக்கைகள், உள் நோயாளிகள்/வெளிநோயாளிகள் எண்ணிக்கை பின்வருமாறு:

| | | |
|---|---|---|
| அனுமதிக்கப்பட்ட படுக்கைகள் எண்ணிக்கை | .. | 541 |
| உள் நோயாளிகளின் எண்ணிக்கை (சராசரி) | .. | 518 |
| வெளி நோயாளிகளின் எண்ணிக்கை (சராசரி) | .. | 2,329 |





இம்மருத்துவமனையில் கீழ்க்கண்ட சிறப்புப் பிரிவுகள் இயங்கி வருகின்றன:

1. குழந்தைகள் நலப் பிரிவு
2. கண் சிகிச்சைப் பிரிவு
3. தோல் சிகிச்சைப் பிரிவு
4. எலும்பு சிகிச்சைப் பிரிவு
5. மனநலப் பிரிவு
6. இரத்த வங்கி
7. காது, மூக்கு, தொண்டை சிகிச்சைப் பிரிவு
8. பால்வினை நோய்ப் பிரிவு
9. பல் சிகிச்சைப் பிரிவு
10. நீரிழிவு சிகிச்சைப் பிரிவு

மேலும் இம்மருத்துவமனையில் அறுவை சிகிச்சைப் பிரிவு, விபத்து மற்றும் அவசர சிகிச்சைப் பிரிவு, எக்ஸ்ரே பிரிவு, பரிசோதனை ஆய்வுக்கூடம், இன்சினரேட்டர் கருவி, சவ கிடங்கு, கோல்ட் ஸ்டோரேஜ், அல்ட்ரா சவுண்ட் ஸ்கேன் போன்ற வசதிகள் உள்ளன.

2. சத்துவாச்சாரி, வேலூர் அரசு தலைமை மருத்துவமனையிலிருந்து சுமார் 3 கி.மீட்டர் தொலைவில் அமைந்துள்ளது. சத்துவாச்சாரியிலிருந்து வேலூர் அரசு தலைமை மருத்துவமனைக்கு போக்குவரத்து வசதி போதுமான அளவில் உள்ளது.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையினைப் படித்தேன். அந்த அறிக்கையில், வேலூரிலே ஏற்கெனவே அரசு பொது மருத்துவமனை இருக்கிற காரணத்தினாலே இது சாத்தியக்கூறு இல்லை என்கிற வகையிலே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதிலினைத் தந்திருக்கின்றார்கள். சத்துவாச்சாரி, இப்போது மாவட்டத்தினுடைய தலைநகரம் மாதிரி இருக்கிறது. அங்கு மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம், மாவட்ட நீதிமன்றம் மற்றும் இருக்கக்கூடிய

[திரு. சி. ஞானசேகரன்] [1997 மார்ச் 25

அரசு அலுவலகங்கள் அத்துணையும் சத்துவாச்சாரிக்கு வந்துவிட்டது என்பது மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கே நன்றாகத் தெரியும். சத்துவாச்சாரியிலிருந்து வேலூருக்குப் போக வேண்டும் என்று சொன்னால், போக்குவரத்து நெரிசல் எல்லாவற்றையும் கடந்து போக கிட்டத்தட்ட ஒரு மணி நேரம் கூட ஆகிவிடுகின்றது. ஆஸ்பத்திரிக்குப் போக வேண்டுமென்றால், நான்கு, ஐந்து கி.மீ. தூரம் ஆகிறது. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சத்துவாச்சாரியில் அரசு பொது மருத்துவமனை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். பேரூராட்சிகூட இடம் கொடுக்கத் தயாராக இருக்கின்றது. எனவே, அந்தப் பொது மருத்துவமனையில் இருக்கக்கூடிய இரண்டு மூன்று டாக்டர்களை தாங்கள், அந்த இடத்திற்கு 'டெபுடேஷன்' முறையிலே அனுப்புவீர்களேயானால் நன்றாக இருக்கும். ஏனென்றால், இங்கிருந்து போக்குவரத்து நெரிசலை எல்லாம் கடந்து ஆஸ்பத்திரிக்குப் போக வேண்டிய காலதாமதத்தைத் தவிர்க்கும் வகையில் இங்கேயே ஒரு நல்ல மருத்துவமனை வருவது அவசியம். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கருணையோடு இதனைப் பரிசீலித்து சத்துவாச்சாரியில் ஒரு அரசு பொது மருத்துவமனையைத் துவங்குவதற்கு ஆணையிடுவாரா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சத்துவாச்சாரிக்கும் வேலூருக்கும் இடையிலே மூன்று கி.மீ. தூரம் இருக்கிறது. இரண்டு கி.மீ. தூரத்திலே இந்தியா முழுவதிலிருந்தும் வருகின்ற நோயாளிகளை மிகவும் நல்ல முறையிலே கவனிக்கக் கூடிய சி.எம்.சி. மருத்துவமனை இருக்கிறது. வேலூர் மருத்துவமனையிலே எல்லாப் பிரிவுகளும் இருக்கின்றன. 'Full fledged' மருத்துவமனையாக அது இயங்கிக் கொண்டிருக்கிறது. அது மட்டும் அல்ல, வேலூரிலே இருக்கக்கூடிய மருத்துவமனையை சத்துவாச்சாரிக்கு மாற்றுவதைக்கூட மாண்புமிகு உறுப்பினர் விரும்புவார் எனக் கருதுகிறேன். ஏனென்றால், அவர் சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப் பட்டதிலிருந்து, சத்துவாச்சாரி, சத்துவாச்சாரி என்று சொல்லிக் கொண்டு வருகிறார். மூன்று கி.மீ. தூரத்திலே ஒரு மருத்துவமனை ஆரம்பிப்பது என்று சொன்னால், குறைந்தபட்சம் ரூ. 10,000 கோடி வரை மக்கள் நல்வாழ்வுத் துறைக்கு செலவு ஆகும். மேலும், தமிழ்நாட்டிலே இன்னமும் மலைப் பகுதிகளிலே மருத்துவமனைகள் இல்லை. 20 கி.மீ. தொலை தூரத்திலுள்ள பகுதிகளுக்கு மருத்துவமனையில்லை. இவை எல்லாவற்றிலும் கவனம் செலுத்திக் கொண்டு வருகிற இந்த அரசாங்கம் மூன்று கி.மீ. தூரத்திற்கு ஒரு மருத்துவமனையைத் தொடங்குவதற்கு



1997 மார்ச் 25] [திரு. ஆற்காடு நா. வீராசாமி]

இயலாத நிலையிலே இருக்கிறது என்பதை வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இந்தக் கவன ஈர்ப்பை நான் அனுமதித்ததே தவறு என்று எனக்கு இப்போதுதான் தெரிகிறது.

## 4. அறிவிப்புகள்

### (அ) முன்பண மானியக் கோரிக்கைகள், 1997-98, மொழிதல் (ஆ.செ.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 1997-98 ஆம் ஆண்டின் செலவிற்கான முன்பண மானியக் கோரிக்கைகளைப் பேரவையில் முன்மொழிவது குறித்து ஆளுநர் அவர்களிடமிருந்து கீழ்க்கண்ட செய்தி வரப்பெற்றுள்ளது :

''In pursuance of Clause 2 of Article 206 read with Clause 3 of Article 203 of the Constitution of India, I, Fathima Beevi, Governor of Tamil Nadu, hereby give my recommendation to the moving in the Tamil Nadu Legislative Assembly of the Demands for Grants in advance during the financial year 1997-98".

முற்பகல் 11-00

## 5. முன்பண மானியக் கோரிக்கைகள், 1997-98, வாக்கெடுப்பு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 1997-98 ஆம் ஆண்டின் செலவிற்கான முன்பண மானியக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1997-98 ஆம் ஆண்டிற்கான முன்பண மானியக் கோரிக்கைகள் அடங்கிய, 17-3-1997 ஆம் தேதியிடப்பெற்ற அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள மானியக் கோரிக்கைகள் ஒவ்வொன்றிற்கும் எதிரே குறிப்பிடப்பட்டுள்ள தொகைகளுக்கு மேற்படாத தொகையை,

1997-98 ஆம் ஆண்டிற்கான உடனடிச் செலவிற்காக அரசுக்கு முன்பணமாக வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

**நிறைவேற்றப் பெற்ற 1997-98 ஆம் ஆண்டிற்கான முன்பண மானியக் கோரிக்கைகள்.**

| கோரிக்கை (1) | | (ரூபாய் ஆயிரத்தில்.) (2) |
|---|---|---|
| அ. | வருவாய்க் கணக்கில் செலவு. | |
| 1. | நில வருவாய்த் துறை | 3,39,65 |
| 2. | மாநில ஆயத் தீர்வைத் துறை | 3,23,02 |
| 3. | இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்-நிருவாகம் | 3,72,09 |
| 4. | பொது விற்பனை வரியும், ஏனைய வரிகளும் தீர்வைகளும்-நிருவாகம் | 19,83,17 |
| 5. | முத்திரைத் தாள்கள்-நிருவாகம் | 1,28,41 |
| 6. | ஆவணப் பதிவு | 8,18,24 |
| 7. | மாநிலச் சட்டமன்றம் | 1,67,31 |
| 8. | தேர்தல்கள் | 1,60,05 |
| 9. | மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள் | 27,07,26 |
| 10. | பால் வழங்கு செயல் திட்டங்கள் | 2,07,11 |





| (1) | | (2) |
|---|---|---|
| 11. | மாவட்ட நிருவாகம் | 82,97,07 |
| 12. | 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய அறக்கட்டளைகள் சட்ட நிருவாகம் | 3,72,29 |
| 13. | நீதி நிருவாகம் | 21,42,20 |
| 14. | சிறைச்சாலைகள் | 10,56,75 |
| 15. | காவல் துறை | 1,34,86,93 |
| 16. | தீயணைப்புப் பணிகள் | 8,45,12 |
| 17. | கல்வி | 7,42,28,33 |
| 18. | மருத்துவம் | 1,32,51,52 |
| 19. | மக்கள் நல்வாழ்வு | 75,90,95 |
| 20. | வேளாண்மை | 1,72,31,93 |
| 21. | மீனளம் | 6,70,14 |
| 22. | கால்நடை வளர்ப்பு | 30,94,70 |
| 23. | கூட்டுறவு | 11,75,95 |
| 24. | தொழில்கள் | 4,28,98 |
| 25. | கைத்தறியும் துணித் தொழிலும் | 34,56,59 |
| 26. | கதர்-கிராமத் தொழில்கள் | 3,25,00 |
| 27. | ஊரக வளர்ச்சி | 1,97,42,46 |
| 28. | தொழிற்சாலைகள் உள்ளடங்கலான தொழிலாளர் நலன் | 20,50,66 |
| 29. | சமூக நலன் | 1,50,01,08 |
| 30. | பட்டியல் பழங்குடியினர், பட்டியல் சாதியினர் முதலியோர் நலன் | 63,58,46 |

| (1) | (2) |
|---|---|
| 31. பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், சீர் மரபினர் நலன் | 16,08,08 |
| 32. வீட்டு வசதி | 12,65,90 |
| 33. நகர்ப்பகுதி வளர்ச்சி | 7,57,56 |
| 34. நுகர் பொருள் வழங்கல் | 2,54,95,81 |
| 35. பாசனம் | 65,44,08 |
| 36. பொதுப் பணிகள்-கட்டடங்கள் | 12,35,33 |
| *37. பொதுப் பணிகள்—பணியாளரமைப்பும், கருவிகளும் தளவாடமும் | .. |
| 38. சாலைகளும் பாலங்களும் | 85,61,91 |
| 39. சாலைப் போக்குவரத்துப் பணிகளும் கப்பல் போக்குவரத்தும் | 4,31,14 |
| 40. இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு | 16,71,77 |
| 41. ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுகால நன்மைகளும் | 3,26,97,56 |
| 42. பல்வகை | 1,61,88,49 |
| 43. எழுதுபொருள்-அச்சுத் துறை | 12,34,62 |
| 44. காட்டுவளத் துறை | 16,96,20 |
| 45. இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும் | 25,30,95 |
| 46. செய்தி திரைப்படத் தொழில் நுட்பவியல் | 3,27,46 |
| 47. ஊரகத் தொழில்கள் | 23,68,88 |
| 48. குடிநீர் வழங்கல் | 46,07,77 |

*வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் நிதியொதுக்கம் எதுவும் கோரப்படவில்லை.



| (1) | (2) |
|---|---|
| 49. நகராட்சி நிருவாகம் | 93,91,78 |
| 50. சுற்றுலா | 53,23 |
| 51. தமிழ் வளர்ச்சி-பண்பாடு | 4,22,10 |
| 52. சுற்றுச் சூழல் | 2,99,89 |
| **மொத்தம்—அ. வருவாய்க் கணக்கில் செலவு.** | **3,174,03,93** |
| **ஆ. வருவாய்க் கணக்கின் கீழ்வராத மூலதனச் செலவு** | |
| 53. வேளாண்மை குறித்த மூலதனச் செலவு | 7,58,57 |
| 54. தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு | 10,85,21 |
| 55. பாசனம் குறித்த மூலதனச் செலவு | 62,34,62 |
| 56. பொதுப் பணிகள்-கட்டடங்கள் குறித்த மூலதனச் செலவு | 26,27,20 |
| 57. சாலைகள், பாலங்கள் குறித்த மூலதனச் செலவு | 89,14,18 |
| 58. சாலைப் போக்குவரத்துப் பணிகள், கப்பல் போக்குவரத்து குறித்த மூலதனச் செலவு | 21,48 |
| 59. காட்டுவளம் குறித்த மூலதனச் செலவு | 19,20,48 |
| 60. ஊரகத் தொழில்கள் குறித்த மூலதனச் செலவு | 27,99 |
| 61. பல்வகை மூலதனச் செலவு | 1,09,62,66 |
| **மொத்தம்—ஆ. வருவாய்க் கணக்கின்கீழ் வராத மூலதனச் செலவு** | **3,25,52,39** |
| **இ. கடன்கள், முன்பணங்கள் வழங்குதலும் கடனைத் திருப்பிக் கொடுத்தலும்** | |
| 62. மாநில அரசு வழங்கும் கடன்களும் முன்பணங்களும் | 1,00,60,52 |
| **பெருமொத்தம்** | **36,00,16,84** |

## 4. அறிவிப்புகள்—தொடர்ச்சி

### (ஆ) நிதி ஒதுக்க (முன்னளி மானிய வாக்களிப்பு) சட்டமுன்வடிவு, 1997 (ஆ.செ.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 1997 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்க (முன்னளி மானிய வாக்களிப்பு) சட்டமுன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்யவும், ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளவும் ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

## 6. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

### (அ) நிதி ஒதுக்க (முன்னளி மானிய வாக்களிப்பு) சட்டமுன்வடிவு, 1997

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: 1997 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்க (முன்னளி மானிய வாக்களிப்பு) சட்டமுன்வடிவு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1997 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்க (முன்னளி மானிய வாக்களிப்பு) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.



## 7. இறுதி துணை நிதிநிலை அறிக்கை, 1996-97, விவாதமும் வாக்கெடுப்பும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: 1996-97 ஆம் ஆண்டிற்கான இறுதி துணை நிதிநிலை அறிக்கை. 1996-97 ஆம் ஆண்டிற்கான கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள்மீது விவாதமும் வாக்கெடுப்பும். உறுப்பினர்கள் 6 பேர் இதில் பேச இருக்கிறார்கள். எக்காரணம் கொண்டும், அவையே விரும்பினாலும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 1 மணி 30 நிமிடத்திற்கு மேல் பேசக்கூடாது என்ற விதி இருக்கிற காரணத்தால் அதை மனதிலே கொண்டு பேசுகிற உறுப்பினர்கள் தங்கள் பேச்சை அமைத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, முதலில் திரு. சி. ஞானசேகரன் அவர்களைப் பேசுமாறு அழைக்கிறேன்.

**திரு. சி. ஞானசேகரன்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1996-97 ஆம் ஆண்டிற்கான இறுதித் துணை நிதி மதிப்பீடுகள் குறித்த விவாதத்தில் கலந்து கொண்டு பேசுகிற நல்வாய்ப்பினை நல்கிய தங்களுக்கு என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியினைக் காணிக்கையாக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**(மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. கே. சுப்பராயன் தலைமை)**

*'இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த*
*வகுத்தலும் வல்ல தரசு'*

என்று கூறுகிறார் வள்ளுவர். அதைப்போல, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இயற்றி, ஈட்டி, காத்து வைத்திருந்த பணத்தையெல்லாம் மற்ற அமைச்சர் பெருமக்களுக்கு வகுத்துக் கொடுத்து, இன்று எல்லாத் துறைகளுக்கும் நிதியை வழங்கியும், சில எதிர்பாராச் செலவினங்கள் என்கிற தலைப்பின்கீழ் எதிர்பாராமல் ஏற்பட்டிருக்கக்கூடிய சில செலவினங்களுக்கெல்லாம் பணத்தை ஒதுக்கீடு செய்திருக்கிறார்கள். அதிலே வருவாய்க் கணக்கில் ரூ. 1163.44 கோடியும், மூலதனக் கடன் வகையில் ரூ. 678.54 கோடியும் ஒதுக்கியிருக்கிறார்கள். இதிலே, வெள்ளச் சீற்றத்தின் காரணமாக தமிழகத்திலே ஆங்காங்கே ரோடுகள் எல்லாம் உடைபட்டும், புயலால் எவ்வளவோ பாதிப்புகளுக்கும் உள்ளாகியிருக்கிற இந்த நேரத்தில் அதிகமாகப் பணத்தை இன்று இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்புக்காக ஒதுக்கித் தருகிற நிலைக்கு ஆளாகி, இந்த அரசு அதற்காகப் பணத்தை ஒதுக்கித் தரவேண்டியிருந்தது. அந்த வகையிலே மாண்புமிகு முதல்வர் அவர்கள் பல செலவினங்களுக்கு

[திரு. சி. ஞானசேகரன்] [1997 மார்ச் 25

ஒதுக்கியிருப்பதை நிச்சயம் நாம் ஏற்றுக் கொண்டாக வேண்டும். ஆனால், அதே நேரத்தில் எதிர்பாராச் செலவினம் என்று, சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷனுக்கு ரூ. 100 கோடி கொடுத்திருக்கிறார்கள். மின் வாரியத்திற்கு ஏற்கெனவே ரூ. 162.78 கோடி பணம் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது.

முற்பகல் 11-05

சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷனுக்கு, நெல் கொள்முதல் செய்வதற்காக கணிசமாக நிதி ஒதுக்கீடு செய்தும் கூட, இன்று ஆங்காங்கே இருக்கக் கூடிய நியாய விலைக் கடைகளில் ஒரு குடும்பத்திற்கு 20 கிலோ அரிசி என்று போடக்கூடிய நிலையை மாற்றி, ஒரு யூனிட்டுக்கு 4 கிலோ என்று குறைக்கப்பட்டிருக்கிறது. சில குடும்பங்களுக்கு 8 கிலோ அரிசி, சில குடும்பங்களில் 3 பேர் இருந்தால் 12 கிலோ அரிசி என்றும் குறைக்கப்பட்டிருக்கிறது. 20 கிலோ அரிசி போட வேண்டுமென்று மக்கள் ஆதங்கத்தோடு எதிர்பார்க்கிறார்கள். கடந்த முறையிலே எப்படி நடந்ததோ அதைப் போல ஒரு குடும்பத்தில் 4 பேர் இருந்தாலும் சரி, 3 பேர் இருந்தாலும் சரி, ஒவ்வொரு குடும்பத்திற்கும் 20 கிலோ அரிசி கொடுக்கப்பட வேண்டும் என்று மாண்புமிகு முதல்வர் அவர்களைப் பணிவன்போடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆகவே தயவு செய்து, நியாயவிலைக் கடைகளில் அளவை குறைக்காமல் அரிசி போடுவதற்கு உடனடியாக உத்தரவிட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அரசியல்வாதிகள் என்று சொன்னாலே, கொஞ்சம் சந்தேகக் கண்ணோடு பார்க்கக் கூடிய நிலை வந்து கொண்டிருக்கக் கூடிய சூழ்நிலையை மாற்றியமைக்க வேண்டியது நம்முடைய தலையாய கடமையாகும். குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால், இரண்டு நாட்களுக்கு முன்னாலே கூட பத்திரிகையிலே படித்தேன் -முன்னாள் நிதி அமைச்சர் பேசுகிறபோது, ஒரு கையெழுத்துப் போட்டதற்குச் சிறையிலே பிடித்துத் தள்ளுகிறார்கள்; நாங்களும் ஆட்சிக்கு வருவோம்; ஒரு நாளைக்கு 300, 400 கையெழுத்துப் போடுகிற முதலமைச்சரை நாங்களும் பிடித்து உள்ளே தள்ளுவோம் என்ற அளவில் பேசியிருப்பது கேவலமான ஒன்றாக இருக்கிறது என்பதை நான் மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களின் கவனத்திற்கும், இந்த அவையினுடைய கவனத்திற்கும் கொண்டு வர கடமைப்பட்டிருக்கிறேன். அரசியல் வாதிகள் என்று சொன்னால், ஒரு கண்ணியத்தோடு இருக்க வேண்டும். தவறு செய்தவர்கள் யாராக இருந்தாலும் தண்டிக்கப்பட வேண்டும். அதனால்தான், மத்தியிலும் சரி, மாநிலத்திலும் சரி தவறு செய்த



1997 மார்ச் 25] [திரு. சி. ஞானசேகரன்]

எல்லோரும் கைதுபடலங்களாக-கைது செய்யப்பட்டு சிறை சென்று கொண்டிருக்கக் கூடிய நிலையைப் பார்க்கிறோம். தவறு செய்தவர்களுக்கு வக்கலாத்து வாங்கிக் கொண்டு, அதற்கு வருத்தம் தெரிவிக்காமல் நாங்கள் மீண்டும் ஆட்சிக்கு வருவோம், வருவோம் என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். யார் தவறு செய்தாலும், உள்ளே போவதற்கு நிச்சயமாகத் தயாராக இருக்க வேண்டும். ஆகவே இதற்கெல்லாம் விளக்கம் அளித்துக் கொண்டு இருக்கிறார்கள். இதுபோன்ற பேச்சுக்களால் அரசியல்வாதிகளின் மரியாதை குறைந்து கொண்டே இருக்கிறது. அரசியல்வாதிகள் என்ற போர்வையில் ஆங்காங்கே பார்த்தால் அராஜகங்கள் கட்டவிழ்த்துவிடப்படுகின்றன; சிலர் சாராயம் காய்ச்சி வியாபாரம் நடத்திக் கொண்டிருக்கிறார்கள்; சிலபேர் சந்தன மரங்களைக் கடத்தி கொண்டிருக்கிறார்கள். இதுபோன்ற தவறுகளைச் செய்பவர்கள் எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும், மாண்புமிகு முதல்வர் அவர்கள் இனம் கண்டு, அவர்கள் மீது இரும்புக் கரம் கொண்டு அடக்கினால்தான் இந்த நாட்டிலே நடக்கக் கூடிய தவறுகளை, சாராயம் காய்ச்சுதல், சந்தனம் கடத்துதல் போன்றவற்றைத் தடுக்க முடியும்.

மாண்புமிகு முதல்வர் அவர்கள் தெரிவித்தது போல, 68 கோடி ரூபாய் சந்தனக் கட்டைகள் இன்று சாம்பலாகிப் போனது. நாட்டினுடைய காட்டு வளம் இந்த அளவிற்கு நெருப்பிலே கருகிப்போன சூழ்நிலை நெஞ்சையெல்லாம் உருக்கிக் கொண்டிருக்கிறது. இதற்குக் காரணம் கடத்தல்காரர்களுடைய கைவரிசைதான் என்று புலன் விசாரணையில் புலனாவதாகக் கூறிக் கொண்டிருக்கிறார்கள். இப்படி கடத்தல் தொழிலை செய்வது மட்டுமல்ல, ஏற்கெனவே கிடங்குகளில் இருந்த சந்தனக் கட்டைகளைக் கடத்திவிட்டு, அதை மறைப்பதற்காக இப்படியொரு சதித் திட்டத்தினை தீட்டிய நாசக்காரக் கும்பலை உடனடியாக குண்டர் சட்டத்தில் பிடித்துப் போடுவதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, தமிழ்நாட்டிலே இருக்கக் கூடிய மிகப் பெரிய பிரச்சினை, முக்கியமான பிரச்சினை புறம்போக்கு நிலங்கள். இது குறித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். 10, 15 ஆண்டுகளுக்கு மேலாக புறம்போக்கு நிலங்களில் ஏழை எளிய மக்கள் வீடு கட்டி வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இனி அவர்களை அரசால் கூட அப்புறப்படுத்த முடியுமா என்பது கூட சந்தேகம். இப்படி 10, 15 ஆண்டுகளாக புறம்போக்கு நிலங்களில் வீடுகட்டிக்

கொண்டு வாழ்ந்து கொண்டிருப்பவர்களுக்கு விதி விலக்கு அளித்து அவர்களுக்குப் பட்டா கொடுக்க வேண்டும். இதற்கு எந்தவிதமான நிதியும் ஒதுக்கத் தேவையில்லை. நிதி ஒதுக்கீடு இல்லாமலேயே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்தப் பிரச்சினையை மிக எளிதில் தீர்த்துவிட முடியும். புறம்போக்கு நிலங்களை புதிதாக யாராவது ஆக்கிரமிப்பு செய்தால் கடுமையான உத்தரவுகள் போட்டு, புறம்போக்கு நிலங்களை ஆக்கிரமிப்பு செய்யக் கூடாது என்று அதற்கு அணை போடலாம். இதுவரை வந்துவிட்ட ஆக்கிரமிப்புகளுக்கு, பட்டா கொடுப்பதற்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் உத்தரவிட வேண்டுமென்று இந்த மன்றத்தின் சார்பாகக் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இதிலே இன்னொரு பிரச்சினையும் வருகிறது, இப்படி பட்டா கிடைக்காத காரணத்தால், ஏற்கெனவே கடந்த கால ஆட்சியிலே முன்னாள் முதல்வர் அவர்கள் 1995-லே ஒரு உத்தரவைப் போட்டிருக்கிறார்கள். புறம்போக்கு நிலங்களில் வீடுகட்டிக் கொண்டவர்கள், வருவாய்த் துறையிலிருந்து ஆட்சேபணை இல்லை என்ற சான்று பெற்றுக்கொடுத்தால்தான், அவர்கள் மின் இணைப்பு பெறமுடியும். ஆட்சேபணை சான்று கொடுக்கக் கூடாது என்ற உத்தரவை 1995-லே முன்னாள் முதல்வர் அவர்கள் போட்டார்கள். 1995-க்கு முன்னாலே சான்றுகளைப் பெற்று ஒளிவிளக்கை-மின் இணைப்பைப் பெற்றுக் கொண்டார்கள். 1995-க்குப் பிறகு, ஏமாந்துவிட்டவர்கள், விளக்குக் கிடைக்காதா, ஒளிவிளக்கு வராதா என்று ஏக்கத்தோடு இருக்கிறார்கள். ஆகவே ஆட்சேபணையில்லாச் சான்றினை வருவாய்த் துறை உடனடியாக வழங்கி அதுபோன்ற வீடுகளுக்கு நீங்கள் விளக்கேற்ற வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

முற்பகல் 11-10

அடுத்து, வீடுகளுக்கு கிராமப்புறங்களில் இப்போது குடிநீர்க் குழாய் இணைப்பைப் பெறுவதற்கு தடை ஆணை இருக்கிறது. சில பேர் இருக்கக் கூடிய கிராமங்களிலே, தண்ணீர் வளம் இருக்கக் கூடிய கிராமங்களிலே கூட வீடுகளுக்கு குடிநீர்க் குழாய் இணைப்பைப் பெற வேண்டுமென்று சொன்னால், இப்போது இருக்கக் கூடிய தடை ஆணை அதற்குக் குறுக்கே இருக்கின்ற காரணத்தினாலே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் அந்தத் தடை ஆணையை தளர்த்தி, கிராமப் பகுதியில் இருக்கக் கூடிய, நீர்வளம் மிக்க கிராமங்களில் குடிநீர்க் குழாய் இணைப்பை வீட்டு உரிமையாளர்கள் போட்டுக் கொள்வதற்கு நீங்கள் உத்தரவிட வேண்டும் என்ற கோரிக்கையை நான் வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.





எங்களுடைய வேலூர் நகராட்சி ஒரு பரந்த நகராட்சி; விரிவடைந்து சென்று, வளர்ந்து கொண்டிருக்கக் கூடிய நகராட்சி. அந்த நகராட்சியை உங்களுடைய காலத்தில் ஒரு மாநகராட்சியாக உடனடியாக உருவாக்கிட உத்தரவிட வேண்டும். அப்போதுதான் உலக வங்கியினுடைய பணம் எல்லாம் எங்களுடைய அந்த மாநகராட்சிக்கு வரும். வேலூர் வரலாற்றுச் சிறப்புமிக்கது; வேலூர் முதல் சுதந்திரப் போராட்டத்திற்கே வித்திட்டது; வேலூர் மியூட்டினி-சிப்பாய்க் கலகம், முதல் விடுதலைப் போராட்டம் என்று சொல்லக் கூடிய சுதந்திரக் காற்றை நாமெல்லாம் சுவாசிப்பதற்கே காரணமாக இருந்தது; எங்கள் வேலூர் மண்ணை நீங்கள் ஒரு மாநகராட்சியாக மாற்றித் தர வேண்டும் என்று நான் பணிவன்போடு கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, நம்முடைய மாண்புமிகு சுகாதாரத் துறை அமைச்சர் அவர்கள் சொல்கிறபோது, ஃபுல் பிளட்ஜ்டு ஹாஸ்பிட்டல் என்று சொன்னார்கள். வேலூர் கவர்ன்மெண்ட் ஹாஸ்பிட்டல் ஃபுல் பிளட்ஜ்டு ஹாஸ்பிட்டல் என்று சொன்னார்கள். அந்த ஃபுல் பிளட்ஜ்டு ஹாஸ்பிட்டலை உங்களுடைய காலத்தில் ஒரு மருத்துவக் கல்லூரியாகக் கொண்டு வந்துவிட்டால்—காரணம் அங்கே ஃபுல் பிளஜ்ட்டு ஆக ஏற்கெனவே ஹாஸ்பிட்டல் இருக்கிறது; மெட்ராஸை எடுத்துக் கொண்டால் பல மருத்துவக் கல்லூரிகள் இருக்கின்றன; (குறுக்கீடு) மன்னிக்க வேண்டும்; சென்னை என்று மாற்றிக் கொள்கிறேன்; மாண்புமிகு முதல்வர் அவர்கள் கொண்டு வந்த அந்த ஆலோசனையை ஏற்றுக் கொள்கிறேன்; நாங்கள் பூந்தமல்லிக்கு வந்துவிட்டால், சென்னைக்கு வருவதற்கு கிட்டதட்ட 1¼ அல்லது 1½ மணி நேரம் ஆகிறது. நம்முடைய சென்னை மாநகரம் இப்போது ஓவர் கிரவுடட் சிட்டி ஆக ஆகிவிட்டது. இங்கே நாம் ஏற்கெனவே பல பல்கலைக் கழகங்களை வைத்துக் கொண்டு இருக்கிற நேரத்தில், இங்கே பல கல்லூரிகள் வைத்துக் கொண்டிருக்கிற காரணத்தால், இப்போது அசெம்பிளியும் நடைபெறுவதால், அந்தக் கல்லூரிகளை டீ-சென்ட்ரளைஸ் செய்து, பரவலாக்கும் திட்டம் என்று பெயர் வைத்து இருப்பதைப் போல, வேலூர் மருத்துவமனையை உடனடியாக ஒரு மருத்துவக் கல்லூரியாக ஆக்க உத்தரவிட்டு துவங்க வேண்டுமென்று நான் மாண்புமிகு முதல்வர் அவர்களைப் பணிந்து கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்னொன்றையும் கேட்டுக் கொள்கிறேன். சி.எம்.சி. ஆஸ்பத்திரியில் மைனாரிட்டிக்கு மட்டும் இம்பார்ட்டன்ஸ் கொடுக்கிறார்கள். அந்த மாவட்ட மக்களாக இருந்தாலும் கூட, அங்கே கல்வி பெறக் கூடிய

தகுதியோ, வசதியோ எங்களுக்கு இல்லை. வேறு எங்கெங்கோ இருந்து, வேறு மாநிலங்களில் இருப்பவர்கள் எல்லாம் வந்து படித்து அங்கிருந்து சென்று, அவர்கள் புகழ் பெற்றவர்களாக விளங்குகிறார்களேயொழிய, மண்ணின் மைந்தர்களுக்கு அந்த ஆஸ்பத்திரியிலே இடம் இல்லை. எனவே, நீங்கள் ஒரு அவசரச் சட்டம் கொண்டு வந்தாவது அல்லது அதற்கான சட்டத் திருத்தம் கொண்டு வந்தாவது, அல்லது மத்தியிலே நீங்கள் சொல்லியாவது 50 சீட்டுகளாவது, 50 சதவீத சீட்டுகளை அந்த மாவட்டத்து மக்கள், பக்கத்தில் இருக்கக் கூடிய திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டம், தர்மபுரி மாவட்டம்—இந்த மாவட்டங்களுக்கு எல்லாம் அதுதான் ஒரே காலேஜ்; அந்த மெடிக்கல் காலேஜிலே அந்த சீட்டுகளைப் பெறுவதற்கு நீங்கள் ஆவன செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, 'ஏற்கெனவே மாண்புமிகு முதல்வர் அவர்கள் சேலத்திற்கு பெரியார் பல்கலைக் கழகம் தந்து இன்று மாண்பைச் சேர்த்து இருக்கிறார்கள். எப்படி சேலத்தில் ஒரு பல்கலைக்கழத்தினுடைய விரிவாக்க மையம் இயங்கி வந்ததோ, அதேபோல எங்களுடைய வேலூரிலும் கடந்த 16 ஆண்டுகளாக சென்னை பல்கலைக் கழகத்தினுடைய விரிவாக்க மையம் இயங்கி வருகிறது. எங்களுடைய வேலூர்—அதுவும் நீங்கள், உங்களுடைய அருமைத் தம்பிகள் பல பேரும், அண்ணன்மார்கள் பல பேரும் இருந்து, உங்களுடைய கோட்டையாக இருந்த வேலூர் என்று கூடச் சொல்லாம், அங்கே திரு.சி.கே. சின்னராஜ் கவுண்டரிலிருந்து ஆரம்பித்து முல்லை சத்தி, சாரதி, அதேபோல என்னுடைய மாமனார் முல்லை வடிவேலு, (குறுக்கீடு-சிரிப்பு) அதேபோல நம்முடைய மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர், பொதுப் பணித் துறை அமைச்சர்—இத்தனை பேரையும் உருவாக்கிய என்னுடைய மாவட்டத்தில் நீங்கள் ஒரு பல்கலைக் கழகத்தை—பெரியார் பல்கலைக் கழகத்தை சேலத்திற்கு நீங்கள் தந்தது போல, அம்பேத்கர் பல்கலைக் கழகத்தை, சென்னைப் பல்கலைக் கழகத்தினுடைய விரிவாக்க மையத்தைக் கொண்டுள்ள அம்பேத்கர் மாவட்டத்திற்கு அம்பேத்கர் பல்கலைக் கழகத்தை அங்கே கொண்டு வந்து வைத்தால்தான் அது சாலப்பொருத்தமானதாக இருக்கும். ஆகவே, நீங்கள் அம்பேத்கர் பல்கலைக்கழகத்தைக்கூட அங்கே ஷிப்ட் செய்து விடலாம். ஏனென்றால் சென்னை ஓவர் கிரவுடட் சிட்டி. வேலூருக்கு இரயிலிலே போனால் கிட்டத்தட்ட 2 மணி நேரத்திலே போய்விடலாம்; அல்லது பஸ்ஸிலே போனால் 3 மணி நேரத்திலே போய்விடலாம். இப்படி இருக்கக் கூடிய நேரத்தில், வேலூர் சென்னையிலிருந்து மிகத் தொலைவில் இல்லை.



ஆகவே, அம்பேத்கர் சட்டப் பல்கலைக் கழகத்தையாவது அல்லது அம்பேத்கர் பெயரில் ஒரு பல்கலைக் கழகத்தை நீங்கள் எங்களுடைய வேலூருக்கு தயவு செய்து கொடுத்து, சென்னைப் பல்கலைக் கழகத்தின் விரிவாக்க மையத்தை தரம் உயர்த்திட வேண்டும் என்று நான் பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

வேலூரில் கடந்த உங்களுடைய ஆட்சிக் காலத்தில், 1989-ல் நீங்கள் இருந்தபோது அப்போது வக்கீல் சங்கத் தலைவனாக நான் இருந்த போது போராட்டம் ஒன்று அறிவித்து கோர்ட்டுக்குப் போனபோது, நீங்கள் உடனடியாக அழைத்து கோர்ட்டைக் கட்டுவதற்கு உத்தரவிடுவதாக ஏற்கெனவே சொன்னீர்கள். பிறகு ஆட்சி மாற்றம் ஏற்பட்டது. எப்படியோ போராடிப் போராடி சத்துவாச்சாரியில் 7 கோடி ரூபாயில் கோர்ட்டைக் கொண்டு வர அப்போது உத்தரவைப் பெற்றோம். அதிலே முதல் பாதிதான் வந்திருக்கிறது. பணத்தைக் கொடுத்து 'பி' பிளாக் வந்து விட்டது. 'ஏ' பிளாக் இன்னும் வரவில்லை. அந்த 'ஏ' பிளாக்குக்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் உடனடியாக நிதி ஒதுக்கீட்டைச் செய்து அதன் திறப்பு விழாவையும் இந்த ஆண்டிலேயே நீங்கள் வந்து நடத்தித் தரவேண்டுமென்று நான் பணிவன்போடு கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

முற்பகல் 11-15

அடுத்து, உள்ளாட்சி அமைப்புகளுக்குத் தேர்தல் நடத்தியிருக்கிறோம். மாநகராட்சி, நகராட்சிகள், பஞ்சாயத்துக்களுக்கு எல்லாம் தேர்தல் நடத்தி தலைவர்களையும் உறுப்பினர்களையும் தேர்ந்தெடுத்திருக்கிறோம். நான் பணிவன்போடு கேட்டுக்கொள்வதெல்லாம், உள்ளாட்சிகளில் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கும் கூட சம்பளம் வழங்க வேண்டும் என்பதுதான். எங்களுடைய தமிழ் மாநில காங்கிரசின் சட்டமன்றத் துணைத் தலைவர் திரு. லட்சுமணன் அவர்கள் மேற்கு வங்காளத்துக்கு சமீபத்தில் சென்று வந்து, அங்கே ஒரு கருத்து நிலவுவதைத் தெரிந்து வந்தார்கள். அங்கே பஞ்சாயத்துத் தலைவர்கள் போன்றவர்களுக்கு ரூ. 500-ம், துணைத் தலைவர்களுக்கு 400 ரூபாயும் சம்பளம் வழங்கப்படுவதாகச் சொன்னார்கள். இங்கேயும் நீங்கள் அதுபோல நகராட்சித் தலைவர்கள், நகராட்சி மன்ற உறுப்பினர்கள், துணைத் தலைவர்கள், பஞ்சாயத்து யூனியன் தலைவர்கள், கவுன்சிலர்களுக்கு எல்லாம் மேற்கு வங்கத்தில் இருப்பதைப் போல நீங்களும் சம்பளத்தைக் கொடுக்க வழிவகை செய்தால், ஓரளவுக்கு அவர்களிடம் இருக்கக் கூடிய

ஊழலை எல்லாம் நாம் தவிர்ப்பதற்கு ஏதுவாக இருக்கும் என்ற காரணத்தாலே தயவுசெய்து நீங்கள் அதைச் செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கூறுகிற யோசனைக்கு ஒரு விளக்கம். அந்த நிறுவனங்களிலிருந்து அந்தச் சம்பளத்தை அவர்கள் பெறுகின்றார்களா அல்லது அரசே கொடுப்பதாகத் தகவல் கிடைத்ததா?

**திரு. சி. ஞானசேகரன்:** அரசே கொடுப்பதாக நான் அறிகிறேன். துணைத் தலைவர் அவர்கள் அதைத்தான் அறிந்து வந்திருக்கிறார்கள். எனவே இங்கே இப்போது புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிற உள்ளாட்சி மன்ற உறுப்பினர்களுக்கும், தலைவர்களுக்கும் சம்பளத்தைக் கொடுக்க மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஒரு திட்டத்தைத் தீட்டி, அவர்களுக்கு எல்லாம் பணத்தை அளிப்பதோடு, அவர்களுக்கு அதிகாரத்தையும் கொஞ்சம் அளிக்க வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன். காரணம், எங்களுடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் திருச்சி மாநாட்டுக்கு இப்போது போய் வந்தார்கள். அந்த மாநாட்டுக்கு.....

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி:** அதிகாரம் கொடுக்க வேண்டும் என்று எல்லோரும் சொல்கிறார்களே தவிர, என்னென்ன அதிகாரம் தரவேண்டுமென்று யாரும் சொல்லவில்லை. தயவுசெய்து மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எந்தெந்த அதிகாரத்தைத் தரவேண்டுமென்று சொல்ல வேண்டும்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கேட்பதால் சொல்கிறேன். 5,000 பேருக்கு என்ற வீதத்தில் பஞ்சாயத்து யூனியன் உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்திருக்கிறோம். அந்த பஞ்சாயத்து யூனியன் உறுப்பினர்களுக்கு எந்த அதிகாரமும் இல்லை. அதேபோல், மாவட்ட பஞ்சாயத்து உறுப்பினர்கள், 50 ஆயிரம் பேருக்கு என்று தேர்ந்தெடுத்திருக்கிறோம். அவர்களுக்கும் உரிமை இல்லை. அதைத் தான் சொல்ல வந்தேன். எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் திருச்சி மாநாட்டுக்குச் சென்றபோது, தாராபுரம் பஞ்சாயத்து யூனியன் சேர்மனாக இருக்கக் கூடிய ஒருவரை, அவர் ஒரு தாழ்த்தப்பட்ட பெண் என்ற காரணத்தால் அவரை ஜீப்பில் கூட ஏற்ற அங்குள்ள அதிகாரிகள் மறுக்கிறார்கள் என்ற அதிர வைக்கக்கூடிய கருத்தை அங்கே அவர்கள் தெரிவித்தார்கள். இப்படி அதிகார வர்க்கம் இருக்கிறது. சில நல்ல



அதிகாரிகளும் இருக்கிறார்கள். எல்லா அதிகாரிகளையும் நான் சொல்லவில்லை.

மாண்புமிகு முதல்வர் அவர்கள் கூட இதே மன்றத்தில் சொன்னார்கள், எங்கள் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. டேவிதார் அவர்களைப் பற்றிச் சொன்னார்கள். சிறப்பாகச் செயல்படக்கூடிய மாவட்ட ஆட்சித் தலைவரை நாங்கள் பெற்றிருக்கிறோம். இப்போது இருக்கக்கூடிய எஸ்.பி. ராதாகிருஷ்ணன் ஒரு சிறந்த எஸ்.பி.யாக விளங்கிக் கொண்டிருக்கிறார். அவருக்குப் ப்ரமோஷன் வந்தாலும் அங்கேயே டி.ஐ.ஜி.யாகப் போடலாம் என்றும்கூட கோரிக்கை வைத்திருக்கிறேன். அங்கே இருக்கக்கூடிய வேலூர் கோட்டையைச் சுத்தப்படுத்துவதற்கு, தொண்டு நிறுவனங்கள், மாணவர்கள் என்று ஆயிரம் பேரை வைத்து கோட்டையைச் சுத்தம் செய்து கொண்டிருக்கிறோம். வேலூரை எப்படியெல்லாம் அழகுபடுத்தலாம் என்று அந்த மாணவர்களிடம் ஒரு கேள்விப் பட்டியல் கொடுத்துக் கேட்டிருந்தபோது, மாவட்ட ஆட்சித் தலைவரையும், எஸ்.பி.யையும் மாற்றாதீர்கள், மாற்றாமல் இருந்தாலே போதும், ஊர் உருப்படும் என்ற கருத்தை அப்போது அவர்கள் தெரிவித்தார்கள். அந்த அளவுக்குச் சிறப்பாகப் பணியாற்றக் கூடியவர்களும் இருக்கின்றார்கள். இல்லையென்று நான் மறுக்கவில்லை. அதனால்தான் அந்த எஸ்.பி.யைக் கூட டி.ஐ.ஜி.யாக எங்கள் ஊரிலேயே போட்டுவிடுங்கள் என்றுகூட மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் கோரிக்கை வைத்தேன். அந்த அளவுக்குச் சிறப்பான சில அதிகாரிகளும் இருக்கிறார்கள். ஆனால் சிலபேர் அரசாங்கத்தின் பெயரையே கெடுக்கக் கூடிய வகையில் ஜீப்பில்கூட ஏற்றத் தயங்கும் அளவுக்கு இன்னும் சில உள்ளங்கள் இந்த நாட்டிலே இருக்கின்றன என்பதால் அவர்களைக் கண்டித்து அறிவுரை வழங்கி அல்லது நடவடிக்கை எடுத்து அதைச் சரி செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மக்கள் நல்வாழ்வுத் துறையில் ஆங்காங்கு ஆஸ்பத்திரிகளுக்கு ஏழை எளிய மக்கள் செல்கிறபோது சில பேர் பணம் கேட்டு நச்சரித்து அந்த ஏழை நோயாளிகளையெல்லாம் வருத்துகின்ற நிலை இருக்கிறது. Food Cell CID, Forest Cell CID போன்ற பிரிவுகள் காவல்துறையில் இருப்பதைப் போல, Health Cell CID என்றுகூட ஒரு பிரிவை ஏற்படுத்தி, ஆங்காங்கே கண்காணித்து, எந்தெந்த இடங்களில் இதுபோன்ற தவறுகள் நடக்கின்றன, எந்தெந்த இடங்களில் மருத்துவர்கள் சரியாகச் செயல்படுவதில்லை என்பதையெல்லாம் கண்டறிந்து அதற்காக நடவடிக்கை எடுக்கும் வகையில் Health Cell CID பிரிவு ஒன்றை உருவாக்க வேண்டுமென்று மாண்புமிகு முதல்வர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. சி. ஞானசேகரன்] [1997 மார்ச் 25

அடுத்து, காவல்துறையில் Prosecuting Inspector–களைப் போட வேண்டும். நிறைய வழக்குகள் போடுகின்றோம். அந்த வழக்குகள் எல்லாம் நீதிமன்றங்களில் பல ஆண்டுகளாக நடக்கின்றன. அந்த வழக்குகளுக்கு ஒவ்வொரு முறையும், சப்-இன்ஸ்பெக்டரோ, ஹெட் கான்ஸ்டபிளோ போகமுடிவதில்லை. காரணம் அவர்களுக்கு Law and Order போன்ற பிரச்சினைகள் இருக்கின்றன. ஆகவே, நீங்கள் வழக்கறிஞர்களை 'பிராசிக்யூட்டிங் இன்ஸ்பெக்டர்ஸ்' என்று ஒவ்வொரு காவல் நிலையத்திற்கும் நியமித்து, அவர்கள் வழக்கைப் பதிவு செய்து அவர்களிடத்தில் ஒப்படைத்து விட்டால், இன்வெஸ்டிகேஷனை அவர்களே செய்து, கோர்ட்டை அவர்களே அட்டெண்ட் செய்து, கேசை முடித்து கன்விக்‌ஷன் வாங்குகிறவரை, இதுபோன்ற பிராசிக்யூட்டிங் இன்ஸ்பெக்டர்ஸ்களுடைய பொறுப்பு என்று நீங்கள் ஆக்க வேண்டும்.

முற்பகல் 11-20

சாராயக் கேசுகளை எல்லாம் நீங்கள் நான்-பெயிலபிள் கேசுகள்–ஆக மாற்ற வேண்டும். நான்-பெயிலபிள் அஃபென்ஸ்–ஆக நீங்கள் மாற்றினீர்கள் என்று சொன்னால், ஓரளவிற்கு எல்லோரும் ஒபே செய்வார்கள். இப்போது சாராயக் கேசைப் பிடித்தாலே உடனே ஃபைன் கட்டிவிட்டு உடனடியாக வந்து திரும்பவும் காய்ச்சுகிறார்கள். காலையிலே பிடித்தாலும், மாலையிலே காய்ச்சுகிறார்கள். இப்படிப்பட்ட நிலையைத் தவிர்க்கவேண்டும் என்று சொன்னால் இந்தக் குற்றத்தை–மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நான் மெத்தப் பணிவன்போடு வேண்டிக் கொள்வதெல்லாம்–நான்-பெயிலபிள் வழக்குகளாக நீங்கள் சாராயக் கேசுகளை எல்லாம் மாற்ற வேண்டும். அதற்காக ஒரு சட்டத் திருத்தத்தை நீங்கள் உடனடியாகக் கொண்டு வரவேண்டுமென்று கேட்டுக் கொள்கின்றேன்.

மருத்துவத்தைப் பொறுத்த அளவில், இன்னும் மருந்துகள் நிறைய கிடைக்கின்றன என்று சொன்னாலும், கொடுக்கக் கூடிய மருந்துகள் அரசு மருத்துவமனைகளில்தான் கிடைக்கிறது. நகராட்சி மருத்துவமனைகளில் எல்லாம் கிடைப்பதில்லை. நான் ஏற்கனவே இந்த மாமன்றத்திலே குறிப்பிட்டதைப் போல, அனைத்து நகராட்சி மருத்துவமனைகளையும் நீங்கள் தயவுசெய்து அரசு மருத்துவமனைகளாக மாற்றுங்கள். இல்லையென்று சொன்னால், டாக்டர்களுக்கும் நகராட்சிகள் பணம் கொடுக்க முடியவில்லை. தயவு செய்து, எல்லா நகராட்சி மருத்துவமனைகளையும் அரசு மருத்துவமனைகளாக நீங்கள் மாற்றுங்கள் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.



1997 மார்ச் 25] [திரு. சி. ஞானசேகரன்]

வேளாண்மையைப் பொறுத்த அளவில் ஒரேயொரு கருத்து. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே, நீங்கள் கரும்புக்கு டன் ஒன்றுக்கு ஆயிரம் ரூபாய் கொடுக்க வேண்டும்–ஐந்து ரூபாய் ஏற்றியிருக்கிறீர்கள். விவசாயிகள் உங்களைப் பெரிதும் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே–நீங்கள், உங்களுடைய இலட்சியம் ஆயிரம் என்று கூறி இருக்கிறீர்கள். அந்த இலட்சியத்தை, இந்த ஆண்டிலே ஒரு பாதி, அல்லது அடுத்த ஆண்டிலே ஒரு பாதி முடித்து, அடுத்த ஆண்டுக்குள்ளாகவே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விவசாயிகளுடைய கஷ்டத்தைப் புரிந்து கொண்டு, அவர்களுக்கு கரும்புக்கு டன் ஒன்றுக்கு ஆயிரம் ரூபாய் என்று விலை நிர்ணயம் செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

எங்கள் ஊரில் இருக்கக் கூடிய அரியூர் கூட்டுறவு நூற்பாலை என்பது மூடப்பட்டிருக்கிறது. அந்த அரியூர் கூட்டுறவு நூற்பாலைக்கு 15 கோடி ரூபாயைப் பெருந்தன்மையோடு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சென்ற பட்ஜெட்டிலே அறிவித்தார்கள். ஆனால் அந்த ரூபாய் எங்களுடைய அரியூர் மில்லுக்கு இன்னமும் வரவேயில்லை. அந்தப் பணத்தை நீங்கள் தயவு செய்து கொடுத்து இரண்டு கோடி ரூபாய் கூடுதலாகப் போதும், எப்படியாவது நட்டம் இல்லாமல் நாங்கள் அந்த ஆலையை நடத்திக் காட்ட முடியும். ஆகவே—மாண்புகு முதலமைச்சர் அவர்கள் இதற்குச் சிறப்புக் கவனம் செலுத்தி இரண்டு கோடி ரூபாயோ அல்லது மூன்று கோடி ரூபாயோ மேலும் அரியூர் கூட்டுறவு நூற்பாலைக்குத் தந்துதவ வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதேபோல, மற்ற கூட்டுறவு நூற்பாலைகளுக்கும் நீங்கள் தந்து, இப்போது தமிழகத்தில் மூடியிருக்கக் கூடிய அனைத்து கூட்டுறவு நூற்பாலைகளும் இன்னும் ஒரு மாத காலத்திற்குள் நிச்சயமாகத் திறந்தே ஆகவேண்டும் என்று கங்கணத்தை மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் அவர்கள் உடனடியாக ஏற்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

எங்களுடைய வேலூரிலே குடிநீர்ப் பிரச்சினை மிக அதிகமாக இருக்கிறது. 9½ கோடி ரூபாயிலே நாங்கள் திட்டம் தீட்டி மூன்று ஆண்டுகளுக்கு முன்னாலேயே அரசுக்கு அனுப்பியிருக்கிறோம். அந்த 9½ கோடி ரூபாய் கிடைத்தது என்று சொன்னால் எங்களுடைய புதிய பாலாறு-வேலூர் குடிதண்ணீர் திட்டத்தின் மூலமாக நாங்கள் (மணியடிக்கப் பெற்றது) உடனடியாக அதைத் தீர்த்து வைக்க முடியும்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. கே. சுப்பராயன்):** நேரம் அதிகமாகிவிட்டது. சீக்கிரம் பேசி முடியுங்கள்.

**திரு. சி. ஞானசேகரன் :** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, அதேபோல, பாதாள சாக்கடைத் திட்டம். அதற்கு 24 கோடி ரூபாய் ஆகுமென்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அவ்வளவு தேவைப்படாது. நீங்கள் மறு ஆய்வு செய்தால் 17 அல்லது 18 கோடியிலே முடித்து விடலாம். ஆகவே, பாதாள சாக்கடைத் திட்டத்திற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கருணை உள்ளத்தோடு பணத்தைத் தந்து, பாதாள சாக்கடைத் திட்டத்தை வேலூருக்குக் கொண்டு வர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

5½ கோடி ரூபாயிலே புதிய பஸ் ஸ்டாண்ட் ஒன்று பை-பாஸ் ரோடிலே கொண்டுவர வேண்டும். அதற்கேற்ற நிலம் எல்லாம் பார்த்திருக்கிறார்கள். 5½ கோடி ரூபாய் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எங்களுக்குக் கொடுத்தீர்கள் என்று சொன்னால் வேலூரரையே புல் பிளெட்ஜிடு-ஆஸ்பிட்டல் புல் பிளெஜிடு ஆக இருப்பது போல, வேலூரரையும் புல் பிளெஜிடு டவுன்—ஆக மாற்றுவதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தயவு செய்து அதற்கான நிதி ஒதுக்கீட்டைச் செய்து, எங்களுடைய வேலூரரையும் வளமாக்குங்கள், தமிழகத்தையும் வளமாக்குங்கள் என்று சொல்லி அமைகின்றேன், நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. கே. சுப்பராயன்):** திரு. மு.பெ. சாமிநாதன்:

***திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, 1996-97-ஆம் ஆண்டுக்குரிய துணை நிதிநிலை அறிக்கை மீது நடைபெறும் விவாதத்தில் கலந்து கொண்டு பேசுவதற்கு இந்த மாமன்றத்தில் வாய்ப்பு தந்தமைக்காக என்னுடைய தொகுதி மக்களின் சார்பாக நெஞ்சார்ந்த நன்றியை மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன்.

1997-98-ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையை கடந்த 5-ஆம் தேதி இந்த மாமன்றத்தில் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தாக்கல் செய்தபோது, அந்த நிதிநிலை அறிக்கையின் மூலம் தமிழ்நாட்டிற்கு எவ்வளவு பெரிய எதிர்காலம் ஏற்பட்டிருக்கின்றது எவ்வளவு பிரகாசமான எதிர்காலம் ஏற்பட்டிருக்கின்றது என்பதை நாடு நன்கறியும். இந்த



நிதிநிலை அறிக்கையை ஒரு சிலர் காகிதப்பூ, இது மணக்காது என்று சொல்கிறார்கள். காகிதப்பூ என்ன, நறுமணம் தரக்கூடிய பூக்களை எல்லாம் தரை மீது அமைத்து அதிலே காரிலே பவனி வந்தவர்களுக்கு அனைத்துமே காகிதப் பூவாகவேதான் தெரிய வருகின்றது. மனசாட்சியுள்ள ஒவ்வொருவரும், கடந்த ஐந்தாம் தேதி தாக்கல் செய்யப்பட்ட நிதிநிலை அறிக்கையைப் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள். வெள்ளக்கோயில் தொகுதி மக்களின் பாராட்டுக்களையும் அந்த பாராட்டுக்களோடு இணைத்துப் பாராட்டி வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்தபோது என்னைப் போன்ற இளைஞர்களால் ஒன்றை உணர முடிந்தது. எங்களால் காண முடியாத மூன்று மாமனிதர்களைக் காண முடிந்தது, கலைஞர் அவர்களுடைய வழியிலே. பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியாரை நினைக்கிறபோது, இங்கே தலைவர் அவர்கள் இந்த நிதிநிலை அறிக்கையைத் தாக்கல் செய்த போது இந்த அறிக்கையில் காட்டியிருக்கக் கூடிய சிக்கனத்தையும் துணிவையும் பார்க்கிறபோது பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியார் அவர்களுடைய ஞாபகம் எங்களுக்கு வந்தது. அதைப்போல அந்த நிதிநிலை அறிக்கையில் ஏழை மக்களுக்குத் தந்திருக்கக் கூடிய நலத் திட்டங்களைப் பார்க்கிறபோது பேரறிஞர் அண்ணா அவர்களுடைய நினைவு எங்கள் மனதிலே வந்தது. அதைப்போல ஏழைகளுக்கு வழங்கக் கூடிய அந்த நலத்திட்டங்கள் மூலமாக ஏழை மக்கள் அடையக் கூடிய இன்பங்களை உணர்ந்தபோது டாக்டர் அம்பேத்கர் அவர்களுடைய நினைவு எங்களுக்கு வந்தது.

முற்பகல் 11-25

கடந்த பொதுத் தேர்தலில்கூட நாங்கள் பொது மக்களைச் சந்தித்து வாக்கு கேட்கும் போது, திராவிட முன்னேற்றக் கழகம் இந்தத் தேர்தலில் மாபெரும் வெற்றி பெறப்போகிறது, நிச்சயமாக தலைவர் கலைஞர் அவர்களுடைய தலைமையில் ஆட்சி அமைக்கப் போகிறோம் என்று சொன்னோம். அப்படி ஆட்சி அமைத்தாலும் கடந்த ஐந்தாண்டுக் கால அ.தி.மு.க. ஆட்சியின் காரணத்தால் நிர்வாகச் சீர்கேடுகள் ஏற்பட்டிருப்பதால் அவற்றை அகற்றி சரிசெய்ய மாண்புமிகு கலைஞர் அவர்கள் முதல்வராகப் பொறுப்பேற்றுக் கொண்டாலும் 10 ஆண்டுகள் ஆகும் என்று சொல்லி இருக்கிறோம். ஆனால் கடந்த 10 மாதங்களில் நிர்வாகத்தை சீர் செய்து நல்லதொரு ஆட்சியை நடத்திக் கொண்டிருப்பதை நாடு நன்கு அறிந்து கொண்டிருக்கிறது.

கடந்த நிதிநிலை அறிக்கையில் அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் என்று ஒரு திட்டத்தை அறிமுகப்படுத்தி இருக்கிறார்கள். உள்ளபடியே சிறப்பு வாய்ந்த அந்தத் திட்டத்தைப் பொறுத்தவரையில் ஒவ்வொரு சட்டமன்றத் தொகுதியிலும் ஒவ்வோராண்டும் ஒரு கிராமத்தைத் தேர்ந்தெடுப்பது என்பதை மாற்றி, ஒரு தொகுதிக்கு ஒரு ஒன்றியத்திற்கு ஒரு ஊராட்சி மன்றம் என்று தேர்ந்தெடுத்து, அந்த ஊராட்சி மன்றத்தை அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின் மூலமாக அனைத்து வசதிகளும் கொண்ட நவீன ஊராட்சி மன்றமாக மாற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதைப்போல ஆண்டு ஒன்றுக்கு ஒரு சில தொகுதிகளைத் தேர்ந்தெடுத்து, அந்தத் தொகுதி முழுவதும் அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தை அறிமுகப்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அப்படித் தேர்ந்தெடுக்கப்படும் ஒரு சில தொகுதிகளில் இந்த முதல் ஆண்டிலேயே வெள்ளக் கோவில் தொகுதியை தேர்ந்தெடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

வெள்ளக்கோவில் தொகுதி மக்கள் அனைவரும் பயன்பெறுகிற அளவுக்கு பெரியார் மாவட்டம், கொடுமுடி அருகில் காவிரிக்கரையிலிருந்து ஒரு கூட்டுக் குடிநீர்த் திட்டம் உருவாகி வருகிறது. அதை விரைவாக்கி பணிகளை முடித்திட வேண்டுமென்று இந்த அரசைக் கேட்டுக் கொள்கிறேன்.

தற்போது இருக்கிற குடிநீர்ப் பற்றாக்குறையைப் போக்கிட வெள்ளக் கோவில் ஒன்றியத்திற்கு 25 ஆழ்குழாய்க் கிணறுகளும், மூலனூர் ஒன்றியத்திற்கு 35 ஆழ்குழாய்க் கிணறுகளும், அதைப்போல என்னுடைய தொகுதிக்கு உட்பட்ட தாராபுரம் ஒன்றியத்தில் 15 ஆழ்குழாய்க் கிணறுகளும் அமைத்திட அரசை நான் வலியுறுத்திக் கேட்டுக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

என்னுடைய தொகுதியிலே அருந்ததி மக்கள் அதிகமாக வாழ்கிறார்கள். இந்தத் தொகுதியில் மக்கள் தொகுப்பு வீடுகள் இல்லாமல் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அதைப் போக்க மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்களும் அருள்கூர்ந்து வெள்ளக்கோவில் ஒன்றியத்திற்கு இந்த ஆண்டுக்கு 250 தொகுப்பு வீடுகளும், மூலனூர் ஒன்றியத்திற்கு 300 தொகுப்பு வீடுகளும், அதைப்போல என் தொகுதிக்குட்பட்ட தாராபுரம் ஒன்றியத்தில் இருக்கிற ஊராட்சி மன்றங்களுக்கு 150 தொகுப்பு வீடுகளும் வழங்கிட வேண்டுமென்று கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.



நாடு முழுவதும் மின்சார அழுத்தம் சரியாக இருந்தாலும், வெள்ளக் கோவில் தொகுதியில் மின் அழுத்தம் குறைவாக இருக்கிறது. அதைப் போக்கிட இப்போது வெள்ளக்கோவில் அருகில் உருவாகியுள்ள 110 கே. வி. துணை மின் நிலையம் பவர் டிரானஸ்பார்மர் இல்லாமல் செயல்படாமல் இருக்கிறது. அருள்கூர்ந்து அந்தத் துணை மின் நிலையத்திற்கு டிரான்ஸ்பார்மரை உடனடியாக வழங்கி இயங்க வைக்க மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களை நான் வலியுறுத்திக் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதைப்போல வெள்ளக்கோவில், மூலனூர், தாராபுரம் ஒன்றியங்களில் மேலும் ஒரு துணை மின் நிலையம் அமைத்திட நான் வலியுறுத்தி கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அருந்ததியின மக்கள் அதிகமாக வாழக்கூடிய என்னுடைய தொகுதியில் அவர்கள் இன்னும் வீட்டு நிலத்திற்கு பட்டா கூட இல்லாமல் இருக்கிறார்கள். அதற்கும் கூடுதல் தொகை ஒதுக்கி பட்டா வழங்கக் கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில் பெரியார் மாவட்டம் கூட்டுறவு நூற்பாலை ஒன்று அமைந்திருக்கிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும் மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் அவர்களையும் வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறேன். அந்த கூட்டுறவு நூற்பாலையை நவீனப்படுத்தி விரிவுபடுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

வெள்ளக்கோவில் தொகுதியில் கீழ் பவானி அணைத் திட்டத்தின் மூலமும், பரம்பிக்குளம்-ஆழியாறு திட்டத்தின் மூலமும் உப்பாறு அணைத் திட்டத்தின் மூலமும், வட்டமலை அணைத் திட்டத்தின் மூலமும், அமராவதி பாசனத் திட்டத்தின் மூலமும் பாசன வசதியைப் பெற்று வருகிறோம். இந்த அனைத்துத் திட்டங்களிலும்,—உப்பாறு, வட்டமலை அணைத் திட்டங்கள் தவிர,—எங்கள் பகுதி கடைக் கோடிப் பகுதியாக இருக்கிறது. ஆகவே அருள்கூர்ந்து கவனம் செலுத்தி, அந்தத் திட்டங்களுக்கு முன்னுரிமை வழங்கி, கூடுதல் நிதியொதுக்கிட மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களையும் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கீழ்பவானி அணைத்திட்டம் பெரியார் மாவட்டத்தில் 95 சதவீதம் பயன்படுகிறது. அந்த கீழ்பவானி அணைத் திட்டம் பல ஆண்டுகளுக்கு

முன்னால் தொடங்கப்பட்ட திட்டம் ஆகும். அந்தத் திட்டத்தில் இப்போது தண்ணீர் திறந்து விடும்போது அடிக்கடி உடைப்பு ஏற்பட்டு விடுகிறது. அதைச் சரி செய்ய வேண்டும். அந்த வாய்க்கால்கள் அருகில் இருக்கிற மரங்களின் கிளைகள் ஒடிந்து விழுந்து அதிலே அடிக்கடி தூசு கட்டி, கழிவுகள் கட்டி, உடைப்பு ஏற்பட்டு விடுகிறது. அதை சுத்தம் செய்ய ஆணையிட மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும், மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களையும் கேட்டுக் கொள்கிறேன்.

முற்பகல் 11-30

அதேபோல அந்த அணையிலே கான்கிரிட் தளமும் அமைக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் வலியுறுத்திக் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். மேலும் பாசனத்திற்கு தண்ணீர் திறக்கும் போதெல்லாம் பத்து பதினைந்து நாட்களுக்காவது ஒரு பொறியாளருடைய தலைமையிலே குழு ஒன்றை அமைத்து இரவு நேரங்களிலேயெல்லாம் அவர்கள் அங்கே ரோந்து வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏனென்று சொன்னால் சில சமூக விரோதிகள் எல்லாம் அந்த வாய்க்காலிலே உடைபபை ஏற்படுத்தி அவர்கள் சுயநலத்திற்காக அப்படியொரு சமூக விரோதச் செயல்களையெல்லாம் செய்கிறார்கள். அதேபோல அங்கே லஸ்கர் பணியாளர்கள் கூட நியமிக்கப்பட வேண்டும். நேற்று மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் அவர்கள் மானியக் கோரிக்கையிலே—லஸ்கர் பணியில் ஆட்களை அரசு நியமனம் செய்யும் என்று அறிவித்திருக்கிறார்கள். உள்ளபடியே இதை வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன். பாண்டியாறு—புன்னம்புழாத் திட்டத்தை நிறைவேற்றி அதிலே கீழ்பவானி அணைத் திட்டத்தை இணைக்க இந்த அரசை நான் வலியுறுத்திக் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். வெள்ளக்கோவில் தொகுதியில் பரம்பிக்குளம்-ஆழியாறு திட்டத்தின் மூலம் ஏறத்தாழ முப்பதாயிரம் ஏக்கருக்கு மேல் பயன் பெறுகிறது. அது நான்கு நிலைகளாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. இப்போது அந்த நான்கு நிலைகளில் இருக்கின்ற பல்லாயிரக்கணக்கான ஏக்கர் நிலங்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளன இன்றைக்கு அதிலே காற்றாலை தொழிற்சாலைகளுக்கும், அதேபோல திருப்பூர் போன்ற பகுதியிலே பனியன் தொழிற்சாலைகளுக்கும், தவிர வீடுகளுக்கெல்லாம் பிளாட் போட்டு விற்பனை செய்து விட்டார்கள். ஆகவே அதையெல்லாம் கணக்கிலே கழித்துவிட்டு நான்கு நிலையிலே பாயக் கூடிய அந்த நிலையை மூன்று நிலைகளாகக் குறைத்து விரைவிலே பாசனத்திற்குரிய



தண்ணீர் கிடைக்க அரசை வலியுறுத்திக் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பரம்பிக்குளம்—ஆழியாறு திட்டத்தினுடைய வாய்க்காலையும் கான்கிரிட் தளமாக அமைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதேபோல அமராவதி பாசனத் திட்டமும் தாராபுரம் நகராட்சி வழியாக என்னுடைய தொகுதியில் உள்ள விவசாயிகளுக்கு வந்து சேருகின்றது. அதிலே ஆக்கிரமிப்புகள் நிறைய இருக்கிறது. அந்த ஆக்கிரமிப்புகளை அகற்றிட வேண்டுமென்று வலியுறுத்தி கேட்டுக் கொள்கிறேன், அந்த வாய்க்காலுக்கும் கான்கிரிட் தளம் அமைக்க வலியுறுத்தி கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. கே. சுப்பராயன்) :** திரு. சுந்தரம், உங்கள் இருக்கைக்குப் போங்கள், உறுப்பினர் பேசிக் கொண்டிருக்கிறார்.

**திரு. மு. பெ. சாமிநாதன்:** உப்பாறு அணைத்திட்டத்தின் மூலம் சுமார் ஆறாயிரம் ஏக்கர் பயன் பெறுகிறது. அந்த உப்பாறு என்பது மிகமிக வறண்ட ஆறாக அமைந்துவிட்டது. அதனால் அந்த அணைக்குத் தண்ணீர் வருவதே மிகக் கடினமாக இருக்கிறது. நாடு முழுவதும் வெள்ளம் ஏற்பட்டால்தான் அந்த அணைக்கு ஏதோ ஒரு அளவிற்கு—பாதி அணையாவது நிரம்பும் என்ற அளவிலே அந்த அணை அமைந்திருக்கிறது. அதனால் பரம்பிக்குளம்-ஆழியாறு திட்டத்திலே நான்கு மண்டலத்திலும் தண்ணீர் விடும்போதெல்லாம் இந்த அணைக்கும் தண்ணீர் விடுகின்ற அளவிலே இந்த அரசு ஏற்பாடு செய்ய வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன்.

வட்டமலை நீர்த்தேக்கத் திட்டத்தை நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள் 1974-ஆம் ஆண்டு முதலமைச்சராக இருந்தபோது உருவாக்கினார்கள். ஆனால் இன்றுவரை மூன்று முறைதான் பாசனத்திற்காகத் தண்ணீர் திறந்துவிடப்பட்டிருக்கிறது. அந்த அளவுக்கு ஒரு வறண்ட ஆறாக அந்த வட்டமலை ஆறு அமைந்திருக்கிறது. இதன் காரணமாக இந்தத் திட்டத்தையும் பரம்பிக்குளம்-ஆழியாறு திட்டத்திலே இணைத்து எங்கள் தொகுதி மக்கள், விவசாயிகளுடைய குறைகளைப் போக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதேபோல், அமராவதி ஆறு வெள்ளக்கோவில் தொகுதி வழியாக கரூரை நோக்கிச் செல்கிறது. அங்கே புதிதாக ஒரு நீர்த்தேக்கத் திட்டத்தைக் கட்ட வேண்டும். மன்னர் திருமலை மாவட்டத்திலிருந்து நல்லதங்காள் ஓடை வெள்ளக்கோவில் தொகுதியில் வந்து அமராவதி ஆற்றிலே கலக்கின்றது. இடையிலே ஒரு

[திரு. மு. பெ. சாமிநாதன்] [1997 மார்ச் 25

அணையைக் கட்டி மூலனூர் போன்ற வறட்சிப் பகுதிகளை விவசாய நிலமாக ஆக்கிட உதவிட வேண்டுமென்று இந்த அரசை வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

வெள்ளக்கோவில் தொகுதி தொழிற் துறையில் பின்தங்கிய பகுதியாக இருக்கிறது. அதேபோல மூலனூர், மற்றும் தாராபுரம் வட்டங்களை அறிவிக்க வேண்டுமென்று இந்த அரசைக் கேட்டுக் கொண்டு, பெரம்பியம், வீரசோழவரம் போன்ற பகுதிகளில் இருக்கின்ற ஏரிகளை சுத்தம் செய்து தூர் வாரி அந்தப் பகுதியிலுள்ள விவசாயிகளுடைய குறைகளைப் போக்க வேண்டுமென்று கேட்டு இந்த மாமன்றத்தில் பேச வாய்ப்பளித்தமைக்கு எனது தொகுதி மக்களின் சார்பாக எனது நெஞ்சார்ந்த நன்றியைக் கூறிவிட்டு விடைபெறுகிறேன். நன்றி வணக்கம்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. கே. சுப்பராயன்):** திரு.சி.வேலாயுதன்.

முற்பகல் 11-35.

**திரு. சி. வேலாயுதன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவரவர்களே, 1996-97-ஆம் ஆண்டிற்கான இறுதித் துணை நிதிநிலை அறிக்கையின் மீது விவாதிப்பதற்காக வாய்ப்பு தந்தமைக்கு நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். தமிழகம் முழுவதும் உள்ள மக்களுடைய அடிப்படைத் தேவைகளை முதலில் பூர்த்தி செய்ய அரசு அதிக கவனம் கொடுத்து ஆவன செய்ய அன்போடு கேட்டுக் கொள்கிறேன் என்னுடைய பத்மநாபபுரம் தொகுதியைப் பொறுத்தமட்டில், அடிப்படை வசதியாகிய குடிதண்ணீர், மின்சாரம், சாலை வசதி இல்லாத பல ஊர்கள் இருக்கின்றன. ஆலூர் பஞ்சாயத்தில் கள்ளியங்காடு, பனவிளை ஆகிய இரண்டு பகுதிகளில் குடிதண்ணீர் இல்லாமல் பல ஆண்டுகளாக மக்கள் மிகுந்த அல்லலுற்று வருகிறார்கள். ஆனால் பனவிளையைப் பொறுத்தவரையில் இலங்கை அகதிகளுக்கு மலையடிவாரத்தில் அரசாங்கம் சுமார் முப்பது வீடுகளைக் கட்டிக் கொடுத்திருக்கிறது. அங்கு எந்தவிதமான அடிப்படை வசதியும் இல்லாமல் அந்த மக்கள் மிகவும் துன்புறுகிறார்கள். இதேபோன்று நுள்ளிவிளை டவுன் பஞ்சாயத்தில் உள்ள வடக்கு நுள்ளிவிளை என்ற ஊரில் குடிதண்ணீர் இல்லாமல் அந்த மக்கள் பல ஆண்டுகளாக ஒவ்வொரு கோடைக் காலத்திலும் பல கிலோமீட்டர் சென்று தண்ணீர் கொண்டு வருகின்றார்கள். இவைகளை அரசு கவனத்தில் கொள்ளுமாறு நான் கேட்டுக்கொள்கிறேன்.



1997 மார்ச் 25] [திரு. சி. வேலாயுதன்]

அதேபோல், கப்பியறை பஞ்சாயத்தில் அரிசன சமுதாயத்து மக்கள் அதிகமாக வாழ்கிறார்கள். மற்ற அனைத்து சமுதாயத்து மக்களும் ஓரளவிற்கு வாழக்கூடிய ஊர். அந்த ஊரில் உள்ளவர்கள் போக்குவரத்து வசதி இல்லாமல் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். ஒரு ஆளுக்கு நோய் ஏற்பட்டால் கூட, அவர்களைத் தூக்கிச் செல்ல வேண்டிய நிலை உள்ளது. போக்குவரத்து வசதி இல்லை; மின்சார வசதி இல்லை; குடிநீருக்கும் மிகவும் சிரமப்படுகிறார்கள். ஆகவே, இவற்றை அரசு கவனத்தில் கொண்டு ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

கன்னியாகுமரி மாவட்டத்தினுடைய மத்தியில் இருப்பது தக்கலை அரசு மருத்துவமனை. தேசிய நெடுஞ்சாலையோடு சேர்ந்து இருக்கிறது. அந்த அரசு மருத்துவமனை 103 வருடங்களுக்கு முன்னால் கட்டப்பட்டது. கேரள மன்னர்கள் காலத்தில் கட்டப்பட்ட சிறப்பு வாய்ந்த ஒரு மருத்துவமனை. அதனுடைய தலைமைக் கட்டிடம் கூட 103 ஆண்டுகளுக்கு முன்னால் கட்டப்பட்ட கட்டிடம்தான். அது மிகுந்த சேதத்திற்கு உள்ளாகியிருக்கிறது. எனவே, கடந்த வருடம் நிதி ஆண்டின் போது, அந்த மருத்துவமனையினுடைய அவசியங்களைப் பற்றி நான் சட்டமன்றத்திலே பேசியதினுடைய அடிப்படையில், அங்கு அதிகாரிகள் சென்று, என்னென்ன தேவைகள் என்பதைக் கணக்கிட்டு இருக்கிறார்கள். கட்டிட வசதி, படுக்கை வசதி போன்றவைகளைக் கணக்கிட்டு அரசுக்குப் பரிந்துரை செய்ததாக அறிகிறேன். அங்கே மிக விரைவாக இரண்டு கட்டிடங்கள் அவசரமாகப் போடப்பட்டுள்ளன. நம்முடைய மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள், 103-வது ஆண்டு துவக்க விழாவை அங்கு வந்து நடத்தித் தருவதுடன், அந்தக் கட்டிடங்களுக்கு அடிக்கலிட்டு, அந்தக் கட்டிடங்களுடைய பணி முடிவுற்றவுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களும்,—இரண்டு பேரும் வந்து—வந்து, அந்தக் கட்டிடங்களைத் திறந்து வைத்து, தேசிய நெடுஞ்சாலையின் நடுவில் இருக்கக்கூடிய, கன்னியாகுமரி மாவட்டத்தினுடைய மத்தியப் பகுதியில் இருக்கக்கூடிய அந்த மருத்துவமனைக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். இன்னொன்று, அங்கே ஏராளமாக இட வசதி இருக்கிறது. என்ன வேண்டுமானாலும் அங்கே செய்யலாம். அந்த அளவிற்கு இட வசதியும் அனைத்து வசதிகளும் உள்ள அந்த இடத்தை மேம்படுத்தித் தருமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோன்று புறம்போக்கு இடங்களில் வீடு கட்டி வாழக்கூடிய ஏழைகள் வேறு வழியில்லாமல் வாழ்கிறார்கள். அவர்களுடைய வீட்டோடு சேர்ந்து ரப்பர், தென்னை போன்று ஒருசில மரங்களையும் நட்டு, அதன் மூலமாக வரக்கூடிய ஆதாரங்களைக் கொண்டு வாழ்ந்து வருகிறார்கள். இரண்டு ஆண்டுகளுக்கு முன்னால் வரை ஒரு தென்னை மரத்திற்கு 8 ரூபாயாக இருந்தது. கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன்னால் 50 ரூபாயாக மாற்றப்பட்டுள்ளது. இது ஏழைகள் மீது அதிக அடி அடிக்கக் கூடிய சுமையாகும். எனவே, 8 ரூபாயாக இருந்ததை 10 ரூபாயாக ஆக்கினால் நல்லது. அதாவது தற்போது 50 ரூபாயாக வசூலிக்கக் கூடியதை 10 ரூபாயாக ஆக்கினால் மிக நன்மையாக இருக்கும் என்று கருதுகிறேன்.

அதேபோன்று சான்றிதழ்கள் வழங்கக்கூடிய நிலையில், இப்போது கல்வி ஆண்டு ஆரம்பமாக இருக்கிறது. கல்வி ஆண்டினுடைய ஆரம்பக் காலங்களில் மாணவர்கள் சான்றிதழ் வாங்குவதற்கு மிகவும் சிரமப்படுகிறார்கள். சில மாணவர்களுடைய படிப்பு வசதிகூட இதன்மூலம் பாதிக்கப்படுகிறது. எனவே, கல்வி ஆண்டினுடைய தொடக்கத்தில் ரெவின்யூ துறையில் பணியாற்றக்கூடியவர்களை அதிகமான அளவில், சான்றிதழ்களை வழங்குவதற்காக நியமித்து, அந்தச் சான்றிதழ்கள் வெகுவிரைவில் கிடைக்க ஆவன செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் ஜாதிச் சான்றிதழ். பல மாவட்டங்களில் ஜாதிச் சான்றிதழ் கிடைக்காத நிலை ஏற்படுகிறது. உதாரணமாக கன்னியாகுமரி மாவட்டத்தில் அதிகமாக வாழக்கூடிய ஒரு ஜாதியைச் சேர்ந்தவர்கள், சென்னையில் வாழும்போது, அவர்களுக்கு சென்னையில் ஜாதிச் சான்றிதழ் கிடைக்காது என்று சொல்கிறார்கள். கன்னியாகுமரி மாவட்டத்திற்குச் சென்று கேட்டால், நீங்கள் அங்குதானே வாழ்கிறீர்கள், இங்கே எப்படி வழங்க முடியும் என்று கூறுகிறார்கள். எனவே, இந்த ஜாதிச் சான்றிதழ்களைப் பொறுத்தவரையில், அவர்கள் எங்கே வாழ்ந்தாலும் அல்லது குறைந்தபட்சம் அவர்களுடைய சொந்த மாவட்டத்திலாவது - எங்காவது ஒரு இடத்தில் ஜாதிச் சான்றிதழ் அவர்களுக்குக் கிடைப்பதற்கான வசதியை அரசாங்கம் ஏற்படுத்தித் தருமாறு அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

1996-ஆம் ஆண்டு ஆரம்பத்தில் கன்னியாகுமரி மாவட்டத்திலும், கேரள மாநிலத்தினுடைய எல்லை ஆரம்பத்திலும் புயலால் விவசாயத்திற்கு அதிகமான அளவில் சேதம் ஏற்பட்டது. ஏராளமான வாழைகள் ஒடித்துத் தள்ளப்பட்டன. கன்னியாகுமரி மாவட்டத்தில் ஒரு வாழைக்கு



5 ரூபாய் வழங்கப்பட்டது. ஆனால் பக்கத்தில் உள்ள, தொடுகின்ற தூரத்தில் உள்ள கேரள மாநிலத்தில் 25 ரூபாய் கொடுக்கப்பட்டு இருக்கின்றது. சிறிய எல்லைக்கோடுதான் இடையிலே இருக்கின்றது. அதாவது பக்கத்தில் உள்ள ஒரு மாநிலத்தில் 25 ரூபாயும், நம் மாநிலத்தில் 5 ரூபாயும் கொடுக்கப்பட்டுள்ளது. எனவே, இதை ஓரளவிற்கு உயர்த்திக் கொடுக்க அரசாங்கம் ஆவன செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

1992-ஆம் ஆண்டு பெய்த பெருமழையின்போது, தோட்டியோடு பக்கத்தில் பி.பி. சேனலில் ஒரு பெரிய உடைப்பு ஏற்பட்டு, அந்த உடைப்பைக் கட்ட வேண்டும் என்று அரசு சார்பாக எஸ்டிமேட் எடுக்கச் சென்றவர்கள், அந்த அறிக்கையை அந்த எஸ்டிமேட்டினுடைய கணக்கை அறிவித்திருக்கிறார்கள். அது போதாது என்று சொல்லி, இது வரையில் கட்டப்படாமல் கிட்டத்தட்ட 5 ஆண்டுக் காலமாக அந்தப் பணியைச் செய்ய முடியாமல் உள்ளதால், விவசாயிகள் பெருந்துன்பம் அடைகிறார்கள். அதற்குக் கீழே வாழக்கூடிய பிற விவசாயிகளுக்கு தண்ணீர் கிடைக்காமல் அவர்களும் பெரும் அவஸ்தைப்படுகிறார்கள். மழை இல்லாத இந்த காலகட்டத்தில் மிகச் சிரமம் ஏற்பட்டு இருக்கிறது. எனவே, அரசு இதைக் கவனத்தில் கொண்டு, ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து ரேஷனில் வழங்கக்கூடிய அரிசி. கன்னியாகுமரி மாவட்டத்தில் விரநாராயண சேரி கடை நெம்பர் ஒய்-30 என்று நினைக்கிறேன். அங்கு கொடுக்கக்கூடிய பச்சரிசி, புழுங்கல் அரிசி, இரண்டு அரிசியும் உபயோகப் படுத்த முடியாத அளவிற்கு மிக மோசமான நிலையில் உள்ளது. உமி அளவுக்கு மீறியிருக்கிறது. அந்த பச்சரிசி மற்றும் புழுங்கல் அரிசினுடைய இரண்டு பாக்கெட்டுகளை நான் இங்கே கொண்டு வந்திருக்கிறேன். நாளை மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் வழங்கலாம் என்று கருதுகிறேன். ஆகவே, உடனடியாக அதிகாரிகள் அந்த இடத்திற்கு வந்து அந்த அரிசியை மாற்றி வேறு கொடுத்திருக்கிறார்கள். அது எப்படி வந்தது, எங்கிருந்து வாங்கினார்கள், எங்கே இந்தத் தவறு நடந்தது என்பதை எல்லாம் அரசாங்கம் கவனத்தில் கொண்டால், இனிமேல் வரக்கூடிய காலகட்டத்திலாவது, இதுபோன்ற தவறுகள் நடக்காமல் இருக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க முடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். நேற்று தக்கலை பக்கம் மூலச்சல் என்று சொல்லக்கூடிய இடத்தில் இரண்டு ரேஷன் கடைகளுக்குச் சென்றிருந்தேன். இரண்டு ரேஷன் கடைகளிலுமே அரிசி அளவு மிகக்

குறைவாக இருந்தது. ஒரு கடையில் 7 கிலோ வாங்கிய இடத்தில்கூட 250 கிராம் அரிசி குறைகின்றது. 7 கிலோவிற்கு 250 கிராம் குறைகின்றது. ஏன் இப்படி என்று கேட்டபோது எங்களுக்கு அரிசி தரும்போது மூட்டையில் குறைவாகத்தான் கொடுக்கப்படுகிறது. நாங்கள் என்ன செய்யமுடியும் என்று சொல்கின்றார்கள். எனவே இவைகளைப் போக்குவதற்கு ஏதாவது வழிகள் உண்டா? காரணம், ஏழை மக்களுடைய இந்தப் பிரச்சினைதான் ஒரு அரசின் பெரிய பிரச்சினையாக ஏற்படுகின்றது. எனவே எந்தவகையிலாவது, ஏதாவது அதற்கு ஒரு போக்குவழி கண்டு அனைத்து ரேஷன் கடைகளிலும் அரிசி குறையாமல் கொடுக்கப்பட அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11-40

**(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)**

அதேபோன்று நெடுஞ்சாலைத் துறையைப் பொறுத்தமட்டில், கன்னியாகுமரி மாவட்டத்தில் பல ஆண்டுகளாகப் பழுது செய்யப்படாத நெடுஞ்சாலைத் துறை ரோடுகள் இருக்கின்றன. பல ரோடுகளில் வாகனங்கள் செல்லமுடியாது. கடந்த ஒரு வாரத்திற்கு முன்னால் நான் ஒரு ஊருக்குச் சென்றிருந்தபோது, அந்த ஊரிலுள்ள பொதுமக்கள், தக்கோடு என்று சொல்லக்கூடிய ஊரிலுள்ள அந்தப் பொதுமக்கள் ஊர்க் கூட்டம் கூடி, ஊர் மக்கள் அனைவருமாகச் சேர்ந்து அந்த ரோட்டைச் செப்பனிடுகிறார்கள். பெரிய பெரிய பள்ளம். கல் சுமந்துகொண்டு ரோட்டில் போட்டு, மண்ணை நிரப்பி செய்து கொண்டிருக்கிறார்கள். ஏன் இவ்வளவு அவசரமாகச் செய்யவேண்டுமென்று கேட்டபோது ரோடு சரியில்லை என்று சொல்லி, பஸ் வராமல் போய்விடக்கூடாது. ஒரு பஸ்தான் எங்களது ஊருக்கு வருகின்றது. எனவே ரோடு சரியில்லாத காரணத்தால் பஸ் வராமல் போய்விடக் கூடாது என்று கருதி, அரசாங்கத்திலிருந்து எஸ்டிமேட் எடுத்து, அதற்குப் பணம் ஒதுக்கி வருவதற்கு நாளாகிவிடும். எனவே நாங்கள் செய்கின்றோம் என்று சொல்கின்றார்கள். எனவே இந்தப் பணிகளை அரசாங்கம் கவனித்தாலும் பணியாற்றுவதற்கு அதிகமாக காலதாமதம் ஏற்படுகின்றது என்று பரவலாகப் பேசப்படுகிறது. இந்தக் காலதாமதத்தைக் குறைக்க எந்தெந்த நடைமுறைகளைக் கையாள வேண்டுமென்பதையும் அரசு கவனத்தில் கொள்ள வேண்டும். எனவே அரசு தமிழகம் முழுவதிலுமுள்ள இடங்களுக்கு அடிப்படை வசதிகளைச் செய்து தருவதற்கு வெகு விரைவில் நடவடிக்கைகள் எடுத்துச் செயல்பட



வேண்டும். அதாவது போக்குவரத்து, மின்சாரம், குடிதண்ணீர் போன்றவற்றில் எந்த அளவிற்கு முடியுமோ, அந்த அளவிற்கு வேகமாகவே செயல்பட ஆவன செய்ய வேண்டுமென்று சொல்லி, வாய்ப்பிற்கு நன்றிகூறி, அமைகின்றேன்.

"வாழிய செந்தமிழ் வாழ்க நற்றமிழர்
வாழிய பாரத மணித் திருநாடு,
வந்தே மாதரம்"

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி கோமதி சீனிவாசன்.

* **திருமதி கோமதி சீனிவாசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1996-97-ஆம் ஆண்டிற்கான இறுதித் துணை மதிப்பீட்டு விவாதத்தில் கலந்து கொண்டு, என்னுடைய கருத்துக்களை எடுத்துக் கூற வாய்ப்பு தந்த மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கும் முதலில் என்னுடைய நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த இறுதித் துணை மதிப்பீட்டைப் பார்க்கும்போது, நீதியான, நேர்மையான ஆட்சியைத் தருபவர் தமிழ் இனத் தலைவர், தமிழக முதல்வர், டாக்டர் கலைஞர் அவர்கள்தான் என்பதை நிலைநிறுத்திக் கொண்டிருக்கிறார். இந்த இறுதித் துணை மதிப்பீட்டில் மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்கின்ற வகையில் திட்ட நலன் முன்னேற்றத்திற்காக கூடுதல் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. அந்த வகையில் 'செயற்கரிய செய்வார் பெரியர்' என்பதற்கேற்ப இதுநாள் வரையில் நடைபெறாமல் இருந்த உள்ளாட்சிமன்றத் தேர்தல்களை வெற்றிகரமாக நடத்திய வகையில் கூடுதல் செலவிற்காக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

அதைப் போல காவல் துறையை எடுத்துக்கொண்டால், காவல் துறை நாட்டின் கண் போன்றது என்பதை நன்கு உணர்ந்த நமது தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் காவல் துறைக்காக ஊர்திகள் வாங்கவும், வேகமாகச் சென்று அமைதியை நிலைநாட்ட விரைவுப் படை அமைக்கவும், கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்துள்ளார்.

அதைப்போல பள்ளிக்கூடம் செல்லும் மாணவர்களுக்கு இலவச பயணச் சீட்டு பெறும் வகையிலும், பாடப் புத்தகம் வாங்கவும், அறிவொளித் திட்டம் சிறப்பாகச் செயல்படவும் கூடுதல் நிதியை நமது முதல்வர் அவர்கள் வழங்கியிருக்கின்றார்கள். இந்த இலவச பயணச்

சீட்டு கிராமங்களில் வாழ்கின்ற மாணவர்களுக்குப் பெரிதும் பயன்படுகின்றது. எத்தனையோ குழந்தைகள் ஐந்து கிலோ மீட்டர், 6 கிலோ மீட்டர் வரையில்கூட உயர்நிலைப் பள்ளிக்குச் செல்லமுடியாத வகையில், அவர்களுடைய கல்வி தடைபடுகின்ற ஒரு சூழ்நிலை ஏற்படுகின்றபோது கூட, இந்த இலவச பயணச் சீட்டின் மூலமாகத் தொடர்ந்து அவர்கள் மறுபடியும் படிக்கின்ற சூழ்நிலை உருவாகின்றது. இதற்காக நாமே நமது தமிழக முதல்வர் அவர்களைப் பாராட்டிக் கொண்டிருக்கின்றது என்பதை இங்கே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டு இருக்கின்றேன். அதோடு மட்டுமல்லாமல், வறுமைக் கோட்டிற்குக் கீழே இருக்கின்ற மக்களுக்கு உண்ண உணவும், உடுக்க உடையும், ஏழையெளிய மக்கள் குடியிருக்க வீடும், ஜாதி, மத, இன வேறுபாடின்றி அனைவரும் இவற்றைப் பெற ஏற்பாடு செய்து கொடுக்கும் எண்ணத்தால்தான் நம்முடைய தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் கூடுதல் நிதியை ஒதுக்கியுள்ளார்கள் என்பதை இங்கே கூறக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

முற்பகல் 11-45

அதேபோல, கிராமப்புறத்தில் இருக்கின்ற மக்கள் நகர்ப்புறத்திற்குச் சென்று அங்கிருக்கின்ற தேவைகளைத் தாங்கள் பூர்த்தி செய்துக்கொள்கின்ற வகையில், சீரான பேருந்துப் போக்குவரத்தையும், சாலைகளையும், பாலங்களையும் சீரமைப்பதற்காக அதிகபட்ச கூடுதல் நிதியை ஒதுக்கீடு செய்திருக்கின்றார்கள். இயற்கைச் சீற்றத்தால் ஏற்படும் கேடுகளை நிவர்த்தி செய்யவும், நம்முடைய தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள், பெரும் முயற்சி எடுத்து மக்களுடைய குறைகளை நீக்க முயற்சி செய்து கொண்டு இருக்கின்றார்கள் என்பதையும் இங்கே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதோடு மட்டுமல்ல, தமிழ்நாடு முழுவதற்கும் குடிநீர் கண்டிப்பாகக் கிடைத்தே ஆகவேண்டும் என்ற உணர்வை நம்முடைய தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் பிரதிபலித்துக் கொண்டிருக்கின்றார்கள். குடிசைகளை மேம்படுத்தியிருக்கின்றார்கள். நான் ஒரு கோரிக்கையை நம்முடைய அன்புத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களுக்குச் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். காலனி வீடுகள் எல்லாம் பழுதடைந்த சூழ்நிலையில் இருக்கின்றன. இந்த வீடுகளையெல்லாம் பழுதுபார்க்கின்ற வகையில் இதற்கும் கூடுதல் நிதியை நமது மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் தாயுள்ளத்தோடு கொடுக்க வேண்டும் என்பதையும் நான் இங்கே குறிப்பிட விரும்புகின்றேன்.



அதோடு மட்டும்ல்ல, என்னுடைய வலங்கைமான் தொகுதி, ஏ.டி. பன்னீர்செல்வம் மாவட்டத்தோடு இணைக்கப்பட்டதால், அங்கிருக்கின்ற மக்கள் ஏ.டி. பன்னீர்செல்வம் மாவட்டத்தின் தலைநகரான திருவாரூருக்குச் சென்று வர மிகவும் துன்பப்பட்டுக் கொண்டிருக்கின்றார்கள். அந்த மக்கள் திருவாரூருக்கு நேரடியாகச் சென்று வர, நேரடியான பேருந்தை ஏற்பாடு செய்து தரவேண்டும் என்பதையும் மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதேபோல், வலங்கைமான் தொகுதியில் கோட்டாட்சியர் அலுவலகம் ஒன்றையும், கோட்ட வளர்ச்சி அலுவலகம் ஒன்றையும், துணை நீதிமன்றம் ஒன்றையும், தீயணைப்பு நிலையம் ஒன்றையும் அமைத்துக் கொடுக்க வேண்டுமென்று மிகவும் பணிவன்புடன் கூறிக்கொள்ளக் கடமைப்பட்டு இருக்கின்றேன். அதேபோல், மாண்புமிகு தமிழினத் தலைவர், அன்புத் தலைவர், டாக்டர் கலைஞர் அவர்கள் ஏற்கெனவே வலங்கைமான் தொகுதிக்கு ஒரு சர்க்கரைத் தொழிற்சாலை அமைத்துத் தருவோம் என்று கூறியிருக்கின்றார்கள். அந்தச் சர்க்கரைத் தொழிற்சாலையை மிக விரைவில் செயல்படுத்த ஆவன செய்யுமாறு மாண்புமிகு முதல்வர் அவர்களைக் கேட்டுக்கொள்கின்றேன்.

அதோடு மட்டுமல்லாமல், அம்மாப்பேட்டை ஒன்றியத்தில் குடந்தையிலிருந்து தஞ்சைக்குச் செல்வதற்கு `By-pass route-'ன் குறுக்கே ஒரு பாலம் கட்டித்தர வேண்டும் என்பதையும் குறிப்பிடக் கடமைப்பட்டிருக்கின்றேன். வெண்ணாற்றின் குறுக்கே ஒரு பாலம் பல இலட்சம் ரூபாய் செலவில் கட்டத்தரப்படும், சாலைகள் மேம்படுத்தப்படாததால், வெண்ணாற்றின் குறுக்கேயும் பாலம் கட்டப்படாததால், குடந்தையிலிருந்து தஞ்சைக்குச் செல்வதற்கான `By-pass route'— டே தடைப்பட்டு இருக்கின்றது. ஆகவே, நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் வெண்ணாற்றின் குறுக்கே, அதாவது வெண்குடி, கலக்குடிக்கு அருகே ஒரு பாலம் கட்டிக்கொடுக்குமாறு மிகவும் பணிவன்புடன் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதேபோல், என்னுடைய வலங்கைமான் தொகுதியில் கோவிந்தக்குடி என்னும் கிராமத்தில், சிறுபான்மையினரான முஸ்லீம் மக்கள் நிறைந்த அந்தப் பகுதியில், அந்த மக்கள் குடியிருப்பதற்கு வசதி இல்லாமல் மிகவும் துன்பப்பட்டுக் கொண்டிருக்கின்றார்கள். அவர்கள் அக்கரைக்குச்

[திருமதி கோமதி சீனிவாசன்] [1997 மார்ச் 25

சென்று குடியிருக்க வேண்டும் என்றாலும், அவ்வாறு குடியிருப்பதற்கு அதிகமான இடம் இருந்தாலும்கூட, ஆற்றைக் கடந்து செல்வதற்கு பாலம் இல்லாததால், அக்கரைக்குச் சென்று குடியிருக்க முடியாமல் இருக்கின்றார்கள். ஆகவே, கோவிந்தக்குடியில் கள்ளாற்றின் குறுக்கே ஒரு பாலம் அமைத்துக் கொடுக்குமாறு மிகவும் பணிவன்புடன் கூறிக்கொண்டு, எனக்கு வாய்ப்புத் தந்தமைக்கு நன்றி கூறி விடைபெறுகின்றேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அ.வ. அப்துல் நாசர், 7 நிமிடங்களுக்குள் பேசி முடிக்க வேண்டும்.

முற்பகல் 11-50

**திரு. அ. வ. அப்துல் நாசர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த இறுதித் துணை நிதிநிலை அறிக்கை மீதான விவாதத்தில் கலந்து கொள்வதற்கு எனக்கு வாய்ப்பினைத் தந்ததற்கு தங்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

எனது புவனகிரி தொகுதியில் புவனகிரி ஒன்றியத்தில் இருக்கக்கூடிய கற்றாழை ஏரியைச் செப்பனிட்டு அந்தப் பகுதி விவசாய மக்களுக்கு பயன்தரும் வகையிலே நெய்வேலி நீரைத் திருப்பிவிட வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல மதுவானம்மேடு கிராமத்தில் நெய்வேலி நிலக்கரிச் சுரங்கத்திலிருந்து வெளிவரக்கூடிய நீர் அந்த ஆற்றிலிருந்து வெளியேறி பல்லாயிரக்கணக்கான விளை நிலங்கள் எல்லாம் பாழ்பட்டு உள்ளது. நெல் பயிரிட வேண்டிய அந்த நிலத்தில் எல்லாம் இன்றைக்கு சம்பு மற்றும் கோரைப்புல் வளர்ந்து காடுபோல் காட்சியளிக்கின்றது. எனவே அவற்றையெல்லாம் செப்பனிட்டு அந்த நெய்வேலி நீரை முறையாக கற்றாழை ஏரிக்கே திருப்பிவிட்டு அதன்மூலம் விவசாயிகள் பயன்பெறும் வகையிலே செய்ய வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல பரங்கிப்பேட்டை ஒன்றியம் தம்பிக்கு நல்லான்பட்டணம் அருகில் இருக்கக்கூடிய ஆதிவராகநல்லூர் தெற்குப் பகுதி பாசனத்திற்கு பயன்படும் குழாய்களை மாற்றி இப்போது இருக்கக்கூடிய ஒரு அடி குழாய்களை 2 அடி அல்லது 3 அடிக் குழாய்களாக மாற்றி அந்தப்



1997 மார்ச் 25] [திரு. அ. வ. அப்துல் நாசர்]

பகுதி விவசாயம் செழித்தோங்க இந்த அரசு வழிவகை செய்ய வேண்டுமென்று இந்த நல்ல நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல காட்டுமன்னார்கோயில் ஒன்றியம் ஆயங்குடியிலிருந்து தொட்டி மதகிலிருந்து வரக்கூடிய வடிவாய்க்கால் தூர்ந்துபோய் உள்ளது. அதை அகலப்படுத்தி, ஆழப்படுத்தி அந்தப் பகுதி விவசாயப் பெருமக்களுக்கு வெள்ள நேரத்திலே பாதுகாப்பு அளிக்க வேண்டுமாய் இந்த நல்ல நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு வேலை வாய்ப்பகங்களில் கோட்டா அடிப்படையிலும் டி.என்.பி.எஸ்ஸி மற்றும் எஸ்.எஸ்.சி. மற்றும் பி.எஸ்.ஆர்.பி. மற்றும் ஆர்.ஆர். போன்ற நிறுவனங்களால் நேரடியாகத் தேர்வுக்கு அழைக்கப்பட்டு தேர்ந்தெடுக்கப்பட்ட பிறகு அவர்களது பெயர்கள் எல்லாம், தேர்ந்தெடுக்கப்பட்ட பின்னரும் வேலைவாய்ப்பகங்களில் நீண்ட நெடுங்காலமாக நீக்கப்படாமல் உள்ளது. இதனால் வேலைவாய்ப்பகங்களில் காத்திருப்போர் பட்டியல் அதிகரித்துக்கொண்டே போகிறது. எனவே அப்படி டி.என்.பி.எஸ்ஸி. மற்றும் இந்த நிறுவனங்களின் தேர்வுக்கு நேரடியாக விளம்பரம் செய்து அழைக்காமல், வேலைவாய்ப்பகங்கள் மூலமாக அழைத்து அதன்மூலம் தேர்வு செய்யப்பட்டால் இன்னும் நமது அரசுக்கு செலவும் குறையும். வேலைவாய்ப்பகங்களின்மீது நம்பிக்கை வைத்திருக்கக்கூடிய இளைஞர்களுக்கு அந்த நம்பிக்கையை ஏற்படுத்தக்கூடிய வகையிலே அந்த வாய்ப்பு அமையும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல தமிழ்நாடு மின்மரச் செக்கு எண்ணெய் உற்பத்தியாளர்கள் சங்கம் நீண்ட நாட்களாக தமிழக அரசிடம் ஒரு கோரிக்கை வைத்துக்கொண்டிருக்கிறது. 1989-90 வரை அமலில் இருந்த அரசு ஆணை எண் 272,2522 மற்றும் 1237 இவைகளை மீண்டும் அமல்படுத்தக்கோரி வருகின்றனர். இந்த மின்மரச் செக்கு எண்ணெய் உற்பத்தியாளர்கள் மிகவும் சிரமப்பட்டு உழைத்தாலும் ஒரு நாளைக்கு ஒரு மூட்டை எண்ணெய் வித்திலிருந்து எண்ணெய் உற்பத்தி செய்ய முடியும். எனவே அப்படி கஷ்ட ஜீவனத்தில் இருக்கககூடிய அவர்களுக்கு கடந்த அ.இ.அ.தி.மு.க. அரசு, அவர்களுக்கிருந்த வரிச் சலுகையை ரத்து செய்துவிட்டதனால் அவர்கள் வாழ்க்கைச் சுமையோடு வரிச்சுமையும் சேர்ந்து இன்றைக்கு மிகவும் கஷ்டப்படுகிறார்கள். எனவே அரசு முன்னால் இருந்ததுபோல் - 1989-90-ல் இருந்தது போல்—அந்த மின்மரச்செக்கு எண்ணெய் உற்பத்தியாளர்களுக்குச் சலுகை அளிக்க வேண்டும்.

அவர்களுக்கு அந்த வருஷம் முழுவதும் 365 மூட்டை எண்ணெய் வித்துக்களை பயன்படுத்திக்கொள்வதற்கு எந்தவிதமான கொள்முதல் மற்றும் விற்பனை வரி இல்லாமல் அனுமதிக்க வேண்டும் என்று இந்த நல்ல நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல காட்டுமன்னார்குடி ஒன்றியம் பகுதியிலே தந்தைப் பெரியார் போக்குவரத்துக் கழகம் டெப்போ ஒன்று அமைக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு இந்த நல்ல வாய்ப்பினை எனக்குத் தந்த தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேசுகின்ற உறுப்பினர்கள் அவரவர்கள் இருக்கைகளிலே இருக்கவேண்டும். திரு. பி. ஆர். சுந்தரம்.

**திரு. எஸ். திருநாவுக்கரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் பெயரைக் கொடுத்திருக்கிறார். நீங்கள், நான் பேசுகிறேன் என்கிறீர்கள். சரி, நீங்கள் கட்சித் தலைவர் என்கிற முறையில் பேச வேண்டும் என்றால் சுருக்கமாகப் பேசுங்கள்.

**திரு. எஸ். திருநாவுக்கரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1996-97-ஆம் ஆண்டு கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் அதிலே துணை மதிப்பீடுகள் ஆகியவற்றின் பேரிலே சில கருத்துக்களைச் சொல்கிற வாய்ப்பு தந்தமைக்கு அனைந்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

முற்பகல் 11-55

பொதுவாக ஒவ்வொரு ஆண்டு பட்ஜெட்டுக்குப் பிறகும் அந்த ஆண்டில் கூடுதல் செலவினங்கள் ஆகிறபோது அரசியல் சட்டத்தின் 205-வது பிரிவின்கீழ் எந்தெந்த இனங்களுக்கு அதிகமாகக் கூடுதல் செலவு ஆகியது என்பது எல்லாம் சட்டமன்றத்தில் வைக்கப்பட வேண்டிய சம்பிரதாய முறைகளின்படி இன்றைக்கு இந்த விவாதம் இங்கே வந்திருக்கிறது. இதிலே எதிர்பாராத செலவு நிதியிலிருந்து ஏறக்குறைய 110 கோடி ரூபாய் அளவுக்கு முன் பணமாக அனுமதிக்கப்பட்டுள்ளது. மொத்தத்திலே வருவாய்க் கணக்கிலே சுமார் 1163.43 கோடி ரூபாயும், மூலதனக் கடன் கணக்குகளிலே ஏறக்குறைய 678.54 கோடி ரூபாயும் அதிகமாகச் செலவிடப்பட்டுள்ளது. பொதுவாக ஒரு குடும்பத்திலே பட்ஜெட் போட்டால்கூட அந்த ஆண்டினுடைய வருமானத்திற்கு





உட்பட்டுத்தான் செலவினங்கள் இருக்க வேண்டும். செலவு அதிகமானால்கூட ஓரளவுக்குத்தான் இருக்க வேண்டும். இந்தக் கூடுதல் செலவினமே ஒரு பட்ஜெட் அளவுக்கு ஏறக்குறைய 2000 கோடி ரூபாய் அளவுக்குக் கூடுதலாக வருவது என்பது சரியான பட்ஜெட் முறை அல்ல.

இரண்டாவது இதிலே சில இனங்கள் — உதாரணமாக இயற்கைச் சீற்றத்தால் ஏற்படுகிற பிரச்சினைகள் என்று எதிர்பாராத செலவினங்கள் என்று வருவது என்பது வேறு. ஆனால் சாதாரணமாக அரசாங்கம் கட்ட வேண்டிய வட்டியைக் கூட அந்தந்த ஆண்டு பட்ஜெட் கணக்கிலே கொண்டு வராமல் அதை எதிர்பாராத செலவாக, கூடுதல் செலவினத்திலே கொண்டு வருவது வேண்டும் என்றே பட்ஜெட் போடுகிறபோது அந்த ஆண்டு டெபிசிட்டை, பற்றாக்குறையைக் குறைப்பதற்காக மறைத்துப் போடப்படுகிற பட்ஜெட் என்றுதான் சொல்லவேண்டும். அதுவும் இந்த அணுகுமுறை இந்த ஆட்சியில் மட்டும் அல்ல, யார் பட்ஜெட் போட்டாலும் இதுபோன்ற நடைமுறைகள் பொதுவாகக் கடைபிடிக்கப்படுவது ஒரு சரியான மரபு அல்ல என்பது என்னுடைய அபிப்பிராயம் ஆகும்.

இதிலே பலவற்றிலே நீங்கள் பார்த்தால் ஒவ்வொரு பிரிவு வாரியாக சம்பளம் என்று எடுத்துக்கொண்டால் சில பிரிவுக்கு ஒட்டு மொத்தமாக சம்பளம் 5 லட்சம் ரூபாய் என்று இருக்கும். பயணச் செலவு 3 லட்ச ரூபாய் என்று இருக்கும். கட்டிடம் புதுப்பித்தல் 2 லட்ச ரூபாய் என்று இருக்கும். நான் புள்ளிவிவரங்களை வரிசையாகச் சொல்ல முடியும், நேரம் கருதி சுருக்கமாகச் சொல்கிறேன். இதிலே அலுவலகச் செலவுகள் என்று சொல்லி சில நேரத்திலே சம்பளத்தைவிட அலுவலகச் செலவு கூடுதலாக வருகிறது பல இனங்களிலே — ஆபீஸ் எக்ஸ்பென்சஸ் என்று சொல்லுகிற அந்த அலுவலகச் செலவு என்கிற அந்தத் தலைப்பின் கீழே, இந்த அலுவலகச் செலவுகளைக் கட்டுப்படுத்தினால் சிக்கனமாகச் செலவு செய்யப்பட்டால் இதிலே பல கோடி ரூபாயை மிச்சப்படுத்தக்கூடிய வாய்ப்பு அரசாங்கத்திற்கு இருக்கும். எனவே, இதிலே அரசு கவனம் செலுத்த வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். மற்றபடி ரொட்டீனாகக் கொடுப்பதுதான். இது ஆண்டு, ஆண்டு வைக்கிற ஒரு சப்ளிமெண்டரி பட்ஜெட் மாதிரி வருடாவருடம் வைக்கிற ஒவ்வொரு புள்ளிவிவரத்தையும் தந்து இருக்கிறார்கள். நான் அதற்குள்ளே சென்று என்னுடைய நேரத்தைச் செலவிட விரும்பவில்லை. சென்ற தடவை பட்ஜெட் உரையில் பேசுகிற

போது என்னுடைய தொகுதியைப் பற்றி அதிகமாகப் பேச முடியவில்லை. 50, 52 நிமிடங்கள் பேசினாலும் பொதுவான பிரச்சினைகளைப்பற்றித் தான் பேச முடிந்தது. எனவே, சில தொகுதிப் பிரச்சினைகளையும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கும், அரசினுடைய கவனத்திற்கும் 4 தடவை, மீண்டும் மீண்டும் எனக்கு வாக்களித்துக் கொண்டிருக்கிற அந்த மக்களுக்காக சில கோரிக்கைகளை வைக்க வேண்டியது என்னுடைய கடமையாகும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அவற்றைக் கனிவோடு பரிசீலிப்பார்கள் என்று நான் மனப்பூர்வமாக நம்புகிறேன், எதிர்பார்க்கிறேன்.

முதலில் நீண்ட காலப் பிரச்சினையாக இருக்கிற சர்க்கரை ஆலை. சென்ற ஆண்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இங்கே சர்க்கரை ஆலை தொடங்கப்படும், அறந்தாங்கி தொகுதியிலே, அதுதான் முக்கியமானது, சபைக் குறிப்பிலேயே 'இடம் பெறுகின்ற விதத்திலே பட்ஜெட் உரையிலேயே அறந்தாங்கி தொகுதியிலே வரும் என்று அறிவித்தார்கள். அப்போதே நான் அதற்கு நன்றி சொன்னேன். இந்த ஆண்டு அந்தச் சர்க்கரை ஆலையை, பணியைத் தொடங்குகின்ற விதத்திலே, பணியைத் தொடங்க வேண்டுமென மாண்புமிகு முதலமைச்சரவர்களை நான் கேட்டுக் கொள்கிறேன்.

நண்பகல் 12-00

அடுத்து மூடிக் கிடக்கின்ற கூட்டுறவு நூற்பாலைகள். அறந்தாங்கியிலே கூட்டுறவு நூற்பாலை ஐந்தாறு ஆண்டுகள்தான் செயல்பட்டது. இடையிலே நிறுத்தப்பட்டு விட்டது. அதிலே எம்.டி.யாக இருந்தவர், ஒரு மில்லே கட்டிக்கொண்டு போய்விட்டார்; அரசு அதிகாரியாக இருந்த ஒரு நிர்வாக இயக்குனர் ஆந்திரா பக்கத்திலே ஒரு புது மில் கட்டிக் கொண்டு போய்விட்டார். எனவே, அவருடைய நிர்வாகச் சீர்கேட்டால் அந்தப் புதிய ஆலை முடக்கப்பட்டுக் கிடக்கிறது. ஏறக்குறைய 700 பேர்களுக்கு மேலே அந்த ஆலையிலே பணியாற்றுகிற ஏழைத் தொழிலாளர்கள் தினம் தினம் வாழ்வுக்குப் போராடுகிற, வறுமையிலே வாடுகிற சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. அந்த 700 பேர் குடும்பத்தையும் காக்கின்றவிதத்திலே - எல்லாச் சங்கங்களும் இருக்கின்றன. அதிலே அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் இருக்கிறது, திராவிட முன்னேற்றக் கழகம் இருக்கிறது, கம்யூனிஸ்ட் இருக்கிறது, காங்கிரஸ் இருக்கிறது. த.மா.கா. இருக்கிறது, எல்லாக் கட்சித் தோழர்களும் இருக்கிறார்கள்; சங்கங்களும் இருக்கின்றன. எனவே, அரசு அந்த ஆலையைத் திறக்க முன் வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.





விசைத்தறிக் கூடங்கள் என்று சொல்லி, நம்முடைய சகோதரர்கள் ஆலங்குடி தொகுதியினுடைய சட்டமன்ற உறுப்பினர் திரு. வெங்கடாசலம்கூட இங்கே சொன்னார். அவருடைய தொகுதியிலே திருநாவலூரிலேயும், அதுபோல அறந்தாங்கி தொகுதியிலே பேராணூர் என்கிற இடத்திலேயும் 2 விசைத்தறிக் கூடங்கள் தொடங்கி ஏறக்குறைய 150-ம் 150-ம் 300 பேர் வேலை பார்த்துக் கொண்டிருந்தார்கள். இப்பொழுது அதுவும் மூடிக்கிடக்கிறது. அதிலேயிருந்த இயந்திரங்களையெல்லாம் இப்பொழுது எடுத்துக் கொண்டு போகிறார்கள் என்று அங்கிருந்து தகவல் சொல்லப்படுகிறது. எனவே, அவற்றையும் தொடங்க முன் வர வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

புரட்சித் தலைவர் முதலமைச்சராக இருந்தபொழுது அறந்தாங்கி தொகுதியிலே மணமேல்குடி என்கிற அந்தப் பகுதியைத் தனியாகப் பிரித்து ஒரு ஊராட்சி ஒன்றியத்தைப் புதிதாக உருவாக்கினோம். நீண்ட கடலோரப் பகுதி; ஏறக்குறைய 70 கிலோ மீட்டர் கடலோரப் பகுதியை உள்ளிட்டிருக்கிற அந்தப் பகுதியில் தனித் தாலுக்கா இருந்தால் அந்தப் பகுதி மக்களுக்கு அது வசதியாக இருக்கும். எனவே, அறந்தாங்கி தாலுக்காவிலிருந்து ஒரு பகுதி, ஆவுடையார் தாலுக்காவிலிருந்து ஒரு பகுதியைப் பிரித்து மணமேல்குடியைத் தனித் தாலுக்காவாக ஆக்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சரவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். இந்த அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

சில உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாக ஆக்கவேண்டுமென்று, ஒரு இலட்சம் ரூபாய் பணம் கட்டியிருக்கிறார்கள். குறிப்பாக, ஏம்பல், அமரடக்கி, அதுபோல, மணமேல்குடியிலே பெண்கள் உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக்க வேண்டுமென்று கேட்டு இருக்கிறார்கள். அம்மாதிரி நாகூடியிலே கேட்டிருக்கிறார்கள். அதுமாதிரி, மணமேல்குடியிலே பக்கத்திலே இருக்கிற அம்மாபட்டினத்திலே ஒரு நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக மாற்ற வேண்டும் என்று கேட்டிருக்கிறார்கள். நான் பிறந்த ஊர் தீயத்தூர் என்கிற ஊர். அதிலே 5-ஆம் வகுப்பு வரை இருக்கிறது. அதை 8-ஆம் வகுப்பு வரை நடுநிலைப்பள்ளியாக உயர்த்தித் தரவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

இப்படி, இந்தத் தொகுதியிலே செய்ய வேண்டிய சில பணிகளைச் செய்து தர வேண்டுமென்று இந்த அரசை நான் கேட்டுக் கொள்கிறேன்.

மற்றபடி, பொதுவான பிரச்சினைகள் என்று எடுத்துக்கொண்டால், தமிழகத்திலே இப்பொழுது நுழைவுத் தேர்வுகள் - என்ட்ரன்ஸ் எக்சாம் - நடக்கப் போகிறது. இட ஒதுக்கீட்டுப் பிரச்சினை மிக முக்கியமான பிரச்சினை. உங்களோடு கூட்டணிக் கட்சியாக இருக்கிற பாட்டாளி மக்கள் கட்சி கூட இன்றைக்குப் போராட்டம் நடத்துகிறது. ஆகவே, இதிலே சென்ற ஆண்டு உச்ச நீதி மன்றத்திலே, உயர் நீதி மன்றத்திலே தீர்ப்பாகிய அடிப்படையிலே 50 சதவீதம்தான் அமல்படுத்தப்பட்டது. 69 சதவீத இட ஒதுக்கீட்டை இந்த ஆண்டு பின்தங்கிய, மிகப் பின்தங்கிய, ஆதிதிராவிட மக்கள் பலன் அடைகிற விதத்திலே அமல்படுத்துவதற்கு உரிய நடவடிக்கைகளை உயர் நீதிமன்ற அல்லது நீதிமன்ற அளவிலேயும் சரி அல்லது நாடாளுமன்றத்திலே அதற்கான முறையான சட்டத்தை மீண்டும், சில மாநிலங்களிலே இருப்பதைப் போல, அந்தந்த மாநிலத்தில் இருக்கிற பின்தங்கிய, மிகப் பின்தங்கிய, ஆதிதிராவிட மக்களுடைய எண்ணிக்கைக்கேற்ப இட ஒதுக்கீட்டை அதிகரித்துக் கொள்ளலாம் என்று சில வட மாநிலங்களிலே இருப்பதைப் போல அதற்கான உரிய அரசியல் சட்டத் திருத்தத்தைக் கொண்டு வர இந்த அரசு முயற்சி எடுக்க வேண்டுமென்று நான் இந்த அரசைக் கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால், இது மிக முக்கியமான பிரச்சினையாகும். உயர்நீதிமன்றத்தை, அல்லது நீதிமன்றத்தினுடைய தீர்ப்புக்களையே நாம் காரணமாகக் காட்டுவதால், இன்றைக்குப் பின்தங்கிய மக்கள், மிகப் பின்தங்கிய, ஆதிதிராவிட மக்கள் இதனாலே பாதிக்கப்படுகிறார்கள். எனவே, இட ஒதுக்கீட்டுப் பிரச்சினையிலே தீர்வு காண முற்பட வேண்டுமென்று நான் இந்த அரசை இந்த நேரத்திலே வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12-05*

அதுபோல பல்வேறு விதமான கோரிக்கைகள். நம்முடைய கல்வி அமைச்சர் அவர்கள் இங்கே இருக்கிறார்கள். அன்றைக்கு நாங்கள் வெளிநடப்பு செய்த காரணத்தினாலே உரையாற்ற முடியவில்லை. உதாரணத்திற்கு அவர்களுடைய கவனத்திற்கும், முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கும் நான் சொல்ல விரும்புவது. ஏறத்தாழ 25 ஆயிரம் பேர் ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளிலே படித்துவிட்டு இன்றைக்குக் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அந்த மாணவர்களுடைய எதிர்காலம் இருட்டாக இருக்கிறது. அவர்களுக்கு உதவுகிற விதத்திலே ஒரு தீர்வு காண இந்த அரசு முன்வர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். நீதிமன்றத்திலே இதற்குத் தடையிருக்கிறது. இதை எப்படிச் செய்யலாம் என்றால், இதுபோல ஆந்திராவிலே





தடையிருந்தபோது, ஆந்திராவிலே என்ன செய்தார்கள் என்று சொன்னால், எல்லோரையும் அழைத்து ஒரு பொதுத் தேர்வு நடத்தி, எக்சாம் ஒன்று புதியதாக நடத்தி, அந்தத் தேர்வு மூலமாக ஏற்கெனவே இப்படி பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு ஆந்திராவிலே தீர்வு கண்டிருக்கிறார்கள். ஆகவே, அதுபோல இங்கேயிருக்கிற 25 ஆயிரம் மாணவர்களுக்கும், ஆந்திர மாநிலத்திலே என்ன செய்திருக்கிறது அரசு என்று பார்த்து, அந்த வழியிலே பாதிக்கப்பட்டிருப்பவர்களுக்கு உதவ வேண்டும். ஏறக்குறைய 25 ஆயிரம் பேர் அவர்கள். எந்தத் தவறும் அவர்கள் செய்யவில்லை. பள்ளி நடத்தியவர்கள், நடத்துகிற முறைகளிலே சில தவறுகள் இருந்திருக்கலாம். எனவே, அவர்கள் வயதாகி, இனிமேல் படிக்கவும் முடியாது, வேலைக்குப் போகவும் முடியாத சூழ்நிலையிருக்கிறது. எனவே, இவர்களைக் காக்கிற விதத்திலே உரிய நடவடிக்கைகளை இந்த அரசு எடுக்க வேண்டுமென்று நான் வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோல, வனத் துறையிலே பணியாற்றுகிற தற்காலிக ஊழியர்கள் 4 ஆயிரம் பேர் இரண்டு நாளைக்கு முன்னாலே கூட ஊர்வலம் போயிருக்கிறார்கள். 350 ரூபாய்தான் சம்பளம் வாங்கிக்கொண்டிருக்கிறோம், பணிகள் நிரந்தரம் செய்யப்பட வேண்டும், சம்பளம் உயர்த்தப்பட வேண்டும் என்று இன்றைக்குப் போராட்டம் நடத்துகிறார்கள். அவர்களுடைய பிரச்சினையையும் இந்த அரசு பரிசீலிக்க வேண்டும். அவர்களுக்கு உதவுகிற விதத்திலே சம்பளம் உயர்த்தப்படவேண்டும், பணி நிரந்தரம் செய்யப்படவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோல, கிராம நிர்வாக அதிகாரிகள் என்று பணியாற்றுகிற அவர்களுக்கெல்லாம் சம்பள உயர்வும் இல்லை, அவர்களுக்குப் பணி உயர்வு கிடைக்கிற அந்தச் சூழலும் தடுக்கப்பட்டிருக்கிறது என்று அவர்கள் தங்களுடைய கோரிக்கைகளை நீண்டநாட்களாக வலியுறுத்தி போராட்டங்களை நடத்தியிருக்கிறார்கள். அரசுக்கு வேண்டுகோள் விட்டுக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய பிரச்சினையையும் இந்த அரசு கனிவோடு பரிசீலிக்க வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன். அதுபோல உள்ளாட்சி துறை அமைச்சருடைய இலாக்காவிலே தற்காலிகமாக நகராட்சிகளிலே பணியாற்றிக்கொண்டிருந்த பலபேர் இப்போது அந்தப் பணிகள் எல்லாம் நிறுத்தப்பட்டு, வேலையில்லாமல் இருக்கிறார்கள். தொடர்ச்சியாக பல ஆண்டுகள் பணியாற்றியவர்களுடைய பணியை நிரந்தரம் செய்ய வேண்டுமென்று அந்தத் தொழிற்சங்கங்களின் சார்பிலே சமீபத்திலே ஒரு போராட்டம் நடத்தினார்கள். அன்றைக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்களைப் பார்க்க வேண்டுமென்று தேதி கேட்டோம்,

பார்க்க முடியவில்லை, முதலமைச்சரைப் பார்க்க முடியவில்லை, சம்பந்தப்பட்ட அமைச்சரைப் பார்த்துப் பேச முடியவில்லை என்று சொன்னார்கள். முதலமைச்சர் அலுவல் காரணமாக பிசியாக இருக்கலாம். சம்பந்தப்பட்ட அமைச்சராவது அவர்களையெல்லாம் அழைத்துப் பேச வேண்டும். நான் பேசினேன் என்று அமைச்சர் சொன்னார். நான் அங்கே போய் அன்றைக்கு மதியமே, அங்கே பேசிவிட்டு போன அன்று மதியமே, அரசு கெஸ்ட் அவுஸ்க்கு முன்னாலே போராட்டம் நடத்திக் கொண்டிருந்தார்கள். நான் போய் அமைச்சர் பேசினேன் என்று சொன்னார் என்று சொன்னவுடனே அவர்கள் எல்லாம் இல்லை, இல்லை, பொய், பொய் எங்களைக் கூப்பிடவுமில்லை, பேசவுமில்லை என்று சத்தம் போட்டார்கள். அதை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு நான் கொண்டு வருகிறேன். எனவே, அவர்களை அழைத்துப் பேசுங்கள். பேசி அவர்களுடைய பிரச்சினைக்கும் தீர்வு காண முன்வர வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களை கேட்டுக்கொள்கிறேன். இப்படிப் பல்வேறுவிதமானப் பிரச்சினைகளையும் ஆரப்போடாமல்- இன்னும் சொல்லப் போனால் இவர்கள் எல்லாம் உங்களுக்கு வாக்களித்தவர்கள்தான். தேர்தல் நேரத்திலே, பல்வேறு பத்திரிகையிலே வந்த செய்திகளின் அடிப்படையிலே, ஆட்சி மாற வேண்டுமென்ற அடிப்படையிலே உங்களுக்கு ஆதரவாக இருந்து வாக்களித்தவர்கள். எனவே அவர்கள் எல்லாம் மீண்டும் இந்த ஆட்சி வந்ததற்குப் பின்னாலே மிகவும் அதிருப்தி அடைந்திருக்கிறார்கள். அவர்களுடைய பிரச்சினை தீர்க்கப்பெறவில்லை என்ற குறைபாடு அவர்களுக்கெல்லாம் இருக்கிறது. எனவே, அவர்களையெல்லாம் நீங்கள் அழைத்துப் பேச வேண்டுமென்று இந்த நேரத்திலே அந்த அரசை வற்புறுத்தி கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோல, மாண்புமிகு உறுப்பினர் சுந்தரம் அவர்கள் இங்கே அவர்களுடைய மாவட்டத்திலே ஒரு பிரச்சினை பற்றி எழுப்பச் சொன்னார். அதுபற்றித்தான் முக்கியமாகப் பேசுவதாக இருந்தார். அங்கே சில இடங்களிலே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இந்தப் பிரச்சினையை எழுப்புகிறபோது, இரண்டு முறை என் நாற்காலி அருகே வந்து காண்பித்தார். அறையிலே வந்து காண்பித்து என்னுடைய அனுமதியை வாங்கிவிட்டு, இங்கு வந்து அவையில் பேச வேண்டுமென்று அவரிடம் சொல்லியிருக்கிறேன். இப்போது, உங்கள் மூலமாக அதைப் பேசச் சொல்கிறார். இது என்ன முறை என்று நீங்கள்தான் சொல்ல வேண்டும்.

**திரு. எஸ். திருநாவுக்கரசு:** பெரிய பிரச்சினை ஒன்றும் கிடையாது.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஏதோ ஆதாரம், ஏதோ படத்தைக் காண்பிக்கிறார். அதை என்னிடம் காண்பித்துவிட்டுத்தானே பேச வேண்டும். நான் இருக்கையிலேயிருந்து கேள்வி நேரம் நடத்துகிறபோது, அதைக் கொண்டு வந்து காண்பித்தார். அறையிலே கொண்டு வந்து காண்பியுங்கள் என்று சொன்னால், அறையிலே வந்து நான் பேசுவதற்கு வாய்ப்பு கொடுங்கள் என்று கேட்டாரேயொழிய அதை எடுத்துக் காண்பிக்கவில்லை.

**திரு. எஸ். திருநாவுக்கரசு:** உங்களிடம் காட்டியதாக அவர் சொன்னார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்னிடம் காண்பிக்கவில்லை.

**திரு. எஸ். திருநாவுக்கரசு:** இல்லையென்றால் இப்போது நான் காண்பித்துவிடுகிறேன். பெரிய பிரச்சினை ஒன்றும் கிடையாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முறைக்குச் சொல்கிறேன்.

**திரு. எஸ். திருநாவுக்கரசு:** சாதாரண பிரச்சினை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் யாருடைய பேச்சு உரிமையையும் கெடுக்க விரும்பவில்லை. மரபுகளை நாம் காப்பாற்ற வேண்டும். அறையிலே வந்து காண்பியுங்கள் என்று சொன்னேன். அறையிலே வந்து, “எனக்குப் பேச வாய்ப்பு கொடுங்கள்” என்று நான்கு தடவைகள் கேட்டாரேயொழிய, அதை எடுத்துக் காண்பிக்கவில்லை.

பிற்பகல் 12-10

**திரு. எஸ். திருநாவுக்கரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் சொல்வதை நானும் ஏற்றுக் கொள்கிறேன். உங்களிடம் காட்டிவிட்டுத்தான் பேச வேண்டும். இதிலே, எல்லா பத்திரிகைகளிலேயும் அ.தி.மு.க இணைச் செயலாளர் முருகேசன் திடீர் கைது, ஆத்தூரில் பதற்றம் என்றெல்லாம் செய்திகள் வந்தன. இதிலே ஒன்றும் இல்லை, சின்ன பிரச்சினை அங்கே, ஆளும் கட்சியினுடைய அந்தத் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் இங்கே இருப்பார் என்று நினைக்கிறேன். அவரை ஏதோ பேசியதாகவும், அதற்கு தொலைபேசியிலே இவர் அவரைத் திட்டியதாகவும், பிறகு அவர் இவரைத் திட்டியதாகவும் என்றெல்லாம் தகவல். இவர் அவரைப் பற்றிப் பேசினாரா, அல்லது அவர் இவரைப் பற்றிப் பேசினாரா என்றெல்லாம் தெரியாது. எம்.எல்.ஏ., நேரிடையாக, போனிலே அவரிடம் பேசியதாகவும் அவர் இவரை போனிலே பேசியதாகவும் இரண்டு பேரும் சொல்கிறார்கள்.

[திரு. எஸ். திருநாவுக்கரசு] [1997 மார்ச் 25

அதனுடைய அடிப்படையிலே, ஒரு பிரச்சினையுமே இல்லாமல் ஒரு வழக்கு, புகாரின் அடிப்படையிலே அவர்-மாவட்ட இணைச் செயலாளர், ஒன்றியச் செயலாளர் கைது செய்யப்பட்டிருக்கிறார் என்பதுதான் பிரச்சினை அதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தனியாக விசாரிக்க வேண்டும். ஆளுங்கட்சியினுடைய புகாரின் அடிப்படையிலோ அல்லது தூண்டுதலின் அடிப்படையிலோ ஒரு குற்றமும் செய்யாத அனைந்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திலே நிர்வாகத்திலே பொறுப்பிலேயிருக்கிற, சாதாரணத் தொண்டர்கள் யாரும் பாதிக்கப்படுகிற விதத்திலே புகார்களைப் பதிவு செய்யக்கூடாது; கைது செய்யப்படக்கூடாது என்று நான் அரசைக் கேட்டுக்கொள்கிறேன். காவல்துறையையும் கேட்டுக்கொள்கிறேன். இதிலே அவரும் புகார் கொடுத்திருக்கிறார், அந்தப் புகார் பதிவு செய்யப்படவில்லை, அதன் மேலே நடவடிக்கை கிடையாது. இந்த மாதிரி பல இடங்களிலேயும் புகார்கள் வருகின்றன. இதிலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், காவல்துறையைக் கையிலே வைத்திருக்கிற, அந்தப் பொறுப்பை வைத்திருக்கிற, அந்த இலாகாவை வைத்திருப்பவர் என்ற முறையிலே, விசாரித்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும், பாரபட்சம் இல்லாமல் கட்சிக்கண்ணோட்டம் இல்லாமல் காவல்துறை செயல்பட வேண்டும் என்றும், அந்த விதத்திலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் நான் கேட்டுக்கொள்கிறேன். இதிலே, நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் அவர்களுக்கு வந்தத் தகவலை எனக்கும் தொலைபேசியிலே சொன்னார்கள். அதை இந்த அரசினுடைய கவனத்திற்கு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு கொண்டு வருகிறேன். இதை அனுமதித்ததற்காக உங்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். எனவே, இப்படி இன்றைக்குப் பல்வேறு விதமான, இன்னும் பல கோரிக்கைகள், பல பிரச்சனைகள் இருக்கின்றன. இந்த அரசு வந்ததற்குப் பின்னாலே, மிக முக்கியமானப் பிரச்சினைகளாக இருக்கிற பல பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதிலே காலதாமதம் ஏற்படுகிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்னும் ஒரு நிமிடம்தான்.

**திரு. எஸ். திருநாவுக்கரசு:** பேசி முடித்துவிடுகிறேன். குறிப்பாக, காவிரி நதிநீர்ப் பிரச்சினை என்று எடுத்துக் கொண்டாலும்கூட, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஐந்து முறை பேச்சுவார்த்தைகள் நடத்தியதற்குப் பின்னாலேயும் ஏறக்குறைய ஆறு மாதகாலமாக, நடுவர் மன்றத்திற்குத் தலைவரே இல்லாமல், அதற்குப் பின்னாலே தலைவர்



1997 மார்ச் 25] [திரு. எஸ். திருநாவுக்கரசு]

நியமிக்கப்பட்டிருக்கிறார். அதிலே கர்நாடக அரசு மிகவும் பிடிவாதமாக இருக்கிறது. அதற்குக் காரணம், ஒரு வேளை அவர்களுடைய மாநிலத்தைச் சேர்ந்தவர்தான் பிரதமர் என்று உரிமை எடுத்துக்கொண்டிருக்கிறார்களோ என்னவோ, எனக்குத் தெரியாது. பக்கத்திலேயிருக்கிற ஆந்திர மாநிலத்திலே, "கர்நாடகத்திலே அலமாட்டி அணை கட்டுகிறார்கள். அதனால் ஆந்திரம் பாதிக்கப்படுகிறது" என்று சொன்னவுடனே அந்த முதலமைச்சர் தீவிரமாக கூறியிருக்கிறார். அந்த அளவிற்குப் போய் சொல்கிறார் என்று சொன்னால், அதாவது, அந்த அணைக் கட்டுவதை நிறுத்துகிறீர்களா அல்லது உங்களுக்குத் தருகிற ஆதரவைத் திரும்பப் பெற்றுக்கொள்ளவா என்று சொல்லக்கூடிய அளவிற்குத் துணிவாக இருக்கிறார், தைரியமாக இருக்கிறார். அந்த மாதிரி இந்த அரசும், ஐக்கிய முன்னணியிலே இருக்கிறோம், ஐக்கியமாகிவிட்டோம் என்று, தமிழக மக்களுடைய பிரச்சினைகளை விட்டுவிடாமல், நீங்களும் இந்த மாதிரி வேகமாகக் குரல் கொடுக்க வேண்டும் என்று நான் இந்த அரசைக் கேட்டுக் கொள்கிறேன். சமீபத்திலே புயல், வெள்ளத்தால் பாதிக்கப்பட்டபோதுகூட ஏறக்குறைய ஆயிரம் கோடி ரூபாய்க்கு தமிழ்நாட்டிலே நஷ்டம் ஏற்பட்டது என்று இந்தச் சட்டமன்றத்திலேயும் சரி, வெளியிலேயும் சரி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். தமிழக அரசினுடைய நிதியிலேயிருந்து ஏறக்குறைய 200, 250 கோடி ரூபாய் செலவு செய்யப்பட்டிருக்கிறது. அவ்வளவுதான் முடியும். எந்த அரசாங்கமாக இருந்தாலும், இது போன்ற பெரிய இழப்பு ஏற்படுகிறபோது மாநில அரசே அவற்றையெல்லாம் சரிகட்டிவிட நிச்சயமாக முடியாது. மத்திய அரசு, இதிலே தனியாகக் கடனாகவும் தருகிறார்கள், உதவியாகவும் தருகிறார்கள். அதற்கு என்று தனி ஃபண்டே இருக்கிறது. ஆக தமிழகத்தைப் பொறுத்தவரையில், துர்பாக்கியவசமாக இதுவரை ஆயிரம் கோடி ரூபாய் இழப்பு என்று வந்ததற்குப் பின்னாலே, சம்பந்தப்பட்ட அதிகாரிகள் எல்லாம், டீம் எல்லாம் வந்து பார்த்துவிட்டு போனதற்குப் பின்னாலேகூட, இதுவரை ஒரு ரூபாய்கூட தமிழகத்திற்குத் தராமல் இருப்பது—It is very unfortunate—மிகவும் வருந்தத்தக்கது. இன்னும் சொல்லப்போனால் கண்டனத்திற்குக் கூட உரியது. இன்னும் சொல்லப்போனால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒசூரிலே கலந்து கொண்ட விழாவில் மாண்புமிகு பிரதமர் அவர்களைப் பார்த்து நிலைமைகளையெல்லாம் எடுத்துச்சொல்லி ஆயிரம் கோடி ரூபாய்க்கு இழப்பு ஏற்பட்டிருக்கிறது என்று சொன்னவுடனே, மாண்புமிகு பிரதமர் சொன்னார், "இந்த அரசாங்கமே உங்களுடைய அரசாங்கம், நிதியமைச்சரே உங்கள் ஊர்க்காரர், நீங்கள் எடுத்துக்கொண்டது போக மீதிதானே எங்களுக்கு", அந்த மேடையிலேயே

பேசிவிட்டு 25 கோடி ரூபாய் தருகிறேன் என்று அறிவித்தார். ஆக, 25 கோடி ரூபாய் தருகிறேன் என்று அறிவித்துவிட்டுப்போய் நான்கு மாதங்கள் ஆகின்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மணி ஆகிவிட்டது. 20 நிமிடம் உங்களுக்கு கொடுத்துவிட்டேன். தயவுசெய்து சீக்கிரம் பேசி முடியுங்கள்.

**திரு. எஸ். திருநாவுக்கரசு:** எனவே, மத்திய அரசை மாநில அரசு வேகமாக வற்புறுத்த வேண்டும் என்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். மத்தியிலே கூட்டணியிலே பங்கேற்றிருக்கிற மாநில அரசான நம்முடைய உரிமைகள் பாதிக்கப்படக்கூடாது. "உறவுக்குக் கை கொடுப்போம்; உரிமைக்குக் குரல் கொடுப்போம்" என்று சொல்கிறீர்கள், அடிக்கடி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொல்வார்கள். அது தி.மு.க. வின் கோஷங்களிலே முக்கியமான கோஷம் ஆகும், முழக்கங்களிலே ஒன்று, அதிலே உறவுக்குக் கை கொடுத்து மத்திய அமைச்சரவையிலே இடம் பெற்றிருக்கிறீர்கள். அதனாலே உரிமைகள் பாதிக்கப்படக்கூடாது. ஆனால் பாதிக்கப்படுகிறது. எனவே, உரிமைக்கும் வேகமாகக் குரல் கொடுக்க இந்த அரசு முன்வர வேண்டும் என்று நான் இந்த அரசைக் கேட்டு வாய்ப்புக்கு நன்றி கூறி, அமைகிறேன், நன்றி.

பிற்பகல் 12-15

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து திரு. ஏ. ராசேந்திரன், சுருக்கமாகப் பேசி முடிக்க வேண்டும்.

**திரு. ஏ. ராசேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1996-97 ஆம் ஆண்டுக்கான கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கையின் மீது என்னுடைய கருத்துக்களைக் கூற அனுமதி தந்த மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும் என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்திய அரசியல் சட்டம் 205-வது பிரிவின்படி, மாண்புமிகு முதல்வர் அவர்கள், கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கையின் மீது நிதியைக் கோரியிருக்கிறார்கள். கோரிக்கை எண் 1-நில வருவாய்த் துறையின் கீழ், வருவாய் நிர்வாக சீர்த்திருத்தக் குழுவை அமைத்ததன் காரணமாக, எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து செலவு செய்ய வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது. அதுபோன்று முன்னேற்றங்கள் காண வேண்டியதன்



காரணமாகவும் செலவுகள் அதிகமாகின்றன. அதன் காரணமாக கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் வருகின்றன. குறிப்பாக, நில வருவாய்த் துறையில் பேரூராட்சிகள், நகராட்சிகள் இவைகளிலெல்லாம் பட்டாக்கள் கொடுப்பது பற்றி இங்கு பல உறுப்பினர்கள் பேசினார்கள். சென்ற அரசால் பேரூராட்சிகளிலும், நகராட்சிகளிலும், பட்டாக்கள் கொடுப்பதற்கு தடையாணை பிறப்பிக்கப்பட்டிருந்தது. அதன் காரணமாக பல பேரூராட்சிகளிலும், நகராட்சிகளிலும் பல்லாண்டுக் காலமாக வாழ்ந்து கொண்டிருக்கின்ற, குடிசையில் வாழ்ந்து கொண்டிருக்கின்ற ஏழை எளிய மக்களுக்குப் பட்டாக்கள் கொடுக்க முடியாத நிலை இருந்தது. அந்தத் தடையாணையை நீக்குவதற்கு நம்முடைய கலைஞர் அரசு முயற்சி செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து பொது விற்பனை வரியும், ஏனைய வரிகளும் தீர்வைகளும் - நிருவாகம் பற்றி 4 ஆம் எண் கோரிக்கை பற்றிச் சொல்லும்போது, இந்தப் பொது விற்பனை வரி முறையை இராஜாஜி அவர்கள் கொண்டு வந்தார்கள். 'காமதேனு' என்று சொல்லப்படுகின்ற இந்தப் பொது விற்பனை வரி, இன்று நம்முடைய கலைஞர் அவர்களுடைய ஆட்சிக்காலத்தில் மிக வேகமாகவும், நேர்மையாகவும் செயல்படுகிறது என்று நாமெல்லாம் எண்ணினாலும், இந்தத் துறையில் இருக்கின்ற ஒருசில அதிகாரிகள் முதல்வர் அவர்களின் கருத்துக்கு ஏற்ப ஒத்துழைக்க மறுக்கிறார்கள். அதன் காரணமாக ஒருசில இடங்களில் அவர்கள் நினைப்பதை சாதித்துக் கொண்டிருக்கிறார்களே ஒழிய, அரசு நினைப்பதை, அரசு அதிகாரிகள் செய்ய மறுத்துக் கொண்டிருக்கிறார்கள். இது சரிசெய்யப்பட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து கோரிக்கை எண் 5- முத்திரைத் தாள்கள் - நிருவாகம் என்ற தலைப்பின்கீழ் ஒருசில கருத்துக்களைக் குறிப்பிட விரும்புகிறேன். முத்திரைத்தாள்கள் 'நாசிக்'கில் அச்சிடப்படுகின்றன. எனவே, இந்த முத்திரைத்தாள்களை வாங்குவதற்கும், அச்சிடுவதற்கும் அதிகச் செலவு ஆகின்றது என்று கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கை மீது அதிகப் பணம் கோரப்படுகிறது. இதைத் தவிர்க்க வேண்டுமானால், சார்பதிவாளர் அலுவலகங்களிலும், நீதிமன்றங்களிலும் இருக்கின்ற அதிகாரிகள் முத்திரைத்தாள்களைப் பெறுவதைவிட, அவர்களிடத்திலேயே நேரடியாகப் பணத்தைக் கொடுத்து, ரசீதுபெற்று, வழக்குகளை நடத்திவிட்டால், முத்திரைத்தாள்கள் வாங்குவதால் அரசுக்கு ஏற்படும் செலவு மீதமாகும். அதே சமயத்தில், 'நாசிக்' சென்று அதை அச்சடிக்கும் செலவும் அரசுக்கு மீதமாகும். இதன் மூலம் முத்திரைத்தாள்களுக்குச்

செலவு செய்யப்படும் பணம் மீதமாகும் என்ற கருத்தை நான் குறிப்பிட விரும்புகிறேன்.

அடுத்து கோரிக்கை எண் 7—மாநிலச் சட்டமன்றம் என்ற தலைப்பின் கீழ் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். பல மாநிலங்களில் இருக்கக்கூடிய சட்டமன்றங்களைச் சென்று பார்த்தபோது, அவைகள் நம்முடைய சட்டமன்றம் போல் சிறியதாகவும், வசதிகள் குறைவாகவும் இல்லை என்பது தெரிந்தது. குறிப்பாக, சிம்லா மற்றும் சண்டிகர் போன்ற இடங்களில் உள்ள சட்டமன்றங்களைப் பார்த்தபோது, அங்குள்ள உறுப்பினர்களுக்கு அந்த அரசு செய்து கொடுத்துள்ள வசதிகளைப் பார்க்கும்போது நம்முடைய அரசும் அவைகளை ஆராய்ந்து அந்த வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து கோரிக்கை எண் 10—பால் வழங்கு செயல் திட்டங்கள் மூலம் தமிழ்நாட்டில் இன்றைக்கு வெண்மைப்புரட்சி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. வெண்மைப் புரட்சிக்கு வித்திட்ட திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டம், ஏற்கெனவே வடஆர்காடு மாவட்டம் என்ற பெயரில் ஒன்றாக இருந்தபோது, வட ஆர்காடு மாவட்டம்தான் பால் உற்பத்தியை அதிகமாகச் செய்து கொண்டிருந்தது. ஆனால், இப்போது திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டம் என்று தனியாகப் பிரிந்த போது, அதற்குப் பால் உற்பத்தி இணையம் தனியாக அமைக்கப்படவில்லை. இந்த மாமன்றத்திலே துறையினுடைய அமைச்சர் பதில் சொல்லும்போது வேலூரில் 80,000 லிட்டர்தான் பால் உற்பத்தி செய்யப்படுகிறது; திருவண்ணாமலையில் ஒரு லட்சம் லிட்டர் பால் உற்பத்தியாகிறது என்று சொன்னார்கள். ஒரு லட்சம் லிட்டர் பால் உற்பத்தி செய்கின்ற திருவண்ணாமலையில் தனியாக ஒரு இணையத்தினை ஏற்படுத்தித் தந்து, அந்தப் பகுதி மக்களுடைய கோரிக்கையை நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பிற்பகல் 12-20

துணை மானியக் கோரிக்கையில், 11—மாவட்ட நிர்வாகம், என்ற தலைப்பில் திருவண்ணாமலை மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம் அமைப்பதற்காக நம்முடைய முதலமைச்சர் அவர்கள் நிதி ஒதுக்கியுள்ளார்கள். 1989-ஆம் ஆண்டு திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டத்தைப் பிரிக்கும்போது உடனடியாக மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம் கட்டித்தரப்படும் என்று சொன்னார்கள். நம்முடைய ஆட்சி கலைக்கப்பட்டதன் காரணமாக, பல்வேறு குழப்பங்கள் ஏற்பட்டு, கட்டடம்



கட்டப்படாமல் இருந்து, இப்போது மீண்டும் அது உயிர் பெற்றிருக்கிறது. இந்த மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தை திருவண்ணாமலை-வேலூர் சாலையில் ஐ.டி. எதிரில் கட்டினால்தான் சிறப்பாக இருக்குமென்று நான் நினைக்கிறேன். ஏனென்றால் திருவண்ணாமலை மாவட்டத்தில் 6 தாலுக்காக்கள் இருக்கின்றன. அந்த 6 தாலுக்காக்களில் 4 தாலுக்காக்கள் திருவண்ணாமலைக்கு வடக்கே இருக்கின்றன. அதேபோல் 18 ஊராட்சி ஒன்றியங்களில் 14 ஊராட்சி ஒன்றியங்கள் வடக்கே உள்ளன. அதேபோன்று, நகராட்சியைப் பொறுத்தமட்டில், செய்யாறு, வந்தவாசி, ஆரணி, திருவண்ணாமலை ஆகிய 4 நகராட்சிகளில் 3 நகராட்சிகள் வடக்கே இருக்கின்றன. ஆகையால் எவ்விதத்தில் பார்த்தாலும், மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம் திருவண்ணாமலைக்கு வடக்கே, 'திருவண்ணாமலை-வேலூர், திருவண்ணாமலை-போளூர்' ரோட்டில் அமைந்தால்தான் சிறந்தது எனக் கருதுகிறேன். அடுத்து நம்முடைய கலைஞர் அவர்கள் திருவண்ணாமலையைப் பிரிக்கும்போது சேத்துப்பட்டையும், தண்டராம்பட்டையும் வட்டங்களாக பிரிக்க வேண்டுமென்று சொல்லி, அதற்காக ஒரு கருத்துரு இருந்தது. ஆகவே சேத்துப்பட்டு பேரூராட்சியை வட்டத் தலைநகராகவும், ஜவ்வாது மலையில் வாழ்கின்ற மலைவாழ் மக்களுடைய கோரிக்கையான ஜவ்வாது மலைப் பகுதியை துணை வட்டமாக அமைக்கவும் இந்த அரசு முன்வர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

13—நீதி நிர்வாகம் என்ற தலைப்பின் கீழ் மேசை, நாற்காலிகள் வாங்குவதற்காக ரூ. 35, 26,000/- அதிகமான நிதியை அரசு கோரியிருக்கிறது. இன்று தமிழகத்தில் இருக்கின்ற நீதிமன்றங்களில் பல இடங்களில் மேசை, நாற்காலிகள் சரியாக இல்லை. (மணியடிக்கப்பெற்றது). எனவே, இவைகளெல்லாம் நிவர்த்தி செய்யப்பட வேண்டும். எங்கள் போளூரில் உள்ள நீதிமன்றத்திற்கு உடனடியாகக் கட்டடம் கட்டித் தரப்பட வேண்டும்.

பொதுப் பணித்துறையைப் பொறுத்தமட்டில் திருவண்ணாமலை மாவட்டத்திற்கு மாண்புமிகு முதல்வர் அவர்களும், மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்களும், மாண்புமிகு வீட்டுவசதித் துறை அமைச்சர் அவர்களும் முயன்று போளூரில் செண்பகத்தோப்பு அணையைத் தந்தார்கள். அதேபோன்று செங்கம் பகுதிக்கு குப்பநத்தம் அணையைத் தந்தார்கள். அதற்காக பொதுமக்களின் சார்பாக நான் நன்றியைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

காவல் துறையைப் பொறுத்தமட்டில் "Swift Action Force"—விரைவில் நடவடிக்கை எடுக்கும் படை ஒன்று அமைத்து முதலமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள். இந்தப் படையின் மூலமாக ஆங்காங்கே நடக்கின்ற மதக் கலவரங்களை உடனடியாகத் தடுக்க முடியும் என்ற நல்லெண்ணத்தில் இது ஏற்படுத்தப்படுகிறது. போளூர் பக்கத்தில் தேவிகாபுரம் என்ற ஊர் இருக்கிறது. அங்கு புறக்காவல் நிலையம் அமைத்துத்தர வேண்டுமென்று அந்தப் பகுதி மக்கள் நெடுநாளாகக் கோரிக்கை வைத்திருக்கிறார்கள். இதையும் அமைத்துத்தர வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

தீயணைப்புத் துறையைப் பொறுத்தமட்டில் சென்ற முறை பெரணமல்லூருக்கு தீயணைப்பு நிலையம் தந்தபோது, சேத்துப்பட்டில் உள்ள மக்கள் கொந்தளிப்படைந்து எங்களுக்கும் தீயணைப்பு நிலையம் வேண்டுமென்று வேண்டுகோள் வைத்தார்கள். ஆகவே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் இந்தக் கோரிக்கையை கனிவோடு பரிசீலித்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தொழில் துறையைப் பொறுத்தமட்டில், திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டம் பிரிக்கப்பட்டபோது மாண்புமிகு முதல்வர் அவர்கள், வேலூரில் பல தொழிற்சாலைகள் இருக்கின்றன என்பதால் திருவண்ணாலையில் தொழிற்பேட்டைகள் அமைக்கப்படும் என்று சொன்னார்கள். நம்முடைய ஆட்சி கலைக்கப்பட்டதன் காரணமாக அதன்பின் எந்தத் தொழிற்பேட்டைகளும் வராமல் நின்றுவிட்டன. நம்முடைய ஆட்சி இப்போது வந்திருக்கின்ற காரணத்தால் திருவண்ணாமலை—சம்புவராயர் மாவட்டத்திற்கு தொழிற்பேட்டைகளைத் தர— ஏற்கெனவே செய்யாறுக்கு கொடுத்திருக்கிறீர்கள்— வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி.

பிற்பகல் 12-25

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இறுதித் துணை மதிப்பீடுகளின்மீது என்னுடைய கருத்துக்கள் சிலவற்றைச் சொல்ல விழைகிறேன். 1996-97-ஆம் ஆண்டிற்கான கூடுதல் செலவிற்கான இறுதித் துணை நிதிநிலை அறிக்கையின்மீது கருத்து கூறுகின்றபோது, பல்வேறு துறைகளுக்காக நிதி ஒதுக்கப்படுகின்றது. பல்வேறு துறைகளிலே சென்று கேட்கின்றபோது, ஒதுக்கப்பட்டுள்ள நிதி காலத்தோடு எங்களுக்கு வந்து சேர்ந்தால், எங்களுடைய திட்டப் பணிகளைக் குறிப்பிட்ட



காலத்திற்குள் செய்து முடிப்பதற்கு வாய்ப்பாக இருக்கும் என்று சொல்கிறார்கள். சட்டமன்றத்திலே நிதி ஒதுக்கீடு செய்யப்படுகின்றது. நிதித் துறையிலே நிதி ஒதுக்கீடு செய்யப்படுகின்றது. ஆனால், ஒதுக்கப்பட்ட நிதி எங்களுடைய துறைக்கு வந்து சேர்வதற்குள் மூன்று மாதங்களிலிருந்து ஆறு மாதங்கள் வரை கடந்தோடி விடுகின்றன. அவ்வாறு காலம் கடப்பதன் மூலமாக, திட்டப் பணிகளுக்காக ஏற்கெனவே போடப்பட்டுள்ள மதிப்பீடு, ஆறு மாத காலத்தில் ஏறுகின்ற விலைவாசியின் காரணமாக, உயர்ந்து, 'ரீ எஸ்டிமேட்' போடுகின்ற நிலைக்கு வருகின்றது. அவ்வாறு கூடுதல் ஏற்படுவதால், துணை மதிப்பீடு ஒன்றைச் செய்வதற்கான வாய்ப்புகள் உருவாக்கப்படுகின்றன. அதேபோல, இத்தகைய செலவுகள் அதிகமாவதால், புதிய திட்டங்களை நாம் உருவாக்குவதற்கு மாறாக, எடுத்துக்கொண்ட திட்டங்களிலேயே நாம் அதிக செலவு செய்ய வேண்டியுள்ளது. எனவே, துணை மதிப்பீடுகள் ஏற்படாமல் இருப்பதற்கு, கூடுதல் செலவு செய்யப்படாமல் இருப்பதற்கு, போடப்பட்டுள்ள திட்டங்களை அந்த ஆண்டுகளிலேயே முடிவு செய்ய வேண்டும். இதிலே பல்வேறு வகையான இனங்கள் இருக்கின்றன. மருத்துவம், மின்சாரம் போன்ற துறைகளெல்லாம் இருக்கின்றன. அதேபோன்று, நாம் வாங்கியிருக்கின்ற பணத்தை, கடன்களைத் திருப்பிச் செலுத்த வேண்டியுள்ளது. எனவே, குறிப்பிட்ட காலத்திற்குள்ளாக, ஒதுக்கப்படுகின்ற நிதி அந்தந்தத் துறைகளுக்குச் சென்றடைவதன் மூலமாக, கூடுதல் செலவைக் குறைப்பதற்கான வாய்ப்புகள் ஏற்படும்.

அதேபோன்று, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்றதற்குப் பின்னால், அரசாங்கத்திலே சிக்கனத்தைக் கடைப்பிடிக்க வேண்டும் என்கின்ற ஒரு முக்கியமான முயற்சியிலே ஈடுபட்டிருக்கிறார்கள். அதன்மூலம், கூடுதல் செலவுகள் இன்றையதினம் குறைக்கப்பட்டிருப்பதை நான் வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன். குறிப்பாக நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். ஏற்கெனவே, உலகத் தமிழ் மாநாடு தஞ்சாவூரிலே நடத்தப்பட்டது. அது. ரூ.70 கோடி திட்டம், ஆனால், அதற்காக அந்தத் துறையால் செலவழிக்கப்பட்ட தொகை அதிகமானதால், துணை மதிப்பீடு ஒன்று தயார் செய்யப்பட்டு, பல்வேறு திட்டங்களுக்காக ஒதுக்க வேண்டிய நிதியையெல்லாம், அதற்காகச் செலவழிக்கக்கூடிய நிலை ஏற்பட்டது. அந்த அளவிற்கு அமைச்சர்களாலும், அதிகாரிகளாலும் தேவையில்லாமல் ஆடம்பரச் செலவு செய்யப்பட்டது. ஆனால், அத்தகைய செலவுகளை நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர்

216648
சென்னை-600 008

அவர்கள் இன்றையதினம் குறைத்திருப்பது வரவேற்கக்கூடியதென்றாலும், அந்தந்த ஆண்டுக்கென ஒதுக்குகின்ற திட்டங்களை அந்தந்த ஆண்டுகளிலே நிறைவேற்றுவோமானால், நிச்சயமாக துணை மதிப்பீடு வராத அளவிற்குப் பாதுகாத்துக்கொள்ள முடியும்.

அதேபோன்று, எதிர்பாராச் செலவிற்கென ஒதுக்கப்பட்ட நிதியிலிருந்து பணத்தை இன்றையதினம் திருப்பிச் செலுத்துவதற்கான முயற்சிகள் எடுத்திருப்பதை நான் வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன். அதேபோல, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஏகபோகக் கொள்முதல் நிலையங்களைப் பற்றியும் சொல்லியிருக்கிறார்கள். மேலும் அரிசி உற்பத்திக்கு அதிகப் பணம் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. இன்றைக்குள்ள அரிசிப் பற்றாக்குறையைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் பலர் இங்கே பேசியிருக்கிறார்கள். இருந்தபோதிலும், 5 பேர் கொண்ட குடும்பத்திற்கு 20 கிலோ அரிசி வழங்கப்பட்டு வந்தது. அதேபோல, 2 பேர், 3 பேர், இருக்கக்கூடிய குடும்பங்களுக்கு நான்கும், நான்கும் சேர்த்து 8 கிலோ என்பதைக் கூட்டி, 16 கிலோவாக வழங்கப்பட்டு வந்தது. இப்பொழுது கூடுதலாக வழங்கப்பட்ட 8 கிலோ அரிசி குறைக்கப்பட்டிருக்கிறது. அவ்வாறு 8 கிலோவாகக் குறைக்கப்பட்ட காரணத்தினால், 16 கிலோ அரிசி வாங்கிப் பயனடைந்த அந்தக் குடும்பங்கள் இன்றைய தினத்தில் கஷ்டப்படுகின்ற சூழ்நிலை உருவாகியிருக்கின்றது. எனவே, அரசால் நிர்ணயிக்கின்ற விலைக்கு அரிசியை வாங்கி, தங்களுடைய வாழ்க்கையை நடத்த முடியாத ஒரு சூழ்நிலை உருவாகியிருக்கிறது. தேவைப்படுகின்ற அரிசியை வெளிச் சந்தையிலே வாங்கக்கூடிய அவசியம் அவர்களுக்கு ஏற்படுகின்றது.

அதேபோன்று ஒரே மாவட்டமாக இருந்த தஞ்சாவூர் மாவட்டம் இன்றைய தினம் மூன்று மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. தஞ்சையிலே இருக்கக்கூடிய விவசாயிகள் நாகை மாவட்டத்திலே நிலம் வைத்திருக்கிறார்கள். நாகை மாவட்டத்திலே இருக்கிற விவசாயி, தஞ்சாவூரிலே வந்து தொழில் நடத்துகிறார். ஆனால், அந்த நிலங்களிலே உற்பத்தி செய்யக்கூடிய நெல்லை, தன்னுடைய தேவைக்கேகூட எடுத்துச் செல்லக்கூடிய நிலைமை இல்லாத அளவுக்கு ஒரு கட்டுப்பாடு இருக்கிறது. ஆகவே, அந்த மூன்று மாவட்டங்களையும் ஒரு மண்டலமாக உருவாக்க வேண்டும். தங்களுடைய தேவைகளுக்கு எடுத்துச் செல்லக்கூடிய அளவுக்கு, நெல்லைக் கொண்டு வருவதற்கான வாய்ப்பினை ஏற்படுத்த, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தகுந்த உத்தரவினைப் பிறப்பிக்க வேண்டும்.



பிற்பகல் 12-30

அதோடு மட்டுமல்லாமல், சில்லறை வியாபாரிகள், சிறு ரைஸ் மில் வைத்திருக்கக் கூடியவர்கள், 50 மூட்டைகளிலிருந்து 100 மூட்டைகளாவது நெல்லை வாங்கி— அந்த மாவட்டத்தில் அதற்கு 'வடியம்' என்று சொல்வார்கள்— அதுபோன்ற சில்லறை அரிசி வியாபாரிகள் அரிசி வியாபாரம் செய்வதற்கு நீங்கள் அனுமதி வழங்க வேண்டும். இதற்கு 2 சதவிகிதம் வரி விதிக்கப்படுகிறது. 100 மூட்டை நெல்லை, நேரடியாக விவசாயிகளிடமிருந்து வாங்கி வந்து, அவியல் போட்டு, பெரிய வியாபாரிகளிடத்திலே அவர்கள் அரிசி வியாபாரம் செய்கிறார்கள். இந்த சில்லறை வியாபாரிகளுக்கு 2 சதவிகிதம் வரி போடப்படுகிறது. அந்த 2 சதவிகிதம் வரியை கட்டுவது அவர்களுக்கு சிரமமாக இருந்தாலும், இன்னொருபுறம் அதிகாரிகளினுடைய தொந்தரவு இருக்கிறது அல்லவா, அந்தத் தொந்ததரவு என்பதை அவர்களால் தாக்குப் பிடிக்க முடியாத நிலை இருக்கிறது. அந்தச் சிறு வியாபாரிகள், அரிசி உற்பத்தி செய்யக்கூடிய சிறு மில்களை வைத்திருக்கக் கூடியவர்கள், தங்களுடைய கோரிக்கையை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு அனுப்பி வைத்திருக்கிறார்கள். "2 சதவிகிதம் என்கிற அந்த வரியை விதிக்கவில்லை என்றால், 7 ரூபாய்க்கு விற்கக்கூடிய அரிசி, 6 ரூபாய் 70 காசுக்கு நாங்கள் கொடுக்கத் தயாராக இருக்கிறோம். இதுகுறித்து அரசினிடத்திலே எங்களுக்கு அப்படிப்பட்ட உத்தரவு கிடைத்தால், அந்த உத்தரவுக்குப் பணிந்து நாங்கள் செயல்படுகிறோம்" என்று சொல்கிறார்கள். இது அனைத்துப் பகுதி மக்களுக்கும் நன்மை அளிக்கக்கூடிய விதத்தில், அவர்கள் சொல்லக்கூடிய யோசனை சரியாக இருக்கிறது. ஆகவே, இதுகுறித்து அரசு பரிசீலனை செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல், நம்முடைய விவசாயிகளைப் பொறுத்தவரை, அவர்களுக்கு அரசாங்கம் ஊக்கத் தொகை வழங்க வேண்டும். தற்போது அவர்களுக்கு 50 ரூபாய் ஊக்கத் தொகை வழங்குகிறார்கள். அதனை குவிண்டாலுக்கு 100 ரூபாயாவது வழங்கினால்தான், விவசாயிகள் நெல் உற்பத்தியில் தங்களுடைய ஆர்வத்தைக் காட்ட முடியும். இருக்கிற தொழிலிலே மோசமான தொழில் என்பது, வேளாண்மைத் தொழிலாக இருக்கிறது. ஆகையினால், அவர்களுக்கு, குவிண்டாலுக்கு 100 ரூபாய் மானியம் வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, சாலைகளும் பாலங்களும், என்று எடுத்துக் கொண்டோமென்று சொன்னால், காவிரிப் படுகையிலே எண்ணெய்

எரிவாயு இருப்பதன் காரணமாக, கனரக வாகனங்கள், இன்றையதினத்திலே, இந்த மாவட்டத்திலே சென்று வந்து கொண்டிருக்கின்றன. இந்த எண்ணெய் எரிவாயுக்காக, ஏற்கெனவே மத்திய அரசு வழங்கி வந்த 'ராயல்ட்டி' தொகையை தொடர்ந்து கொடுக்கின்றதா? அந்தத் தொகையை நியாயமான முறையிலே, அதற்காகப் பயன்படுத்துகிறோமா? அங்குள்ள சாலைகளும், பாலங்களும் பழுதடைதிருக்கின்றன. 100 ஆண்டுகளுக்கு மேலாக கட்டப்பட்ட பல்வேறு பாலங்கள் இன்றையதினம் பாதிக்கப்பட்டிருக்கின்றன. ஆகவே, இந்த வகையில் பாதிக்கப்பட்டிருக்கூடிய அந்த மாவட்டத்திற்கு உரிய அளவிலே நீங்கள் பணங்களைச் செலவிட வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அந்தப் பணங்களை முழுமையாக அந்த மாவட்டத்திற்குச் செலவிட்டால்தான், அதுபோன்ற நீண்டகால பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முடியும் என்பதையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல், பொங்கலுக்கு, ஏழையெளிய மக்களுக்கு, வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ளவர்களுக்கு வழங்கக்கூடிய வேட்டி, சேலைகள், இந்த ஆண்டு வழங்கப்படவில்லை. அதற்காக நாம் கூடுதல் நிதியை ஒதுக்குகிறோம். ஆனால், இந்த ஆண்டு வழங்கப்பட்டதா என்று பார்த்தால், இந்த ஆண்டு சுத்தமாக இலவச வேட்டி, சேலைகள் வழங்கப்படவில்லை. வெள்ளத்தால் பாதிக்கப்பட்டிருக்கிற விவசாயத் தொழிலாளர்களுக்கு...

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. பழனிசாமி போன்றவர்களே. இப்படிச் சரியாக புரிந்து கொள்ளாததற்கு நான் மிகவும் வருத்தப்படுகிறேன். வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களை ஒதுக்கிவிட்டு, பாதிக்கப்படாத மாவட்டங்களுக்கு, பொங்கலுக்கு, இலவச வேட்டி சேலைகள் வழங்கப்பட்டிருக்கின்றன. வழங்கப்படும்போதே சொல்லப்பட்டிருக்கிறது; முன்புபோல் இல்லாமல், இந்தத் தடவை, கைத்தறி நெசவுக் கூட்டுறவுச் சங்கங்களினுடைய வேட்டி சேலைகளைத்தான் வாங்குவது; அதுதான் தரமாக இருக்கும்; நல்லவகையில் இருக்கும் என்பதற்காக வாங்கப்பட்டிருக்கிறது. ஆனால், போதுமான அளவுக்கு அந்த வேட்டி, சேலைகள் இல்லாத காரணத்தினால், குறிப்பிட்ட மாவட்டங்கள்— ஏற்கெனவே வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களுக்கு ஓரளவு வேட்டி, சேலைகள் தரப்பட்டிருக்கின்றன. எனவே, பாதிக்கப்படாத மாவட்டங்களுக்குத் தருவது என்றும், இப்போதுகூட மீதம் உள்ளதை, இந்தப் புத்தாண்டு



பிறப்பையொட்டி, மீதமுள்ள மாவட்டங்களுக்குத் தருவது என்றும், அதிலேகூட, உண்மையிலே நல்ல வேட்டி, சேலைகள் தருவதற்கு, கோவாபரேடிவ் சொசைட்டியினுடைய, கைத்தறிக் கூட்டுறவுச் சங்கங்களினுடைய வேட்டி, சேலைகளைத்தான் வாங்க வேண்டும் என்பதற்காக, அதிலே ஊழல் எதுவும் நடைபெறாமல் இருக்க வேண்டும் என்பதற்காக, சல்லடைக் கண்களாக இருக்கிற வேட்டி, சேலைகளைத் தரக்கூடாது என்பதற்காக, யாரும் விரும்பி, 'எங்களுக்குக் கொடுங்கள், எங்களுக்குக் கொடுங்கள்' என்று கேட்கின்ற அளவுக்குள்ள வேட்டி, சேலைகளை வழங்குவதற்காக, இப்போதுகூட, இரண்டு, மூன்று பகுப்பாக, மாவட்டங்களைப் பிரித்து இன்னும் இரண்டு மூன்று மாதங்களிலே எல்லோருக்கும் கிடைக்கக்கூடிய அளவுக்குத் தரப்பட இருக்கிறது. இது ஏற்கெனவே அறிவிக்கப்பட்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 12-35

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விளக்கத்திற்கு நன்றி. பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் ஏற்கெனவே கூட்டுறவுக் கடன்கள் எல்லாம் ஒத்திவைக்கப்பட்டிருக்கின்றன. கூட்டுறவுக் கடன்கள் ஒத்தி வைக்கப்பட்டிருந்தாலும்கூட கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக அதிகாரிகள் 10 கார், 15 கார்களோடு ஊர்வலமாகச் சென்று அந்த விவசாயிகளிடத்திலே கூட்டுறவுக் கடன்களை வசூல் செய்கிறார்கள். அவர்களைக் கேட்டால் அவர்கள் சொல்லுகிறார்கள், 'எங்களுக்கு அந்தக் கடன்களை வசூல் செய்யக்கூடாது என்பது போன்ற உத்தரவுகள் எதுவும் வரவில்லை' என்று. அதைப்போல பாதிக்கப்பட்ட விவசாயிகளிடத்தில் நில வரியும் வசூல் செய்யப்படுகிறது. விவசாயிகளுடைய நிலைமைகளைக் கருத்தில் கொண்டுதான் 1999-ஆம் ஆண்டு வரையிலே கூட்டுறவுக் கடன்கள் ஒத்திவைக்கப்பட்டன. அப்படி ஒத்திவைக்கப்பட்டிருந்தாலும் இன்றையதினம் மீண்டும் அந்தக் கடன்கள் வசூல் செய்யப்படுகின்றன. எனவே அதைத் தடுத்து நிறுத்தவேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். நிலவரியும் வசூல் செய்யப்படுகிறது, இப்படிப்பட்ட நிலை எங்களுடைய மாவட்டத்தில் இருக்கிறது.

அடுத்ததாக புதிதாக பிரிக்கப்பட்டிருக்கிற மாவட்டங்கள், திராவிட முன்னேற்றக் கழகம் பொறுப்பேற்றதற்குப் பின்னால், இந்த ஆட்சி அமைந்ததற்குப் பின்னால் சில மாவட்டங்கள் பிரிக்கப்பட்டிருக்கின்றன. சாதாரணமாக ஒரு ஆட்சி வந்ததற்குப் பின்னால் 6 மாதத்திற்கு

மக்களுடைய நலத் திட்டங்களை அவர்களால் செய்ய முடியாது. நிர்வாகத்தை ஒழுங்குபடுத்துவதுதான் ஆட்சியாளர்களின் முதல் வேலையாக இருக்கும். ஆனால் மாவட்டங்கள் பிரிக்கப்பட்ட பின்னாலும் அதற்குரிய அலுவலர்களை உடனடியாக நியமிக்காத காரணத்தினால் எந்த ஒரு பணியும் நடைபெறாமல் தேக்கம் ஏற்பட்டிருக்கிறது. ஏ.டி. பன்னீர்செல்வம் மாவட்டம், நாகை மாவட்டம் போன்றவை பிரிக்கப்பட்டு 10 மாதங்கள் ஆகின்றன. அதிலிருக்கும் ஊழியர்களைப் பிரித்ததன் மூலமாக மாவட்ட ஆட்சித் தலைவர், மாவட்டக் காவல் கண்காணிப்பாளர் போன்ற அதிகாரிகள்தான் மட்டும்தான் அங்கே இருக்கிறார்கள். அதற்குரிய பணியாளர்கள் இன்னும் நியமிக்கப்படாத காரணத்தால் எந்த ஒரு திட்டமும், மக்களுடைய பணியும் நிறைவேற்ற முடியாத அளவுக்கு நிலைமை இருக்கிறது. எனவே அதற்குரிய அலுவலர்களை நியமிக்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை நான் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பல்வேறு சாலைகள் செப்பனிடப்பட வேண்டுமென்பதற்காகத் தமிழகத்தில் எல்லா மாவட்டங்களுக்கும் நிதியை ஒதுக்கினார்கள். எங்களுடைய மாவட்டத்திற்குக்கூட 92 இலட்சம் ரூபாய் ஒதுக்கினார்கள். அவர் 1 ரூபாய் ஒதுக்கினால்கூட எங்களுக்கு மனத்திருப்திதான். அவர் முதலமைச்சராக இருந்து அந்த மாவட்டத்திலே செயல்படுவதே எங்களுக்கு மகிழ்ச்சி. அந்த மாவட்டத்திலே அவர் செய்வதும், செய்யாமல் இருப்பதும் அவருடைய பொறுப்பு. நாங்கள் அதற்காகக் கவலைப்படவில்லை. இதுபோன்ற மக்களுடைய பணிகளை உடனடியாகச் செய்யவேண்டும் என்று சொன்னால், பிரிக்கப்பட்டிருக்கிற மாவட்டங்களுக்கு உரிய அலுவலர்களை, அதிகாரிகளை நீங்கள் நியமிக்க வேண்டும். அப்படிச் செய்தால்தான் அதிகாரிகள் அந்தப் பணிகளைச் செய்யமுடியும் என்பதைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதோடு மட்டுமல்லாமல் பல்வேறு குழுக்கள் இன்றையதினம் அமைக்கப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு துறைக்கும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் பல்வேறு குழுக்கள் சட்டமன்றக் கூட்டத்தின்போதும், சட்டமன்றக் கூட்டம் இல்லாதபோதும் அமைக்கப்பட்டிருக்கின்றன. அந்தக் குழுக்கள் அமைக்கப்பட்டதோடு சரி, செயல்படுவதாகத் தெரியவில்லை. அந்தக் குழுவில் சம்பந்தப்பட்டிருக்கிற அதிகாரிகள், தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிற உறுப்பினர்கள் கூடி அது சம்பந்தமாக என்ன ரெவ்யூ



பண்ணியிருக்கிறார்கள், என்ன ஆலோசனை செய்திருக்கிறார்கள் என்று தெரியவில்லை. இதுவரையிலே அப்படி அமைக்கப்பட்டிருக்கிற குழுக்களில் தொழிலாளர் நலத்துறை சார்ந்த அந்தக் குழு மட்டும்தான் சமீபத்திலே கூடி செயல்பட்டிருக்கிறது. அந்தத் துறையில் இருக்கிற நீண்ட காலமாகத் தீர்க்கப்படாத பிரச்சினைகள் விவாதிக்கப்பட்டு, சில பிரச்சினைகளுக்குத் தீர்வும் காணப்பட்டிருக்கிறது: மிகவும் அவசியம் என்று பல்வேறு துறைகளுக்குப் போடப்பட்டிருக்கிற இந்தக் குழுக்கள் அதிகாரிகளால் உடனடியாகக் கூட்டப்பட வேண்டும். அப்படிக் கூட்டி அந்தந்தத் துறை சம்பந்தப்பட்ட பிரச்சினைக்களுக்குத் தீர்வு காணுவதற்கான ஆலோசனைகள் நடத்தப்பட வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அடுத்ததாகக் காவல் துறை. ஏற்கெனவே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். ஆண்களுக்குச் சமமாகப் பெண் காவலர்கள் 5 ஆயிரம் பேர் தேர்ந்தெடுக்கப்படுவார்கள் என்று சொல்லியிருக்கிறார்கள். 1991-92-ஆம் ஆண்டு சீருடைப் பணியாளர்கள் - காவலர்கள் சுமார் 360 பேர் தேர்வு செய்யப்பட்டு பயிற்சி அளிக்கப்பட்டது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கூட இதே அவையிலே அவர்களைப் பற்றி பரிசீலிக்கப்படும் என்று சொல்லி இருக்கிறார்கள். எனவே அதுகுறித்து பரிசீலித்து அவர்களும் தேர்ந்தெடுக்கப்பட வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோன்று இது முக்கியமான பிரச்சினையாக இருக்கிற காரணத்தினால் நான் உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். ஏற்கெனவே இங்கே சென்னையிலே, கொடுங்கையூரிலே வெடிகுண்டு கண்டுபிடிக்கப்பட்டது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் அவர்களை எல்லாம் அழைத்துக் கொண்டுபோய்க் காண்பித்தார்கள். (மணியடிக்கப்பெற்றது) முடித்துவிடுகிறேன். நேற்றையமுன் தினம் கூட திருச்சிக்கு அருகாமையில் இருக்கக்கூடிய துவரங்குறிச்சியில் கார்களில் வெடிமருந்துகள் கடத்தப்பட்டதாகச் சொல்லி 2 நபர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். உண்மையிலேயே காவல் துறையை நாம் பாராட்ட வேண்டும். தொடர்ந்து தமிழகத்தில் இதுபோன்ற சம்பவங்கள் நடக்காமல் இருக்க முயற்சி எடுக்க வேண்டும். தமிழகத்தில் நுணுக்கமான முறையில் ஏதாவது ஒரு கலவரத்தை உண்டுபண்ண வேண்டும், சாதி மூலமாகவோ, மதத்தின் மூலமாகவோ ஒரு பிரச்சினையை உருவாக்க வேண்டும், ஒரு பதட்டமான சூழ்நிலையை உருவாக்க வேண்டும் என்று திட்டமிடுகிற சக்திகளை ஒட்டுமொத்தமாகத் தமிழகத்தில் இருந்து அகற்றக்கூடிய விதத்தில் நீங்கள்

முயற்சிகளைச் செய்ய வேண்டும். காவல் துறையினருக்கு என்ன சலுகைகள் வேண்டுமானாலும் செய்யுங்கள், செய்ய வேண்டும். அதோடு மட்டுமல்லாமல் மதத்தின் சார்பாக, சாதியின் சார்பாக, இனத்தின் சார்பாக நடத்தப்படுகின்ற மாநாடுகளில் அமைச்சர் பெருமக்கள் கலந்து கொள்ள வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன். அப்படிப்பட்ட மாநாடுகளில் அவர்கள் கோரிக்கைகளை வைத்தால் கூடப் பரவாயில்லை. மதத்தின் பெயரால், சாதியின் பெயரால் நடத்தப்படும் மாநாடுகளுக்கு அமைச்சர்களை அழைத்துக் கொண்டு வந்து கோரிக்கை தருகிறார்கள். ஒரு பக்கம் கோரிக்கை தருவதோடு மட்டுமல்லாமல், இன்னொரு பக்கத்தில் தீவிரவாதத்திற்கு அவர்கள் ஆதரவு கொடுக்கின்ற நிலைமைகள் தமிழகத்தில் ஏற்படுகிறது. எனவே அதற்கு வாய்ப்பு இல்லாத அளவுக்கு எந்த ஒரு கட்சியைச் சார்ந்தவர்களாக இருந்தாலும் அதுபோன்ற மாநாடுகளில் கலந்துகொள்ள வேண்டாம் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

பிற்பகல் 12-40

அடுத்து, தமிழகத்தில் இன்று 3 பிரச்சினைகள் இருக்கின்றன. காவிரி நீர்ப் பிரச்சினை இருக்கிறது. 69% இட ஒதுக்கீட்டுப் பிரச்சினை இருக்கிறது. இலங்கைத் தமிழர் பிரச்சினை இருக்கிறது. மேலும் தீர்க்கப்படாமல் இருக்கக்கூடிய ஆசிரியர் பயிற்சி மாணவர்கள் பிரச்சினை இருக்கிறது. தமிழகத்தில் இன்று மூலைக்கு மூலை இயக்கங்கள் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னதுபோல் ஆசிரியர் பயிற்சிப்பள்ளி மாணவர்களுக்கு ஏதாவது ஒரு முடிவைச் சொல்ல வேண்டும். அவர்களுடைய சர்டிபிகேட்டுகளை அவர்களுடைய கையில் கொடுக்க வேண்டும். அவர்கள் ஆசிரியர் பயிற்சி படித்ததற்கான பட்டத்தை நாம் கொடுக்காவிட்டாலும்கூட, அவர்கள் கொடுத்திருக்கின்ற கல்விச் சான்றிதழ்களைத் திருப்பிக் கொடுக்க வேண்டும். அந்த மாணவர்கள் எங்களுடைய கல்விச் சான்றிதழ்களைத் திருப்பிக் கொடுங்கள் நாங்கள் வேறு வேலைக்காவது முயற்சி எடுக்கிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். அந்தச் சான்றிதழ்கள்கூட எங்களுக்குக் கிடைக்கவில்லை என்று அவர்கள் ஆதங்கப்படுகிறார்கள். பழைய சான்றிதழ்களை, அவர்கள் படித்த கல்விச் சான்றிதழ்களை அவர்கள் கொடுத்திருக்கிறார்கள். எனவே, தயவுசெய்து அவர்களுக்கு அந்தக் கல்விச் சான்றுகளைத் திருப்பிக் கொடுப்பது குறித்து நீங்கள் நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.



அடுத்து, மக்கள் நலப் பணியாளர்களை நியமிக்கும்போது 69 சதவீத இட ஒதுக்கீட்டின் அடிப்படையில் அவர்களை நியமிக்க வேண்டுமென்ற கோரிக்கை வந்துகொண்டிருக்கிறது. அதையும் நீங்கள் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டு, பேசுவதற்கு வாய்ப்பளித்த பேரவைத் தலைவர் அவர்களுக்கு நன்றி தெரிவித்து விடைபெறுகிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் அ. செல்லக்குமார், 5 நிமிடங்களில் உரையை முடிக்க வேண்டும்.

**டாக்டர் அ. செல்லக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1997-98-ஆம் ஆண்டுக்கான கூடுதல் செலவுக்கான முன்பண மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்தில் கலந்து கொள்ள வாய்ப்பளித்த தங்களுக்கு நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த அரசு, இந்த ஆண்டுக்கான வரவு—செலவுத் திட்டத்தைத் தாக்கல் செய்கின்றபோது, நீண்ட நெடுங்காலமாக இருந்து வந்த, சிறுதொழில் முனைவோருக்கு அளிக்கப்பட்டிருந்த சலுகைகள், அதிலும் குறிப்பாக விலையிலே முன்னுரிமை என்ற அந்தச் சலுகை அரசாணை எண் 75-ன் மூலமாக ரத்து செய்யப்பட்டிருக்கிற கருத்தினை இந்த மாமன்றத்தில் எடுத்துச் சொல்லி இருந்தோம். அன்று அமைச்சர் அவர்கள் அதற்கு விளக்கம் தருகின்ற போதுகூட இந்தச் சலுகையின் மூலமாக அரசுக்கு ஆண்டுதோறும் 110 கோடி ரூபாய் இழப்பு ஏற்படும் என்று ஒரு தகவலை இந்த மாமன்றத்தில் தந்திருந்தார்கள். அண்மையில் ஒரு பத்திரிகைக்குத் தமிழக அரசினுடைய சிறுதொழில் துறை அமைச்சர் அவர்கள் பேட்டி அளிக்கின்றபோது இந்தச் சலுகையின் மூலமாக அரசுக்கு ஏற்படும் இழப்பு என்பது 50 கோடி ரூபாய் என்ற தகவலைச் சொல்லியிருந்தார்கள். என்னுடைய கருத்து என்னவென்றால், 110 கோடி ரூபாய் இழப்பு இந்த அரசுக்கு ஏற்படவேண்டுமென்று சொன்னால் ஆண்டுதோறும் ஏறத்தாழ 1,500 கோடி ரூபாய்க்கான பொருட்களை வாங்குவதற்கான உத்தரவு இந்த சிறுதொழில் முனைவர்களுக்கு அளிக்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால், அரசு அவர்களிடமிருந்து பெறுகின்ற பொருட்களினுடைய விலை மதிப்பு, ஏறத்தாழ 120 கோடி ரூபாய்தான் ஆண்டுதோறும் பெற்றுக்கொண்டிருக்கிறது என்பதை அரசினுடைய கவனத்திற்குக் கொண்டுவர நான் கடமைப்பட்டிருக்கிறேன். அப்படிப் பெறுகின்றபோது அதன் மூலமாக இந்த 15 சதவீத விலை முன்னுரிமை மூலமாக ஏறத்தாழ 18 கோடி ரூபாய் அரசுக்கு இழப்பு ஏற்படுகிறது. ஆனால் நடைமுறையில் பார்க்கும்போது கடந்த பல ஆண்டுகளாக இந்த விலை முன்னுரிமை சராசரியாக 5 முதல் 8

சதவீதம் என்றுதான் கடந்த காலத்தில் வாங்கப்பட்டிருக்கின்ற பொருட்களுடைய பட்டியலைப் பார்க்கும்போது நம்மால் புரிந்துகொள்ள முடிகிறது. அப்படிப் பார்க்கும்போது ஏறத்தாழ இதில் அரசுக்கு ஏற்படும் இழப்பு என்பது 96 கோடி ரூபாய்தான் இதுவரை ஏற்பட்டிருக்கிறது. தமிழ்நாட்டில் இருக்கின்ற சிறு தொழில் முனைவர்களிடமிருந்து தமிழ்நாடு மின்சார வாரியம் கொள்முதல் செய்வதால் அரசுக்கு அதிலே விற்பனை வரியின் மூலமாக ஏறத்தாழ 4 சதவீதம் வரி அரசுக்கு வருவாயாகக் கிடைக்கிறது. அதை வெளி மாநிலங்களிலிருந்து வாங்குகிறபோது இந்த 4 சதவீத விற்பனை வரி நமது மாநிலத்திற்கு வருவதற்குப் பதிலாக வேறு மாநிலத்திற்குச் செல்லுகிறது.

பிற்பகல் 12-45

அதுபோலத்தான் இந்தப் பொருட்கள் உற்பத்தி செய்வதற்கான மூலப் பொருட்கள் மற்றும் இதர பொருட்களைத் தமிழ்நாட்டிலிருந்து பெறுவதன் மூலமாக மேலும் ஒரு 4% முதல் 8% வரை அரசு கொள்முதல் மீதான வரியாக இன்றைக்குத் தமிழக அரசிற்குக் கிடைக்கின்றது. அது மட்டுமல்லாமல், சிறு தொழில் முனைவோர், மத்திய அரசிற்குச் செலுத்துகின்ற உற்பத்தி வரியில், எக்சைஸ் டூட்டியிலே, ஏறத்தாழ 33% மீண்டும் தமிழக அரசிற்கு அதனுடைய பங்காக வந்து சேருகின்றது. இவற்றையெல்லாம் பார்க்கின்றபோது, விலை முன்னுரிமை, இந்தச் சிறு தொழில் முனைவோர்களுக்கு வழங்கப்படுவதன் காரணமாக, அரசிற்கு ஏற்படுகின்ற இழப்பை விட அரசுக்கு வரியின் மூலமாகக் கிடைக்கின்ற ஏறத்தாழ நான்கு கோடி ரூபாய், ஐந்து கோடி ரூபாய், ஆண்டுதோறும் அரசுக்கு இலாபமாகத் தான் வந்து கொண்டிருக்கின்றது என்பதையும் நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன். இந்த......

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு தவறான எண்ணம் பொது மக்கள் மத்தியிலே வந்து விடக்கூடாது என்பதற்காக நான் ஒரு விளக்கத்தைச் சொல்ல விரும்புகிறேன். மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் செல்லக்குமார் அவர்கள் சொல்வதைப் பார்த்தால், அரசாங்கத்திற்கு அதிகமான இழப்பு ஏற்படாது என்பதைப்போல, ஒரு நான்கு, ஐந்து கோடி ரூபாய்தான் இழப்பு ஏற்படும் என்பதைப் போலச் சொல்கிறார்கள். நான் ஏற்கெனவே சொன்னேன். மின்சார வாரியத்திலே மட்டும் 15% என்று சொன்னால், கிட்டத்தட்ட ஒரு ஆண்டிற்கு, எல்லாப் பொருட்களையும் 1,000 கோடி ரூபாய்க்கு வாங்குகிறார்கள். தமிழ்நாட்டிலுள்ள போக்குவரத்துத் துறை மற்றும் மற்ற துறைகள் எல்லாம் வாங்குவதையும் கணக்கிட்டுப் பார்த்தால்



அந்த 110 கோடி ரூபாய் இழப்பு ஏற்படும் என்று சொன்னேன். மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் செல்லக்குமார் அவர்கள், தனியார் நடத்துகின்ற 'ஸ்மால் ஸ்கேல் இன்டஸ்ட்ரீஸ் யூனிட்' உரிமையாளர்கள் சொல்வதை வைத்து இங்கே சில கருத்துக்களைச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். அதுபற்றி முழு விவரம் வேண்டுமென்றால் மின்வாரியத்திலேயும் மற்ற இலாக்காக்களிடமிருந்து வாங்கி, எந்த அளவிற்குத் தமிழக அரசிற்கு இழப்பு ஏற்படும் என்ற விவரங்களை அளிக்க இந்த அரசு தயாராக இருக்கிறது. ஆனால், நான்கு, ஐந்து கோடி ரூபாய்தான் இழப்பு ஏற்படும் என்கிற வாதம் உண்மையல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**டாக்டர் அ. செல்லக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த 15%-க்கான விலை முன்னுரிமை என்பதன் மூலமாக ஒரு பக்கம் இழப்பு ஏற்படுகின்றது என்பதில் நான் மாற்றுக் கருத்துச் சொல்லவில்லை. நான் சொன்ன கருத்து, அரசுக்கு, அவர்கள் உற்பத்தி செய்கின்ற பொருட்களுக்கு, அவர்கள் கட்டுகின்ற விற்பனை வரியாக இருந்தாலும் சரி, அவர்கள் அதனுடைய மூலப்பொருட்களை வாங்குவதன் மூலமாக அரசுக்குச் செலுத்துகின்ற கொள்முதல் மீதான வரியாக இருந்தாலும் சரி, இவற்றிற்கெல்லாம் மேலாக, மத்திய அரசினுடைய பங்காக நமக்கு மறைமுகமாக வந்து சேருகின்ற அந்த 'எக்சைஸ் டூட்டி'......

**திரு. எஸ். திருநாவுக்கரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது குறித்து, இப்போது விவாதம் நடப்பதால், ஒரே ஒரு கருத்தைச் சொல்கிறேன். அன்றைக்குக்கூட மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் குறித்துக் கொண்டிருந்தார்கள். இதிலே என்ன பிரச்சினை என்றால், இந்த 15% என்பதைக் கூடக் குறைத்துக் கொள்ளலாம். 5% கூட குறைத்துக் கொள்ளலாம். ஆனால், நீங்கள் போட்டு இருக்கின்ற உத்தரவால், இந்த எஸ்.எஸ்.ஐ. யூனிட்-ஐ எல்லாம் மூடக்கூடிய சூழ்நிலை ஏற்படும். இதனால் அங்கு பணியாற்றுகின்ற பணியாளர்கள் பாதிக்கப்படுகின்ற சூழ்நிலை ஏற்படும் என்பது அவருடைய கருத்து. ஏதோ தனியார் சொன்னதால் அல்ல. அதனாலே, தமிழ்நாட்டிலே இருக்கிற சின்ன தொழிற்சாலைகள் எல்லாம் பாதிக்கப்படுகின்ற காரணத்தாலேதான், இந்தப் பிரச்சினை வருகிறது. எனவே, இந்த உச்ச வரம்பை 15% என்கிறதை 2% ஆக வைத்துக் கொள்ளுங்கள், 3%-ஆக வைத்துக்கொள்ளுங்கள், 5%-ஆக வைத்துக் கொள்ளுங்கள். அதன் மூலமாக இழப்பு குறையும். அவர்களிடமிருந்து நீங்கள் வாங்குகிற போது அவர்கள் கட்டுகின்ற வரியினாலே, அரசாங்கத்திற்கு வருமானமும்

வரும். எனவே, இப்படி யோசிக்கலாமா என்பதை, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பரிசீலிக்க வேண்டும் அல்லது சம்பந்தப்பட்ட அமைச்சர்கள் பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எஸ்.எஸ்.ஐ. யூனிட்டுகளுக்கு, இந்த அரசாங்கம் எதுவுமே பொருட்களை வாங்குவதற்கான உத்தரவுகளை வழங்காததைப் போல ஒரு விவாதம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இப்போது அரசு எடுத்திருக்கின்ற முடிவே, 50% பொருட்கள், எஸ்.எஸ்.ஐ. யூனிட் மூலமாகத்தான் வாங்க வேண்டும். மீதியிருக்கக்கூடிய 50% பொருட்கள்தான் ஓப்பன் டெண்டரிலே வாங்க வேண்டும். அந்த ஓப்பன் டெண்டரிலேயும், எஸ்.எஸ்.ஐ. யூனிட்கள் பங்கு பெறுவதற்கு அவர்களுக்கு உரிமையுண்டு. அந்த ஓப்பன் டெண்டர்களிலே எஸ்.எஸ்.ஐ. யூனிட்டுகளைச் சேர்ந்தவர்கள் குறைந்த கட்டணத்திற்குப் பொருட்களை வழங்குவதற்காக ஒப்புக் கொண்டால் அந்த உத்தரவும் அவர்களுக்கே வழங்கப்படும். எனவே, எஸ்.எஸ்.ஐ. யூனிட்டுகளை, இந்த அரசாங்கம் மூடிவிட வேண்டுமென்றோ அல்லது அவர்களுடைய பொருட்களை வாங்கவே கூடாது என்றோ ஒரு முடிவு எடுத்ததாகச் சொல்வது தவறு. அவர்களுக்கு இப்போதும் 50% பொருட்களைத் தமிழக அரசுக்கும் மற்ற துறைகளுக்கும் விநியோகிக்க உரிமை இருக்கின்றது. ஓப்பன் டெண்டரிலே பங்கு கொள்வதற்கும் உரிமை இருக்கிறது. எனவே, பிரச்சினை எங்கே வருகிறதென்றால், கூடுதலாக 15% அவர்களுக்குச் சலுகையாகக் கொடுக்க வேண்டி இருக்கிறது. ஒரு பொருள் 100 ரூபாய் என்றால், எஸ்.எஸ்.ஐ. யூனிட் சர்ட்டிபிகேட் வைத்திருக்கிற ஒரே காரணத்தினால் அந்த 100 ரூபாய் பொருளுக்கு, 115 ரூபாய் அவர்களுக்குக் கொடுக்க வேண்டியிருக்கின்றது. இதனுடைய விளைவு சில யூனிட்டுகள் இங்கே இயங்காமலேயே, பக்கத்திலே இருக்கக்கூடிய மாநிலத்திலே போய், அந்தப் பொருட்களை 15% இலாபம் வைத்து நமக்கு விநியோகிக்கக் கூடிய ஒரு நிலையும் இருக்கின்றது. இதையெல்லாம் எண்ணிப்பார்த்துத்தான், ஒரு ஊழலற்ற அரசு நடத்த வேண்டும் என்றும் சொல்கிறோம், சிக்கனமாக நடத்த வேண்டும் என்றும் சொல்கிறோம், இப்படிப்பட்ட சூழ்நிலையிலே அரசாங்கப் பணம் விரயமாகக் கூடாதே என்ற நல்ல எண்ணத்தில்தான், மக்களுடைய வரிப் பணத்தைப் பாதுகாக்க வேண்டும் என்ற நல்ல எண்ணத்தில்தான் இந்த அரசு அந்த முடிவை எடுத்திருக்கிறது.



பிற்பகல் 12-50

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** டாக்டர் செல்லக்குமார், உங்களுடைய உரையை ஒரு நிமிடத்திலே முடித்துக் கொள்ளுங்கள்.

**டாக்டர் அ. செல்லக்குமார் :** பேரவைத் தலைவர் அவர்களே, நான் என்னுடைய கருத்துக்கே இன்னும் வரவில்லையே ?

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நீங்கள், உங்களுடைய கருத்துக்கு வரவில்லை என்றால் நான் என்ன செய்யமுடியும்? என் பேரில் குறை இல்லை. நான் 12-40-க்கு உங்களுக்கு அனுமதி கொடுத்து, 5 நிமிடம் பேசுங்கள் என்றேன். உங்களுடைய கருத்துக்கு வந்தாலும், வராவிட்டாலும் நீங்கள் இன்னும் ஒரு நிமிடத்தில் உங்களுடைய உரையை முடித்துக் கொள்ள வேண்டும். . . .

**திரு. எஸ். திருநாவுக்கரசு :** பேரவைத் தலைவர் அவர்களே, பாயிண்ட் ஆஃப் ஆர்டர்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பாயிண்ட் ஆஃப் ஆர்டர் எல்லாம் வராது. நீங்கள், முதலமைச்சர் பதில் சொல்லும்போது பார்த்துக் கொள்ளுங்கள். (குறுக்கீடு) நீங்கள் உட்கார வேண்டும். இன்றைக்கு கில்லட்டின் நேரம். தயவுசெய்து உட்காருங்கள். டாக்டர் செல்லக்குமார் இன்னும் ஒரு நிமிடத்தில் கட்டாயம் உங்கள் உரையை முடித்துக் கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் நானே உங்கள் உரையை நிறுத்தி விடுவேன். ஒரே ஒரு நிமிடம் கொடுக்கிறேன், உரையை முடித்து விடுங்கள்.

**டாக்டர் அ. செல்லக்குமார் :** பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சொல்லுகின்ற கருத்து தப்பாக வந்து விடக்கூடாது என்பதற்காக நான் சொல்லுகிறேன். ஏற்கெனவே ஒருமுறை சொல்லுகின்றபோதும், சில தனியார்களுக்காக நாங்கள் வாதிடுகின்றோம் என்று சொன்னார்கள். இப்போதும் அதேபோன்ற ஒரு கருத்து வருகின்ற காரணத்தாலே, அதைத் தெளிவுபடுத்த வேண்டிய கட்டாயம் எங்களுக்கு இருக்கிறது. இங்கே அமைச்சர் அவர்கள் சொன்ன கருத்தின் அடிப்படையில் சிலர் இங்கே தொழிற்சாலைகளை நடத்தாமல், வெளிமாநிலங்களில் இருந்து பொருட்களை வாங்கிவந்து, அதன் மூலமாகச் சலுகைகளைப் பெறுகின்றார்கள் என்று சொன்னால், அதைக் கண்காணிப்பதற்கு அரசு நிர்வாகம் இருக்கிறது. எங்களுடைய கருத்து என்னவென்றால், இங்கே சிறு தொழில்கள் நலிவடைந்து விடுவதன் மூலம் தொழிலாளர்கள்

பாதிக்கப்பட்டு விடக்கூடாது என்பதுதான். அரசு, ஏற்கெனவே இந்தச் சலுகைகளை அளித்தாலும், அவர்களுக்கு வருகின்ற உற்பத்தி வரி, விற்பனை வரி, கொள்முதல் வரி போன்றவை மூலமாக இலாபம்தான் வந்து கொண்டிருக்கிறது என்பதுதான் எங்களுடைய கருத்து. அரசுக்கு அதனால் இழப்பு ஏற்படவில்லை. மறைமுக வரிகள் மூலமாக மீண்டும் அரசுக்கே அந்த வருமானம் வந்து கொண்டிருக்கிறது. எனவே, எங்களுடைய கருத்து என்னவென்றால், பெரிய பெரிய தொழிலதிபர்களுக்குப் பல சலுகைகள்—அவர்களுக்கு இடங்கள் அளிப்பதாக இருந்தாலும் சரி—பல்வேறு சலுகைகளை நாம் அளித்துக் கொண்டிருக்கிறோம். காரணம், தொழிற்சாலைகள் இந்த மாநிலத்தில் வரவேண்டும் என்பதற்காக, நம்முடைய இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு வேண்டும் என்பதற்காக. அந்த அடிப்படையிலேதான் இந்தச் சிறு தொழிற்சாலைகள் நலிவடைந்து விடக்கூடாது, அதிலே பணியாற்றுகின்ற தொழிலாளர்கள் வாழ்க்கை இருண்டுபோய் விடக்கூடாது என்ற எண்ணத்தோடு, முதலமைச்சர் அவர்கள் அந்த பதினைந்து சதமானத்தையாவது, பல அரசுகள் அளித்து வந்த சலுகைகளை முழுமையாக அளிக்காவிட்டாலும்கூட, அவர்களுக்குக் குறைந்த பட்சம் ஒரு சிறு சலுகையாவது, 5 சதமானம் அல்லது 6 சதமானம், அந்த விற்பனை வரியிலே முன்னுரிமை வழங்க வேண்டுமென்று நான் தமிழ் மாநிலக் காங்கிரஸ் கட்சியின் சார்பிலே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : அவ்வளவுதான், நீங்கள் உட்காருங்கள்.

**டாக்டர் அ. செல்லக்குமார் :** பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியைப் பற்றி . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அதை நீங்கள், அடுத்த மானியக் கோரிக்கையிலே பேசும்போது சொல்லுங்கள், இப்போது உட்காருங்கள், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையின் முன்னால் வைக்கப்பட்டுள்ள துணை மானியக் கோரிக்கை மீது இன்று தமிழ் மாநிலக் காங்கிரஸ் சார்பாக திரு. சி. ஞானசேகரன், டாக்டர் அ. செல்லக்குமார், திராவிட முன்னேற்றக் கழகம் சார்பாக திரு. மு.பெ. சாமிநாதன், திருமதி கோமதி சீனிவாசன், திரு. ஏ. ராசேந்திரன், பாரதீய ஜனதா கட்சி சார்பாக திரு. சி. வேலாயுதன், இந்திய தேசிய லீக் சார்பாக திரு. அ.வ. அப்துல் நாசர், அ.தி.மு.க. சார்பாக திரு. எஸ். திருநாவுக்கரசு, இந்திய கம்யூனிஸ்ட்



கட்சியின் சார்பாக திரு. ஜி. பழனிசாமி ஆகிய 9 பேர்கள் உரையாற்றி, பல்வேறு கருத்துக்களை எடுத்துக் கூறியிருக்கிறார்கள். இது துணை மானியக் கோரிக்கை என்ற அளவில் மிக விரிவாக விளக்கங்களைத் தருகிற வகையிலே அவர்களுடைய உரையும் அமைவதற்கு வகையில்லை; என்னுடைய உரையும் அவ்வாறு அமைவதற்கு வழியில்லை என்பதை இந்த அவை மிக நன்றாக அறியும். இந்தத் துணை மானியக் கோரிக்கை பற்றிக்கூட இன்னும் பொதுவாக அவையிலே வருகின்ற பல்வேறு கோரிக்கைகள், சட்டங்கள், மசோதாக்கள், இவைகளைப் பற்றியெல்லாம் கூட நாம் இன்னும் கற்க வேண்டிய செய்திகள் நிரம்ப இருக்கின்றன. இந்த அவையிலே பெரும்பாலான உறுப்பினர்கள் புதியவர்கள். சிலர்தான் பழைய உறுப்பினர்கள். நீண்டகால உறுப்பினர்கள், 10 ஆண்டு காலம், 15 ஆண்டு காலம் உள்ள உறுப்பினர்கள். எனவே, நான்கூட நண்பர் சொக்கர் அவர்களிடத்திலே ஒரு நாள் விவாதித்துக் கொண்டிருந்தபோது, அவரும் கேட்டார். நானும் கூட, பேரவைத் தலைவரைக் கலந்து கொண்டு, அவை முன்னவரைக் கலந்து கொண்டு, சொல்வதாகக் கூறியிருக்கிறேன். நம்முடைய சட்டமன்ற உறுப்பினர்களுக்கெல்லாம், சட்டமன்றத்திலே ஒவ்வொரு பொருள் குறித்தும் எவ்வாறு விவாதிப்பது, எப்படி உரை நிகழ்த்துவது, எப்படி அந்தப் பொருள்களை புரிந்துகொள்வது என்பது குறித்து ஒரு வகுப்பு நடத்தலாம், சட்டமன்றக் கூட்டத் தொடர் நீண்டகாலம் நடைபெற்றுக் கொண்டிருக்கும்போது, அத்தகைய வகுப்புகளை நடத்தலாம் என்றும், அது அவர்களைக் கவரத்தக்க இடமாக மாமல்லபுரம் போன்ற இடமாகக்கூட இருக்கலாம் என்று கூடப் பேசி, அதைத் தங்களுடைய முடிவுக்கும், அவை முன்னவர் மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் ஆகியோர்களுடைய, மற்றும் உள்ள கட்சித் தலைவர்களுடைய முடிவுக்கும் விடலாம் என்று யோசித்துக் கொண்டிருக்கின்றோம். ஏனென்றால், நான் யாரையும் புண்படுத்துவதாகக் கருதிக்கொள்ளக் கூடாது. மேலும் நாமெல்லாம் பண்பட வேண்டும் என்பதற்காகச் சொல்லப்பட்ட கருத்து இது. சிந்தித்துக் கொண்டிருக்கின்ற கருத்து இது.

பிற்பகல் 12-55

அந்த வகையில் இன்றைக்குக்கூட பார்த்தால் இந்தத் துணை மானியக் கோரிக்கைக்கு 79 வெட்டுத் தீர்மானங்கள் தரப்பட்டுள்ளன. அதிலே நம்முடைய இந்திய தேசிய லீக் கட்சியின் சார்பாக திரு. நாசர் அவர்கள் 4 வெட்டுத் தீர்மானங்கள்; இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக திரு. சிவபுண்ணியம் அவர்கள் 4 வெட்டுத் தீர்மானங்கள்; பாட்டாளி

மக்கள் கட்சியின் சார்பாக திரு. ஜி.கே. மணி அவர்கள் 8 வெட்டுத் தீர்மானங்கள் ; தமிழ் மாநிலக் காங்கிரஸ் கட்சியின் சார்பாக திரு. ஞானசேகரன் அவர்கள் 10 வெட்டுத் தீர்மானங்கள் ; பேராசிரியர் தீரன் அவர்கள் 12 வெட்டுத் தீர்மானங்கள் ; எல்லோரையும் மிஞ்சக்கூடிய அளவிற்கு திரு. இ. கணேசன் அவர்கள் 41 வெட்டுத் தீர்மானங்களையும் தந்திருக்கின்றார்கள். இந்த வெட்டுத் தீர்மானங்கள்—ஏறத்தாழ 79 வெட்டுத் தீர்மானங்கள் வந்திருக்கின்றன என்றால் பெரும்பாலானவைகள் வரக்கூடிய காலங்களில் பல தேவைகளை, அவரவர்களுடைய தொகுதியில் அல்லது மாநிலத்தில் நிறைவு செய்ய வேண்டும் என்று கோரி விடுக்கப்பட்ட வெட்டுத் தீர்மானங்களேயல்லாமல், இந்தத் துணை மானியக் கோரிக்கையிலே பேச வேண்டிய கருத்துக்கள் அடங்கிய வெட்டுத் தீர்மானங்களாக அவைகள் இல்லை. இருந்தாலும் கூட, இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டு தங்களுடைய தொகுதிகளைப் பற்றி இங்கே உரையாற்றிய உறுப்பினர்கள் எல்லாம் எடுத்துக் கூறியிருக்கின்றார்கள். தொகுதியைப் பற்றி பேசாத ஒரே ஒரு சட்டமன்ற உறுப்பினர் இன்றைக்கு செல்லக்குமார் ஒருவர்தான். இன்னொரு நாள் பேசுவார். (குறுக்கீடு) நான் அந்தத் தொகுதி மக்களிடத்திலே (குறுக்கீடு) இருங்க சார் (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு முதல்வர் அவர்கள், உறுப்பினர் செல்லக்குமாரைப்பற்றி நல்லதுதான் சொல்கிறார்கள். ஆகவே திரு. செல்லக்குமார், உட்காருங்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி :** உங்களைப் பாராட்டிச் சொல்வதைக்கூட உங்களால் புரிந்து கொள்ள முடியவில்லை பாராட்டுவதையே புரிந்துகொள்ள முடியவில்லையே, என்ன செய்வது, அவ்வளவு கோபத்திலே இருக்கிறார். நான் அதைப் பாராட்டுகிறேன். ஆனால் தொகுதியைப் பற்றி பேசிய உறுப்பினர்களுடைய கருத்துக்களை நான் இன்றைக்கு அலட்சியப்படுத்திவிட விரும்பவில்லை. அவர்களுக்குப் பதில் சொல்லாவிட்டால் அவர்கள் மனம் கஷ்டப்படும் என்பதற்காக ஒன்றிரண்டை இங்கே நான் கூறக் கடமைப்பட்டிருக்கின்றேன். குறிப்பாக, பொதுவாக நம்முடைய ஞானசேகரன் அவர்கள் . . .

**டாக்டர் அ. செல்லக்குமார் :** பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு விளக்கத்தைச் சொல்ல விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நீங்கள் முதலிலே உட்காருங்கள். நான் சொல்கிறேன். (குறுக்கீடு) இல்லை, இல்லை. திரு.. செல்லக்குமார்



நான் சொல்கிறேன் முதலில் உட்காருங்கள். என்னை வந்து பார்த்து, நீங்கள் பேச அனுமதி கேட்கிறபோது, 5 நிமிடம் என்றீர்கள் ; அப்புறம் 10 நிமிடம் பேசியிருக்கிறீர்கள். பேசி முடிக்கிறபோது தொகுதியைப் பற்றிப் பேசுவதற்கு வாய்ப்புக் கிடைக்கவில்லை என்று சொல்வது, இந்த மரபே முறையற்றது. நீங்கள் தொகுதி விஷயமாகப் பேச வேண்டுமென்றால், உங்களுக்குக் கொடுக்கப்பட்ட 5 நிமிடத்தில் பேசியிருக்க வேண்டும். இப்போது, பொதுப் பிரச்சினையைப் பற்றி நீங்கள் பேசியதற்காக, மாண்புமிகு முதல்வா அவர்கள் உங்களுக்குப் பாராட்டு தெரிவித்ததாக நான் கருதுகிறேன். இதிலே போய் பாயின்ட் ஆஃப் ஆர்டர் என்ன இருக்கிறது? மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி :** பேரவைத் தலைவர் அவர்களே, மீண்டும் சொல்கிறேன். பாராட்டுதான். அவர் இந்த அவையிலே எத்தனையோ முறை, இந்தக் கூட்டத் தொடரிலே கூட தொகுதி பற்றிப் பேசியிருக்கிறார். இன்னும் பல நேரங்களில் பேச இருக்கிறார் என்று நான் அவருடைய தொகுதி மக்களுக்கு உறுதியளிக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன், அவர் சார்பாக. எனவே நம்முடைய ஞானசேகரன் அவர்கள் இங்கே உரையாற்றியபோது அவரும், நம்முடைய பழனிசாமி பேசும்போது அவர்களும் நியாயவிலைக் கடைகளிலே அரிசி தருவது பற்றி எடுத்துச் சொன்னார்கள். இப்போது 20 கிலோ தருகின்ற இதே அளவுக்கு, அங்கே இரண்டு பேராக இருந்தாலும், 3 பேராக இருந்தாலும் தரப்பட வேண்டுமென்று சொன்னார்கள். இருக்கின்ற கஷ்ட நிலைகளை நாம் உணர வேண்டும். மத்திய அரசு ஒரு புதிய ஏற்பாடு இந்த நியாய விலைக் கடைகளிலே கொண்டு வந்து, எந்த அளவிற்கு அரிசி அளவைக் குறைத்திருக்கிறது என்பதையும், நாம் அப்படிக் குறைப்பதற்கு முற்படாமல், அதைப்போல விலையைக் கூட ஏற்றித் தருவதற்கு முற்படாமல் பழைய விலையிலேயே அரிசியைத் தருவது என்று இந்த அவையிலே, நிதிநிலை அறிக்கையிலே நான் அறிவித்து இருக்கின்றேன். இருந்தாலும்கூட 8 கிலோ ஆகிவிடுமோ, 4 கிலோ ஆகிவிடுமோ என்கின்ற அச்சம் பழனிசாமி அவர்களுக்கோ, ஞானசேகரன் அவர்களுக்கோ நிச்சயமாகத் தேவையில்லை என்று நான் தெரிவித்துக் கொள்கின்றேன். அதிகபட்சம் இப்போது தரப்படுகின்ற 20 கிலோ அரிசி தரப்படும் ; குறைந்தபட்சம் 8 ஆகவோ, 6 ஆகவோ இருக்காது ; குறைந்தபட்சம் நிச்சயமாக 12 கிலோவாக இருக்கும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) 4 பேராக இருந்தால் 16 கிலோ தான். ஏனென்றால் 4 x 4 = 16 என்கிறபோது, 4 x 5 =20 என்பது அதிகபட்சம் 4 x 4 =16 என்ற அளவுக்கு

இருக்கும், 3 பேரும் ஒரு குழந்தையும் இருந்தால் 14 கிலோ - ஃபோர்ட்டீன் கிலோஸ், என்ற அளவுக்கு வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

பிற்பகல் 1-00

புறம்போக்கு நிலங்களை ஏழைகட்கு விநியோகிக்க வேண்டும் என்ற கருத்தை ஞானசேகரனும் மற்றும் நண்பர் வேலாயுதனும் இங்கே எடுத்துரைத்தார்கள். திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பில் இருந்தபோதெல்லாம் ஏழைகளுக்கு புறம்போக்கு நிலங்களை, அரசுக்கு உரிய நிலங்களை வழங்குவதில் என்றைக்கும் தயக்கம் காட்டியது இல்லை. அதுமாத்திரமல்ல, பட்டா நிலங்களைக் கூட அவர்களுக்குத் தருவதிலே எந்த அளவுக்குச் செம்மையாகச் செயல்பட்டு இருக்கிறது திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி என்பதை பேசிய நண்பர்கள் நன்றாக அறிவார்கள். விவசாயத் தொழிலாளர்களுக்குக் குடியிருப்பு மனை சொந்தமாக்கப்பட வேண்டும் என்பதற்காக, தமிழ்நாட்டிலே, குறிப்பாக தஞ்சைத் தரணியில், திருச்சி பகுதியிலே எவ்வளவு கடுமையான போராட்டங்கள் எல்லாம் நடைபெற்றன என்பதும், விவசாயத் தொழிலாளர்களுடைய படை திரட்டி அன்றைக்கு கம்யூனிஸ்ட் இயக்கம் எவ்வளவு பெரும் போராட்டத்தை நடத்தியது என்பதையும் நாடு மிக நன்றாக அறியும். ஆனால், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி அமைந்த பிறகுதான், நான் முதலமைச்சராக பொறுப்பேற்ற காலத்தில் குடியிருப்புமனை சட்டம் விவசாயத் தொழிலாளர்களுக்கு அவரவர்கள் குடி இருக்கின்ற இடம் சொந்தம் ஆக்கப்படும் என்று அறிவித்தபோது தான் கம்யூனிஸ்ட் கட்சியினுடைய மாபெரும் தலைவர் மணலி கந்தசாமி, அந்தக் குடியிருப்பு மனைகளை வழங்கிய விழாவிலே குறிப்பிட்டார், பல்லாயிரக் கணக்கான விவசாயப் பெருங்குடி மக்களும், கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்களும் போராடிப் போராடி, எவ்வளவோ ரத்த ஆறு ஓடியும்கூட நிறைவேற்ற முடியாத இந்தச் சாதனையை ஒரு சொட்டு மையில் கருணாநிதி நிறைவேற்றி விட்டார் என்று மணலி கந்தசாமி குறிப்பிட்டது (மேசையைத் தட்டும் ஒலி), அதுவும் திருத்துறைப்பூண்டி கூட்டத்திலேதான்—பழனிசாமி எல்லாம் இன்னும் சிறுவர்களாக இருந்து கலந்துகொண்ட கூட்டம் அது; என்பது எனக்கு நன்றாக நினைவு இருக்கிறது.

வேலாயுதன் அவர்கள் இங்கே பேசும்போது மரப்பட்டா வரி உயர்த்தப்பட்டு இருக்கிறது; அது குறைக்கப்பட வேண்டும் என்று சொன்னார். அவருக்கு நான் நினைவுபடுத்துகிறேன். 30-8-1996-ல் அரசு



ஆணை 864-ன் படி ஏற்கெனவே அ.தி.மு.க. ஆட்சியில் உயர்த்தப்பட்ட அந்த வரி ரத்துச் செய்யப்பட்டுவிட்டது என்பதை நான் வேலாயுதன் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கோமதி சீனிவாசன் வலங்கைமானுக்கு சர்க்கரை ஆலை வேண்டும் என்றார்கள். திருநாவுக்கரசு அவர்கள் அறந்தாங்கி சர்க்கரை ஆலை என்ன ஆயிற்று என்று கேட்டார்கள். உங்களுடைய ஆட்சியிலே கிடைக்காத அந்த சர்க்கரை ஆலை அறந்தாங்கியில் நிச்சயமாக வரும் என்ற நம்பிக்கையை அவருக்கு நான் தெரிவித்தேன்; தெரிவித்ததற்கு இணங்க, நான் அவருக்குச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன், அறந்தாங்கியில் ஈ.ஐ.டி. பாரி கம்பெனி சர்க்கரை ஆலை அமைக்க 10-3-1997-அன்று மத்திய தொழில் அமைச்சர் முரசொலி மாறன் முயற்சியின் காரணமாக நடைபெற்ற மத்திய லைசென்ஸிங் கமிட்டி முடிவு செய்து தமிழக அரசுக்கு அறிவித்து இருக்கிறது என்ற மகிழ்ச்சிகரமான செய்தியை (மேசையைத் தட்டும் ஒலி) திருநாவுக்கரசு அவர்களுக்கு இந்த அவையில் நான் கூறிக்கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன். வலங்கைமான் மற்றும் உள்ள இடங்களில் சர்க்கரை ஆலை வருவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்றுக் கொண்டு இருக்கின்றன. அதுவும் விரைவில் நிறைவேறும் என்பதையும் நான் எடுத்துக்காட்டக் கடமைப்பட்டு இருக்கின்றேன்.

திருநாவுக்கரசு பேசும்போது சொன்னார், இந்தத் துணை மானியக் கோரிக்கையைப் பார்த்தால், 1163 கோடி வருவாய் கணக்கு, 678 கோடி மூலதன கணக்கு, இரண்டும் சேர்ந்தால் 1841 கோடி ; இதுவே கிட்டத்தட்ட ஒரு பட்ஜெட் மாதிரி இருக்கிறது என்று சொன்னார். இதுவே பட்ஜெட் மாதிரி என்று சொன்னால், 1991-93 அ.தி.மு.க. ஆட்சியில் துணை மானியக் கோரிக்கை 3640 கோடி ரூபாய்க்கு இருந்ததே (மேசையைத் தட்டும் ஒலி), அது எது மாதிரி என்று திருநாவுக்கரசு தான் எனக்குச் சொல்ல வேண்டும். (குறுக்கீடு) (சிரிப்பு) சொன்னால் (குறுக்கீடு) அப்போது நான் இல்லையென்பார். பொதுவாக நிதி ஆண்டு என்பது, ஏப்ரல் 1 முதல் மார்ச் இறுதி வரையிலே தான் நிதி ஆண்டு கணக்கிடப்படுகிறது. ஆனால் இந்த ஆட்சி, நாமெல்லாம் சட்டமன்றத்திற்கு வந்து, நாங்கள் ஆட்சிக்கு வந்து மே 13-லிருந்து மே 13 வரை தான் ஓராண்டு நிறைவு அடைகிறது ; எனவே இன்னும் ஓராண்டு நிறைவு அடையவில்லை. நிதி ஆண்டு ஏறத்தாழ நிறைவடைகின்ற கட்டத்தில் இருக்கின்றது. ஆனால் நாங்கள் ஆட்சிக்கு வந்தது மே மாதத்தில்தான் நிறைவடைகின்றது. எனவேதான் நம்முடைய

பழனிசாமி அவர்கள் குறிப்பிட்டதைப் போல, அறிவிக்கப்பட்ட தொகைகள் விரைவிலே ஒதுக்கப்படமுடியாத ஒரு சூழ்நிலை. காலங்காலமாகப் பல அரசுகளில் இந்தத் தாமதம் அதிகாரிகளால் ஏற்படலாம். வருங்காலத்திலே இந்த ஆட்சியிலே நிச்சயமாக இந்தத் தாமதம் ஏற்படாது என்ற உறுதியை நான் இந்த அவைக்குத் தெரிவித்துக் கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி).

பிற்பகல் 1-05

ஆனால் கடந்த காலங்களில், இந்த பத்து மாதங்களிலே நாம் மே மாதம் ஆட்சிக்கு வந்தோம் என்றால், ஜூன், ஜூலை மாதங்களில் சட்டமன்றம் நடைபெற்றது, ஆளுநர் உரை நடைபெற்றது, நிதிநிலை அறிக்கை விவாதங்கள் நடைபெற்றன. அதற்குப் பிறகு உள்ளாட்சி மன்றங்களின் தேர்தல்கள் நடைபெற்றன. வெள்ளச் சேதங்கள், வெள்ள நிவாரணத்திற்காக நாம் நம்முடைய பணிகளை வேறு முனையிலே திருப்ப வேண்டிய அவசியம், ஆக இவைகள் எல்லாம் நடைபெற்ற காரணத்தால், உடனுக்குடன் அறிவிப்புகள் நடைமுறைக்கு வருவதற்கான நிதி ஒதுக்கீடுகளைச் செய்யமுடியாமல் போனது என்பது உண்மைதான். இருந்தாலும் கூட, எவ்வளவு சுமைகள் எல்லாம் நம்முடைய தலையில் வந்து விழுந்தன என்பதை எண்ணிப் பார்க்கவேண்டும்.

13-5-1996-லே நாம் ஆட்சிக்கு வருகின்றோம். தொகுப்பு வீடுகளைப் பொறுத்தவரையில் - ஆதிதிராவிடர்களுக்காகக் கட்டப்படுகின்ற இலவச கான்கிரீட் வீடுகளைப் பொறுத்தவரையில், 13-5-96-ல் கட்டாமல் விடப்பட்டிருந்த தொகுப்பு வீடுகளின் எண்ணிக்கை 80,824. அறிவிக்கப்பட்டு, ஆனால் கட்டப்படாமல் விடப்பட்டிருந்த தொகுப்பு வீடுகளுடைய எண்ணிக்கை, 80 ஆயிரத்து 824. இந்த ஆட்சியில் அந்த 80 ஆயிரத்து 824 தொகுப்பு வீடுகளைக் கட்டத் தொடங்கி, இந்த ஒன்பது மாதங்களில் அப்படிக் கட்டி முடித்த வீடுகளுடைய எண்ணிக்கை 49,039. அதிலும் மீதி இருக்கின்ற வீடுகள் 31,785. இருக்கின்ற சுமையையே இறக்க முடியாமல் இருக்கின்றபோது, நாம் புதிதாக இப்போது 1996-97-ல் அறிவித்திருப்பது 71,598 வீடுகள். அதிலே முடிக்கப்பட்டவை 5,000, இதைக் கழித்தால் 66,598. இந்த 66,598-ஐயும் ஏற்கெனவே பழைய ஆட்சியிலே விட்டுப்போய் நாம் கட்டி முடித்தும் இன்னும் மீதி இருக்கின்ற வீடுகள் 31,785-ஐயும் சேர்த்தால், இன்னும் கட்டப்படவேண்டிய வீடுகள் 98,383 வீடுகள். ஆக, 1996 வரையிலேயும் பழைய பாக்கியில் 80,824 இருந்ததால், இப்போது அந்த எண்ணிக்கை 98,383 என்று இருக்கின்றது. இவைகள் இன்னும் இரண்டு அல்லது மூன்று மாதங்களிலே கட்டி



முடிக்கப்படும் என்ற உறுதியை நான் இந்த அவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி). இவைகள் கட்டி முடிக்கப்பட்டவுடன், 1997-98 ஆம் ஆண்டுக்கான வீடுகள் கட்டும் பணி அதற்குப் பிறகு தொடரும் என்பதையும் நான் இந்த அவைக்குத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

இந்த அளவுக்கு துணை மானியத்தில் நிதி ஒதுக்கீடு ஏறத்தாழ 1,600 கோடி அளவுக்கு வந்ததற்கு என்ன காரணம் என்பதைப் பார்த்தால், திருநாவுக்கரசு அவர்கள் சுட்டிக்காட்டியதைப் போல, வெள்ள நிவாரணத்திற்குக் கிட்டத்தட்ட 241 கோடி ரூபாய் நாம் ஒதுக்க வேண்டியதாகிவிட்டது. 1,000 கோடி ரூபாய் சேதம் என்று சொன்னீர்களே, 241 கோடிதானே ஒதுக்கியிருக்கிறீர்கள் என்று கேள்வி கேட்டால், சேதத்தின் மதிப்பு என்பது வேறு, நிவாரணத்திற்காகத் தேவைப்படுகின்ற தொகை என்பது வேறு என்பதுதான். சேத மதிப்பு நிறைய ஆகியிருக்கலாம். ஒரு வீடு இடிந்துவிட்டால் 1,000 ரூபாய் தான் நிவாரணம் தருகிறோம் என்றால், அந்த ஆயிரம் ரூபாய்தான் அந்த வீட்டின் மதிப்பா ? இல்லை. மதிப்பு ரூ.5,000 அல்லது ரூ.6,000 என்று இருக்கலாம். நாம் நிவாரணமாக ரூ.1,000 தருகின்றோம். இதற்குப் பெயரே நிவாரணம்தான். அதைப்போலத்தான் ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பில் சேதம் ஏற்பட்டிருந்தாலும் கூட, 241 கோடி ரூபாயை நாம் செலவழித்து இருக்கின்றோம். வெள்ளப்பெருக்கு 6-12-1996-ல் தொடங்கி, 16-12-1996 வரையிலே அடாத மழையும் பெருங்காற்றும் வீசியது. பாதிக்கப்பட்ட மாவட்டங்கள் என்று எடுத்துக்கொண்டால் அண்ணா மாவட்டம், எம்.ஜி.ஆர். மாவட்டம், சென்னை மாவட்டம், விழுப்புரம்-ராமசாமி படையாட்சியார் மாவட்டம், திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டம், தென்னாற்காடு-வள்ளலார் மாவட்டம், நாகை-காயிதேமில்லத் மாவட்டம், திருவாரூர்-ஏ.டி.பன்னீர்செல்வம் மாவட்டம், தஞ்சாவூர் மாவட்டம் ஆகிய இவைகள் எல்லாம் பெருமளவு பாதிக்கப்பட்டன. வட ஆற்காடு-அம்பேத்கர் மாவட்டம், தருமபுரி மாவட்டம், சேலம் மாவட்டம், திருச்சி முத்தரையர் மாவட்டம், பெரம்பலூர் திருவள்ளுவர் மாவட்டம், புதுக்கோட்டை மாவட்டம் இவைகள் எல்லாம் வெள்ளத்தால் ஓரளவு பாதிக்கப்பட்டன. வெள்ள நிவாரண உதவி நிதி பற்றிக் கேட்டார்கள். 13-12-96-ல் பிரதமர் அவர்களுக்கு ரூ.200 கோடி கேட்டுக் கடிதம் எழுதினேன். 21-12-96-ல் பிரதமர் ஒசூரில் 25 கோடி ரூபாய் அறிவித்தார். 22-12-96-ல் மத்திய விவசாயத் துறை அமைச்சர் திரு. மிஸ்ரா அவர்கள் தமிழகத்திற்கு வந்தார். அவரைத் தொடர்ந்து 28, 29, 30 தேதிகளில் ஒரு குழுவும் வந்தது. அந்தக் குழு என்னையும் சந்தித்தது. விவசாய

அமைச்சர் மிஸ்ரா அவர்களும் என்னைச் சந்தித்தார். பல தலைவர்களையும் சந்தித்தார். அந்தக் குழு எல்லோரையும் சந்தித்தது. அதற்கு பிறகு கூட, 6-1-97, 3-2-97, 27-2-97 ஆகிய நாட்களில் அமைச்சர்களுக்கும், மத்திய அரசுக்கும் கடிதங்கள் இந்த நிவாரணத் தொகையை நினைவூட்டி எழுதப்பட்டன. இவ்வளவுக்கும் பிறகு 10-3-97 தேசிய துயர்த் துடைப்பு நிதிக் குழுவிலே 25 கோடி ரூபாய் அனுமதிப்பதாக முடிவெடுத்து நேற்று அந்த 25 கோடி ரூபாய் நம்முடைய கணக்கிலே அனுப்பப்பட்டு விட்டதாக நேற்றைக்குத் தான் செய்தி வந்திருக்கிறது. கேட்டது 200 கோடி ரூபாய், அதற்கு எவ்வளவு கடிதப் போக்குவரத்துக்கள், எவ்வளவு அலைச்சல், எவ்வளவு கஷ்டம் - அதற்கு பிறகும் 25 கோடிதான் வந்திருககிறது என்றால் மத்தியிலே இருக்கிற அதிகாரங்கள் மாநிலங்களுக்குப் பரவலாக்கப்பட வேண்டுமென்ற நம்முடைய கருத்தை மேலும் வலுப்படுத்துகிற வகையிலேதான் இந்த நிகழ்ச்சி அமைந்திருக்கிறது என்பதை நான் வேதனையோடு சொல்லிக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-10

இதைச் சொல்கிற அதேநேரத்தில் இந்த வெள்ள நிவாரணத்தினால் 241 கோடி ரூபாயும், போக்குவரத்துக் கழகங்களுக்கு புதிய பஸ்கள் 2,176 வாங்க 182 கோடி ரூபாயும், சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷனுக்கு நெல் கொள்முதலுக்கு வழிவகை முன் பணம் - Ways and Means Advance- 100 கோடி ரூபாயும், மின்வாரியப் பங்கு மூலதனம் 133 கோடி ரூபாயும், சாலை பராமரிப்பிற்கு 94 கோடி ரூபாயும் என்ற அளவில் - இலவச வேட்டி சேலைக்கு 100 கோடி ரூபாய் ஆகிறது, அதிலே அதிகச் செலவு என்ற வகையில் 24 கோடி ரூபாயும், மாணவர்களுக்கு பஸ் பாஸ் - ப்ளஸ்-2 வரையில் படிக்கிற மாணவர்களுக்கு பஸ் பாஸ் என்று பட்ஜெட் படித்த பிறகு தான் அறிவித்தோம். உங்களுக்குத் தெரியும். எனவே அதற்கு ஒரு 45 கோடி ரூபாயும், கொள்முதல் போனஸ் - அதுவும் பட்ஜெட் படித்த பிறகு தான் அதிகப்படுத்தி அறிவித்தோம். எனவே அதற்கு 45 கோடி ரூபாய் ஆகிற செலவில் துணை மானியத்தில் 30 கோடி ரூபாயும், தாழ்த்தப்பட்டோர், பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர்க்காக 43 கோடி ரூபாயும், மருந்துப் பொருள்கள் வாங்க வேண்டும் - 1995-96-க்கும் 1996-97-க்கும் ஒரு வித்தியாசம், 1995-96-ஐ விட 1996-97-ல் மக்கள் நல்வாழ்வுத் துறை மிகத் தீவிரமாகச் செயல்பட்டதன் காரணமாக, இந்த மருத்துவத் துறையில், மக்கள் நல்வாழ்வுத் துறையில் ஒரு முன்னேற்றம் ஏற்பட்டு, 1996-97-ல் 58



லட்சம் பேர் புற நோயாளிகள் அதிகமாக மருத்துவமனைக்கு வந்தார்கள். நோயாளிகள் அதிகமாக வருவது பெருமையல்ல. ஆனால் வேறு மருத்துவமனைகளை நாடிச் சென்றவர்கள் இந்த மருத்துவமனைக்கு 58 லட்சம் பேர் அதிகமாக வந்தார்கள். எனவே அவர்களுக்கு ஏற்ப மருந்து பொருள்கள் அதிகமாக வாங்கத் தேவைப்பட்ட பணம் 15 கோடி ரூபாய், குடிசை மேம்பாட்டுக்காக 19 கோடி, குடிநீருக்காக 20 கோடி, காவல் துறைக்கு அதிவிரைவுப்படை, தீணைப்பு நிலையம் — நான் இங்கே அறிவித்த 21 தீயணைப்பு நிலையங்களும் அமைக்கப்பட்டு விட்டன என்பதை சம்பந்தப்பட்ட ஊர்க்காரர்கள் நிச்சயமாக அறிவீர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அனைத்தும் அமலாக்கப்பட்டு விட்டன, நடைமுறைக்கு வந்து விட்டன. அந்தத் தீயணைப்பு நிலையங்களுக்காக, நாம் ஆரம்பித்து இருக்கிறோமே காவல் துறையினுடைய அதிவிரைவுப்படை - மத நல்லிணக்கத்திற்காக, மனித நேயத்தை வளர்ப்பதற்காக, ஆங்காங்கே கிளம்புகிற பூசல்களை எல்லாம் புகைவதற்கு முன்பே அடக்குவதற்காக அமைக்கப்பட்ட அதி விரைவுப்படை - அதற்கு ஒரு டெபுடி கமான்டன்ட், 2 அசிஸ்டென்ட் கமான்டன்ட், 8 இன்ஸ்பெக்டர்கள், 24 எஸ்.ஐ.-க்கள், 48 ஹவில்தார்கள், 24 நாயக்குகள், 168 இரண்டாம் நிலை காவலர்கள், இவர்களுக்கு ஆகிற செலவு எல்லாம் சேர்த்து 24 கோடி ரூபாய் - மொத்தம் இந்தக் கணக்கிலே 970 கோடி ரூபாய் அளவுக்கு நாம் இந்தத் துணை மானியத்திலே கேட்டிருக்கிறோம். இஃதன்னியில் சில்லரையாகக் கேட்ட தொகை எல்லாம் சேர்த்துதான் இந்த 1600 கோடிக்கு மேற்பட்ட தொகையாகும்.

இந்த அதிவிரைவுப் படையினுடைய பயிற்சி 28 ஆம் தேதி ஆவடியில் தொடங்குகிறது (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். மத்திய அரசு வெள்ள நிவாரண உதவி செய்யவில்லையே தவிர மற்ற உதவிகள் செய்திருப்பதை நான் நிதிநிலை அறிக்கையிலேயே கோடிட்டுக் காட்டி இருக்கிறேன். அதிலே குறிப்பாக நம்முடைய மாண்புமிகு நிதியமைச்சர் சிதம்பரம் அவர்கள் எனக்கு நினைவூட்டி, நானும் அவர்களிடத்தில் பேசி, 'நபார்டு' வங்கியிலேயிருந்து சாலை, நீர்ப்பாசனத்திற்காக 272 கோடி பெற்றோம். இதைக் கடந்த ஆட்சியிலேகூட பெற்றிருக்க முடியும். ஒதுக்கப்பட்ட தொகையை, நபார்டு ஒதுக்கிய இந்தத் தொகையை கடந்த ஆட்சியாளர்கள் கண்டுகொள்ளவேயில்லை. அந்த 272 கோடி ரூபாயை, ஆர்.ஐ.டி.எப். மூலமாக சென்ற ஆண்டு வாங்காமல் இருந்த தொகையை, நாம் வாங்கியிருக்கின்றோம். மத்திய அரசுக்கு நான் நன்றி தெரிவித்து இருக்கின்றேன்.

பிற்பகல் 1-15

அதைப்போல, மற்றொன்று, நன்றி தெரிவிக்க வேண்டிய காரியம், இந்திய கட்டமைப்பு வசதி நிதி நிறுவனம் — Infrastructure Development Finance Company (IDFC), பிரதமரும், நிதி அமைச்சரும் இங்கே ஒரு விழாவிற்கு கலைவாணர் அரங்கத்திற்கு வந்திருந்தபோது, நான் அவர்களை வரவேற்றுப் பேசிய நேரத்திலே சொன்னேன். இங்கே அகில இந்திய நிதி நிறுவனம் முதன் முறையாக தமிழகத்திலே அமையவேண்டும், அதற்கேற்ப இந்திய கட்டமைப்பு வசதி நிதி நிறுவனத்தை இங்கே அமையுங்கள் என்று கேட்டேன். அதை ஏற்று, அது அமைவதற்கு இன்றைக்கு அவர்கள், அதற்கான அனுமதியைத் தந்திருக்கிறார்கள் என்பதையும் மகிழ்ச்சியோடு நான் தெரிவித்துக் கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

வேளாண்மையைச் சேர்ந்த வணிக ரீதியான ஏற்றுமதிக்கு கடன் வழங்க நபார்டு நிறுவனம் ஒரு வங்கியை தமிழகத்திலே அமைக்கிறது என்ற மகிழ்ச்சியையும் நான் தெரிவித்துக் கொள்கின்றேன். இதில் மாநில அரசும் பங்கேற்கிறது. இது இந்தியாவிலே மூன்று மாநிலங்களிலே ஒன்று என்பதும் குறிப்பிடத்தக்கது. இவ்வாறு மத்திய அரசின் சார்பாக நாம் பெறவேண்டிய உரிமைகளையும், நன்மைகளையும், உதவிகளையும் பெற்றிருக்கின்றோம் என்பதையும் நான் இங்கே தெரிவித்துக் கொள்கின்ற அதேநேரத்தில் நிதிநிலை அறிக்கையிலே அறிவிக்கப்பட்ட ஒன்று. இது நிதிநிலையிலே, அரசு நிதியிலேயிருந்து எடுக்கப்படாமல் முதல்வர் நிதியிலிருந்து எடுக்கப்படுகிற, கொடுக்கப்படுகிற தொகை என்ற காரணத்தால், துணை மானியக் கோரிக்கையிலே இதை அறிவிக்கலாம் என்பதற்காக அறிவிக்கின்றேன்.

பத்திரிகைத் துறையிலே 20 ஆண்டுகள் பணியாற்றிய ஆசிரியர்கள், துணை ஆசிரியர்கள், நிருபர்கள், இயற்கை எய்தினால் அவர்கள் குடும்பத்திற்கு முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து 25 ஆயிரம் ரூபாய் நிதி உதவி வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டதையொட்டி, அதற்கான அரசு ஆணை 20-3-1997 அன்று பிறப்பிக்கப்பட்டுவிட்டது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அந்த ஆணையிலேயே இந்தச் சலுகை குறித்து வேறு சிலர் எழுப்பிய சந்தேகங்களுக்கான விளக்கமும் தரப்பட்டுள்ளது. அதற்காக பிறப்பிக்கப்பட்டுள்ள விதிமுறைகள் வருமாறு:

(1) தமிழ்நாட்டிலேயிருந்து வெளிவரும் பத்திரிகைகளில் தமிழ்நாட்டிலேயே முழுநேர உழைக்கும் பத்திரிகையாளராக 20 ஆண்டுகள் பணியாற்றியிருக்க வேண்டும்.



(2) தமிழ்நாட்டிலேயிருந்து வெளிவரும் நாளிதழ், பருவ இதழ்களில் ஆசிரியர், துணை ஆசிரியர், செய்தியாளர், புகைப்படக்காரர், தமிழ்நாட்டிலேயே பணி புரிந்திருக்கவேண்டும்.

(3) பத்திரிகையாளர் குடும்ப உதவி நிதித் திட்டத்தில் உதவி பெறுவதற்காக விண்ணப்பம் தமிழ்நாட்டிலே உள்ள ஏதேனும் ஒரு பத்திரிகையாளர் சங்கத்தின் மூலம் முறைப்படி பரிந்துரை செய்யப்பட வேண்டும்.

(4) விபத்து மற்றும் கொடிய நோயினால் பாதிக்கப்பட்டு திடீரென்று மரணம் ஏற்பட்டிருந்தால் அவர்களுக்கு 20 ஆண்டுகள் பணி தேவையில்லை. 5 ஆண்டுகள் பணி புரிந்திருந்தால் போதுமானதாகும். (மேசையைத் தட்டும் ஒலி)

(5) பத்திரிகையாளர் குடும்ப உதவி நிதித் திட்டத்தில் உதவி பெறுவதற்கான விண்ணப்பம் செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர் அவர்களிடம் உரிய முறையில் இறப்பு மற்றும் வாரிசு சான்றிதழ்களோடு விண்ணப்பிக்கவேண்டும்.

(6) பத்திரிகையாளர் ஓய்வு ஊதியம் பெறுவதற்கு என நடைமுறையில் உள்ள பத்திரிகையாளர் ஓய்வு ஊதிய பரிசீலனைக் குழுவே, இத்திட்டத்தின்கீழ் உதவி பெறுவதற்கான விண்ணப்பங்களையும் பரிசீலித்து, குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் ஆணைகள் வெளியிடப்படும்.

இத்திட்டம் 5-3-1997 ஆம் தேதி முதல் அமலுக்கு வரும் என்று நான் அறிவித்திருந்தாலும்கூட, அதற்கு சிலவாரங்களுக்கு முன்பு, மறைந்த பழம்பெரும் பத்திரிகையாளர் வேம்புசாமி அவர்களுடைய மறைவையொட்டி, அதைச் சிறப்பு நேர்வாகக் கருதி, வேம்புசாமி அவர்களுடைய குடும்பத்திற்கு 25 ஆயிரம் ரூபாய் ஓய்வு நிதி அளிக்கவும் முடிவு செய்யப்பட்டுள்ளது என்பதை நான் இந்த அவையிலே தெரிவித்துக் கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி).

வேறு உறுப்பினர்கள் எழுப்பிய பல்வேறு பிரச்சினைகள் தொடர்ந்து இங்கே விவாதிக்க இருக்கின்ற ஒவ்வொரு மானியக் கோரிக்கையின்போதும் விளக்கம் அளிப்பதற்கு ஏற்ற வகையிலே அமைந்துள்ளதாகையால், அவைகளைப் பற்றியெல்லாம் அந்த நேரத்திலே விரிவாகப் பேசிக் கொள்ளலாம் என்று கூறி துணை மானியக் கோரிக்கையை அனைவரும் ஆதரித்து ஏற்றிட வேண்டும் என்று கேட்டுக் கொண்டு அமைகின்றேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : திரு. ச. அழகிரி.

**திரு. ச. அழகிரி** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாகூருக்கு ஒரு அகல ரயில் பாதைத் திட்டம் சென்ற முறை வழங்கப்பட்டிருந்தது. ஆனால், அந்தத் திட்டத்திற்காக வழங்கப்பட்ட தண்டவாளங்கள் மற்றும் உபகரணங்களை எல்லாம் இப்போது ரயில்வே துறை திரும்பவும் எடுத்துக் கொண்டு போவதாக ஒரு செய்தி வந்திருக்கிறது. எனவே இதைக் கண்டித்து அந்தப் பகுதியினுடைய சட்டமன்ற உறுப்பினர் ரயில் மறியல் செய்திருக்கிறார். அவர் கைதும் செய்யப்பட்டிருக்கிறார். நமக்கு ஏற்கனவே இருக்கின்ற அகல ரயில்பாதையினுடைய அளவு குறைவாக இருக்கின்ற இந்த நேரத்தில், வழங்கப்பட்டு இருக்கிற ஒரு திட்டமும் நம்முடைய கையை விட்டுப் போய்விட்டால் அது மாநிலத்திற்கு பெரிய இழப்பாகும். எனவே மத்திய அரசாங்கம் இதில் தலையிட்டு நமக்குக் கிடைத்திருக்கிற இந்த அகல ரயில்பாதைத் திட்டத்தை தக்க வைத்துக் கொள்வதற்கு அரசு முன்வரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். நாகூருக்கு அந்த அகல ரயில்பாதை வருமேயானால், அதனைத் தொடர்ந்து தஞ்சாவூர், மாயவரம், கும்பகோணம், சிதம்பரம் போன்ற பகுதிகளும் அந்த அகல ரயில்பாதைத் திட்டத்தால் பயனடையக் கூடிய ஒரு வாய்ப்பு இருக்கிறது. எனவே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மத்திய அரசோடு கலந்துபேசி, நாகூருக்கு வழங்கப்பட்டிருந்த அந்த அகல ரயில்பாதைத் திட்டத்தை மீண்டும் நிலைநிறுத்த முயற்சிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

பிற்பகல் 1-20

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி** : தலைவர் அவர்களே, தமிழகத்திற்குத் தேவையான ரயில்பாதைகள் குறித்து எல்லாம் கடிதம் மூலமாகவும், நேரில் சந்தித்தும், தமிழகத்திலேயே, இங்கேயே அரசு செயலகத்திலேயே மத்திய ரயில்வே துறை அமைச்சரோடு விவாதித்தும் பலமுறை வற்புறுத்தியிருக்கிறோம். 2, 3 பாதைகள் தவிர மற்ற பாதைகள் இப்போது தரப்படவில்லை. தரப்பட்ட பாதைகளுக்காக நன்றி செலுத்திக் கொண்டிருக்கின்றோம். தராத பாதைகளுக்குகாக ஒரு உறுப்பினர் இன்றைக்கு அமைதியான முறையிலே போராடி சிறைப்பட்டிருக்கிறார். அந்த உணர்வை மத்திய அரசிலே உள்ளவர்கள் புரிந்துகொண்டு செயல்படுவார்கள் என்று நம்புகிறேன். அதற்கு இந்த அவையிலே மாண்புமிகு உறுப்பினர் அழகிரி அவர்கள் எழுப்பிய இந்தப் பிரச்சினை உதவிடும் என்றும் நம்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : விவாதம் முடிவுற்றது.



## 4. அறிவிப்புகள்—தொடர்ச்சி

### (இ) கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 1996-97 மொழிதல் (ஆ.செ.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 1996-97 ஆம் ஆண்டு கூடுதல் செலவிற்கான மானிய கோரிக்கைகள், பேரவையில் முன்மொழிவது குறித்து ஆளுநர் அவர்களிடமிருந்து கீழ்க்கண்ட செய்தி வரப்பெற்றுள்ளது :

`` In pursuance of Clause 2 of Article 205 read with Clause 3 of Article 203 of the Constitution of India, I, M. Fathima Beevi, Governor of Tamil Nadu hereby give my recommendations to the moving in the Tamil Nadu Legislative Assembly of the Demands for further Grants for the Financial Year 1996-97."

## 5. இறுதி துணை நிதிநிலை அறிக்கை, 1996-97, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : 1996-97-ஆம் ஆண்டு கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பின்வரும் தீர்மானத்தை முன் மொழிகிறேன்:

" 1996-97 ஆம் ஆண்டு கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் அடங்கிய 17-3-1997-ஆம் தேதியிடப்பெற்ற அறிவிப்பில் குறிப்பிடப்பெற்றுள்ள துணை மானியக் கோரிக்கைகள் ஒவ்வொன்றுக்கும் எதிரே குறிப்பிடப்பெற்றுள்ள தொகைகளுக்கு மேற்படாத தொகைகள் 1996-97 ஆம் ஆண்டுக்கான கூடுதல் செலவிற்காக அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்."

**1996-97 ஆம் ஆண்டிற்கான "கூடுதல் செலவுக்கான" மானியக் கோரிக்கைகள்.**

| கோரிக்கை | (ரூபாய் ஆயிரத்தில்) |
|---|---|
| (1) | (2) |
| அ. வருவாய்க் கணக்கில் செலவு— | |
| 1. நில வருவாய்த் துறை | 20,69 |
| 2. மாநில ஆயத் தீர்வைத் துறை | 2,49,89 |
| 4. பொது விற்பனை வரியும், ஏனைய வரிகளும் தீர்வைகளும்-நிருவாகம் | 87,14 |
| 5. முத்திரைத் தாள்கள்-நிருவாகம் | 1,31,92 |
| 7. மாநிலச் சட்டமன்றம் | 93,22 |
| 8. தேர்தல்கள் | 19,22,26 |
| 9. மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள் | 14,83,75 |
| 11. மாவட்ட நிருவாகம் | 5 |
| 13. நீதி நிருவாகம் | 6,93,25 |
| 14. சிறைச்சாலைகள் | 5,40,83 |
| 15. காவல் துறை | 32,19,82 |
| 16. தீயணைப்புப் பணிகள் | 10,39,59 |
| 17. கல்வி | 1,37,35,19 |
| 18. மருத்துவம் | 70,77,21 |
| 19. மக்கள் நல்வாழ்வு | 15,43,24 |
| 20. வேளாண்மை | 89,64,33 |
| 21. மீனளம் | 10,99,83 |
| 22. கால்நடை வளர்ப்பு | 11,81,50 |
| 23. கூட்டுறவு | 7,80,11 |



| கோரிக்கை | (ரூபாய் ஆயிரத்தில்) |
|---|---|
| (1) | (2) |
| அ. வருவாய்க் கணக்கில் செலவு—தொடர்ச்சி. | |
| 24. தொழில்கள் | 1,74,29 |
| 25. கைத்தறியும் துணித் தொழிலும் | 29,57,43 |
| 26. கதர்-கிராமத் தொழில்கள் | 12,26 |
| 27. ஊரக வளர்ச்சி | 18,49,40 |
| 30. பட்டியல் பழங்குடியினர், பட்டியல் சாதியினர் முதலியோர் நலன் | 31,99,96 |
| 31. பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், சீர் மரபினர் நலன் | 5,61,45 |
| 32. வீட்டு வசதி | 4,16,72 |
| 33. நகர்ப்பகுதி வளர்ச்சி | 2,25,37 |
| 34. நுகர் பொருள் வழங்கல் | 4,08,56 |
| 35. பாசனம் | 5 |
| 36. பொதுப் பணிகள்—கட்டடங்கள் | 7,90,16 |
| 38. சாலைகளும் பாலங்களும் | 99,92,80 |
| 39. சாலைப் போக்குவரத்துப் பணிகளும் கப்பல் போக்குவரத்தும் | 1,24,55 |
| 40. இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு | 2,41,19,30 |
| 41. ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுகால நன்மைகளும் | 89,80,62 |
| 42. பல்வகை | 10,52,47 |
| 43. எழுதுபொருள்—அச்சுத் துறை | 1,25,03 |
| 44. காட்டுவளத் துறை | 7,03,39 |

| (1) | (2) |
|---|---|
| 45. இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும் | 12,08 |
| 46. செய்தி திரைப்படத் தொழில் நுட்பவியல் | 1,04,03 |
| 47. ஊரகத் தொழில்கள் | 29,80,34 |
| 48. குடிநீர் வழங்கல் | 63,94,93 |
| 49. நகராட்சி நிருவாகம் | 23,53,76 |
| 50. சுற்றுலா | 87,22 |
| 51. தமிழ் வளர்ச்சி-பண்பாடு | 3,77,39 |
| மொத்தம்—அ. வருவாய்க் கணக்கில் செலவு. | **11,18,47,38** |
| **ஆ. வருவாய்க் கணக்கின் கீழ்வராத மூலதனச் செலவு** | |
| 52. வேளாண்மை குறித்த மூலதனச் செலவு | 9 |
| 53. தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு | 22,96,92 |
| 54. பாசனம் குறித்த மூலதனச் செலவு | 3 |
| 55. பொதுப் பணிகள்-கட்டடங்கள் குறித்த மூலதனச் செலவு | 9 |
| 56. சாலைகள், பாலங்கள் குறித்த மூலதனச் செலவு | 6 |
| 57. சாலைப் போக்குவரத்துப் பணிகள், கப்பல் போக்குவரத்து குறித்த மூலதனச் செலவு | 1,82,30,64 |
| 58. காட்டுவளம் குறித்த மூலதனச் செலவு | 6,18,96 |
| 59. ஊரகத் தொழில்கள் குறித்த மூலதனச் செலவு | 80,93 |
| 60. பல்வகை மூலதனச் செலவு | 1,62,78,01 |
| மொத்தம்—ஆ. வருவாய்க் கணக்கின்கீழ் வராத மூலதனச் செலவு | **3,75,05,73** |



| | |
|---|---|
| **இ. கடன்கள், முன்பணங்கள் வழங்குதலும் கடனைத் திருப்பிக் கொடுத்தலும்** | |
| 61. மாநில அரசு வழங்கும் கடன்களும் முன்பணங்களும் | 3,03,47,87 |
| பெருமொத்தம் | **17,97,00,98** |

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வெட்டுத் தீர்மானங்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஏற்கெனவே அறிவித்ததைப் போல 79 வெட்டுத் தீர்மானங்கள் உள்ளன. ஒவ்வொரு கோரிக்கையாக எடுத்து உறுப்பினர்கள் முன்மொழிவது என்றால் அதிக நேரமாகும் என்பதால் நேரம் கருதி, அவற்றில் பின்வரும் 47 வெட்டுத் தீர்மானங்கள் உறுப்பினர்கள் முன்மொழிந்ததாக கருதப்பட்டு பதிவேட்டிலே இடம்பெறும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

## கோரிக்கை எண் 15—காவல் துறை

**திரு. சி. ஞானசேகரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'வேலூர் அடுத்த சத்துவாச்சாரியில் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம் பக்கத்தில் S.P.Office, D.I.G. Office கட்ட வேண்டிய அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"காவல் துறை பற்றிய 15-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.32,19,82,000 நிதி ஒதுக்கத்தில் ரூ.1/-ஐக் குறைக்க வேண்டும்".

**திரு. ஜி.கே. மணி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'தர்மபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதிக்குட்பட்ட பெரும்பாலை காவல்நிலையத்திற்கு தொலைபேசி வசதி, மைக் வசதி, போன்ற அத்தியாவசியத் தேவைகள் வழங்க புதுப்பணி குறித்த செலவு வேண்டியதன் அவசியம் பற்றி' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"காவல் துறை பற்றிய 15-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.32,19,82,000 நிதி ஒதுக்கத்தில் ரூ.1/-ஐக் குறைக்க வேண்டும்."

**திரு. இ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'சேலம் மாவட்டம் - இடைப்பாடி தொகுதி - பூலாம்பட்டி காவல்

நிலையத்திற்கு (ஜீப்) இயக்க ஊர்தி வாங்க வேண்டிய அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"காவல் துறை பற்றிய 15-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.32,19,82,000 நிதி ஒதுக்கத்தில் ரூ.1/-ஐக் குறைக்க வேண்டும்".

**கோரிக்கை எண் 16—தீயணைப்புப் பணிகள்**

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'வடஆற்காடு-அம்பேத்கர் மாவட்டத்தில் சத்துவாச்சாரி, ஒடுகத்தூர் ஆகிய இடங்களில் தீயணைப்பு நிலையங்கள் அமைக்க வேண்டிய அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தீயணைப்புப் பணிகள் பற்றிய 16-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,39,59,000 நிதி ஒதுக்கத்தில் ரூ.1/-ஐக் குறைக்க வேண்டும்"

**திரு. இ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'சேலம் மாவட்டம் - இடைப்பாடி தொகுதி - மகுடஞ்சாவடி ஒன்றியத்தில காக்கா பாளயம் என்ற இடத்தில் ஒரு தீயணைப்பு நிலையம் திறக்க வேண்டிய அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தீயணைப்புப் பணிகள் பற்றிய 16-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,39,59,000 நிதி ஒதுக்கத்தில் ரு.1/-ஐக் குறைக்க வேண்டும்".

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'ஏ.டி. பன்னீர் செல்வம் மாவட்டம் கூத்தாநல்லூரில் ஒரு தீயணைப்பு நிலையம் அமைத்திட வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தீயணைப்புப் பணிகள் பற்றிய 16-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 10,39,59,000 நிதி ஒதுக்கத்தில் ரூ.1/-ஐக் குறைக்க வேண்டும்".

**கோரிக்கை எண் 17—கல்வி**

**திரு. இ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக நகரப் பேருந்துகளுக்கு மட்டும் அனுமதிக்கப்படும்



மாணவர்களின் பாஸ்-பெரு நகரப் பேருந்து (Route Bus) களிலும் பாஸ் அனுமதி வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கல்வி பற்றிய 17-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.137,35,19,000-ல் ரூ.1/- குறைக்க வேண்டும்".

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'மாணவ, மாணவியர்க்கு எட்டாம் வகுப்புவரை இலவச பாட புத்தகங்கள் வழங்கப்படுவதை உயர்த்தி +2 வரை இலவசமாக வழங்க வேண்டிய அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கல்வி பற்றிய 17-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.137,35,19,000-ல் ரூ.1/- குறைக்க வேண்டும்".

**கோரிக்கை எண் 18—மருத்துவம்**

**திரு. இ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'இராசாசி மாவட்டம் மற்றும் சேலம் மாவட்டத்தில் மிக முக்கியத் தொழிலான லாரி தொழிலாளர்கள் மூலம் "எய்ட்ஸ்"வந்து சேரும் அபாயத்தின் அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மருத்துவம் பற்றிய 18-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.70,77,21,000-ல் ரூ.1/- குறைக்க வேண்டும்".

**கோரிக்கை எண் 19 – மக்கள் நல்வாழ்வு**

**திரு. இ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'யானைக்கால் நோய் எந்த அளவிற்கு ஒழிக்கப்பட்டுள்ளது என்பதை விளக்கப்படுத்தவும் அதுகுறித்த விழிப்புணர்ச்சியை வலியுறுத்தும் அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மக்கள் நல்வாழ்வு பற்றிய 19-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,43,24,000-ல் ரூ.1/- குறைக்க வேண்டும்".

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'திருவள்ளுவர் மாவட்டம், செந்துறையில் யானைக்கால் நோய் பரவாமல் இருக்க அது குறித்து விழிப்புணர்ச்சியை வலியுறுத்தும் அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மக்கள் நல்வாழ்வு பற்றிய 19-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 15,43,24,000-ல் ரூ.1/- குறைக்க வேண்டும்".

## கோரிக்கை எண் 20 – வேளாண்மை

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'தமிழக விவசாயிகள் பயிர் செய்யும் கரும்புக்கு உற்பத்தி செலவு அதிகம் ஆவதால், வெட்டுக்கூலி லாரிகளுக்கு கட்டணம் அதிகம் செலுத்த வேண்டியுள்ளதால் டன் ரூ. 1,000/- என்று விலை உயர்த்த வேண்டிய அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மை பற்றிய 20-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 89,64,33,000-ல் ரூ. 1/- குறைக்க வேண்டும்".

**திரு. இ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'குறுவை 96, சம்பா 97 பருவங்களில் நெல் ஏகபோக கொள்முதல் செய்யும் திட்டத்தின்கீழ் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்கு உற்பத்தி ஊக்கத் தொகையை ஈடுசெய்வதற்கான அவசியத் தேவை குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மை பற்றிய 20-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 89,64,33,000-ல், ரூ. 1/- குறைக்க வேண்டும்."

**திரு. ஜி. கே. மணி;** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'தர்மபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதியில் பட்டு வளர்ப்பு அதிகம் உள்ளதால், பட்டு நூல் தயாரித்தல் போன்ற உப தொழில்களுக்குப் பயிற்சி அளிக்க வேண்டியும், மேற்கண்ட தொழில் தொடங்குபவர்களுக்கு மானியத்துடன் கூடிய கடன் வழங்க வேண்டியும் உள்ள அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வேளாண்மை பற்றிய 20-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 89,64,33,000/-ல், ரூ.1/- குறைக்க வேண்டும்."

## கோரிக்கை எண் 21 – மீனளம்

**திரு. ஜி. கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'மேட்டூர் நீர்த்தேக்கத்தில் மீன் பிடிக்கும் உரிமம் பெற்ற மீனவர்களுக்கு,



மீன்பிடி வலைக்கு மானியம் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மீனளம் பற்றிய 21-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 10,99,83,000/-ல், ரூ. 1/- குறைக்க வேண்டும்."

**திரு. இ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'மீனவர்களுக்கு 10 சதவிகித உதவித் தொகையில், மீன்பிடி வலைகள் வாங்குவதற்கு அரசு அனுமதித்துள்ளது எனும் புதுப்பணி குறித்த அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மீனளம் பற்றிய 21-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 10,99,83,000/-ல்; ரூ. 1/- குறைக்க வேண்டும்."

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'தமிழக மீனவர்களுக்கு 10 சதவீத உதவித் தொகையில், மீன்பிடி வலைகள் வாங்குவதற்கு அரசு அனுமதித்துள்ளது எனும் புதுப்பணி குறித்த அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மீனளம் பற்றிய 21-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 10,99,83,000/-ல், ரூ. 1/- குறைக்க வேண்டும்."

## கோரிக்கை எண் 22 – கால்நடை வளர்ப்பு

**திரு. அ.வ. அப்துல் நாசர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'தென்னாற்காடு வள்ளலார் மாவட்டம், புவனகிரி தொகுதியில் உள்ள புவனகிரி ஒன்றியத்திற்குட்பட்ட உள்ளார்ந்த கிராமங்களில், கால்நடை பெருக்கத்தை மேம்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை வளர்ப்பு பற்றிய 22-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 11,81,50,000/-ல், ரூ. 1/- குறைக்க வேண்டும்".

## கோரிக்கை எண் 25 – கைத்தறியும் துணித் தொழிலும்

**திரு. இ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதியில் வறுமைக்கோட்டின்கீழ்

உள்ள மக்களுக்கு சேலை, வேட்டிகள் இலவசமாக வழங்க வேண்டிய அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கைத்தறியும் துணித் தொழிலும் பற்றிய 25-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 29,57,43,000/-இல் ரூ.1 /- குறைக்க வேண்டும்"

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கைத்தறித் துணிகளுக்கான தள்ளுபடிக்கான நிதி ஒதுக்கீட்டை அதிகரித்து, தள்ளுபடி விற்பனை நாட்களை அதிகரிக்க வேண்டிய அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கைத்தறியும் துணித் தொழிலும் பற்றிய 25-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 29,57,43,000/-இல் ரூ.1/- குறைக்க வேண்டும்"

## கோரிக்கை எண் 27 – ஊரக வளர்ச்சி

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'தமிழகத்தில் உள்ள நலிந்த கிராம பஞ்சாயத்து, பேரூராட்சி, நகராட்சிகளுக்கு குறிப்பாக வேலூர், சேண்பாக்கம், தொரப்பாடி, அல்லாபுரம், சத்துவாச்சாரி ஆகிய பகுதிகளுக்கு சிறப்பு நிதி வழங்க வேண்டிய அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி பற்றிய 27-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 18,49,40,000/-இல் ரூ. 1/- குறைக்க வேண்டும்."

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'தமிழ்நாட்டில் சீரமைக்கப்பட்ட பொது விநியோக முறை வட்டாரங்களில் வேலை வாய்ப்பு உறுதித் திட்டத்தினை செயல்படுத்தும் வழிமுறை குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரக வளர்ச்சி பற்றிய 27-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 18,49,40,000/-இல் ரூ. 1/- குறைக்க வேண்டும்".



## கோரிக்கை எண் 30 – பட்டியல் பழங்குடியினர், பட்டியல் சாதியினர் முதலியோர் நலன்

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'எனது ஆண்டிமடம் தொகுதியில் செந்துறை ஒன்றியத்தில் இயங்கி வரும் ஆதி திராவிடர் மாணவர் விடுதி நிலம் கையகப்படுத்தி 15 ஆண்டுகள் ஆகியும் இன்னமும் கட்டிடம் கட்டாதது குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பட்டியல் பழங்குடியினர், பட்டியல் சாதியினர் முதலியோர் நலன் பற்றிய 30-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 31,99,96,000/-இல் ரூ. 1/- குறைக்க வேண்டும்".

**திரு. அ.வ. அப்துல் நாசர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "புவனகிரி தொகுதியில் ஆதி திராவிடர்களுக்கு வீட்டுமனை வழங்க நிலம் கையகப்படுத்தப்பட்ட பகுதிகளை உடனடியாக பட்டா செய்து வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பட்டியல் பழங்குடியினர், பட்டியல் சாதியினர் முதலியோர் நலன் பற்றிய 30-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 31,99,96,000/-இல் ரூ. 1/- குறைக்க வேண்டும்".

## கோரிக்கை எண் 31 – பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், சீர்மரபினர் நலன்

**திரு. இ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழ்நாட்டில் வருமான வரம்பு ரூ. 12,000-லிருந்து ரூ. 25,000-மாக அதிகரிக்கப்பட்டதால் பிற்பட்ட வகுப்பினர், மிகப் பிற்பட்ட வகுப்பினர் மற்றும் சீர் மரபினரைச் சேர்ந்த அதிக எண்ணிக்கையிலான மாணவர்கட்கு படிப்பு உதவித் தொகையும், பயிற்சி உதவித் தொகையும் வழங்குவதற்கு நிதி ஒதுக்கம் தேவைப்படும் அவசியம் குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், சீர் மரபினர் நலன் பற்றிய 31-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 5,61,45,000-ல் ரூ. 1/- குறைக்க வேண்டும்."

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'தமிழ்நாட்டில் பிற்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்பட்ட வகுப்பினர் மற்றும் சீர் மரபினரைச் சேர்ந்த அதிக எண்ணிக்கையிலான மாணவர்கட்கு படிப்பு உதவித் தொகையும் பயிற்சி உதவித் தொகையும் வழங்குவதற்கு நிதி ஒதுக்கம் தேவைப்படும் அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், சீர் மரபினர் நலன் பற்றிய 31-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 5,61,45,000-ல் ரூ. 1/- குறைக்க வேண்டும்."

## கோரிக்கை எண் 36 – பொதுப் பணிகள் — கட்டடங்கள்

**திரு. இ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'சேலம் மாவட்டம்—இடைப்பாடி நகரில் உள்ள பயணியர் விடுதியை நவீனப்படுத்த உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டிய அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொதுப் பணிகள்—கட்டடங்கள் பற்றிய 36-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 7,90,16,000-ல் ரூ. 1/- குறைக்க வேண்டும்."

## கோரிக்கை எண் 38 – சாலைகளும் பாலங்களும்

**திரு. இ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'சேலம் மாவட்டம்-இடைப்பாடி தொகுதி, இதில் பூலாம்பட்டி தொடங்கி வளையச்சிட்டி ஊர், வன்னிய நகர், அம்மன்கோவில் காடு மற்றும் ஆடையூர் வரை உள்ள சாலையை செப்பனிட வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சாலைகளும் பாலங்களும் பற்றிய 38-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 99,92,80,000-ல் ரூ. 1/- குறைக்க வேண்டும்."

## கோரிக்கை எண் 40 – இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு

**திரு. இ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'இடைப்பாடி வட்டத்தில் தொடர்ந்து பெய்த மழையின் காரணமாக



வேளாண்மை இடுபொருள்கள் வாங்க, சிறு, குறு, உழவர்களுக்கு உதவித் தொகை வழங்கப்படாததின் அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத தீர்மானத்தை மொழிகிறேன்:

"இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு பற்றிய 40-ஆம் எண் மானிய கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 241,19,30,000-ல் ரூ. 1/- குறைக்க வேண்டும்."

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

'வெள்ளத்தாலும், மழையாலும், தீயாலும் பாதிக்கப்படும் வீடுகளுக்கு ஒவ்வொன்றுக்கும் ரூ. 1,000/- இழப்பீடு வழங்க வேண்டிய அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு பற்றிய 40-ஆம் எண் மானியக் கோரிககையின்கீழ ஒதுக்கபெறுகின்ற ரூ.241,19,30,000-ல் ரூ. 1/- குறைக்க வேண்டும்."

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'எனது ஆண்டிமடம் தொகுதியில் இருப்புலிக்குறிச்சி—குமிழியம், பரணம், உஞ்சினி, இடையக்குறிச்சி-குளத்தூர்-போன்ற ஊர்களில் சென்ற மழை வெள்ளத்தால் பெருமளவு பாதிக்கப்பட்ட முந்திரித் தோட்டங்களில் ஏற்பட்ட 'சூறை'-எனும் வைரஸ் நோயை கட்டுப்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு பற்றிய 40-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 241,19,30,000-ல் ரூ. 1/- குறைக்க வேண்டும்."

**திரு. அ.வ. அப்துல் நாசர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'புவனகிரி தொகுதியில் இயற்கைச் சீற்றம் காரணமாக கால்நடைகளை இழந்தவர்களுக்கு கருணைத் தொகையினை விரைந்து வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இயற்கை சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு பற்றிய 40-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 241,19,30,000-ல் ரூ.1/- குறைக்க வேண்டும்."

## கோரிக்கை எண் 47 – ஊரகத் தொழில்

**திரு. இ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'இடைப்பாடி வட்டத்தில் குடும்பத்தில் முதல் தலைமுறையாக தொழில் முனையும் "மகளிர்" தொழில் முனைவோருக்கு தொடக்க நிதி உதவி தொடர்பாக சிறப்பு உதவித் தொகை விண்ணப்பித்தவர்களுக்கு உடன் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரகத் தொழில்கள் பற்றிய 47-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 29,80,34,000-ல் ரூ.1/- குறைக்க வேண்டும்."

## கோரிக்கை எண் 48 – குடிநீர் வழங்கல்

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'வடஆற்காடு அம்பேத்கர் மாவட்டத்தில் சத்துவாச்சாரி Phase I, Phase III, Phase IV அல்லாவரம், தொரப்பாடி பேரூராட்சிகளில் தனித்தனியே குடிநீர்த் திட்டம் அமைக்க வேண்டிய அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"குடிநீர் வழங்கல் பற்றிய 48-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 63,94,93,000-ல் ரூ. 1/- குறைக்க வேண்டும்."

**திரு. இ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'சேலம் மாவட்டம், இடைப்பாடி தொகுதியில் உள்ள விடுபட்ட இராசிபுரம் - இடைப்பாடி கூட்டுக் குடிநீர்த் திட்டப்படி இடைப்பாடி ஒன்றியத்தில், கொங்கணாபுரம் ஒன்றியத்தில் மகுடஞ்சாவடி ஒன்றியத்தில் உள்ள கிராமங்களுக்கும் குடிநீர் வடிகால் வாரியம் குடிநீர் வழங்க வேண்டிதன் அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"குடிநீர் வழங்கல் பற்றிய 48-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 63,94,93,000-இல் ரூ. 1/- குறைக்க வேண்டும்."

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'ஆண்டிமடம் தொகுதியில் செந்துறை ஒன்றியம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்கீழ் உவர் நீராகவுள்ள கட்டையன் குடிகாடு, சேந்தமங்கலம், ஈச்சங்காடு, தளவாய் போன்ற கிராமங்களுக்கு நல்ல குடிநீர் அருகாமையில் உள்ள வெள்ளாற்றில் இருந்து கொண்டு வருவது



குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"குடிநீர் வழங்கல் பற்றிய 48-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 63,94,93,000/-இல் ரூ.1/- குறைக்க வேண்டும்."

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'தர்மபுரி மாவட்டம் முழுவதும் பயன்படக்கூடிய ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை நிறைவேற்றுவதன் அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"குடிநீர் வழங்கல் பற்றிய 48-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 63,94,93,000-இல் ரூ. 1/- குறைக்க வேண்டும்."

## கோரிக்கை எண் 49 – நகராட்சி நிருவாகம்

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'வேலூர் நகராட்சியில் உள்ள கானாறுகளை தூர் எடுத்து ஆங்காங்கே தேங்கி நிற்கும் சாக்கடை நீரை அப்புறப்படுத்த சிறப்பு நிதி வழங்க வேண்டிய அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிர்வாகம் பற்றிய 49-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 23,53,76,000-ல் ரூ. 1/- குறைக்க வேண்டும்."

**திரு. இ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'நேரு வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் இடைப்பாடி நகரப் பகுதியில் விசைத்தறி உதிரி பாகங்கள் செய்யக்கூடிய சிறு நிறுவனங்கள் அமைய வேண்டிய அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் பற்றிய 49-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 23,53,76,000-ல் ரூ.1/- குறைக்க வேண்டும்."

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'ஏ.டி. பன்னீர்செல்வம் மாவட்டம், மன்னார்குடி மற்றும் கூத்தாநல்லூர் நகராட்சி பகுதிகளிலுள்ள நகர சுத்தித் தொழிலாளர்களுக்கு குடிசைகளை மாற்றி காங்கிரீட் வீடுகள் கட்ட வேண்டியது குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நகராட்சி நிருவாகம் பற்றிய 49-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 23,53,76,000-ல் ரூ. 1/- குறைக்க வேண்டும்."

### கோரிக்கை எண் 51– தமிழ் வளர்ச்சி–பண்பாடு

**திரு. இ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'புலவர்களுக்கு வழங்கப்படும் ஓய்வூதியத் தொகையை உயர்த்த வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ் வளர்ச்சி - பண்பாடு பற்றிய 51-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 3,77,39,000-ல் ரூ. 1/- குறைக்க வேண்டும்".

### கோரிக்கை எண் 54 – பாசனம் குறித்த மூலதனச் செலவு

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'தர்மபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி' பஞ்சப்பள்ளி அணை வாய்க்காலை நீட்டித்து பாப்பாரப்பட்டி சுற்றியுமுள்ள 16 ஏரிகளுடன் இணைத்து பாசன வசதி பெருக்குவதுடன் கிணறுகளுக்கு நீர் ஊற்று கிடைக்கச் செய்வதன் அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பாசனம் குறித்த மூலதனச் செலவு பற்றிய 54-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 3,000-இல் ரூ. 1/- குறைக்க வேண்டும்".

### கோரிக்கை எண் 56 – சாலைகள், பாலங்கள் குறித்த மூலதனச் செலவு

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'தர்மபுரி மாவட்டம், பெண்ணாகரம் வட்டம், வத்தலாபுரம் அருகில் தார்ச்சாலையில் உள்ள பெரிய பள்ளத்தில் பாலம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சாலைகள், பாலங்கள் குறித்த மூலதனச் செலவு பற்றிய 56-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 6,000-இல் ரூ. 1/- குறைக்க வேண்டும்".



### கோரிக்கை எண் 57 – சாலைப் போக்குவரத்துப் பணிகள், கப்பல் போக்குவரத்து குறித்த மூலதனச் செலவு

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'ஏ.டி. பன்னீர்செல்வம் மாவட்டம், மன்னார்குடி பரவாக்கோட்டை வழி பட்டுக்கோட்டை, மன்னார்குடி உள்ளிக்கோட்டை வழி பட்டுக்கோட்டை இரண்டு சாலைகளையும் அகலப்படுத்திடுவதன் அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சாலைப் போக்குவரத்துப் பணிகள், கப்பல் போக்குவரத்து குறித்த மூலதனச் செலவு பற்றிய 57-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 182,30,64,000-இல் ரூ.1/- குறைக்க வேண்டும்"

### கோரிக்கை எண் 61– மாநில அரசு வழங்கும் கடன்களும் முன்பணங்களும்

**திரு. இ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'சேலம் மாவட்டம் எடப்பாடி நகராட்சியில் போதிய நிதி வசதி இல்லாததால் குடிநீர் விநியோகம் செய்ய எடுக்கப்பட்ட மின்சாரத்திற்கு கட்டவேண்டிய கட்டணத்தைக் கட்ட முடியாமல் மின் துண்டிப்பு செய்ய வேண்டியதாயிற்று. எனவே எடப்பாடி நகராட்சிக்குப் போதிய நிதிவசதி உருவாக்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாநில அரசு வழங்கும் கடன்களும் முன்பணங்களும் பற்றிய 61-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.303,47,87,000-இல் ரூ.1/- குறைக்க வேண்டும்".

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'ஆண்டிமடம் தொகுதி, செந்துறை ஒன்றியத்தில் கூட்டுறவு பால்பண்ணையை நவீனப்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாநில அரசு வழங்கும் கடன்களும் முன்பணங்களும் பற்றிய 61-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.303,47,87,000-இல் ரூ.1/- குறைக்க வேண்டும்".

**திரு. அ. வ. அப்துல் நாசர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'சேத்தியாதோப்பு எம்.ஆர். கிருஷ்ணமூர்த்தி கூட்டுறவு

[திரு. அ. வ. அப்துல் நாசர்] [1997 மார்ச் 25

சர்க்கரை ஆலையை நட்டத்திலிருந்து இலாப பாதைக்கு அழைத்துவர முன்பணம் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாநில அரசு வழங்கும் கடன்களும் முன்பணங்களும் பற்றிய 61-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 303,47,87,000-இல் ரூ.1/- குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இப்போது வாக்கெடுபபு. மாண்புமிகு உறுப்பினர்கள் முன்மொழிந்த வெட்டுத் தீர்மானங்களை வலியுறுத்துகிறார்களா என அறிய விரும்புகிறேன். திரு. சி. ஞானசேகரன்.

1. **திரு. சி. ஞானசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஆ இராசேந்திரன் என்கிற தீரன்.

5. **திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆ இராசேந்திரன் என்கிற தீரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. இ. கணேசன்.

3. **திரு. இ. கணேசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இ. கணேசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி.கே. மணி.

2. **திரு. ஜி.கே. மணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. வை. சிவபுண்ணியம்.

4. **திரு. வை. சிவபுண்ணியம்.:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு அ.வ. அப்துல் நாசர்.



1997 மார்ச் 25]

6. **திரு. அ.வ. அப்துல் நாசர்.** இல்லை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அ.வ. அப்துல் நாசர் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

"1996-97-ஆம் ஆண்டிற்கான கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் அடங்கிய 17-3-1997-ஆம் தேதியிடப்பட்ட அறிவிப்பில் குறிப்பிடப்பெற்றுள்ள இறுதி துணை மானியக் கோரிக்கைகள் ஒவ்வொன்றிற்கும் எதிரே கோரப்பட்டுள்ள தொகைகளுக்கு மேற்படாத தொகைகள் 1996-97-ஆம் ஆண்டிற்கான கூடுதல் செலவிற்காக அரசுக்கு வழங்கப்பெற வெண்டும்" என்னும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

நிறைவேற்றப் பெற்ற 1996-97 ஆம் ஆண்டிற்கான **"கூடுதல் செலவுக்கான"** மானியக் கோரிக்கைகள்.

| | கோரிக்கை | (ரூபாய் ஆயிரத்தில்.) |
|---|---|---|
| | (1) | (2) |
| அ. | வருவாய்க் கணக்கில் செலவு– | |
| 1. | நில வருவாய்த் துறை | 20,69 |
| 2. | மாநில ஆயத் தீர்வைத் துறை | 2,49,89 |
| 4. | பொது விற்பனை வரியும், ஏனைய வரிகளும் தீர்வைகளும்-நிருவாகம் | 87.14 |
| 5. | முத்திரைத் தாள்கள்-நிருவாகம் | 1,31,92 |
| 7. | மாநிலச் சட்டமன்றம் | 93,22 |
| 8. | தேர்தல்கள் | 19,22,26 |

[1997 மார்ச் 25

| (1) | | (2) |
|---|---|---|
| 9. | மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள் | 14,63,75 |
| 11. | மாவட்ட நிருவாகம் | 5 |
| 13. | நீதி நிருவாகம் | 6,93,25 |
| 14. | சிறைச்சாலைகள் | 5,40,83 |
| 15. | காவல் துறை | 32,19,82 |
| 16. | தீயணைப்புப் பணிகள் | 10,39,59 |
| 17. | கல்வி | 1,37,35,19 |
| 18. | மருத்துவம் | 70,77,21 |
| 19. | மக்கள் நல்வாழ்வு | 15,43,24 |
| 20. | வேளாண்மை | 89,64,33 |
| 21. | மீனளம் | 10,99,83 |
| 22. | கால்நடை வளர்ப்பு | 11,81,50 |
| 23. | கூட்டுறவு | 7,80,11 |
| 24. | தொழில்கள் | 1,74,29 |
| 25. | கைத்தறியும் துணித் தொழிலும் | 29,57,43 |
| 26. | கதர்-கிராமத் தொழில்கள் | 12,26 |
| 27. | ஊரக வளர்ச்சி | 18,49,40 |
| 30. | பட்டியல் பழங்குடியினர், பட்டியல் சாதியினர் முதலியோர் நலன் | 31,99,96 |
| 31. | பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், சீர் மரபினர் நலன் | 5,61,45 |



1997 மார்ச் 25]

| (1) | | (2) |
|---|---|---|
| 32. | வீட்டு வசதி | 4,16,72 |
| 33. | நகர்ப்பகுதி வளர்ச்சி | 2,25,37 |
| 34. | நுகர் பொருள் வழங்கல் | 4,08,56 |
| 35. | பாசனம் | 5 |
| 36. | பொதுப் பணிகள்-கட்டடங்கள் | 7,90,16 |
| 38. | சாலைகளும் பாலங்களும் | 99,92,80 |
| 39. | சாலைப் போக்குவரத்துப் பணிகளும் கப்பல் போக்குவரத்தும் | 1,24,55 |
| 40. | இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு | 2,41,19,30 |
| 41. | ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுகால நன்மைகளும் | 89,80,62 |
| 42. | பல்வகை | 10,52,47 |
| 43. | எழுதுபொருள்-அச்சுத் துறை | 1,25,03 |
| 44. | காட்டுவளத் துறை | 7,03,39 |
| 45. | இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும் | 12,08 |
| 46. | செய்தி திரைப்படத் தொழில் நுட்பவியல் | 1,04,03 |
| 47. | ஊரகத் தொழில்கள் | 29,80,34 |
| 48. | குடிநீர் வழங்கல் | 63,94,93 |
| 49. | நகராட்சி நிருவாகம் | 23,53,76 |
| 50. | சுற்றுலா | 87,22 |
| 51. | தமிழ் வளர்ச்சி-பண்பாடு | 3,77,39 |
| | **மொத்தம்—அ. வருவாய்க் கணக்கில் செலவு.** | **11,18,47,38** |

| (1) | (2) |
|---|---|
| ஆ. வருவாய்க் கணக்கின் கீழ்வராத மூலதனச் செலவு | |
| 52. வேளாண்மை குறித்த மூலதனச் செலவு | 9 |
| 53. தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு | 22,96,92 |
| 54. பாசனம் குறித்த மூலதனச் செலவு | 3 |
| 55. பொதுப் பணிகள்-கட்டடங்கள் குறித்த மூலதனச் செலவு | 9 |
| 56. சாலைகள், பாலங்கள் குறித்த மூலதனச் செலவு | 6 |
| 57. சாலைப் போக்குவரத்துப் பணிகள், கப்பல் போக்குவரத்து குறித்த மூலதனச் செலவு | 1,82,30,64 |
| 58. காட்டுவளம் குறித்த மூலதனச் செலவு | 6,18,96 |
| 59. ஊரகத் தொழில்கள் குறித்த மூலதனச் செலவு | 80,93 |
| 60. பல்வகை மூலதனச் செலவு | 1,62,78,01 |
| மொத்தம்—ஆ. வருவாய்க் கணக்கின்கீழ் வராத மூலதனச் செலவு | 3,75,05,73 |
| இ. கடன்கள், முன்பணங்கள் வழங்குதலும் கடனைத் திருப்பிக் கொடுத்தலும் | |
| 61. மாநில அரசு வழங்கும் கடன்களும் முன்பணங்களும் | 3,03,47,87 |
| பெருமொத்தம் | 17,97,00,98 |

## 4. அறிவிப்புகள்—தொடர்ச்சி

### (ஈ) நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவு, 1997 (ஆ.இ.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 1997-ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவை பேரவையின் அறிமுகம் செய்யவும், ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளவும் ஆளுநர் அவர்கள் தமது இசைவை தெரிவித்துள்ளார்கள்.



## 6. அரசினர் சட்டமுன்வடிவுகள்—அறிமுகம் செய்தல்—தொடர்ச்சி

### (ஆ) நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவு, 1997

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 1997-ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவு அறிமுகம் செய்தல். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1997-ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்" எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள்

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

பிற்பகல் 1-25

## 4. அறிவிப்புகள்—தொடர்ச்சி

### (உ) பேரவை அலுவல்கள் குறித்து

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நாளை பேரவையிலே உணவு மற்றும் கூட்டுறவுத் துறை மானியங்கள் மீது விவாதம் நடைபெறவிருக்கின்றது. ஏராளமான மாண்புமிகு உறுப்பினர்கள் அம்மானியத்தின் மீது பேச வேண்டும் என்று விருப்பம் தெரிவித்த காரணத்தால், நாளைக்

காலையிலும், மாலையிலும் அந்த விவாதம் நடைபெறும். மதிய இடைவேளையிலே நம்முடைய உணவுத் துறை அமைச்சர் அவர்கள் நமக்கெல்லாம உணவு தரவிருக்கின்றார் என்பதை அறிவித்துக் கொள்கிறேன்.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (26-3-1997) காலை 9.30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர் பேரவை, பிற்பகல் 1-26 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

## 8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### அ. சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

-ஏதுமில்லை-

### ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

80. பாசனம் மற்றும் கட்டடங்கள் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1997-98. (தமிழ், ஆங்கிலம்)

81. பொதுப்பணித் துறையின் கட்டிடப்பணிகள் பற்றிய ஆய்வுரை 1996-97. (தமிழ், ஆங்கிலம்)

82. பாசனம் மற்றும் நிலநீர் பற்றிய சாதனைத் திட்டம், 1996-97 (தமிழ)

83. பாசனம் மற்றும் நிலநீர் பற்றிய சாதனைத் திட்டம், 1996-97 (ஆங்கிலம்)

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
216648
சென்னை-600 009